# தலையணைப் பூக்கள்

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்
55, வெங்கட்நாராயணா சாலை
தி. நகர், சென்னை - 600 017

# தலையணைப் பூக்கள்

## பாலகுமாரன்

## 1

இரண்டு கைகளாலும் மலர்களை அள்ளி, நெஞ்சுக்கு நேரே வைத்துக் கண்களை மூடினார் சுந்தரராஜன்.

மூடின கண்ணுக்குள் ஆரஞ்சு நிறம் மின்னியது. அந்த நிறம் மங்க, அப்பாவின் உருவம் தோன்றியது மெல்லப் புன்முறுவல் செய்தது. 'ம்ம்...வெரிகுட். விஷ் யூ எ ஹாப்பி நியூ இயர் ..' மனசுக்குள் அப்பா முகம் மலர்ந்துபேசினார்

'ஹாப்பி நியூ இயர் அப்பா...' சுந்தரராஜன் முணுமுணுத்தார். அப்பா மெல்லப் பின்னடைவது உணர முடிந்தது. அப்பா தோன்றிய இடம் வெளிச்சமாய் இருந்தது. வெளிச்சம் நோக்கி மனசு செலுத்தினார்.

'குருப்பிரம்மா...குரு விஷ்ணு குரு தேவோ மஹேஸ்வரா...குரு சாட்சாத் பரப்பிரம்மா...தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ.'

அப்பாதான் குரு. சகலத்திற்கும் குரு. இந்த நாலு மாடிக் கடைக்கு அப்பாதான் அஸ்திவாரம். இது அவர் போட்ட பிச்சை. இது அவரால் விளைந்த செழிப்பு.

பி. ஈ எலக்ட்ரிக்கல் ஐந்து வருடம் படித்து முடித்த பிறகு, 'கடைக்கு வா என்று கட்டளையிட்டார்.

'கடைக்கா நான் பி, ஈ.,ப்பா...'

'அதனாலென்ன? எவன்கிட்டயோ கை கட்டி, வாய் பொத்தி நிக்கறத விட என்கிட்ட நில்லு. நான் சொல்லித் தரேன்.''

'படிப்பு வேஸ்டாயிடுமே.

'படிப்பு...வேஸ்டா? எந்த படிப்பு வேஸ்ட், எப்படி வேஸ்டாகும். நீ இன்ஜினியரிங் இல்லாம சட்டம் படிச்சா லும், லிட்ரேச்சர் படிச்சாலும் நம்ம கடைக்கு தான்னு என்னிக்கோ தீர்மானம் பண்ணிட்டேன். கடைக்கு வா

'ரிஸ்க் இல்லையா பிசினஸ்?

'எது ரிஸ்க் இல்லை? பூமில எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியும் மனுஷனுக்கு ரிஸ்க்தான். இந்தக் கால் மூணங்குல அகலம், அந்தக் கால் மூணங்குல அகலம் ஆறங்குல அகலத்துல ஆறடி உயரமா மனுஷன் நடக்கல...? ரிஸ்க்குன்னு தவழ்ந்து போறானா? இல்லை நாலு கால்ல நடக்கறானா...? எப்படி அவனால நடக்க முடியறது?'

'ப்ராக்டிஸ். சின்ன வயசுலேர்ந்து நடக்கறப்ராக்டிஸ்'

'குட். இது ப்ராக்டிஸ் மட்டுமில்லை. நான் இப்படி தான் நடப்பேன்னு பிடிவாதம். சறுக்கினாலும், நடுக்கினாலும் துடைச்சுவிட்டுண்டு மறுபடி அதே ஆறங்குல அகலத்துல நடக்கற பிடிவாதம். உனக்கு ஜெயிக்கணும்ங்கிற பிடிவாதம் இருக்கோ?'

'இருக்கு.'

அப்பா, வியாபாரம் மட்டும் சொல்லித் தரவில்லை. கடையில் மட்டும் குருவாக அமரவில்லை. எல்லா இடங்களிலும் குருவாய் இருந்து மெல்லச் சொல்லித் தந்தார்.



'இப்படி சரசரன்னு சோப்பை குழைச்சுக்கோ. மூஞ்சியைத் தூக்கு. வெந்நீர்ல அலம்பிட்டியா? இப்படிக் காதுலேர்ந்து தாடை வரைக்கும் வா. அந்தப்பக்கம் நடவு அப்புறம் முகவாய் நடவு. கழுத்துப் பக்கம் பூசு. இப்பப் பிளேடு மாட்டு. ஸ்குரு திருப்பி மேலேமூடு. டைட்டாமூடு. படிய வச்சுவலதுகிருதாலேர்ந்து இழு. மோவாக் கட்டைக்குப் போகாதே. அது தனியாச் செய்யணும்.'

பிள்ளைக்கு சோப்புக் குழைத்து அப்பா பூசுவதை விடு பழக்க வேடிக்கைப் பார்த்தது. விரல் நடுங்க பிள்ளை சவரிரைச்சல் செய்வதைக் கவனித்தது.

'வெட்டிடுத்துப்பா.'

'என்டா கத்தற...கோணலா வச்சிருப்ப ஸ்டிக்கை.''

'ரத்தம் வருதுப்பா...'

'சேப்பா இருக்கு...ரத்தம் தான்ப்ம் அடுத்த பக்கம் இழு'

'எரியறதுப்பா '

'குடுரா இங்க.' பிளேடை இரண்டாய் ஒடித்து அரை பிளேடுடன் சரசரவென்று பிள்ளைக்கு சவரம் செய்தார் அப்பா. மீசை களைந்தார்.

'இப்ப என்னத்துக்கு இது? பத்தொம்பது வயசுலபால் வழிஞ்சுகிட்டிருந்த முகம் இப்ப பாருங்கே காக்கா குத்தின ஆந்தை மாதிரி இருக்கு.'

'நெட்டுத்திட்டா இருக்கறதால இப்படிச்சொல்ற. இப்ப சரசரன்னு மழிச்சு விட்டா எல்லா இடமும் சுவனா முளைக்கும். இருபத்தஞ்சுவயசுல கட்டைத்தாடியா வசீகரமா வச்சுக்கலாம். அவனே ஆசைப்படுவான் அவன் மூஞ்சியைப்பார்த்து.'

'பாவம் ரத்தம் வருதே.'

'படிகாரம் வச்சு அழுத்துடா.'

காயத்தில் காரம்பட, 'ஊ' வென்று பவுனர் நாயாய் ஊளையிட்டான்..

'தாங்கு...தாங்கு...வலி தாங்கு. செத்துடமாட் தாங்கு.'

'மோட்டர் சைக்கிள் ஓட்டுவியாடா?' பின்னால் உ கார்ந்து வேடிக்கை பார்த்து வந்தபோது கேட்டார்.

'கத்துக்கணும்.'

'என்னுத எடு...பார்ப்பம். இது கிக் ஸ்டார்ட்ட உதைக்காதடா. கால்ல எகிறிடும். மிதி. ஓங்கி மி அழுத்து அப்படியே. மெள்ள ரைஸ் பண்ணு. ஏ உட்கார். கிளட்ச் அழுத்திப் பிடிச்சுக்கோ. கால்ல தூக் பர்ஸ்ட் கியர் கொண்டு வா. மொள்ள மொள்ள க்ளட் விடு. விடறபோதே லேசா சைமல்டேனியசா ஆ லேட்டர் கொடு. போ. போ. பயப்படாதே.'

வேட்டி மடித்துக் கட்டியபடி பின்னால் ஓடி வந்தா

சர்க்கஸ் கரடி மாதிரி சுந்தரராஜன் பயத்தில் பல்லை கடித்துக் கொண்டு தீவுத்திடலை சுற்றிச் சுற்றி வந்தா

'அப்படியே ஒரு எட்டு போடு.'

'பயம்மா இருக்குப்பா.

'சின்னதா வலப்பக்க சர்க்கிள் போடு.'

போட்டான்.

'அப்படி இடப்பக்கம் போடு.'

போட்டான்.

'வட்டம் போடலாம். எட்டு போட முடியலைப்பா

'மக்கு...மக்கு இப்ப நீ போட்டது எட்டுதான்டா

'அப்படியா?' வாய் பிளந்தான்.

வண்டி தடுமாறி எகிற விழுந்தான்.



அப்பா ஓடி வந்து தூக்கிவிட்டார்.

''சுந்தரராஜா...நீ கெட்டவனா இரு. பாதகமில்லை. நல்லவனா மாறிடலாம்.

மக்கா இருக்காத சுந்தரா. கோழையா இருக்காத. மக்கா இருக்கறது பாவம். கோழையா இருக்கறது குரூரம். ஆம்பளைக்கு அழகு, தைரியம்டா—பவுடர் இல்லை. நீயே ஸ்டார்ட் பண்ணி நீயே எட்டு போடு. போ அடிப்பேன், போ'

இரவு எட்டு மணி. ஹோமம் முடிந்து பஞ்சக்கச்சம் அவிழ்த்து தட்டுச் சுற்றாய் கட்டிக்கொண்டு, சில்க்சட்டை மாட்டிக் கொண்டான். அப்பா அம்மாவுக்கு அருகே புது மனைவியுடன் டிபன் சாப்பிட உட்கார்ந்தான்.

'ஏதாவது தெரியுமா?'

'அப்பா...'

'இது பத்தி ஏதாவது ஞானம் உண்டா கேட்கறேன்.'

'இது வேணாம்பா.'

'ஏன்?'

'இது நீ சொல்லித் தர வேண்டாம்!'

'வேற எங்கயாவது ஸ்பெஷல் க்ளாஸ் போனேனோ?'

'இல்லை.'

'எட்டுப் படிப்போ?'

பேசாது இருந்தான்.

''புரியாதது இருக்கா?'

''இருக்கு.'

'என்ன பண்ணப் போற?'

'நானா கிக் ஸ்டார்ட்டர் உதைச்சு, நானா கிளட்ச் அழுத்தி நானா ரைஸ் பண்ணி...'

அப்பா வாய் விட்டுச் சிரித்தார்.

Uploaded by Naghu



'வெரிகுட். இந்தத் தைரியம் வந்தது பற்றிச் சந்தோஷம் 'மோட்டார் சைக்கிளும், ஜென் புத்திசமும்,' படிச்சிருக்கேன். நீ, 'மோட்டார் சைக்கிளும், முதலிரவும்ங்கற. இரண்டும் ஒன்றுதான். ஆனா மோட்டார் சைக்கிள் அஃறிணை. பெண்டாட்டி உயர்திணை, அது ஒரு உசிர். ஒரு ஜென்மா. வேற ஆத்மம். அது துடிச்சுதுன்னா, கண் கலங்கித்துன்னா, ஐயோன்னு கூவித்துன்னா நீ, நான், நம்ம வீடு நன்னா இருக்காது. இத மட்டும் ஞாபகம் வச்சுக்கோ.'

நினைக்க நினைக்கக் கண்கள் கலங்கின. நல்ல பிள்ளைகள்பெற தபஸ் செய்திருக்கவேண்டும். என்கிறார்கள். நல்ல தகப்பனுக்கும் தபஸ் செய்திருக்க வேண்டும். போன ஜென்மத்தில் புண்யம் செய்திருக்க வேண்டும். ஒரு குழந்தைக்கு தகப்பனே குரு முதல் குரு!

'குருப்பிரம்மா குரு விஷ்ணு குருதேவோ மஹேஸ்வரஹ. குருசாட்சாத் பரப்பிரம்மா தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ.' உள்ளங்கைப் பூக்கள் முழுவதும் விரல்கள் ஊடே எதிரில் உள்ள பழைய ரிஜிஸ்டரில் மெல்ல வழியவிட்டார்.

அது அப்பா எழுதிய ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தெட்டாம் வருட ரிஜிஸ்டர். இந்தக் கடை ஆரம்பித்த நாளில், முதலில் வாங்கி எழுதிய கணக்கு ரிஜிஸ்டர்.

எழுபத்தெட்டில் பன்னிரெண்டு லட்சம் வியாபாரம். எண்பத்தெட்டில் நூற்றியெட்டு லட்சம்.

பின்னால் நின்ற தம்பி முன்னேறிப் பூக்கள் போட்டான். அடுத்த தம்பியும் முன்னேறிப் பூக்கள் போட்டான்.

'பொம்மனாட்டிகளும் போடலாம். பூ எடுத்துக்கோ கல்பனா.' சுந்தரராஜனின் மனைவி கை நிறையப் பூக்கள் அள்ளிப் போட்டு, குனிந்து நமஸ்கரித்தாள். அடுத்த தம்பி நாகராஜனின் மனைவி வேதவல்லி, பூக்கள் போட்டு வணங்கினாள். இன்னொரு தம்பி நடராஜனின் மனைவி

Uploaded by Naghu



அனிதா, ஒரு கையில் பூக்கள் எடுக்க 'இரண்டு கையாலும் போடு தாய்,' சுந்தரராஜன் குரல் கொடுத்தார். அனிதா இரண்டு கைகளில் பூக்கள் தூவி குனிந்து நமஸ்கரித்தாள்.

'அம்மா இங்க வா. நீயும் பூஜையில பூபோடு.'

'நான் என்னத்துக்குடா? இங்கேயே இருக்கேன்.'

'வாம்மா. வருசா வருசம் இதொரு வம்பு உன்கிட்ட.'

'சுமங்கலிகளெல்லாம் போட்டாச்சோன்னோ... போறும், நான் வரப்படாது'

''வாம்மா ... நீயும் சுமங்கலிதான் தீர்க்க சுமங்கலி. எங்கப்பா செத்துப் போனாதானே...? நீ வேற விதம். எங்கப்பா நாலு மாடிக் கட்டிடமா இருக்கார். வந்து போடு. உன் கையால முதல் சாமான் வாங்கு வாசல்லெ ஜனம் தெரியறது. சட்டுன்னு வா.'

அம்மா சுவர் தடவி நடந்து வந்தாள். பூக்களை வலக்கை நுனி விரலால் எடுத்துப்போட்டாள். கன்னத்தில் போட்டுக் கொண்டு கரம் கூப்பினாள்.

'வா...என்ன வாங்கப் போற இந்த வருசம்?'

'ஏதாவது ஒண்ணு. எல்லாம்தான் நம்மாத்திலே இருக்கே.'

'வழக்கம்போல மொத வருசம் முதல் நாள் வாங்கற முதல் ரசீது உன் பேர்ல இருக்கணும்.'

'அனிதா ரூம்ல வாட்டர் ஹீட்டர் இல்லை, மாமி அது வாங்குங்கோ.' கல்பனா குரல் கொடுத்தாள்.

'வேணாம். எனக்கு ஹீட்டர் வேணாம்.'

'ஏன் அனிதா?'

'பயம்.'

'வால்கிளாக் வாங்கலாம் மாமி' வேதவல்லி யோசனை சொன்னாள். 'வராண்டால ஒரு க்ளாக் மாட்டலாம்.'

Uploaded by Naghu



'வராண்டால க்ளாக்கா...என்னமோ சொல்வாளே. சந்தனம் மிஞ்சித்துன்னா...' நாகராஜன் எக்களித்தான்.

'ச்செய்...'

'உனக்கு என்னம்மா வேணும்?'

ஹால் முழுக்கச் சுற்றினாள் அம்மா.

'இந்த வருசம் புதுசா ஒண்ணும் வரலையாடா?'

'வந்துருக்கு. சோடா தயார் பண்றது வீட்லயே.'

'வீட்ல சோடாவா...எதுக்கு?'

'குடிக்கத்தான்!' நாகராஜன் கண் கிறங்கி நடித்தான்.

'வெட்கக் கேடு. சும்மா கிடங்கோ.' வேதவல்லி அவனை அதட்டினாள்.

பீரோ, சோபா, வாட்டர் கூலர், வாட்டர் பில்டர், டிரான்சிஸ்டர், டேப்-ரெக்கார்டர், டி.வி., கட்டில், மெத்தை, வாஷிங்மெஷின், வால்கிளாக், மிக்சி, க்ரைண்டர், மின்விசிறி..விதவிதமாய் வரிசை வரிசையாய் அடுக்கப்பட்டிருந்தன.

'அம்மா...ஒரு ப்ரீப்கேஸ் வாங்கிக்கோ.'

'எனக்கு எதுக்குடா?'

'சும்மா ஒருஸ்டைல்' நடராஜன் அவள் தோள்பற்றிப் பேசினான் 'போர்ம் தலையணை வாங்கறயா?'

'சுந்தரராஜா.'

'அம்மா.''

'நான் எனக்கு ஒரு வாட்ச் வாங்கிக்கட்டா? லேடீஸ் வாட்ச். சுமார் விலைல.'

'அடி சக்கைன்னானாம். எதுக்கும்மா உனக்கு வாட்ச்' நடராஜன் அவள் தோள் பற்றிக் கேட்க சம்பந்திகள் முறுவலித்தார்கள்.



''ரொம்ப நாளா வாட்ச் கட்டிக்கணும்னு ஒரு ஆசை. சரி நமக்கு எதுக்குன்னு விட்டுட்டேன். இப்ப ஏதாவது வாங்கணும்கறயே அதான் லேடீஸ் வாட்ச்.''

'சாரதி...பில் போடுங்க.'

'எது பாட்டி வேணும்.'

'நல்லதாக் கொடு.'

நாற்பது ரகங்கள் போடப்பட்டன. அம்மா நானூறு ரூபாயில் ஒரு வாட்ச் எடுத்துக் கொண்டாள்.

'முன்னூத்தி இருவது. பில் போடு சாரதி.'

சாரதி பில் போட்டான்.

நாளைக்கு அந்த வாட்ச் விலை நானூறு ரூபாய். கடையில் வாங்கினால், நானூற்றி நாற்பது ரூபாய். இன்று வருட முதல் தேதி. ஜனவரி ஒன்று வாங்கினால் அடுத்த விலைக்கே வாட்ச் விற்கப்படும். எந்த லாபமும் சேர்க்காது விற்கப்படும்!

மங்களம் அண்ட் கம்பெனிக்கு வெளியே பெருங் கூட்டம் நிற்கிறது. போலீஸ் வரிசைப்படுத்திக் கொண் டிருக்கிறது. சரியாய் எட்டு மணிக்கு மங்களம் அண்ட் கோ-வ் கதவுகள் திறக்கப்படும், எது வாங்கினாலும், எந்தப் பொருள் எடுத்தாலும் மங்களம் அண்ட் கோ என்ன விலைக்கு வாங்கிற்றோ, அதே விலைக்கு விற்கப் படும். இரண்டாயிரம் ரூபாய் இரும்பு பீரோ, ஆயிரத்து எழுநூற்றி அம்பது ரூபாய். ஆயிரத்து நூறு மிக்சி தொள்ளாயிரம் ரூபாய். நானூற்றி அம்பது ரூபாய் மின் விசிறி முன்னூற்றுத் தொண்ணூறு. நாலாயிரம் ரூபாய் டி.வி., மூவாயிரத்து அறுநூறு.

ஆனால் கடன் கிடையாது. கேஷ்டவுன் ரொக்கத் திற்கு விற்பனை. நாளை மறுபடி வழக்கம்போல்மங்களம் அண்ட் கோ மாதாந்திரக் கடனில் இவைகளை விற்கும். றின் கீழ் மூன்று பகுதி, வட்டி பத்து சதவீதம் பத்திரச்

செலவு. பத்து ரூபாய் முதலில் கட்டிவிட்டு, மிச்சக்காசை பத்து மாதக் கடனாய் தரலாம். அல்லது ஆயிரத்து எழுநூற்றுப் பத்து ரூபாய் கட்டி, எடுத்துச் செல்லலாம். உபயோகித்துக் கொண்டே மீதிக் காசு மாதா மாதம் ஏழாம் தேதிக்குத் தரலாம்.

Uploaded by Naghu

'அம்மா, நீ பின் வழியா வீட்டுக்குப்போ. வேதவல்லி, அம்மாவைக் கூட்டிண்டு போம்மா. அனிதா கேஷுக்குப் போ. கல்பனா வாசலுக்குப் போ. நடராஜா, மாடியை கவனிச்சுக்கோ. நாகராஜா, ஜெனரல் ரவுண்ட் அடி. ரெடியா சாரதி, சேஷாத்ரி, தானு, பிரேமா... ரெடியா? கதவு திறக்கலாமா?''

'ஒரு நிமிஷம்...ஒரு நிமிஷம்.'

'ஐ விஷ் யூ ஆல் த ஹாப்பி அண்ட் ப்ராஸ்பரஸ் நியூ இயர்.'

'விஷ் யூ த சேம் சார்!' நாற்பத்தி மூன்று குரல்கள் ஒலித்தன.

கதவு திறக்கப்பட்டது. ஆயிரம் பேர் கும்பல்மங்களம் அண்ட் கோ-ல் நுழைந்தது. நாலு மாடிக்கும் பரவிற்று. கூட்டம் பார்க்க சந்தோஷமாய் இருந்தது.

'அப்பா...தாங்க்யூ!' சுந்தரராஜன் மனசுக்குள் முணுமுணுத்தார்.

## 2

'இனிமே விவசாயம் சரிப்பட்டு வராதுடா சுந்தரா.' அப்பா கல்லிடைக் குறிச்சியிலிருந்து ஒன்பது லட்சரூபாய் ரொக்கத்தை ஒரு தலையணையில் போட்டு மேலே கோணித் துணி கட்டிக் கொண்டு வந்து எக்மோரில் இறங்கினார்.



'ஏம்பா?'

'அறுவதுக்கு நாப்பதுன்னா சரின்னு செய்துண்டிருந்தேன். அவன் நாப்பதுல அறுவதுக்கு நாப்பதுங்கறான்.'

'புரியலை.'

'நூறு பர்சண்ட் விளைஞ்சா நாற்பதுர்பர்சண்ட்தான் கண்ல காட்டறான். அதுல அறுவதுக்கு நாப்பதுங்கறான். சரிப்படலை. இன்னிக்கு நஞ்சை விலை இத்தனை. ரொக்கம் கொடு...முக்கால் விலை விலையின்னு அத்தனையும் வித்துட்டேன். இனி பட்டணம்தான்னு அம்மாவும் நானும் வந்துட்டோம்.'

'அதுக்கோசரம் மஞ்சக்காணி கூடவா விப்பா?'

'மடைகாணியாவது மஞ்சக்காணியாவது... சரிப்படாது மங்களம். பிராமணன் விவசாயம் பண்ணக்கூடாது. வியாபாரம் பண்ணலாமோன்னோ?'

'அதுவும் கஷ்டம்தான். தகிடு தத்தம் தெரியணும்.'

'ஒரு தகிடுதத்தமும் வேண்டாம். நம்பிக்கை நாணயம் போறும் வியாபாரத்துக்கு.'

தலையைத் தோளில் தூக்கி சைக்கிள் ரிக்ஷா பிடித்து அம்மாவும் அப்பாவும் மயிலாப்பூருக்கு வந்தார்கள். ராலே சைக்கிளில் சுந்தரராஜனும் கூடவே வந்தான்.

'படிப்பு எப்படி இருக்கு?'

'கடைசி வருசம்ப்பா.'

'சிட்டில, டி. எம். கே. ஸ்ராங்காயிண்டு வர்றதே?'

'ஆமாம்.'

'அரிசி, பால் ஒன்னு போலத்தான். வாடகைதான் கூடக் கேட்பான் மெட்ராஸ்லங்கறே.'

'கொஞ்சம்.'

'நம்ம வீட்டைப் பதினைஞ்சு ரூபாய்க்கு வாடகைக்கு விட்டேன். இங்கே என்ன கேட்பான்.'

இருநூறு ரூபாய்க்கு மாடிபோர்ஷன் கிடைத்தது. இரண்டு மாசத்தில் தங்கை அபிதாவும் தம்பியர் நாகராஜனும், நடராஜனும் மெட்ராஸ் வந்தார்கள்.

'மெட்ராஸ்ல எல்லாப் பசங்களும் ஷூ போட்டிருப்பான்னாங்க. நிறையப் பேர் செருப்பில்லாம போறாம்பா.' நாகராஜன் வியந்தான்.

தவலையில் வைத்திருந்த காசை அப்பா இரண்டு மாசம் யோசித்து நாலைந்து வங்கிகளில் பிரித்துப் போட்டார்.

'மயிலாப்பூரில் க்ரவுண்ட் லட்ச ரூபாங்கறான். கல்லிடைக் குறிச்சில இதுக்கு ஒரு வேலி வாங்கலாமேடா. மாம்பலம் பார்ப்போமா?'

உள்ளடங்கின மாம்பலத்தில்கிடைக்கவில்லை. சற்றுத் தள்ளி தெற்கு உஸ்மான் தெருவிலிருந்து பிரியும் ஒரு இடத்தில் கிடைத்தது. தம் பிடித்து இரண்டு நிமிடம் ஓடினால் ரயில்வே லைனைத் தொடலாம்.

இரண்டு கிரவுண்ட் வீட்டோடு, ஒன்றரைக்குப் படிந்தது. முன்பக்கம் தளம். பின்னால் ஓட்டுக்கூரை. நாலு கட்டு வீடு கடைசிக்கட்டு சிதிலமாகியிருந்தது. ஆள் புழங்காமல் கொல்லையில் இடுப்புயரம் குப்பைமேனி வளர்ந்திருந்தது. கருவேப்பிலை பட்டுப் போயிருந்தது. ஆந்திராவிலிருந்து படம் எடுக்க வந்த புல்லா ரெட்டி அவசரத்திற்கு விற்றான்.

'ஏன் விக்கறானாம்?'

'வித்துட்டு கிராமம் பார்க்கப் போறானாம். பட்டணத்துல மனுஷா இருப்பாளாங்கறான்.'

'கூத்தப் பாத்தேளா. நாம கிராமத்தை விட்டுப் பட்டணம் பிழைக்க வந்திருக்கோம். அவன் சனியன்னு உதறிட்டுப் போறான்.'



'பிழைக்க வரலடி மங்களம். புரள வந்திருக்கான். மேற்கொண்டு புரள வக்கில்லை, போறான்!'

'வீடு அம்சமே இல்லையே...பாழாக் கிடக்கே.'

'புல்லா ரெட்டி பகல்ல சினிமா, ஷூட்டிங், ராத்திரி ஆட்டத்துக்கு இந்த பங்களா.'

'ஐயோ இது வேணுமா?'

'வேண்டாம். இடிச்சுடறேன்.'

இடிக்க நாள் குறித்து கடப்பாறை தூக்குமுன், தெரு முனைப் பிள்ளையாரிடம் வேண்டிக் கொண்டார்.

'அப்பனே...இந்தப் பட்டணத்துல எனக்கு ஒரு கூரை கொடு. உனக்கு நான் கூரை போடறேன்.' வேண்டிக் கொண்ட ,பிள்ளையாரிடம் வியாபாரம் ஆரம்பித்தது.வீடு தரைமட்டமாகி ஆறடி ஆழம் தோண்டி பெருங்கல்அடிக்க பலத்த அஸ்திவாரம் போட்டு நாலு ரூம், ஒரு ஹால், ஒரு வராண்டா, கிச்சன் கட்டினார். புழக்கடை முழுக்க சிமெண்ட் போட்டார்.சுற்றுச் சுவர் எழுப்பி செவ்வரளியும், தங்க அரளியும் நட்டார். நந்தியாவட்டை படர விட்டார். பவழ மல்லி பதித்தார். வில்வ மரம் சுற்றிச் செம்மை செய்து நீரோட்டம் காட்டினார்.

பத்து மாதம் கொத்தனாரோடு கொத்தனாராக உட்கார்ந்து கட்டின கவனத்தில், பட்டணத்து நிலம், நீர், கல், மண் எல்லாம் அத்துப்படி ஆயிற்று. வீடு முழுக்க சிகப்புத் தளம் இழைக்க, ஒரு அடி தளம் மேலே போட, தெற்கத்திக் காற்று வீட்டுக்குள்ளேயே இருந்தது.

அப்பா சிருங்கேரி மடம் எல்லா கல்லிடைக் குறிச்சிக் காரர்களும் சிருங்கேரி மடம். காஞ்சிபுரத்து முனிவர் கால் நடையாய் பட்டணப் பிரவேசம் செய்யத் தெரு வழியே வர, 'எந்த மடமா இருந்தா என்ன...பெரியவா பெரியவா தான்.' என்று அம்மா ஆரத்தி எடுக்க அப்பா சாஷ்டாங்கமாய் தெருவில் விழுந்து பணித்தார்.

'புதுசாக் கட்டினேன். பெரியவா என் வீட்டுக்குப் பேர் வைக்கணும்,'

பெரியவர் முகம் தாமரையாயிற்று. கை உயர்த்தி ஆசிர்வதித்தார்.

'பெரியவா பேர் வைக்கணும்.'

'புள்ளையாரை வேண்டின்டுதானே ஆரம்பிச்சே புள்ளையார் பேரே வை,'

நெஞ்சு நடுங்கிப் போயிற்று அப்பாவுக்கு.

வேண்டுதல் அப்பாவுக்குத் தெரியும் அம்மாவுக்குத் தெரியும். சுந்தராவுக்குத் தெரியும். காஞ்சிபுரத்திலிருந்து வருகிறவருக்கு எப்படித் தெரியும்? ஞானி. ஞானிக்குத் தெரியாதது எது இவ்வுலகில்?

'பெரியவா வாயால பேர் சொல்லணும்.' வாய் பொத்திக் கண் பனிக்க முழங்கால் மடக்கிக் குனிந்து நின்றார்.

'கணேச பவனம்னு வை. கோயிலுக்குக் கூரை போட்டுருவியோன்னோ?'

'மகா ப்ரபோ...' உடம்பெல்லாம் குலுங்கியது தாரை தாரையாய்க் கண்ணீர் வந்தது.

குருப் பிரம்மா...குரு விஷ்ணு குரு தேவோ மஹேஸ்வரஹ...குரு சாட்சாத். பரப்பிரம்மா, தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ.

இரண்டு முழங்கை உயரம். இரண்டு முழங்கை அகலம். காஞ்சிப் பெரியவர் படம் நடு ஹாலில் மாட்டப்பட்டது இதுவே தெய்வம். நடமாடும் தெய்வம். இந்த வீட்டில் இது வரை எந்தத் தவறும் நடக்காததற்கு இந்தப் படமே காரணம். எந்தப் பெரும் தடங்கலும் இன்றி இந்த வீடு வர இந்தக் கருணையே காரணம்.



தெரு முனைப் பிள்ளையார் கோயிலுக்கு முன்புறம் ஆஸ்பெஸ்டாஸ் கூரை போடப்பட்டது. சுற்றுச் சுவர் எழுப்பி வாசல்படி வைத்து நாலு ட்யூப் லைட் போடப்பட்டது.

'கூரை போட்டுட்டேன். பெரியவாளுக்கு தெரிவிக்கறேன்.'

மறுபடி தாமரை சிரித்தது.

'மடத்துல சாப்பிட்டுட்டுப் போ.

'உத்தரவு...சின்னதா ஒரு கடை ஆரம்பிக்கலாம்னு உத்தேசம், உஸ்மான் ரோட்ல இடம் பார்த்துருக்கேன். என்ன கடை ஆரம்பிக்கலாம்?'

'ஜனங்களுக்கு உபயோகமானதா செய்.'

'எது உபயோகம்?'

'எல்லாம்தான் வேண்டியிருக்கு. எல்லாத்தையும் வாங்க முடியறதா...மர பீரோவை எலி கடிக்கிறது மடத்துக்கு இரும்பு பீரோ வாங்கணுங்கறான் வைத்தி. இருந்து சாப்பிட்டுட்டுப் போ.'

அப்பா மடத்தில் சாப்பிட்டார்.

'உத்தரவு வாங்கிக்கறேன்.'

'உன் கடைக்கு என்ன பேர்?'

'இன்னும் வைக்கலை பெரியவாளே சொல்லட்டும்.'

'பொண்டாட்டி பேர் வைக்கறதுதானேடா இப்ப போறான்?' கூட்டம் சிரித்தது. அப்பா நாணினார்.

'நமஸ்காரம் பண்றேன்.'

'மங்களானி பவந்து.'

'எனக்குப் புரியறது.' உணர்ச்சி வசப்பட்டு அழுதார்.

மங்களம் அண்ட்கோ துவங்கியது.

'உங்களுக்கு இந்தப் பக்கம் ஷோ ரூம் இல்லை. நான் ஷோ ரூம் வைக்கறேன். பத்து பீரோ காசுக்கு கொடுங்கோ மத்தது கடன் கொடுங்கோ. வித்து அடைக்கறேன்.'

'மாசம் பத்து விப்பீரா?' கோத்ரெஜ் கேட்டது.

'ட்ரை பண்றேன். அப்போது இரும்பு பீரோ அத்தனை மவுசில்லை. பீரோ, கட்டில், நாற்கா எல்லாம் மரம் தான்.'

அப்பா துணிந்து இரும்பில் இறங்கினார். இறங்கி முதல் பீரோவை லாரியில் ஏற்றி சுந்தராவோ காஞ்சிபுரம் அனுப்பினார்.

'அப்பா கொடுத்தா?' சாவியைக் காலடியில் வைத் சுந்தரா நமஸ்கரித்தான். நிமிர்ந்து பார்த்தான்.

பார்வையா அது. ஞானியின் கண்கள் இதயத்தி ஊடுருவி நின்றது.

'என்ன படிச்சிருக்கே?'

சொன்னான்.

'தினம் ராமாயணம் பாராயணம் பண்ணு. காய ஜபம் செய்,'

'உத்தரவு.'

'மடத்துல காசு வாங்கிண்டு போ. பீரோவுக்கு.'

''அப்பா கூடாதுன்னுட்டா.'.

'இந்தா பிடி.'

குனிந்து நீட்டின இரண்டு உள்ளங்கை நிறை கல்கண்டு விழுந்தன.

'நீயும் கடைல இருக்கியா?'

'ஆமாம்.'

'ஜனங்களுக்கு உபயோகமா இருக்கச் சொ எல்லாம் நல்லபடி நடக்கும்.'

அப்பா கல்கண்டுப் பொட்டலத்தை சிரசில் வைத் கொண்டாடினார்.

'ஜனங்களுக்கு உபயோகமா இருக்கறதுன் என்னடா? மறுபடி மறுபடி சொல்றாரே...'



''தெரியலைப்பா!''

ஒரு பீரோ நகரவில்லை. தொட்டுத் தொட்டுப் பார்த்துவிட்டுப் போனார்கள்.

ஒரு அம்மாள் படியேறினாள். ''ஏழுநூறு ரூபாயா ஒரு பீரோ...? ஈஸ்வரா. ஆசையா இருக்கு...காசில்லையே!''

''இருக்கறதக் கொடுங்கோ...''

''மிச்சம்?''

''அடுத்த மாசம் கொடுங்கோ!'' பீரோ போனால் பெரிசு என்று பேரம் பேசினார்.

''முன்னூறு இருக்கு. இப்பத் தரேன்!''

''சரி!''

''மிச்சம் மூணு மாசத்துல தரேன். இது அட்ரஸ்!'' அப்பாவுக்கும் பிள்ளைக்கும் சடேரென்று உள்ளே விளக்கெரிந்தது.

''அப்பா!''

''கரெக்ட்ரா!''

தவணை முறையில் பீரோக்கள்? முன்னூறு செலுத்தி ஒரு இரும்பு பீரோ எடுத்துச் செல்லுங்கள். மீதியை மாதாந்திரத் தவணையில் கட்டுங்கள். ஸ்டாக் உள்ள வரை இச்சலுகை. எல்லாப் பத்திரிகையிலும் மங்களம் அண்ட் கோ வியாபாரம் பேசிற்று.

வக்கீலிடம் ஆலோசித்து பத்திரம் அச்சடித்து, வாங்கு பவனை சாலரி சர்டிபிகேட் கேட்டு, நாலு நாட்களில் பத்து பீரோ விற்க முடிந்தது.

''நான் நஷ்டத்துக்கு விக்கறேன் உனக்காக—எனக்கு டிஸ்கவுண்ட் கொடு!'' அப்பா கோத்ரெஜில் வாதாடினார்.

அறுநூறுக்கு வாங்கி வட்டியோடு எழுநூற்றி எழுபதுக்கு விற்றார். 'மூன்றில் ஒரு பங்கும், மொத்த வட்டியும் பத்திரக் காசும் முதலில் கட்டு. பிறகு மாதாமாதம் கொடு'

மாம்பலம் மத்தியதர வர்க்கத்தில் இருந்து பீரோ பேஷனாயிற்று. இரும்புக் கட்டில், டைனிங்டேபிள், ஈசிச்சேர், சுழல் நாற்காலி, படிப்பு மேஜை, கண்ணாடி வைத்த பீரோ, லாக்கர் வைத்த பீரோ, ரகசிய அறை பீரோ, சட்டை தொங்க விடுகிற பீரோ...

வெளியூரிலிருந்து வந்து வாங்கினார்கள். பீரோக் கம்பெனி சட்டம் போட்டுச் சர்டிபிகேட் கொடுத்தது. 'வாட்டமா இடம் புடிச்சிட்டீர்!' என்று பாராட்டியது.

''மின் விசிறி விற்பீர்களா?'' வேறு கம்பெனி கேட்க, அப்பா முதன் முறையாய் ஏரோப்ளேனில் பம்பாய் போனார். டிரங்குப் பெட்டி, டிரான்சிஸ்டர், எலக்ட்ரிக் ஸ்டவ், வாட்டர் ஹீட்டர், நுரை மெத்தை எல்லாவற்றிற்கும் ஏஜண்டாய் வந்தார். சுந்தரம் காலையில் கடை திறப்பான். கடிதம் எழுதுவான். பாங்குக்கு ஓடுவான், கலெக்ஷன் வராத வீட்டில் கேள்வி கேட்டு விட்டு வருவான். மாலை ஆறு மணிக்கு வீடு திரும்புவான். அப்பா பத்துமணிக்குக் கடை அடைத்துவிட்டு வருவார்.

வால் க்ளாக் எடுத்துக் கொண்டு காஞ்சிபுரம் போனார்கள். மடத்துக்கு வழங்கினார்கள்.

''பம்பாய்க்குப் பல தடவை போறேன். அங்க பட்டுப்புடவை நம்மவா கேட்கறா. வாங்கி அனுப்பலாமா?''

''நார்ப்பட்டா?'' தாமரை சிரித்தது. ''பூச்சியக் கொன்னு துணி உடுத்திக்கணுமா? பாவமில்லையா?''.

''தப்பு...தப்பு!'' அப்பா கன்னத்தில் போட்டுக் கொண்டார்?



''நீ கை வீசிண்டு போ. மடி நிறைய கொண்டா அது போறும்!''

அப்பாவும் பிள்ளையும் பம்பாய் போனார்கள். துணி மார்க்கெட் பிரமிக்க வைத்தது! தீபாவளி டைம் துணி வித்தா என்ன...புடவை வாங்கினா என்ன...இது பூச்சியக் கொல்லாத சுங்குடி தானே. வித்தா என்ன?

''காசு கொண்டு வரலை, டி. டி. இல்லை. செக் தரேன் சரக்கு தர்றியா?'' மொத்த வியாபாரியைக் கேட்டார்கள்

''ஓ...மதராசி. நோட்டு வை. இல்லை...எழுந்து போ.''

'பொய் சொல்லலையப்பா. நாலாயிரம் கொண்டு வந்தேன்.''பர்ஸ் பிரித்தார்.

"என்ன அது?''

''எது?''

''அந்தப் படம்!''

''எங்க பெரியவர். குரு மகராஜ் காமகோடி பீடம்!'

சேட் வாங்கி உற்றுப் பார்த்தான். கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

''இந்தப் படத்தோட, செக் கொடுத்துட்டுப்போ. சரக்கு எடுத்துக்க!''

''என்னடா இது...என்னடா இது...! எழுந்து வெளிய போன்னவன், சரக்கு எடுக்கச் சொல்றான்... என்ன ஆச்சரியம்டா!''

நாலு பண்டல் இடுப்பு உயரம். 'எட்டாயிரம் புடவை. புடவைக்கு முப்பது ரூபாய்கூட வைக்க எல்லாச் செலவும் போக இரண்டு லட்சம் முதல் வாரம் நின்றது. ''இன்னும் நாலு பண்டல் அனுப்பு சேட்!'' ஆறு பண்டல் சேட் அனுப்பினான். கடனில் அனுப்பினான். விற்றுக் கணக்குப் பார்க்க வரி போக ஐந்து லட்சம்.''

வாடகைக் கடையை விலை கொடுத்து வாங்கினார் அப்பா.

அந்த சேட் தீபாவளி முடிந்து குடும்பத்துடன் வந்தான். பெரியவரைப் பார்க்கணுமாம், சேட்டுடன் தமிழ் ஐயர் வந்திருந்தார்- மொழி பெயர்ப்புகூடத் துணைக்கு. அந்த சுவாமிநாதன்தான் மாமனாராகப் போகிறார் என்று சுந்தரராஜனுக்குக் காஞ்சிபுரத்தில் தெரிந்தது.

## 3

''இவன் பேர் ரத்தன்லால் சேட். உத்தரப்பிரதேச பனியா. இவன் தகப்பனாருக்குத் தொண்டையில் சாதம் இறங்கலையாம். எல்லா வைத்தியமும் பார்த்தாச்சு, பலனில்லைன்னு பெரியவாகிட்ட வந்துருக்கான். ராமனாதன் பெரியவா படம் கொடுத்துருக்கார். உங்களைப் பார்த்தே ஆகணும்னு தோணிடுத்தாம். அப்பா வரலை. நடமாடறதில்லை. பொண்டாட்டி குழந்தைகளோட வந்திருக்கான்!''

சேட் அழுதான். அவன் மனைவி குனிந்து இடை விடாது நமஸ்கரித்துக் கொண்டிருந்தாள்.

தாமரை கண்மூடி உட்கார்ந்து கொண்டிருந்தது.

''வேத புஸ்தங்கள் சரியா கிடைக்கலை. பண்டி தாளை வச்சு பிரிண்ட் பண்ணித் தரானா கேளுங்கோ!''

கூட வந்த தமிழ் ஐயர் மொழி பெயர்த்தார். சேட் தலையாட்டினான். எது செய்யவும் தயாராய் இருந்தான். ''பண்டிதர்களுக்கு எங்கே போவேன்?'' பயந்தபடி கேட் டான்.



''நான் அனுப்பறேன். புஸ்தகம் செய்யச் செய்ய அப்பாவுக்கு உடம்பு சரியாயிடும்னு சொல்லுங்கோ.''

சொல்லப்பட்டது.

''ராமனாதா புஸ்தகம் ரெடியானவுடன் இங்க வாங்கிண்டு வரயா?''

''உத்தரவு.'' அப்பா கரம் குவித்தார்.

நாலு மாதத்தில் போன் வந்தது.

பாதி புஸ்தகம் தயார். அப்பா கஞ்சி சாப்பிடுகிறார். மறு மாதம் போன் வந்தது, அப்பா ரொட்டி சாப்பிடுகிறார். முழுப் புத்தகமும் தயார். அப்பா முற்றிலும் குணமாகி விட்டார். புத்தகங்கள் பைண்ட் செய்யப்படுகின்றன

அப்பா மடத்துக்குப் போனார்.

''நீ எதுக்கு அலையற. உன் புள்ளைய அனுப்பு.''

''போடா. உடனே அனுப்பு?' அப்பா துரத்தினார். பைண்ட் ஆனது வால்தலம். அது மழை நாள். பம்பாய்ல மழை. பேய் மழை. உலரவில்லை. தூக்க அக்கக்காய் புஸ்தகம் வந்தது. எலக்டிரிக் ட்ரையரில் வைக்கலாம். ஆனால், பேப்பர் பொடிந்து போகும்.''

''இருந்து வாங்கிண்டு வா.''

ஒரு வாரம் பம்பாயில் தங்கினார். சேட் கூட வந்தவர் வீட்டுக்கு சாப்பிடப் போனான். கல்பனா பரிமாறினாள்

''எனக்கு தஞ்சாவூர். வேலைக்குன்னு வந்து இங்க செட்டில் ஆகி இருவது வருஷம் ஆச்சு. மூத்தவளுக்கு கல்யாணம் முடிச்சுட்டேன். இவ பாக்கி படிச்சிண்டிருக்கா இவளுக்கும் முடிஞ்சுதுன்னா சப்ஜாடா மெட்ராசுக்கு வந்துடுவேன். அப்பா வருவார்னு நினைச்சேன். வந்தா இவளுக்கு மெட்ராஸ்ல ஏதாவது வரன் பார்க்கச் சொல்லலாம்னு.''

''ஏன் நான் வரவில்லையா?'' உள்ளே குரல் கேட்டது

கல்பனா பி. ஏ. லிட்ரேச்சராம். ஆங்கிலம், இசை மாதிரி இருந்தது. இந்தியில் கவிதை படிக்க முடிந்தது. மராத்தியில் சரளமாய்ப் பேச வந்தது.

''படிச்சுட்டு வேலைக்குப் போகப் போறியா?''

''நை....''

''பிறகு எதுக்கு லிட்ரேச்சர்?''

''எனக்குப் பொறக்கற குழந்தைகளுக்கு சொல்லித் தர அதுகளை கெட்டிக்காராளா வளர்க்க. இங்கிலீஷ் படிக்கப் படிக்க உலகம் எத்தனை பெரிசுன்னு புரியறது.''

''எம். ஏ, படிப்பியோ?ா''

'இது போதும்.''

''ஏன்?''

''படிப்பு முக்கியமே இல்லை. ஆனா கல்யாணம் பண்ணி நல்லபடியா குடித்தனம் பண்ணி குழந்தைகளை வளர்க்கற சந்தோஷம் எந்தப் படிப்பிலும்? இல்லை,''

''பாம்பேல வளர்ந்தவளாச்சே. கல்யாணம் பத்தி உனக்கு வேற ஐடியா இருக்குமோன்னு நினைச்சேன்.''

''ஏன் பாம்பேல இருக்கறவா கல்யாணம் பண்ணலையா குடித்தனம் பண்ணலையா...?''

''இல்லை பாரினுக்குப் போகணும்...அது இதுன்னு...''

''போகணும்தான். போய் சுத்திப் பார்த்துட்டு வந்துடணும். நம்மூர் மாதிரி வருமா?''

''எது உன் ஊர்.''

''மெட்ராஸ்.''

''எப்படி?''

''வளர்ந்தது பாம்பேன்னாலும் மனசு அங்கதான் இருக்கு. கபாலி கோயில், உடுப்பி ஒட்டல், உட்லண்டஸ், கச்சேரி, டிராமா...சைக்கிள் ரிக்ஷா, இஸ்துக்கினு போயிட்டான்ங்கிற பாஷை. கூச்சல் இல்லாத பீச், கும்பல் இல்லாத அடையார்...''



''கல்பனா என்கூட இப்பவே மெட்ராஸ் வந்துடறயா?'' நுனு நாக்கு வரை கேள்வி வந்து மடங்கியது.

ஒற்றைக் குடையில் இரண்டு பேரும் ப்ரசுக்குப் போனார்கள். எண்ணிக் கட்டுவதை மேற் பார்வை இட்டார்கள் உள்ளே ப்ளாஸ்டிக் பேப்பர் சுற்றச் சொல்லி கல்பனா பெரிய சண்டை போட்டாள்.

இந்த மழையில் மெட்ராசுக்கு எப்படி நனையாமல் போகும்? என்று வாதிட்டாள். கூட பண்டலுக்குப் பத்து ரூபாய் என்று பேக்கர் சொல்ல...டாக்சி பிடித்து முழங்கால் ஜலத்தில் தள்ளாடி நூறு புத்தகம் ஒருபண்டல் ஒரு பண்டலுக்கு பத்து மீட்டர். இரண்டாயிரம் புத்தகம். இரு நூறு மீட்டர். சேட் பெயர் சொல்லிக்கடன் வாங்கினாள். வண்டியில் ஏற்றினாள். டாக்சி ஜலம் புகுந்து வழியில் நின்று விட்டது. சுந்தரா நூறு மீட்டர் பண்டில் கல்பனா நூறுமீட்டர் பண்டில் தலையில் சுமந்து முக்கால் மைல் ப்ரசுக்கு நடந்து வந்தார்கள்.

''இப்ப சுத்து. இது என்ன புஸ்தகம்? யார் கட்டளை? ஏதாவது உனக்குத் தெரியுமா? சுத்து பிளாஸ்டிக் பேப்பரை.'' பேக்கரை அதட்டியபடி சுந்தராவும் கல்பனாவும் கூட நின்று சுற்றினார்கள், மேலே கோணி போட்டு வைத்தார்கள். இரும்புத் தகடு போட்டு இறுக்கினார்கள்.

லாரி வர இரவு பன்னிரண்டாயிற்று மழை காரணமாயிற்று, அதே லாரியில் ஏறி வீட்டுக்கு அருகே இறங்கி சொட்டச் சொட்ட நனைந்து படியேற. 'என்னடி இது... குடை எடுத்துண்டு போகலை...பன்னெண்டு ஆச்சேன்னு கவலையாயிடுத்துடி...''

'இவர் துணைக்கு இருந்த தைரியத்துல அங்கயே நின்னுட்டேம்மா. கவலைப்படாதே. இரண்டாயிரமும் பூ மாதிரி மெட்ராசுக்கு போறது?''

நான் வாழ்க்கை முழுவதும் துணையிருக்கேன். என் கூட வா கல்பனா.

ரயில் ஏறியபோது சுவாமிநாதனும் அவர் பொண்ணும் வந்து வழியனுப்பினார்கள் சுவாமிநாதன் வாழைப்பழம் தேடப் போனார்.

''இது லஞ்சுக்கு,'' கல்பனா டிபன்பாக்சில் பூரி அடைத்துக் கொடுத்தாள்.

''என்னைப் பத்தி ஒண்ணுமே கேட்கலையே நீ...''

''கேட்பானேன்...தெரியறதே.''

' என்ன தெரிஞ்சுது.''

''பெரியவா கட்டளைக்கு அப்பா துரத்தினதும் ஒரு வாரம் வந்து பம்பாய் உட்கார்றதும், உட்கார்ந்த ஒரு வாரமும் இன்னண்ட அன்னண்ட அசையாத வந்த வேலையே குறியா இருக்கறதும்...உடம்பு உரச ஒரே குடைல நடக்கறானே இடிச்சிப் பார்ப்பம்னு நினைக்காத ஒதுங்கி ஒதுங்கி நனைஞ்சு நடந்ததும்...ஆனா உள்ளுக்குள்ள ஆசை ஆசையா என்னைப்பத்தி கேள்வி கேட்டது. மழைல சுமைகளோட நடக்க விட்டானேன்னு கோபப்படாம தலைல பிளாஸ்டிக்பண்டல் தூக்கி நடந்து வந்ததும் என்னைப் பத்திக் கேட்கவே இல்லையே கல்பனான்னு ஏங்கறதும்...தெரியறதே!''

வியப்பில் வாய் பிளந்து போயிற்று.

''என்னைப் பிடிச்சிருக்கா கல்பனா?''

இன்ஜின் கூவிற்று.

''பதில் சொல்ல மாட்டியா?''

''அதான் ரயிலே பதில் சொல்லிடுத்தே.''

''என்ன சொல்லித்து?''

''ரொம்ப சந்தோஷம்.''

''ரொம்ப சந்தோஷம்னா...? எனக்குப் புரியலை... பளிச்சுனு சொல்லேன்.''



'இப்படி ஒரு ஆண் ஒரு பொம்மனாட்டியக் கேட்கறதே சந்தோஷம் இல்லையா?... இவன்தான் உனக்குப் புருஷன்னு யாரோ ஒருத்தனைக் கொண்டு வந்து நிறுத்தினா நான் என்ன பண்ண முடியும்? என்னைப் புரிஞ்சுண்டு எம்மேல ஆசையோட, உனக்கு என்னைப் புடிச்சிருக்கான்னு கேள்வியும் கேட்கறபோது சந்தோஷப்படாம?'

உதடு கடித்தாள். தலை குனிந்தாள். விழி ஓரம் தேங்கின கண்ணீரை விரல் வைத்து அழுத்திக் கொண்டாள்.

'ஆனா நான் எந்தக் கற்பனையும் வளர்த்துக்க மாட்டேன். பிறப்பு, இறப்பு, கல்யாணம் எல்லாம் கடவுள் செயல்!'

''நான் உன்னையே நிச்சயமா...?

''வேண்டாம். அவசரப்பட வேண்டாம். ப்ராப்தம் இருந்தா நடக்கும். லெட் அஸ் ப்ரே!'

டஜன் வாழைப் பழங்களோடு ஓடி வந்தார் சுவாமிநாதன். ''ஆம்பர் போட்டுட்டான். போய் கடுதாசு போடு.''

ரயில் நகர்ந்தது. மனசு கனத்தையும் இழுத்துக் கொண்டு நகர்ந்தது.

அவள் கையசைத்தாள். அவன் கரம் கூப்பினான்.

''இறையே... எங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்யுங்கள்! குருவே கள்ளமற்ற எங்கள் இந்த இறைபணிக்கு கருணை செய்யுங்கள்! வாழ்க்கை முழுவதும் இவள் எனக்குத் துணையாக, நான் இவளுக்குத் துணையாக ஆசி சொல்லுங்களேன். குருப் பிரம்மா...குரு விஷ்ணு, குரு தேவோ... மஹேஸ்வரஹ...குரு சாட்சாத் பரப்பிரம்மா தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ'

''இறைவனிடம் கையேந்துங்கள்—அவன் இல்லையென்று சொல்லுவதில்லை. பொறுமையுடன் கேட்டுப் பாருங்கள். அவன் பொக்கிஷத்தை மூடுவதில்லை!''

ஞானிக்குத் தெரியாதா...? பொக்கிஷம் தேடத்தான் பிள்ளையை பம்பாய் அனுப்பியிருக்கிறோம் என்று.

''சேட் இரண்டு புஸ்தகம் எடுத்துண்டு ப்ளேன்ல வந்துருக்கான். மத்தது லாரில வர்றது.''

''கூட வந்தாரே சுவாமிநாதன் அவர் வரலையா?''

''இல்லை. வரச் சொல்லணுமா?'

''சொல்லேன்!''

ஞானியின் காந்தள் விரல்கள் புஸ்தகம் பிரித்தன. தாமரை மலர்ந்தது.

''பம்பாய்ல நல்ல மழையோ...ஈரம் தெரியறதே!''

''பண்டல் எல்லாம். நன்னா பிளாஸ்டிக் பேப்பர் சுத்தி, மேல கோணி போட்டு இறுக்கிக் கட்டியிருக்கு.'' சுந்தரா பதில் சொன்னான்.

தாமரை நிமிர்ந்து அவனைப் பார்த்துச் சிரித்தது.

''உன்னையும் இறுக்கிக் கட்டணும்.''

சிரித்தது.

சுந்தரா வாய் பொத்திக் கொண்டான். அப்பா வியப்புடன் பார்த்தார்.

''ரொம்ப சந்தோஷம். இதுல ஈடுபட்டவா எல்லாருக்கும் ஈஸ்வர கிருபை நிச்சயம்.''

சேட்டுக்கு பட்டுப் போர்த்தி பழங்கள் கொடுத்து டாலர் வழங்கி...

சேட் கேட்டான்: ''வேற என்ன செய்யணும் மறுபடி கட்டளை தரணும். ஆயுசு பூரா ஏதாவது செய்துண்டே இருக்கணும். என்கிட்ட 'கடவுள் கிருபை' செல்வத்துக்குக் குறையில்லை.''

''உனக்குத் தெரிஞ்ச ஏழைப் பெண்களுக்கு கல்யாணம் பண்ணேன்...விருத்தியாகும்.''



சேட் போனபிறகு மறுவாரம் சுவாமிநாதன் மனைவி மகளோடு வந்தார். ராமநாதன் வீட்டில் தங்கினார். கல்பனாவும் சுந்தராவும் வீடு முழுக்கச் சுற்றினார்கள். அவன் தங்கை அபிதாவுக்கு மில்டன் சொல்லித் தந்தான். அவளோடு மாம்பலம் சுற்றினாள்.

''நான், பாசந்தி நன்னா பண்ணுவேன் மாமி!'' சமையலறையில் கொடி ஏற்றினாள். கடையைச் சுற்றி வந்தாள்.

''பாம்பேல பாக்கெட் டிரான்சிஸ்டர் தூள் பறக்கறது. மாமா... நீங்க ஒரு ஆயிரம் வாங்கிப்போடுங்கோ. கிரிக்கட் மேட்ச் வர்றது. நல்ல சேல்ஸ் ஆகும். கோல்ட்ல இன்வெஸ்ட் பண்ண வேண்டாம். க்ரவுண்ட்ல இன்வெஸ்ட் பண்ணுங்கோ. எக்னாமிக் டைம்ஸ்ல படிச்சேன். கோல்ட் மார்க்கெட் சரியப் போறது. சுந்தரா எக்னாமிக்ஸ் டைம்ஸ் படிக்கறதில்லையா? நீங்க படிக்கணும்.''

''இரும்பு அலுமினியம் எல்லாம் ஏறப் போறது. பிளாஸ்டிக் ப்ரைட்டா ஆயிடும். இப்பச் சேர், மோடா எல்லாம் பிளாஸ்டிக் வர்றது. ஆனா சப்ஜாடா ஏமாத்தறான். டூப்ளிகேட் நிறைய. நம்பமுடியறதில்லை.''

அப்பா உற்று உற்று கவனித்துக் கொண்டிருந்தார்.

''பொண்ணுக்கு வரன்பார்க்கணும்னோளே... ஜாதகம் இருக்கா?'' வாங்கிக் கொண்டு வெளியே போனார்.

சகலரும் காஞ்சிபுரம் கிளம்பினார்கள். மடத்துல 'என் பையன் ஜாதகமும் ஒரு பொண் ஜாதகமும் கொடுத்துருக்கேன். பெரியவா பொருத்தம் பார்க்கச் சொல்லி உத்தரவு போடணும்.''

தாமரை திரும்பி யாரையோ பார்க்க, தலையாட்டினார்கள்.

தாமரை மனசு குவித்துக் கண்மூடி ஆழ்ந்தது.

''பேஷா செய்.''

''விருத்தியாகுமோன்னோ...?''

திரும்பி அந்தக் கண்கள் உற்றுப் பார்த்தன.

''நப்பா இருந்தா மன்னிக்கணும். என் அஞ்ஞானம். கல்யாணம் ஆயிரங்காலத்துப் பயிர்.''

''இவனுக்கு இவதான்னு விதிச்சுருக்கு!''

''பம்பாய் சுவாமிநாதன் பொண்ணுதான்! கல்யாணப் பத்திரிகையை பெரியவா ஆசீர்வாதம்னு போடலாமா...''

''பத்திரிகைல எம்பேர் போட்டா காலணா வரதட்சணை வாங்கப்படாது.''

''மாட்டேன்.''

''பேஷா செய்.''

''சுவாமிநாதன், நீங்களும் உங்க மனைவியோட நமஸ்காரம் பண்ணிக் கல்யாணத்துக்கு உத்தரவு வாங்கிக்குங்கோ!''

சுவாமிநாதன் விழித்தார். 'பே...பே' என்றார். அதிர்ச்சியில் சொல் வராது தடுமாறினார்.

''எல்லாம் நல்லபடி நடக்கும். திருப்பதியில் கல்யாணம் பண்ணு.''

வெளியே வந்து அப்பாவின் கைப்பிடித்து சுவாமிநாதன் வாய்விட்டு அழுதார். நான் பரம ஏழை ஸ்வாமி. உங்களுக்கு உறை போடக் காணாது என் காசு.''

''நான் காசு கேட்டேனா? கூடாதுன்னு கட்டளை ஆயிருக்குப்பா. மெட்ராஸ்ல வச்சா வாரி இறைச்சுப்பிடுவேன்னு திருப்பதின்னுட்டாளே.''

''அதுக்குக்கூட எனக்கு வக்கு உண்டா தெரியலையே.''

''பாரத்தை பகவான் மேல போடும். இந்தப் பொண் என் பையனுக்குன்னு நிச்சயம் ஆயிடுத்து. வாரும். ஏதாவது ஒரு கோயில் மண்டபத்துல வெத்தலை பாக்கு மாத்திக்கலாம்.''



காமாட்சியம்மன் சந்நிதியில் பாக்கு வெற்றிலை மாற்றிக் கொண்டார்கள்.

''உங்க பையனைக் கேட்கலில்லையே?''

''அவனை நிக்க வச்சு, பலமுமல்லி உலுக்கறான்... அப்பமே தோணித்து ,என்னடா உம்புள்ளைய பம்பாய்க்கு அனுப்புன்னாரே இதுக்குதானான்னு?''

''நேரிடையாக் கேட்டுரலாமே.''

''கேளும்.''

''அம்பி...நான் ஏழை.''

சுந்தரா கையைப் பிடித்துக் கொண்டான்.

''பெரிய பொக்கிஷம் கொடுத்துருக்கேள் எனக்கு''

''புடிச்சிருக்கா?''

கோயில் மணி அடித்தது.

''என்னப்பா...சொல்லேன்.''

''மணி சொல்லிடுத்தே.''

''என்னன்னு?''

''சந்தோஷம்னு.''

அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களில் சிரிப்பு கொப்பளித்தது!

## 4

''நம்ம கல்யாணம் லவ்வா...அரேன்ஜ்டா...?'' கல்பனா முதலிரவில் கேட்டாள்.

''இது, அரேன்ஜ்ட் லவ் மேரேஜ்.'' சுந்தரா பதில் சொன்னான்!

''புரியலை.''

''இரண்டு பேரும் லவ் பண்ணுங்கோன்னு யாரோ அரேன்ஜ் பண்ணியிருக்கா.''

'ஹேய்...நான் லவ் பண்ணினேனாக்கும் உங்களை...'

''டிபன் பாக்ஸ்ல பூரி அடைச்சுக் கொடுத்தது என்ன?''

''ஒரு பிரியம்.''

''ரயில்வே ஸ்டேஷன் வந்து அழுதது?''

''ஒரு நப்பாசை.''

''ரொம்ப சந்தோஷம்னு ரயில் கூவினதாச் சொன்னது...?''

''அசட்டுத்தனம்.''

''வெரிகுட். பிரியம், நப்பாசை ... அசட்டுத்தனம் எல்லாம் கலந்ததுக்குப் பேர்தான் லவ்.''

''அடடா...என்ன தத்துவம்! என்ன தத்துவம்! அவ்விடத்துல...எப்படியோ?''

''கேள்வி கேளு.''

''நீங்க என்னை லவ் பண்ணேளா?''

''ச்சே...ச்சே.''

''ப்ளாஸ்டிக் பண்டலை தலைல வச்சு என் பின்னால நடந்து வந்தது என்ன?''

''மடத்துக் காரியம்.''

''என்னைப் பத்தி ஒண்ணும் கேட்கலையேன்னது...?''

''உன்னைப் பத்தியே அலட்டறியே என்னைப் பத்தியும் கேளேன்னு ஒரு கர்வம்.''

''ஓஹோ...என்னைப் பிடிச்சிருக்கான்னு கேட்டது?''

''சும்மா, மெட்ராஸ்ல அதுக்கு டாவடிக்கிறதுன்னு சொல்வாங்க...அது மாதிரி.''

''போங்கப்பா. நீ என்னை லவ் பண்ணவேயில்லை...'' மல்லிகை சிதறத் தலையசைத்தாள்.



''நீயெனதின்னுயிர் கண்ணம்மா...எந்த நேரமும் நின்றனைப் போற்றுவேன்.'' சுந்தரா பாடினான்.

துள்ளி அவன் நெஞ்சில் முகம் பதித்துக் கொண்டாள் அவள். அவன் பாடியதற்குப் பதில் பாடினாள். அவன் முகம் நிமிர்ந்து கண் இறங்கினாள். அவன் இதழ் பொருத்த விட்டுக் கொடுத்தாள்.

''யோசிக்கக் கனா மாதிரி இருக்கு பாம்பே போனதும் முதல் வேலையா பாங்க் பாஸ் புக் பிரிச்சுப் பார்த்தேன். ஏழாயிரம் ரூபா இருந்தது. தாயேன்னு காமாட்சியம்மனை வேண்டிண்டேன். ட்ரஸ் எடுப்பாரா...? நகை பண்ணுவாரா...? பாத்திரம் வாங்குவாரா...? கல்யாண சாப்பாடு போடுவாரா...? ஏழாயிரத்துல என்ன முடியும்?''

''அப்பா தலைல கை வச்சுண்டு உட்கார்ந்துட்டா.''

''சேட் வந்துட்டான் ஸ்வாமிஜியப் பார்த்தீங்களா?... புஸ்தக பண்டல் போய் சேர்ந்ததா...ஏதாவது தப்பு இருக்குமான்னு?'' துளைச்சான்.

''நீ தப்பிச்சபா...நான் மாட்டிண்டுட்டேன்.''

''என்னன்னு கேட்டான். முழுசாச் சொன்னார் சரக்குன்னு கெட்ட வார்த்தை கேட்டவன் மாதிரி வெளியே போய்விட்டான். கடன் கேட்டுருவேனோன்னு நினைச்சு ஓடிட்டான்னார் அப்பா.

''சாயந்திரம் பொண்டாட்டியோட வந்தான். நாலு செட் சூட் துணி, நாப்பது புடவை, ஆறுபவுன் சங்கிலி இரண்டு வெள்ளி டம்ளர், தட்டு, பத்தாயிரம் ரூபா காசு. வயசுல சின்னவன் தான். ஆனா அப்பா கால்ல விழுந்துட்டான். நான் பாம்பே விட்டுப் போகமாட்டேன். இந்தக் கட்டை சாகற வரைக்கும் உனக்கு உழைக்கும். இது சத்தியம்னு ஆவேசம் வந்த மாதிரி கத்தினார். இது [illegible]ன்னு சொருபம் பிரதட்சணம் பண்ணி நமஸ்காரம் பண்ணுன்னார். பண்ணினேன்.

''நம்ம கல்யாணம் மாதிரி அத்தனை ஒத்துமையா அத்தனை பாங்கா நடக்குமா? இது கொடுப்பினை. பிரார்த்தனை. தெய்வம் இருக்கு. நிச்சயம் இருக்கு. இந்த நம்பிக்கை இருக்கறபோது சந்தோஷமா இருக்கு. இந்த சந்தோஷம் வர்றபோது எல்லார்கிட்டயும் அன்பா இருக்கத் தோண்றது என்னா...உங்க தங்கை அபிதாவுக்கு வரன் பார்க்க ஆரம்பிக்கலாமே!''

மனசு முழுக்கத் தெய்வ உணர்வும் குடும்பப் பொறுப்புமாய் கூடினார்கள். காமம், கடவுள் பணிபோல நடந்தேறியது.

''உங்கண்ணாவுக்கு கல்யாணம் ஆயிடுத்து. அவனை அடிக்கடி ஊருக்கு அனுப்பமுடியாது. நாகராஜா கடைக்கு வா.'' பி. ஏ., ஆங்கில இலக்கியம் கடைசி வருஷம் முடித்ததும் அவனையும் அப்பா வளைத்துக் கொண்டார்.

''டேய்...கடைக்குப் போறதுக்கு முன்ன, காஞ்சிபுரம் போய்ட்டுவா. சுந்தரா அறிவுறுத்தினான்.

''அப்படின்னா?''

''ஏன் உனக்கு நம்பிக்கையில்லையா?''

''இருக்கத் தொட்டுதானே இந்த வீட்ல இருச்சேன். பட், நான் ஜாஸ்தி வச்சுக்கறதில்லை. லிமிட்டா இருக்கணும் எதும்''

''என்ன பாஷைடா பேசற?''

''நம்ம தேங்கே தனிம்மா. பட்டை வுடறதில்லை ஆனா பட்டை போட்டவனை கேலி பண்றதில்லை பலான வீட்டுக்குப் போறதில்லை ஆனா எது க்ராஸ் எது க்ளாஸ்னு தெரியாம இருக்கறதில்லை. தம் அடிக்கணுமா அடி. தண்ணி போடணுமா போடு. ஆனா வுட்ருன்ன போது உட்றணும்.''

''தண்ணி போடறியா?''



''போன வருஷம் இரண்டு நடவை போட்டேன். இனி வர நியூஇயர் அன்னிக்கு ஒரு நடவை போடுவேன்.''

''சிகரெட்டு?''

'எப்பனா பேஜாரா இருக்கறச்ச''

''என்னடா பேஜாரு உனக்கு?''

''மனசு ஒருமாதிரி லோன்லியா பூடும்மா சில சமயம்''

''டேய் ஏன் கெட்ட பழக்கமெல்லாம்...''

''ஒன்னு சொல்றேன். எம்பேல ஒரு கம்ப்ளெயிண்ட் வராது உனக்கு. நான் பொறுப்பில்லாதவன்னு நினைக்கறே. என் ஐடியா சொல்லட்டா கடை பத்தி''

கடையைப் புரட்டி போட்டான். இன்டீரியர் டெக்கரேட்டர் நாலுபேரை அழைத்து வந்து யோசனை கேட்டு வால்பேப்பர் ஒட்டி அலுமினிய பிடிங் போட்டு, லஸ்தர் தொங்க விட்டு, கார்பெட் விரித்து, தெருவிலிருந்து. பார்க்கக் கடை கண்ணைப் பறித்தது.

''பொண்ணுங்களா நாலு போடலாம் ஸேல்சுக்கு,''

'அப்பாவுக்குப் பிடிக்காதுடா...சுவாமி படங்கள் இருக்கு...லேடீஸ் வேண்டாம்பார்.''

''இது கோயிலா...கடையா...குழப்பாதீங்க. கடையக் கடையா நடத்துங்க. கோயிலைக் கோயிலா வையுங்க. என் ஐடியாவால ஸேல்ஸ் குறைஞ்சா செருப்பால அடி.''

வியாபாரம் அதிகமாயிற்று! ஆனால் சில ஐட்டம் போகவேயில்லை. நுரை மெத்தை போகவே இல்லை. டைனிங் டேபிள் எடுபடவில்லை. பாக்கெட் டிரான்ஸிஸ்டர் பின் தங்கிவிட்டது.

''வேற யார்கிட்டயாவது மொத்தமா பாதி விலைக்கு வித்துடலாமா. நஷ்டம்தான்...என்ன செய்ய...?'' அப்பா கவலைப்பட்டார்.

''நைனா, நான் ஒரு ஐடியா சொல்லட்டா...'' நாகராஜன் விரல் சொடுக்கினான்.

''டேய் நைனா கிய்னான்னா கொன்னுடுவேன் படவா...''

' ஒகே...பாதர். நான் ஒரு...''

அப்பான்னு கூப்பிடுறா முண்டம்.''

''யப்பால்...''

''இந்தக் கம்மனாட்டிய திருத்தவே முடியாது.''

''லாங்வேஜ் முக்கியமில்லை டாடி...வேலை முக்கியம்.''

நாகராஜன்தான் நியூ இயர் ஸேல்ஸ் ஐடியா தந்தவன்.

''எல்லா பேப்பர்லயும் புல்பேஜ் வுட்டுறு. ஹாப்பி நியூ இயர் போடு. அன்னிக்கு காஷ்ஸேல்ஸ். வாங்கின விலைக்கு விப்போம் எல்லா சாமானும். நோ லாபம்.''

''லாபமில்லாத எப்படிடா முத நாளே...''

''இருக்கே உன் டிஸ்கவுண்ட் இருக்குல்ல. அதை வச்சுக்கோ. இன்வாய்ஸ்ல வேல்யூ போடு. ஆயிர ரூபா பீரோ தொள்ளாயிரம். நாத்தம்பது ரூபா பாக்கெட் டிரான்சிஸ்டர் நூறு ரூபா. முதல் ரசீது ஜெயசித்ரா நான் இட்டாரேன்.''

''ஜெயசித்ராவா...யாருடா?''

''ஜெயசித்ரா யாரா...டாடி உனக்கு காஞ்சிபுரம் சாமியார் தாண்டி ஆளே தெரியாது. ஜெயசித்ரா சினிமா நடிகை''

''ச்சீய்''

''கூட்டம் கூடணும் டாடி! ஜனம் உள்ள வரணும் பேப்பர்ல ரிபோர்ட் வரணும். ஐநூறு ரேடியோன்னா நானூறு வித்துக் காட்டறேன்.''

''இல்லைன்னா?''

''மொட்டை அடிச்சு கரும்புள்ளி செம்புள்ளி குத்தி இதே உஸ்மான் ரோட்ல...''



''போடா போடா. வேற வேலையில்லை.''

''பட்டா சேலஞ்...''

''என்ன சொன்ன நாற நாயே...'' அப்பா ராட்சஷன் மாதிரி எழுந்தார்.

''அப்பா...அப்பா...அவன் லாங்வேஜ் அப்படி. அதுக்கு எந்த அர்த்தமும் இல்லை. உட்கார். உட்கார்.' சுந்தரா அடக்கினான்.

எதுக்கு அப்பா எழுந்து கத்தினார் என்று நாகராஜனுக்குப் புரியவில்லை. 'என் இது வொர்க்அவுட் ஆவாதுங்கறியா...ஆவும்.'

''உன் பாஷை ரொம்பத் தப்புடா.''

''பாஷைய வுடு. நீ பேசறது தமிழா...நான் பேசறது தமிழா. சிலோன்ல பேசறதுதான் சரியான தமிழுன்றாங்க என் ஐடியா புரிஞ்சுதா. டார்கெட் கேக்கறான் எல்லாரும். இன்னிக்கு ஒரு நாளே நீ பாதி டார்கெட் தாண்டிடுவே. ஆறுமாச வியாபாரம் ஒரே நாளில நடக்கும். ஆனா ஒண்ணு விளம்பரம் பண்ணணும்.''

''விளம்பரச் செலவு என்ன கணக்கு?''

''புடிச்சுக்கிச்சு. அடுத்த வருஷம் கஸ்டமரே வந்து கேட்பான். எங்க இந்த வருஷம் உண்டான்னு...''

அப்பா யோசித்தார். அரை மனதுடன் 'சரி' என்றார்.

காலை ஏழு மணிக்கு பூஜை. எட்டு மணிக்கு கதவு திறந்தது. கூட்டம் குவியவில்லை.

''ரேடியோவுக்கு காரண்டி உண்டா?''

நாகராஜ் துணிந்து அடித்தான். 'ஒருவருஷ காரண்டி. பத்துமணிக்குள் ஏழு விற்றது. பன்னிரெண்டுக்கு நாற்பது விற்றது மாம்பலம் முழுக்கப் பரவிற்று போல. நாலு மணிக்குள் நூற்றுப்பன்னிரெண்டு விற்றது.

இரவு எட்டு மணிக்கு ஏகக்கூட்டம். முன்னூற்றுப் பதினாறு டிரான்ஸிஸ்டர். முப்பது பீரோ, பதினேழு கட்டில், இருந்த ஐம்பது நுரை மெத்தையும் ஓடிற்று.

''நேத்துச் சீப்பா குடுத்தேளாமே?'' மறுநாள் காலையிலேயே பெண்கள் கூட்டம் வந்தது.

''இந்த வாரம் முழுக்க உண்டு பீரோ கட்டில் தவிர.''

ஒரு பெண் வளையல் அவிழ்த்துக் கொடுத்தாள். 'எங்க வீட்டுக்காரருக்கு ஏழாம் தேதி சம்பளம். கைல காஷ் இல்லை. இத வச்சு எனக்கு இரண்டு சீலிங் பேன் கொடுங்கோ.' சுந்தரா வளையலுடன் அப்பாவிடம் ஓடினான். 'அட்ரஸ் வாங்கிண்டு கொடு. ஏழாம் தேதி தரட்டும் வளையல் வேண்டாம்.'

அந்தப் பெண் நன்றியுடன் கைகூப்பினாள். கிட்டத்தட்ட அவள் மட்டும் நூறுக்கு மேல் வாடிக்கையாளர்கள் சேர்த்தாள். முப்பது வயது இருக்கும் அவளுக்கு 'இங்க வேலைல சேர்த்துடறேளா...?' சுந்தரா கேட்டான்.

பிரேமா நானூறு ரூபாய் சம்பளத்தில் சேர்ந்தாள் உட்காராமல் சுற்றிச் சுற்றி வந்தாள். ஜென்ட்ஸ் கஸ்டமரை அதிகம் வளைத்துப் போட்டாள், கூட நாலு பெண்கள் சேர்த்தார்கள். எல்லோருக்கும் வெளிர் நீலச் சேலை யூனிபாரம் ஆக்கினார்கள்.

டர்ன் ஓவர் எட்டு லட்சம் தொட்டது. அப்பா கடைக்கு மாடி எழுப்பினார். வீட்டில் சுந்தராவுக்கு என்று தனியே மாடியில் பாத்ரூம் அட்டாச்டு படுக்கையறை கட்டினார்.

தங்கை அபிதாவுக்கு வரன்கள் வந்தன. டில்லி செக்ரடேரியட்டில் வேலை செய்கிற பையனை அவளுக்கும் பிடித்துப் போயிற்று.



நிறைய எதிர்பார்த்தார்கள். விமரிசையான கல்யாணம் என்றார்கள். காலை சாப்பாட்டு மெனுவும், இரவு டிபனும், பிற்பகல் கொறிப்பதற்கு மெனுவும் என்று நீட்டினார்கள். நாங்க இரண்டு பொண்ணுக்குச் செய்திருக்கோம், எதிர்பார்க்கறோம் என்றார்கள்.

காஞ்சிபுரத்து தாமரை தேச சஞ்சாரம் போயிருந்தார். நடந்து நடந்து, கிராமம் கிராமமாய், பட்டணம், பட்டணமாய் நகர்ந்து கொண்டிருந்தார். அப்பா தேடிப் பிடித்து பத்திரிகை சமர்ப்பித்துவிட்டு வந்தார்.

திருமணத்திற்கு டில்லியிலிருந்து ஜிப்பாவும், பைஜாமாவுமாய் நிறையத் தமிழர்கள் இறங்கியிருந்தார்கள். கையலம்பத் தண்ணீர் கூட ஆங்கிலத்தில்தான் கேட்டார்கள். ஸ்பூனால் குழம்பு கலந்து சாப்பிட்டார்கள். 'பிசைஞ்சு சாப்பிடலாமே!'' அப்பா கேட்டார்.

'நாஸ்ட்டி,' என்று தோள் குலுக்கலுடன் பதில் வந்தது.

மாப்பிள்ளைப் பையன் தன் சட்டை கழற்று முன் 'பூணூல் இருக்கா சுந்தரா?' என்று கேட்டான்.

''வாங்கிண்டு வரச் சொல்றேன்.''

''வேணாம். உன்னுது குடு. அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்.'' என்றான். புதுப் பூணூல் வந்ததும், 'எப்படி மாட்றது வலதா...இடதா... ஒரே பேஜார்டா.''

''என்னடா இப்படி இருக்கு எல்லாம்.'' அப்பா கவலைப்பட்டார். ''குழந்தை கஷ்டப்படப் போறானே.''

குழந்தை கஷ்டப்படவேயில்லை. மாப்பிள்ளை அவளைப் பிடித்த கையை விடவேயில்லை. இரண்டாம் நாளே சின்ன அழுகை கூட இல்லாமல் டில்லி கிளம்பிவிட்டாள். ஐந்தாம் நாள் டில்லியில் வரவேற்பு.

யார் யாரோ வந்தார்கள். எதேதோ சாப்பிட்டார்கள். திடீரென்று பரபரப்பாயிற்று.

''இவர்தான் பொண்ணுக்கு தகப்பனார். இவர் தாயார்.'' எல்லாருக்கும் கூப்பின மாதிரி கூப்பினார். அதிர்ந்து போனார். 'ப்ரைம் மினிஸ்டரம்மாவா... நம்ம பொண்ணு கல்யாண வரவேற்புக்கா?''

நடுவில் அம்மையார், இடது ஓரம் மணமக்கள் வலது ஓரம் பிள்ளையின் தாய் தகப்பன், அதற்கும் தாண்டி பெண்ணின் தாய் தகப்பன்.

''இத்தனை செல்வாக்கா. ப்ரைம் மினிஸ்டரை வரவேற்கிற செல்வாக்கா?''

அப்பா அதிர்ந்துபோனார்.

## 5

எங்கே பிடித்தாய் இவ்வளவு அழகான பெண்ணை...'' லக்கி பெல்லோ... ப்ரைம் மினிஸ்டரம்மா கேட்க அபிதா நாணினாள்.

டில்லியில் கடல் மாதிரி கவர்மென்ட் வீடு. வாரா வாரம் விருந்து. அபிதா அப்புறம் மாம்பலம் வீட்டோடு ஒட்டவில்லை. தலைச்சன் பிரசவத்துக்கு வந்து கல்பனாவை படாதபாடு படுத்தினாள். ''இதை எடு அதை வை, அப்படி மடி. இப்படி பிரி...'' அம்மாவுக்குத் தானவில்லை. ''அடுத்த பிரசவத்தை டில்லியிலேயே வச்சுக்கோடியம்மா. உனக்கு அதான் சவுகரியம்.''



எப்போதாவது மெட்ராஸ் வருவாள். ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்கி ஒரு விசிட் அடிப்பாள். இடையே கல்பனா சூல் கொண்டாள். பம்பாய் போய்த் தங்கி பிள்ளை பெற்ற மறு மாதமே குழந்தையுடன் வந்து விட்டாள்,

''உங்களை விட்டுட்டு என்னால அங்க இருக்க முடியலை. போர். இப்பதான் புரியறது அபிதா ஏன் அங்கேயே ஒட்டிண்டுட்டான்னு. புருஷன்கறது ஒரு ருசி. அதுலயும் நல்ல புருஷன் பரம ருசி. எங்க வீட்டுச் சமையலே பிடிக்காம போயிடுத்து எனக்கு!''

அபிதா கல்யாணம், கல்பனா பிள்ளைப் பேறு. பாங்க் கையிருப்பு கணிசமாய்க் குறைந்தது. இரண்டு மூன்று கம்பெனிகளுக்கு அட்வான்ஸ் கட்ட வேண்டியது இடித்தது.

''பாங்க்ல கடன் வாங்கலாமா? பாதி லாபத்தை வட்டி தின்னுமே? நகைகளை விற்று விடலாமா?'' அப்பா தலையை பிய்த்துக் கொண்டார்.

''மாப்பிள்ளையைக் கேட்டா தருவாரு...'' என்று நாகராஜ் சொன்னான்.

''மரியாதை இல்லடா!''

''வியாபாரம் தானே. வட்டி போட்டுக் கொடுத்தரலாம். ஒரு டிரிப் டில்லி போயிட்டு வரட்டா?''

''சும்மா போய் நம்ம குழந்தையைப் பார்த்துட்டுவா. கடன் வாண்டாம்' இறக்கமா போயிடும்!'' அப்பா சொல்லி அனுப்பினாலும் உள்ளே நப்பாசை இருந்தது.

நாகராஜன் போய் ஒருவாரம் தகவல் இல்லை. மறு வாரம் மாப்பிள்ளை, அபிதா, நாகராஜன் வந்தார்கள்.

''கடன் வேண்டாம். ஷேர் போடறேன். உங்க டில்லி ரெப்பா அபிதா இருக்கட்டும். லாபத்துல பங்கு அபிதாவுக்கு வருஷச் சம்பளம்!''

லாபத்துல பத்து சதவிதப் பங்குதர பத்திரமாயிற்று. அபிதாவுக்கு மாதம் இரண்டாயிரம். வருடம் இருபத்தி நாலாயிரம். டிசம்பர் முப்பத்தியோராம் தேதி செட்டில் ஆகிவிட வேண்டும். இது அதிகம் என்று பட்டது. பதில் பேச முடியவில்லை. பெற்ற மகளுக்கு உதவி என்பதாய்ப் போயிற்று.

ஆனால் ஆறு லட்சம் நல்ல காசு. அது தவிர டில்லி மார்க்கெட், பம்பாயைவிட விலை குறைவாக பண்டங் விற்றன. சர்தார்ஜி கம்பெனிகள் மின்கருவிகளைப் போட்டி போட்டுக் கொண்டு கொட்டின. கடிகாரம், அயர்ன் பாக்ஸ், காலிங்பெல், பர்னிச்சர், டில்லி மரச் சாமான்கள் அழகு, லேசு!

மூன்றாம் மாடி பர்னிச்சருக்காகத் திறக்கப்பட்டது. நூறுக்கு வாங்கி நூத்தி தொண்ணூறுக்கு விற்பனை செய்ய முடிந்தது. தமிழர்கள் டைனிங் டேபிளில் ஆர்வம் காட்டினார்கள். நல்ல சமயத்தில் வந்த காசு, டில்லித் தொடர்பு. வியாபாரம் சூடு பிடித்தது.

''என்கிட்ட விடு சுந்தரா...என்கிட்ட விடு சுந்தரா'' என்று நாகராஜன் வாங்கி வாங்கி வேலை செய்தான்.

குழந்தை சுரேஷ் பிறந்த பிறகு கல்பனா மிக அழகாக இருந்தாள். சமையலுக்கு ஆள் திடுவென்று வந்தது. சரஸ்வதி மாமி விதவை. ஒரே பெண், எஸ். எஸ். எல். சி. படித்துக் கொண்டிருந்தது. காஞ்சிபுரம் மடத்துக் காரியதரிசி ஸ்ரீமுகம் கொடுத்தனுப்பி இருந்தார். ''இது சமஸ்கிருத பண்டிதரின் குடும்பம். பராமரிக்க வேண்டும்!'' என்று எழுதப்பட்டிருந்தது.

''பெரியவா கட்டளை எங்களுக்கு தெய்வக் குரல் மாதிரி. இனி நீங்க எனக்குச் சகோதரி மாதிரி. இந்த வீட்ல நிரந்தரமா உங்களுக்கு இடம் உண்டு. எது



வேணா சாப்பிடலாம். எப்ப வேணா சாப்பிடலாம். நாங்க உடுத்தற விதமே உங்களுக்கு. நாங்க சாப்பிடறது உங்களுக்கு!''

மாமியிடமும் 'உதவியாயிரு' என்று மடம் சொல்லி யிருக்கும் போல! மாமி கரண்டியைப் பிடித்துக் கொண்டாள். பெண் மல்லிகா காய்கறி நறுக்கிக் கொடுத்து விட்டு வீடு பெருக்கிக் கோலம் போட்டு பள்ளிக்கூடம் ஓடினாள். மூன்று மணிக்கு வீடு வந்து குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.

வயசுப் பெண் என்பதாய் வீட்டுக்குப் பின்னால் சுவர் எழுப்பி ஓடு சரிந்து தனியே போர்ஷனோடு பாத்ரூம் லெட்ரின் கட்டி, 'இது உங்க இடம் உங்க சாவி!' என்று சாவி கொடுத்தார் அப்பா. மாமிக்கும் மல்லிகாவுக்கும் நாயாய் உழைக்க வேண்டும். இந்த வீட்டுக்கு என்று தோன்றி விட்டது!

அப்பாவுக்கு சட்டை வேட்டி எடுத்து வைத்தாள். செருப்பு துடைத்து வைத்தாள். பூஜைக்குப் பூ பறித்தாள். படுக்கை தட்டிப் போட்டாள். கொசு வலை உதறிச் சொருகினாள். அம்மாவுக்கு ராமாயணம் படித்தாள்.

இரண்டு நாள் நாகராஜன் வயிற்றுப் போக்கில் சரிய, அவனுக்கும் உதவினாள். அங்குதான் வந்தது வினை. பிற்பகலில் தோள் தாங்கி பாத்ரூமுக்குக் கூட்டிப் போகச் சொல்லியிருக்கிறான். தாங்கின பெண்ணை இறுக்கி இருக்கிறான்.

இந்த உதவிக்கு என் அன்பளிப்பு என்று கழுத்துச் செயினைக் கழட்டிப் போட்டிருக்கிறான். அவள் செயினைக் கழட்டி சுவாமி ரூமில் வைத்துவிட்டாள்.

மறுபடி பாத்ரூமுக்குக் கூப்பிட்டிருக்கிறான். 'வேலை யிருக்கிறது.' என்று சொல்லிவிட்டாள். வாசலில் நின்று சத்தம் போட்டிருக்கிறான். அம்மாவை அனுப்பினாள். தன் மருந்து பாட்டிலைத்தானே ஒளித்து வைத்துவிட்டு

'எங்கே காணோம். மல்லிகாதான் எடுத்தா...எங்க வச்சா?' என்று கேட்டிருக்கிறான்.

மிரண்ட மான் வாசலையே பார்த்துக் கொண்டு அலமாரி எல்லாம் குடைந்திருக்கிறது. 'கதவுக்குப்பின்னால வச்சியோ?' என்று கதவு சாத்த முற்பட 'ஐயோ' என்று கூவிவிட்டாள்.

'என்னடி என்னடி?' என்று கேட்டதற்கு அழுது கொண்டு தன் போர்ஷனுக்குப் போய்விட்டது. உடம்பு இப்படித்தேவலாம் என்று நாகராஜன் கடைக்குப் போய் விட்டான்.

சுந்தராவுக்கு போன் செய்து வரச் சொன்னான் கல்பனா. விஷயம் விவரித்தாள்.

''இவளை யார் அங்கே போகச் சொன்னா...?''

''ஏன் அவ போகக்கூடாத இடம் எது இந்த வீட்ல? இரண்டரை லட்சம் காசு இருக்கற பீரோ திறக்கற பெண் அந்த உள்ள போனா தப்பா...தப்பு உங்க மேல''

''என் மேலயா?''

'நாகராஜுக்கு இரண்டு மாசத்துல கல்யாணம் ஏற்பாடு பண்ணுங்கோ''

''நாகராஜா, கல்யாணம் பண்ணிக்கிறியா?''

''செய் ப்ரதர் பட், துட்டு உள்ள இடமாப் பாரு''

''எதுக்குடா?''

''பிசினஸ் டெவலப் பண்ணலாம்.''

''அது நாம செய்யவேண்டிய விஷயம்.''

''நோ. இனிமே வியாபாரம் செய்யறது கஷ்டம் துட்டு இப்ப சேட்டுகிட்ட இல்லை. ஐயர்கிட்ட இல்லை தமிழன்கிட்ட இருக்கு ப்ரதர். ஊர் சேஞ்ச் ஆயிடுச்சு ஐயரைக் கல்லாவில உட்கார வச்சு தமிழன் உடுப்பி ஹோட்டல் போடறான்.''



''உன் லாஜிக் புரியலை நாகராஜ்!''

''அறுவது கோடி ரூபா மதிப்பு கம்பெனி மவுண்ட் ரோட்ல நாலு மாசமாத் தகராறு. ஆளுங்கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நடுவுல மாட்டிக்கிட்டு...சாவறது நாயர்.''

''ஏண்டா ஜாதி பேசற?''

''நான் பேசலை. ஊர் பேசுது''

''கிடக்கட்டும். உன் கல்யாணம்?''

''வரதட்சணைன்னு வாங்க வேண்டாம். கேட்டா தான் கொடுக்கற இடமா பார்!''

'பொண்ணு நல்லவளா...லட்சணமா...இதெல்லாம்.?'

''எல்லாப் பொம்பளையும் நல்லவ. எல்லாப் பொம்பளையும் கெட்டவ. அது ஆம்பளைகிட்ட இருக்கு. லைட் அணைச்சுட்டா எல்லாம் ஒரே லட்சணம்.''

''அப்ப மல்லிகா எதுக்குடா?''

''நான் சொன்னா நம்பமாட்ட. அது வேற ஒரு பையனை டாவடிக்குது. விசாரிக்கக் கூப்பிட்டேன், என்னு கூவுது.''

''டேய் அநியாயம்டா.''

''ப்ரதர் நியாய-அநியாயம் உனக்கும் எனக்கும்தான். பொம்பளைக்கு இல்லை. அவ கண்ணடிச்சா அதுக்கு பேர் காதல். அதே பொண்ணு பொத்திக்கிட்டு சுத்தினா கற்பு. பிள்ளெட்ட எப்படி வேணா மாத்துவாளுங்க. நம்பாத''

''உன்னை நினைச்சா கலவரமா இருக்குடா. கல்யாணம் பண்ணிக் குடும்ப மானம் காப்பாத்துவியா?!'

''வீணாப் பயப்படற. உன்னை மாதிரி எனக்கு மடம். சன்னியாசி அது இதெல்லாம் புடிக்காது. ஆனா நானும் பிரின்சிபிள் மேன். வெட்ற பெண்ணைத்தான் கூப்புடு

வேன். சிலும்பறதைத்தான் சைட் அடிப்பேன். நம்மகிட்ட டபுள் ரோல் கிடையாது. எந்த மடத்துக்கும் போகாம என்கிட்டயே ரூல்ஸ் இருக்கு. அத நாகராஜன் மீறமாட்டான்.''

சுந்தரா கவலைப்பட்டான்.

பல பேரிடம் சொல்லி வைத்தான். நாலைந்து இடங்கள் பெண் பார்த்துவிட்டு வந்தார்கள்.

பெரிய வாரப்பத்திரிகை நிருவனரிடமிருந்து தூது வந்தது. ''பெண் பார்க்கிற சம்பிரதாயமெல்லாம் வேண்டாம். வரும் வாரம் ஒரு உறவினர் கல்யாணம். உங்களுக்கும் பத்திரிகை வரும். வாருங்கள்.''

கல்யாணத்திற்குப் போய் பெண் பார்த்தார்கள்.

பெண்ணைப் பெற்றவரும், நாகராஜனும் தனியே போய்ப் பேசினார்கள். என்ன பேசினானோ என்ன கேட்டாரோ...அவருக்கு நாகராஜனை மிகவும் பிடித்துவிட்டது.

''ஆறு மாசம் பொறுத்து கல்யாணம் வச்சுக்கலாம் சுந்தரா.''

''ஏன்டா?''

''மேல மூணாம் மாடி எழுப்பிடு. டோட்டல் ப்ளோர் நமக்கு.''

''சமையல் தனியா...ஒண்ணா?''

''ஒமே ஒரே இடம். நோ ப்ராப்ளம்.''

இவன் ஒட்டியவனா...விலகியவனா...? இல்லை ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கிறவனா?

வேதவல்லி அவனுக்கு மனைவியானாள்.



ஊரைத் தூக்கியடிக்கிற கல்யாணம். வாணவேடிக்கை ஷேக் சின்ன மவுலானா நாதஸ்வரம். ராஜஸ்தானி பந்தல், நாட்டிய நாடகம், ஊர்ப்பட்ட நடிகர்கள் மந்திரிகள்.

அப்பா பிற்பகலில் ஒரு அறையில் துண்டு விரித்துப் படுத்து விட்டார்.

''என்னப்பா?''

''சுந்தரா...எனக்குப் பதிலா நீ இரு. என்னால முடியலை.''

''உடம்பு ஏதாவது சிரமமா?''

''இல்லை.''

''பிறகு?''

''மனசு இத்தனை வெளிச்சம் கஷ்டம்டா!''

''ஏம்ப்பா?''

''போறும். கொஞ்ச நாள் பெரியவாளோட இருக்கலாம்னு தோண்றது.''

''ஏன் திடீர்னு?''

''நீ வளாந்துட்ட. அவனும் பெரியவனாயிட்டான். இரண்டு பக்க பலம் கிடைச்சுருக்கு. மாப்பிள்ளை ஒரு பலம். சம்பந்தி ஒரு பலம். நான் கொஞ்சம் விட்டேத்தியா இருக்கேனே.''

''எல்லாக் கடமையும் முடிஞ்சதுன்னு பேசறியா?''

''இல்லை. ஒண்ணு பாக்கி இருக்கு.''

''என்ன...?''

''அந்தப் பொண்ணு மல்லிகாவுக்குக் கல்யாணம் பண்ணணும்! கடைசியா நடராஜன் இருக்கான். பேரன் இருக்கான்.''

''இல்லை நடராஜன் கல்யாணம் நீ செய். பேரன் கல்யாணம் தானா நடக்கும்.''

''ஏம்ப்பா?''

''வர மாசம் எனக்கு அறுபது வயசுடா. கழண்டுக்கறது பெட்டர்!'' எதிலிருந்து...எப்போது...? தெரியவில்லை.

# 6

ஆனால் வேதவல்லி அருமையான பெண். டைனிங் டேபிளில் எல்லோரும் சாப்பிட்ட பிறகு தனக்கும் பரிமாறிக் கொண்டு எல்லாத் தட்டையும் எடுத்துப் போட்டு டைனிங்டேபிளைத் துடைக்கிறபோது, எத்தனை நாள் இந்த நாடகம்? என்று மனசுள் தோன்றியது உண்மை.

மாலை ஆறுமணிக்கு கொல்லை வராண்டாவில் உட்கார்ந்து தம்பூர்மீட்டி 'அந்தா ராமமயம் ஈஜக மந்தாராமயம்.' பாடியபோது 'இம்ப்ரஸ்' பண்ணுகிறாள் என்று நினைத்தது உண்மை. மல்லிகாவின் அம்மா சரஸ்வதிமாம் மயக்கமாகி விழுந்தபோது வாரிப் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரி சேர்த்ததும் அவளுக்கு செய்த பணிவிடையும் அவள் முகத்தை தெளிவாய் காட்டின.

அது, நேற்றுப் பணம் அல்ல. பரம்பரைப் பணம். ஆனால் பணம் பற்றிய கர்வமேயில்லை. மனிதர்கள் தேவைப்பட்டது அந்தப் பொண்ணுக்கு. எங்கப்பாவோட வாரத்துல ஒருநாள் சாப்டுறோம். இங்கே தினம் எல்லோரும் ஒன்னா, சாப்பிடறது எத்தனை சந்தோஷமா இருக்கு தெரியுமா?

''பிசினஸ்ல இன்ட்ரஸ்ட் இல்லையா?''

''நோ...நான் அவுஸ் ஒய்ப். பிசினஸ் உங்க வேலை!''

''லேடீஸ் கிளப்?''

''ஐயோ...போனேனே...ஒரு வருஷம். தரையில உட்கார மாட்டா யாரும், ஒரே அரட்டை. எனக்குப் பிடிக்கலை.''

''தனிக்குடித்தனம் போகணும்னு தோணலையா?''



''என்...போகணுமா? எங்க வீட்ல ஆறு பேர் யார் அங்க இருக்கான்னே தெரியாது. இது பிடிச்சிருக்கு, நான் த்தியானம் கல்பனாவோடதான் படுத்துக்கறேன். தனியா இருந்து இருந்து போர்.''

சமைத்தது; பாடியது; மூடு துடைத்தது; தோட்டம் வளர்த்தது; அம்மாவோடு நிறையப் பேசிற்று; ''சின்னவர் எலக்ட்ரானிக்ஸ் படிக்கட்டுமே.'' என்று அறிவுரைகூறியது

''எங்க?''

''சிங்கப்பூர்ல எங்கப்பா ஏற்பாடு பண்ணுவார்.''

''படிச்சு என்ன ..?''

''டி. வி. வரப்போறது. பிரயோஜனப்படுமே. நடராஜ் போறிங்களா சிங்கப்பூர்?''

நடராஜன் ஒரு ஆங்காங் கம்பெனியில் பயிற்சி பெற சிங்கப்பூர் போனான்.

''நான்தான் அனுப்பினேன்.'' என்று அலட்டலே இல்லை. ''அங்க வேலை பிடிபட்டுட்டா ஜெர்மன் கூட அனுப்பலாம். அங்க என் சித்தி பையன் இருக்கான்!''

''நீ போயிருக்கியா?''

''ஆறு மாசம் நானும் அம்மாவும் இருந்தோம்.''

''எதுக்கு?''

''சவுத் இண்டியன் வுமன் பத்தி ஒரு பேப்பர் சப்மிட் பண்ணினேன்.''

''இங்கிலீஷ்லயா?''

''ஜெர்மன்ல.''

''சொல்லவே இல்லையே.''

''சொல்லக் கூடாதுன்னுல்லை. அவசியம் வரலை, யும் இதேமாதிரிதான் பெண்கள். எல்லா இடத்துல பெண்கள் ஒரே விதமாக இருக்கா. ட்ரஸ்தான் வேற.

பெண்கள் கல்யாணம் பண்ணிக்க, குழந்தை பெத்துக்க கொஞ்சம் பயப்படறா. காரணம் இரண்டும் காஸ்ட்லி.''

''செக்ஸ்''

''கொஞ்சம் ஜாஸ்திதான். ஒரே நேரத்துல நாலு பையனை லவ் பண்ண முடியாது. சுட்டுக் கொன்னு வான். லவ் பண்ணலாம். படுத்துக்கலாம். பிடி கலைன்னா சரியான காரணம் சொல்லிட்டு நகர்ந்துட லாம்.''

'இத்தனை பார்த்துட்டா இங்க வந்து டைனிங் டேபிள் துடைக்கற?''

''அங்க கத்துண்டது தான். வேலைக்காரி வச்சுக்க முடி யாது. எல்லாம் நாமதான். சரஸ்வதி மாமி மாதிரி வேலை செய்ய மாசம் இருபதாயிரம் சம்பளம் தரணும் வாரம் இரண்டு நாள் நிச்சயம் லீவு தரணும். நம்ம ஊர் பெரிய அதிர்ஷ்டம்.''

''நான்வெஜ் சாப்பிட்டியா?''

''ஐயோ...பச்சை மாமிசம். அரைவேக்காடு முட்டை ரொட்டி, சாதம். கீரை நிறைய கிடைக்கும்.''

''ரொம்பக் குளிருமா?''

''நான் ஓடி வந்ததே குளிர் தாங்காமத்தான். அவ மாமிசம் சாப்பிட ஆரம்பிச்சது கறிக்காக இல்லை தோலுக்காகன்னு தோணறது. தோல் உடுப் இல்லேன்னா செத்துடுவோம். மின்சாரம், மோட்டார் கார், இன்ஜின் எல்லாம் குளிர்லேர்ந்து தப்பிச்சுக்க கண்டு பிடிச்ச விஷயம். அடுப்புல வெந்நீர் கெட்டில் வச்சுட்டு தூக்கித் தூக்கி அது அடிக்கறது பார்த்து நீராவி இன்ஜின் வந்துதாம். வெறும் காலோட நடந்து. ஆத்து ஜல கைல எடுத்து குடிக்கற சுகம், அவனுக்கு இல்லவே இல்லை. ஒவ்வொரு தரமும் ஐரோப்பிய சரித்திர மாறுதலுக்கு குளிர்காலம் தான் முக்கியம் சுட பத்து நாள் பனி பெஞ்சுது... புலம்பிடுவாங்க



பனி உருகி இரண்டு இலைபச்சுன்னு வந்தது...குதிப் பான் கிடந்து... பனிக் காலத்துல இரண்டு பச்சை இலை பார்க்க முடியாது. சுடுகாடு மாதிரி இருக்கும் ஊர்.'

'மனுஷாளுக்கு மதிப்பு தர ஊர் இல்லையா ஐரோப்பா கண்டம் முழுக்கவே?''

''போறுமே. —அங்க நடந்த, கும்பல் கும்பலா பண்ணின கொலை ஆசியால நடந்திருக்காது. யூதர்களை ஹிட்லர் கொன்ன மாதிரி எந்த தேசத்துலயும் எந்த காலத் துலயும் நடக்கலை. பெண்கள்,குழந்தைகள் எல்லாரையும் காஸ் சேம்பர்ல போட்டு கொன்னான்... நாப்பது வருஷம் முன்னாடி''

''ஐரோப்பியன் ஓட்டமாட்டான் வீட்டோடகூடஓட்ட மாட்டான் அப்பா பதினெட்டு வயசுப் பையனை துரத் திடுவான்...போ...போய் வேலை செய் செய்தா சோறு சாக கொண்டா, இல்லை வாடகை கொடும்பான்புள்ளை போய் சம்பாதிக்கும். வயசான அப்பாவை கவனிக்காது. வயசானவாளுக்கு ஹோம்னு உண்டியல் எடுத்துண்டு வந்தா ஆயிரம் ரூபா போடுவான். சொந்த அப்பாவை சவுக்கியமான்னு கேட்க மாட்டான். விநோதமாயிருக்கும்.'

'ஆயிரம் சொல்லு—அந்த ஊர் சவுகர்யம்தான்.' சுந்தரா கனவோடு பேசினான்.

''இல்லை-சுந்தராண்ணா, யந்திரம் கண்டு பிடிச்ச யந்திரம் முழுங்கிடுத்து அவனை.'

''உழைப்பாளிகள்.'

''உழைக்கலேன்னா மரணம். ஆறு மாசத்துக்குள்ள பயிர் பண்ணியே ஆகணும், மூணு ரோகம் கிடையாது.'

''பதினாலு வயசுல பையனும் பொண்ணும் தாஷ்டிகமா ஆயிடறானே...?'' கல்பனா அதிசயப்பட்டாள்.

''நாப்பதுல, மூஞ்சி சுருக்கம் வந்துரும். மாட்டுக்கறி.'

''நல்லதா ஒரு பாயிண்ட்டும் படலையா உனக்கு?'

''தேச உணர்வு அதிகம். மை கண்ட்ரிம்பான்.

அநேகமா ஐரோப்பால எல்லா தேசத்துலயும் ராஜு வப் பயிற்சி கட்டாயம்.'

'ஜெர்மனி தவிர வேறெங்க போயிருக்க?'

''ப்ரான்ஸ், சுவிட்சர்லாண்ட், இட்டாலி, அப்புறம் இங்லாண்ட்.'

'நாலு மாசத்துல ஒரு தடவை கூட இது பத் சொன்னதில்லையே வேதவல்லி.'

'அப்பா காசுல சுத்திட்டு வந்தேன். இதுல எனக் கென்ன க்ரெடிட். காசு இருந்த எல்லாரும் போலாம். எவ் புத்தி உசத்தின்னு கூப்பிட்டாளா யாரும். இல்லையே.. அப்புறம் அலட்டறதுக்கு என்ன இருக்கு?''

''க்ரேட். ஆமா... நாகராஜனோட செட்டில் ஆயி டியா?'

''ஓ. யெஸ்.'

எப்படி...அவன் கொஞ்சம்...'

''அலட்டல்கறேனா...? போகப் போக சரியாயிடும் ப்ராப்ளம் வரலை. அப்பா நிழல்ல உங்க நிழல்ல இரு துட்டார். தானே தனியா பிரச்னையை எதிர்கொள் போது பேச்சு கீழ இறங்கிடும்.''

''உம் மேல ஆசையா இருக்கானா?'

''ம்...ம்....''

''ம்ம்னா?''

'ம்ம் தான்.

''புரியலை வேதவல்லி?''

'வேறெப்படி சொல்றது?''



உண்மையான ஆசைங்கறது என்ன...? காமம் தான் காதல். மோகத்துலேர்ந்து மோட்சம். கட்டில்லேர்ந்து தொட்டில்'

''கஷ்டப்படுத்தறானா வேதவல்லி?'

''ச்சே...ச்சே அது குழந்தை. நான் தாரசிங்னு நடக்கற அஞ்சு வயசுக் குழந்தை. நடந்துட்டு போட்டுமே''

''வேதவல்லி, நான் கூட உன்னை தப்பா எடை போட்டேன்?''

''தெரியும். இப்படி வாணவேடிக்கைக்கு கல்யாணம் நடந்ததைப்பார்த்துட்டு எல்லாரும் உட்கார்ந்துட்டோம். அது எக்ஸிபிஷன். பத்திரிகைக்கு விளம்பரம் பண்ண எக்ஸிபிஷன்.'

''இந்த வீடு பிடிச்சிருக்கா வேதவல்லி?''

''ரொம்ப...கல்பனா மன்னி ஜெம். அப்பா ஜெம். அம்மா ஞானி. சரஸ்வதி மாமி தேவதை. மல்லிகா நைஸ் லேடி' நீங்க...'

''ம்ம் சொல்லு.'

''எனக்கு அண்ணாவே இல்லை. நாங்க இரண்டு பொண்கள் தான். உங்களைப் பார்த்ததும் அண்ணான்னு நமஸ்காரம் பண்ணத் தோணித்து. உங்களுக்கு நல்ல ஷர்ட் ப்ரசண்ட் பண்ணணும்னு ஆசை வந்தது.'

உள்ளே இனம் தெரியாதபரவசம் வந்தது,நேசிப்பதை விட, நேசிக்கப்படுவது எத்தனை சுகம். எவ்வளவு கர்வம்.

ஆனால் உண்மையான படிப்பு கர்வம்காட்டாதுஎன்ப தற்கு வேதவல்லி உதாரணம்,கல்பனாவும், வேதவல்லியுள் வீட்டு நிர்வாகத்தை பொறுப்பேற்க இன்னும் பளீரென்று இருந்தது வீடு. தோட்டம் சீர்பட்டது. ஹாலின் தன்மை மாறிற்று. பெரிய வால் பேப்பர் அருவி விழுவது போல் சித்திரம் ஒட்டப்பட்டது. குளுமையான மிருதுவான

விளக்குகள் போடப்பட்டன. பின்கட்டு ஒட்டு வீட்டை தளம் போட்டு மாற்றி தரப்பட்டது.

''எதிர்பக்கம் ஒரு வீடு விக்கறாளாம். ஆறு லட்சம் வாங்கிடலாம்,' வேதவல்லி ஓடி வந்தாள்.

''வாங்கி?''

''பாங்க்ல வச்சு அந்த காசுல ப்ளாட் கட்டலாம்.''

''கட்டி?''

'பின்னால குழந்தைகளுக்கு ஆகும். இதுவும் முதலீடு

''என்னால நின்னு கட்ட முடியாதும்மா'' அப்ப மறுத்தார்.

''நானும் கல்பனாவும் கட்டறோம். காண்ட்ராக்ட வேண்டாம். மேஸ்திரி போறும்.''

''பெரும்பாடு அது வேதவல்லி.''

''நம்ப முடியல்லையா எங்களை.''

''பாதில விட்டுட்டீங்க...பெரிய நஷ்டம் வரும்.''

''ஒரு வருஷம். மூணு மாடி பனிரெண்டு போர்ஷன்.

''இதுக்கு பிசினஸ்ல போடலாம்.''

''இது பெரிய பிசினஸ். நிரந்தர வருமானம்.''

''இந்தா...உனக்கு என்ன தெரியும்னு குதிக்கற எ ளையே ஏமாத்தறான்..உன்னைத் தண்ணி காட்டிடுவா நாகராஜன் அவளை மறுத்தான்.

''சரி நம்பிக்கையில்லைன்னா வேண்டாம்.''

''எதுக்கு இப்போ இன்னொரு வீடு?''

''நம்ம குழந்தைகள் பிசினஸ் பண்ணுவான்னு நிச் மில்லை. அவாளுக்கு ஒரு சொத்து இருக்கட்டும்னு நின சேன்.''

''முதல்ல பெத்துக்க அப்புறம் பாக்கலாம்.'' ந ராஜன் முற்றுப்புள்ளி வைத்து நகர, வேதவல்லி சுந் வைப் பரிதாபமாகப் பார்த்தாள்!



''என்ன வேதவல்லி...?''

''நான் வேணா என் அப்பாகிட்ட காசு கேட்டு வாங்கிப் போடட்டுமா?''

'அது நன்னாயிருக்காது.எங்க அப்பாவுக்கு புடிக்காது'

''என் நகைகளை வித்தாவது?''

''என் இத்தனை அடமா இருக்க வேதவல்லி. இத்தனை கஷ்டப்பட்டு வீடு வாங்கணுமா?''

''நல்லதுன்னு தோண்றது ''

''வீடும் நிலமும்தான் இனிமே முக்கியமாப் போகும். நடராஜனுக்கு ஏதாவது செய்யவேண்டாமா?''

''ஒன்னு செய். அவன்கிட்ட காசு இருக்கான்னு இன்னிக்கு போன் பண்ணி கேள்!''

''இருந்தா?''

''ஒரு ஐடியா சொல்றேன். முதல்ல போன் போட்டு அவனை கேள்.'

''நடராஜனுக்கும் இப்படி எண்ணமிருக்கிறதாம். முதல் தவணையில் சேர்த்து வைத்த ஐம்பதாயிரம் அனுப்பு வானாம், பிறகு ஐம்பதாயிரம் கடன் வாங்கி அனுப்புவானாம்?''

வேதவல்லி நடு இரவில் கதவு தட்டி சொன்னாள்.

'சரி நடராஜ் நீ ஒரு லட்சம், நான் ஒரு லட்சம். அப்பாகிட்ட மூணு லட்சம். கடன் வாங்கி ஒரு வருசத்துல வட்டியோட அடைக்கிற மாதிரி வீடு மூணு பேர்லயும் இருக்கட்டும். அப்படியே பாங்குல வருமானம் வைப்போம். இடிச்சு நீ சொல்ற மாதிரி கட்டுவோம். ஆனால், என்னை வேலைக்கு இழுக்காதே. அப்பப்ப கன்சல்ட் பண்ணிக்கோ.'

பதினைந்து நாளில் எதிர்பக்க வீடு கைமாறியது. நடராஜ், கல்பனா,வேதவல்லி பார்ட்னர்ஸ். மூணு லட்சம் கடன். மூணு லட்சம் முதலீடு. கடனையும் சமமாய் அடைக்க வேண்டும்.

அப்பா கடைக்கு வந்து இரண்டு மணிநேரம் உட்கார்ந்திருப்பார். யாலை உபந்நியாசம் போவார் மற்ற நேரங்களெல்லாம் தூங்குவார்.

வாங்கிய வீட்டை இடிக்க ஆரம்பித்தார்கள். இடித் ஸ்கிராப் விற்ற கூலியும், இடித்த கூலியும் சரியா போயிற்று.

கட்டிடம் கட்ட ப்ளான் போயிற்று. வேதவல்லி இ தன் வேலை என்கிற மாதிரி சகல இடத்துக்கும் அலைந் கொண்டிருந்தாள். காலை ஆறு மணிக்கு எழுந்து குளித் விட்டு எட்டு மணிக்கு சைட்டுக்குப் போய் அங்கிருந் சிமெண்ட் கோட்டா, செங்கல் சூளை, இருப்புக் கம் எம்.எம். டி.ஏ. என்று அலைந்து விட்டு பகலில் வருவாள் மறுபடி சைட்டிக்குப் போவாள். அதே தெருவில் வசித் அப்போது தான் சிவில் இன்ஜினியர் முடித்த பையனிட சந்தேகம் கேட்கப் போவாள். பெரியசாமி மேஸ்தி தலைமையில் தான் கட்டிட இடிப்பு வேலைகள் நடந்த இன்ஜினியர் பையன் இடையூறு அவருக்குப் பிடி வில்லை கெளரவப் பாதிப்பு ஏற்பட்டது. இன்ஜினிய பையனுக்கு பெரியசாமி கட்டிட வேலை முறையற் செயலாய் தெரிந்தது.

மாதம் ஐநூறு ரூபாய்க்கு அந்தப் பையனை தன் உத யாளனாய் வேதவல்லி வைத்துக் கொள்ள பெரியசா கடுப்பானார். 'ஒன்றுஎன் கிட்ட வுடு இல்லை... அவ கட்டச்சொல்லு. இரண்டு பேரையும் ஒரே வேலை வச்சா சரியா வராது. அவன் பேச்சு கேட்டுச்கிட் அம்மா ஆடறாங்க.' சுந்தராவிடம் வந்து பொருமினா

'உன் வேலைய நீ செய் பெரியசாமி. அந்தப் பைய ப்ளான் வரைக்கும் ஹெல்ப் பண்ணட்டும். அவ காட்டற ப்ளானைக் கட்டிட்டுப் போயேன்.'

சுந்தரராஜனின் வார்த்தைகளால் உற்சாகம் அடை தாள் வேதவல்லி. ஒரு தளத்துக்கு நாலு போர்ஷனா மூன்று தள கட்டிடப் ப்ளான் உருவாகியது.

# 7

அந்தக் கல்லிடைக்குறிச்சி குடும்பத்தில் பெண்கள் அவமானப் படுத்தப்பட்டதும் இல்லை. கௌரவப்படுத்தப் பட்டதும் இல்லை. பெண் அப்பளம் இட ஆண் கட்டுக் கட்டாய் தெருத் தெருவாய் கொண்டு போடு வான். அவளை கடைக்கு அலைய விட்டதில்லை. அதே சமயம், எத்தனை கட்டு, கட்டுக்கு எத்தனை லாபம் மறுபடி முதலீடு என்ன முதலீடு போக என்ன தேறும் என்று வீட்டிலுள்ள பெண்ணுக்குத் தெரியும். லாபத்தைப் பிரித்து இது உன் பங்குஇதுஎன் பங்கு என்று புருஷனோடு பேச முடியும். தன் பங்கை வட்டிக்கு விட்டு புருஷன் கொடுத்த காசோடு கூடப்போட்டுஅகலசரிகைபார்டரால் அழுத்தமாய் பட்டுபுடவை வாங்கும்போது தோள்பட்டை அரக்கிஅரக்கி அப்பளம் இட்ட சிரமம் மறைந்தேபோகும்.

அவளுக்குத் தேவையும் குறைவு. தொந்தரவும் குறைவு. ஆனால் வேதவல்லி இழுத்து விட்டுக் கொண்ட வேலை முதலில் எல்லாருக்கும் பயமாய் தான் இருந்தது. பாதி இடித்த கட்டிடத்தின் சுவர் மீது நின்று அடுத்த வீட்டு சுவர் பார்க்க சடசட வென்று சுவர் சரிந்து தரைக்கு வந்தாள். ஆறடி சுவர் தான். சரிந்ததும் மெல்ல மெல்லத் தான். ஆனாலும் கூலி ஆட்கள் பதறி விட்டார்கள். யாரை சுவரில் கால் வச்சு ஏறுறியே எதுனா இருக்கா உனக்கு...?' கத்தினார்கள்.

வேதவல்லி பயந்து விட்டாள். கூலியாட்கள் மூலம் விலாவரியாய் இந்த விஷயம் வீட்டுக்கு வந்தபோது சுந்தரா மட்டும் மௌனமாய் இருந்தான். கல்பனா பயந்துபோனாள் பயத்தில் நன்னாவேயில்லை டீ.' என்று சத்தம் போட்டாள்.

''பேராசை பெருநஷ்டம்னு ஆயிடப்போறது. இரண்டு நாள் ஆறப்போட்டு காஞ்சிபுரம் போயிட்டுவா. விடு கட்டறேன்னு சொல்லு...அங்க சொல்லாத ஆரம்பிச்சா சறுக்கி விடத்தான் செய்யும்.''

அப்பா கடுப்பாய் பேசினார்

''காஞ்சிபுரம் வரணுமா...நானா... கடையை யார் கவனிக்கறது. தோ பார் எனக்கு நீ உபயோகப் படற தில்லை சிமிண்டுக்கு அலைஞ்சுட்டு ஹோன்னு தூங்கற... வீட்டுக்கு உபயோகமா இரு. உபத்திரவம் பண்ணிடாதே' நாகராஜன் நடுக்கூடத்தில் பேசினபோது வேதவல்லி கண்ணில் ஜலம் கோர்த்தது.

காஞ்சிபுரத்திலிருந்து பெரியவர் பக்கத்து கிராமத் துக்குப் போய் விட்டதாக சொன்னார்கள். கலவை என்று பெயர் சொன்னார்கள் காரணம் கேட்டபோது நிறைய பேர் நிறைய விதமாய் அபிப்ராயம் சொன்னார்கள்.

'அதெப்படி நியாயம்' என்று கல்பனா ஆரம்பித்த போது, 'ச்சு' என்று சுந்தரா அதட்டினான்.

'இதுபத்திப் பேச உனக்கோ எனக்கோ யோக்யதை இல்லை. அவர் எழுந்தா அதுக்கு அர்த்தம் இருக்கு. உட் கார்ந்தா அதுக்கும் அர்த்தம் இருக்கு. சங்கரமடத்தை நம்ம வீடு மாதிரி நினைச்சு பாலிடிக்ஸ் பேசாதே.'

'தெருவுல போறவா வரவா பேசறாளே.'

'பேசிட்டுப் போகட்டும். காந்திய பேசலையா... இயேசுவை அடிக்கலையா...கிருஷ்ணரைக் கொல்ல வரலையா...அது மாதிரி...எல்லாநேரமும் இங்கே நடக்கும்.'

''பெரியவருக்கும் சின்னவருக்கும்...''

'தப்பு கல்பனா...குரு, வழிகாட்டின்னு ஒருத்தனை ஏற்கறதுக்கு முன்னாடியோசனைபண்ணு. இவர் வேணும் தேவையா, இவர் சரியா சரியில்லையா எல்லாம் கேட் டுக்கோ. இவர் தான் குருன்னு ஏத்துண்ட பிறகு மனசால கூட எதிர்க்காத, விமர்சனம் பண்ணாத, ஏதோ காரணம் இருக்கு. ஏதோ அவசியம் ஏற்பட்டிருக்கு. அவர் கலவைல வந்து இருக்கார். அவரைவிட நீ கெட்டிக் காரியா...அவருக்கு உலகம் தெரிஞ்சதைவிட உனக்கும் எனக்கும் தெரியுமா...உன்னையும்...என்னையும் மாதிரி அகங்காரமும், ஆசையும் இருக்கற மனுஷரா அவர் யாரைப் பத்திப் பேசறேன்னு தெரிஞ்சு பேசு.''

கல்பனா எங்கோ பார்த்துக் கொண்டுவர வேதவல்லி சுந்தராவை கூர்ந்து பார்த்து கேட்டுக் கொண்டு வந்தாள்.

தாமரை தளர்வாய் இருந்தது. தனக்குள் மூழ்கி இருந்தது. அப்பாவின் பெயர் சொன்னதும் முகத்தில், சின்னப் பிரகாசம். மறுபடி அந்தக் கண்கள் சம்பந்த மற்று ஜடப்பொருளைப் பார்ப்பது போல சகல மனிதர் களையும் பார்த்தன. இந்த கூட்டத்துக்கும் தனக்கும் சம்பந்தமேயில்லை என்பதாய் தாமரை உட்கார்ந் திருந்தது.

தாமரையைப் பார்க்கப் பார்க்க உனக்கும் வேதனை உண்டோ என்று துக்கம் மண்டியது. பரம்பொருளும் துக்கப்படும், ஆனந்திக்கும் பிச்சை எடுக்கும். தண்டனை பெறும் என்கிற தத்துவம் கொண்ட மதம் இது. வினை யிலிருந்து கடவுள்கூட தப்பிக்க முடியாது என்கிற உபதேசம் செய்யும் மதம் இது கடவுளைவிட வினை பெரிது. வினை என்பது செயல். எது செயல்படுமோ அதற்கு துக்கம் உண்டு. செயல் ஒட்டாது. போனாலும் துக்கம் உண்டு. தொடர்ந்த வினைகள் உள்ளது பிரபஞ் சம். வினையும் வினைவின் வினைவும் இங்கு இயல்பு.

''தாமரை இயல்பாய் இருக்கிறதோ...அதன் இயல்பு இப்போது தனித்திருத்தலோ...?''

சட்டென்று தாமரை எழுந்து குளம் நோக்கி போயிற்று. வேதவல்லி அது வரும் திசை நோக்கி நெற்றி

நிலம்பட வணங்கினாள். தோளிலிருந்து வில்வ மாலையை எடுத்து அவனிடம் தூக்கிப் போட்டது தாமரை.

சுந்தரா பேச வாயெடுத்தான். கை உயர்ந்திற்று ஆசியா, பேசாதே என்கிற கட்டளையா?

ஏதோ ஒரு வேதனையோடு வீடு திரும்பினார்கள். கவலையில் தாமரை தனித்திருப்பது பாதித்ததா இல்லை பேசாது போனது உறுத்திற்றா புரியவில்லை.

''வாண்டாம்னு சொல்லலையோன்னா ... தோள்ல கிடந்த மாலையைத் தூக்கிப் போட்டது பெரிசு. மந்திரிகளை, மகாராஜக்களையே திரும்பிப் பார்க்கலைன்னு கேள்விப்பட்டேன். டில்லிலேர்ந்து வந்த மேடத்தை கிணத்தடில வச்சு பார்த்தானாம். ஒரு வார்த்தை பேசலையாம், நீயும் நானும் எம்மாத்திரம். போ...போய் வேலையைக் கவனி,'' வேதவல்லியை அப்பா உற்சாகப்படுத்தினார். ஆனால், அவர் முகம் கவலையால் தாக்கப்பட்டது.

மறுபடி பூஜை செய்து அஸ்திவாரம் எழுப்பிற்று. முதல் தளம் போடப்பட்டது. இரண்டாவது சுவர் எழுப்பிற்று அதற்கும் தளம் போடப்பட்டது. சிமெண்ட் கிடைக்காமல் வேலை நடங்கலாயிற்று. கோட்டாவுக்கு எழுதிக் கேட்டு கை பிசைந்தபடி வேதவல்லி அலைந்தாள்.

அந்த இன்ஜினியர் பையனோடு கடை கடையாய் ஏறினாள். 'சிமெண்டா...அப்படின்னா...நான்? வேர்க் கடலை பயிறு வியாபாரம் பண்ண ஆரம்பிச்சுட்டேன். கோடவுனைப் பார்த்திங்களா...ஆளு நுழைய முடியாது. இதுக்குள்ள இப்ப குறுக்க வலைகட்டி பேட்மிண்டன் ஆடறோம். வேற என்ன செய்யறது?'

''எப்படியாவது வேணுமே.''

''தரலாம் மூட்டைக்கு பன்னெண்டு ரூபா மேல கேட்கறாங்க. என்கிட்ட இல்லை. எனக்குத் தெரிஞ்ச பார்ட்டி. அதும் பத்து மூட்டை இருபது மூட்டைதான் தருவான்.''



''இது சிமெண்டே இல்லை. சுண்ணாம்பு. இதையா வாங்கினான் தொழில் படிச்சவன்...அவன் படிப்புல...'— இது மேஸ்திரி.

பேச்சு முற்றி இன்ஜினியர் பையன் கை சட்டை பிடிக்க மேஸ்திரி சட்டை உருவிப் போட...பொத்து பொத்து இரண்டு மூன்று அடிகள் விழுந்து விட்டன. வேலையாட்கள் கருவிகள் கீழே போட்டுவிட்டு வெளியேறினார்கள்.

பிலிப்ஸ் கம்பெனிக்கு ஆர்டருக்குப் போயிருந்தான் சுந்தரா. நாகராஜன் போன் எடுத்து விஷயம் வேதவல்லி மூலமாய் கேட்டுவிட்டு சமாதானத்துக்குப் போனான்.

''அங்க எதும் சரியில்லை...தம்பி, நான் வரமாட்டேன். விட்டுரு!'' மேஸ்திரி சிலும்ப, 'நான் சரி பண்றேன். என்ன சொல்லு...' என்று நாகராஜ் தூண்ட...

''உன்னை சரி பண்ணிக்கோ முதல்ல. அப்புறம் எல்லாம் சரி ஆவும்,'' என்று சித்தாள் கூவினாள்.

நாகராஜுக்குப் புரியவில்லை.

அங்கே மவுனம் நிலவிற்று.

''என்னை சரி பண்றதுன்னா?''

''நீசரியா இருந்தா உங்க ஊட்டம்மா சரியாயிருக்கும். உங்க ஊட்டம்மா சரியா இருந்தா அந்தப் பையன் ஆடுவானா...கை நீட்டி அடிப்பானா?''

''என்ன சொல்ற நீ?''

''இடுப்பு புடிச்சு எத்தி வுடறான். வண்டில போட்டுக்கினு போறான். இங்கிலீஷ்ல பேசினா இத்தினி சிரிக்கணுமா. எங்க ஊடா இருந்தா வெட்டிடுவாங்க ஒரே வெட்டா!'' சித்தாள் தொடர்ந்தாள்.

''ந்தே...உனக்கென்ன...பொத்திக்கினுகிட நாயே...'' மேஸ்திரி அதட்டி சொன்னான்.

''ஏன் இன்னிக்கி விட்டாலும் நாளைக்கு யாரானா சொல்லி சிரிக்கத்தான் போறாங்க. சிமெண்ட்டுக்காரன்

கேட்டான். யாரு அது பொம்பளை. மாட்டுமான்னான். சிமெண்டு இல்லைன்னாலும் கோடவுனுக்குள்ள எட்டிப் பார்க்கறாங்களாம். பாரு பாருன்னானாம் அந்தப் பையன்!''

''சரி...நாளைலேர்ந்து வேலைக்கு வா''

''முடியாதுங்க''

''நான் நிக்கறேன்: நீ வேலைக்கு வா''

வீட்டிற்கு வந்து சுந்தராவுக்காக காத்து நின்றான். வேதவல்லி அயர்ச்சியில். வேலை நின்ற அதிர்ச்சியில் மேலே அறையில் தூங்கிக் கொண்டிருந்தாள்.

''சுந்தரா எனக்கு மூணு மாசம் லீவு வேணும் கடைலேர்ந்து''

''என்னடா'''' சுந்தரா ஷூ அவிழ்த்தபடி சாதாரணமாய் கேட்க...

''உன்னைக் கேட்டேனா வீடுகட்டச் சொல்லி உன்னை நச்சரிச்சேனா சொத்து சேர்க்கச் சொல்லி... அப்படியே தேவைன்னா உன் பொண்டாட்டிய விடறது தானே வேலைக்கு...இவனை ஏண்டா அனுப்பற?''

''நாகராஜ்''

''அந்த விட்டு வேலை இனிமே என்னுது. எந்த இன்ஜினியர் பொறுக்கியாவது வந்தா செருப்பால அடிப்பேன்''

வேதவல்லி சப்தம் கேட்டு படியிறங்கினாள். நான்கு மணிக்கு சிமெண்ட் தேட அவனுக்குப் போக வேண்டியிருந்தது. அந்தப் பையனை வரச்சொல்லியிருந்தாள்.

''என்ன நாகராஜ்...என்ன விஷயம்...வேலையாளுங்க முன்ன மாதிரி இல்லை...பாதி கட்டிடத்துல வேலை நிறுத்தினாகூட, கேட்கலாம்னு நினைப்பானுங்க. வம்பு பண்ணுவாங்க''

''காசு வம்புன்னா மூஞ்சில தூக்கி அடிக்கலாம், கண்டவன் வூட்டுக்குள்ள பூந்து வம்பு பண்ணா...?''



''குட் ஈவினிங் சார்...'' வாசலில் குரல் கேட்டது... அந்தப் பையன்.

''வேதவல்லி இருக்காங்களா...வரச்சொன்னாங்க!''

''யாரு...யாருடா நீ?'' நாகராஜன் முன்னேறினான். வேதவல்லி படியிறங்கினாள்.

''நீ யார்?''

பையன் திகைத்தான்.

''இன்ஜினியர் சார். வேதவல்லி அப்பாய்ன்ட் பண்ணி இருக்காங்க.''

''எதுக்குடா...எதுக்கு அப்பாய்ன்ட்மென்ட்? இடுப்பு புடிச்சு தூக்கி வுடவா? கைகோர்த்து கடைக்குப் போகவா?''

''சார்...''

'பிச்சுடுவேன். பொட்டைன்னு நினைச்சியா என்னை...? ஒரு புடிக்குத் தாங்குவியாடா நீ? கை நீட்டினியாமே மேஸ்திரிகிட்ட. இரண்டு நாள் வேலை நிக்குது. நீ செய்வியா இதை...உன்னால முடியுமா ஒரு சுவரு பூச...?''

''சார். அசிங்காமா பேசறீங்க.''

''அசிங்கமா...நான் பேசறது அசிங்கமா...? பொறுக்கி நாயே'' பாய்ந்து அவன் சட்டை இழுக்க அவன் பின்னே நகர நாகராஜன் குப்புற விழுந்தான். தவழ்ந்து எழுந்திருந்து வராண்டா ஓரம் உள்ள செருப்பை எடுத்துக் கொண்டான். 'உன்னைக் கொன்னுடுவேண்டா..!' என்று ஓடினான்.

இரண்டு நிமிடங்களில் சகலமும் நடந்துவிட்டது. அந்தப் பையன் மோட்டார்சைக்கிள் ஏறி உதைக்க செருப்பு பறந்து அவன் முதுகு தாக்கிற்று.

''வாட் நான் சென்ஸ் யூ ஆர் டூயிங்?'' வேதவல்லி கோபமாகப் படியிறங்கினாள். பளீரென்று நாகராஜிடம்

அடி வாங்கினான். 'ஐயோ' என்று முகம் பொத்திக் கொண்டான்.

அப்பா ரவுத்திரமாக ஓடி வந்து நாகராஜனை விலக்கினார். சட்டை பிடித்து உலுக்கினார்.

''பொம்மனாட்டிய அடிக்கிறே...அந்தப் பொண்ணையா அடிக்கறே...?'' நாகராஜன் சட்டை கிழிந்து தொங்கியது!

சுந்தரா முன்னேறி அப்பாவை விலக்கினான். நாகராஜனை மாடிக்கு அனுப்பினான். அப்பாவைக் கொண்டு போய் படுக்க வைத்தான்.

''கல்பனா, அவனை நம்ம இடத்துக்குக் கூட்டிண்டு போ!''

கல்பனா அழைத்தபோது அடி வாங்கிய இடத்திலிருந்து வேதவல்லி நகர மறுத்தாள்.

''உள்ள போம்மா...எல்லாரும் எமோஷனலா இருக்கறபோது எதுவும் பேசவேண்டாம். உள்ளே போ... தயவு செஞ்சு உள்ளே போம்மா''

''என்னை...என்னை தப்பா...என்னைத் தப்பா...'' அந்தப் பெண் சுருண்டு கலங்கிக் கலங்கிப் பேசிற்று. தாரை தாரையாய் கண்ணீர் விட்டது.

''அழாதே...ப்ளீஸ் அழாதே...நல்ல பொம்மனாட்டி மனசு நொந்து அழப்படாது. அது பாபம். வீட்டுக்குக் கெடுதல். இது சோதனை. போ போயிடு!''

கல்பனா அவளை வாரி இழுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

இடி விழுந்தாற்போல் மவுனமாய் இருந்தது வீடு.

8

'என் மேல தப்புன்னா என்னை அடிச்சுத்தொறுக்கி இருக்கணும். எந்தப் பாவமும் அறியாத அந்தப் பையன் மேல என் கண் முன்னாடி செருப்பு வீசி... என்ன நியாயம்?''

''அந்தப் பையன் என்னை என்ன நினைச்சுப்பான்? நம் வீட்டைப் பத்தி என்ன நினைச்சுப்பான். அவனை தேடி நான்தான் போனேன்... உதவிக்கு வரியான்னு நான் தான் கூப்பிட்டேன். ச்சே...''

''படு. பேசாம படு வேதவல்லி!'

''நான் ஏதாவது அசிங்கம் பண்ணினேனா...? ஆபாசமா நடந்துண்டேனா? தப்பான எண்ணம் வச்சிண்டிருந்தேனா...? என்னை விட இரண்டு வயசு சின்னவன். சந்தோஷமா சொல்லிக்கொடுத்தான். இடுப்பு பிடிச்சது இவர் பார்த்தாரா...? ஊர் சுத்தறேனா...?

''இத்தனை காசும் இன்வெஸ்ட் ஆகலையேன்னு யோசனை பண்ணினது தப்பா? நான் உபயோகம் இல்லைங்கறாரே? என்னை உபயோகிக்க முடியுமா அவரால? நீங்க ஒரு தடவை கேட்டேள்...கல்பனா மன்னி லட்சம் தரம் கேட்டிருப்பா...சரியா இருக்கா எல்லாம்னு...மறந்துபோய் கூட குத்தம் சொல்லலை. மனுஷான்னா முன்ன பின்ன இருப்பான்னு எங்க விஷயத்தை எங்களோட இருக்விண்டது தப்பாயிடுத்து. எவன் கூடயோ சுத்தறேன்னு பேர் வருது.'

''அவருக்குத் தம்மேல கோபம். அவநம்பிக்கை. பயம். பொண்டாட்டிய அசர அடிக்க முடியலையேன்னு சுவரம்...எவனையோ செருப்பால அடிக்கறார்.''

''வேதவல்லி இத மாதிரி பேசக்கூடாது.''

''நான் பேசினது இல்லைண்ணா. இப்படி இவர் பேசினார்னு எங்கப்பாவுக்குத் தெரிஞ்சா போதும், ரணகளம் நடக்கும் இங்கே.''

''போ. போய் சொல்லு, சுந்தரா கோபமுற்றான்.'' ''அப்படி ஒரு ரணகளமும் பார்த்துடலாம்.''

''சரி விடுங்கோ. அவதான் அடிபட்ட வேகத்துல பேசறா. எல்லாரையும் சைலண்டா இருக்கச் சொல்லிட்டு நீங்க கத்தினா எப்படி? போய் நாகராஜனை சமாதானப் படுத்துங்கோ. இப்படி தப்பா நடு வீட்ல பேசறது கேவலம்னு சொல்லுங்கோ.''

சுந்தரா உடைகள் மாற்றிக் கொண்டு மாடிப்படியேறிப் போனான்.

உள்ளே கட்டிலில் மல்லாந்து கிடந்த நாகராஜ் அருகே போய் உட்கார்ந்து கொண்டான்.

''என்னடா ஆச்சு உனக்கு?''

''ப்ச்சு.''

''ஏன் இப்படி அபாண்டமா பேசறே. அவ பெரிய இடத்துப் பொண்ணுடா. சட்டென்று நடு வீட்ல மூணு மனுஷா எதிரே அப்படிப் பேசலாமா. தப்பே நடந்திருந்தாலும் என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா... சொல்லு. என்னத்துனால இப்படி ஒரு பேயாட்டம் ஆடினே?''

''என் தலையெழுத்து.''

''ஏன் உன்னால முடியலையா?''

''எவன் சொன்னான். அந்த சிறுக்கியா?''

''இதுல கோவப்பட கோவப்பட பலகீனம்தான். மெள்ள நிதானமா பேசு. இன்னும் கோவம் குறையலைன்னா சொல்லு. நான் கார்த்தால பேசறேன்.''



''கோவம் குறையலை.''

''வெரிகுட். கார்த்தால பார்த்துக்குவம்.''

எழுந்து வெளியேறினான். கல்பனா வேதவல்லியை வற்புறுத்தி சாப்பிட வைத்தாள்.

''இன்னிக்கு என்ன நடந்தது வேதவல்லி?'' எதிரே உட்கார்ந்து சாப்பிட்டபடி சுந்தரா கேட்டான். வேதவல்லி ஆதியோடு அந்தமாய் மேஸ்திரிக்கும் இன்ஜினியர் பையனுக்கும் நடந்து வந்த யுத்தம் பற்றி சொன்னாள். சுந்தராவுக்கு போன் செய்ய, நாகராஜன் எடுத்து விவரம் கேட்டது சொன்னாள். வேலை நின்றது பற்றி சொன்னாள். நான் போய் பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு நடு வீட்டில் கத்தின வரை முடித்தாள்.

சுந்தரா யோசித்தான், மேஸ்திரிக்கு எரிச்சல் வரக் காரணம் இன்ஜினியர் பையன். அது வெடிக்க, நாகராஜ் போயிருக்கிறான். மேஸ்திரி ஏதும் பேசியிருக்கலாம். இந்த மடையன் நாகராஜ் அதை நம்பி வீட்டில் வந்து கூவ பையன் எதிர்ப்பட விரசமாகி விட்டது. இது டைம் குழல் விஷக்கடி வேளை.

மேஸ்திரி இத்தனை சொல்வானா... ஒருவேளை இவன் வெள்ளையாய் சாதாரணமாய் இதை ஜெர்மன் தேசமாய் நினைத்துக் கொண்டு அதிகம் சிரித்திருப்பாளோ?

வேதவல்லி வேறு ஏதோ சொல்லி அழுதாளே... அவனுக்கு பயம், கலவரம் பொண்டாட்டியை அசரடிக்க முடியலைன்னு... இதுவும் காரணமோ? நாகராஜனுக்கு என்ன... உடல் கோளாறா... மனக் கோளாறா?

ஜெர்மன் படித்து கட்டுரை எழுதி டாக்டர் பட்டம் வாங்கின பெண்... பயமாகிவிட்டதோ? தானே நின்று கொண்டு தளம் எழுப்பி பாதி வேலை முடித்துவிட்டாளே என்கிற பயமோ? தான் முன்னின்று வீடு முடிப்பதாய்

சொல்கிறாளே? நான் முடித்தேன் என் மார் தட்டிக் கொள்ளவா?

தூக்கம் வரவேயில்லை. புரண்டு புரண்டு அரை கிறக்கமாய் சுருண்டு அந்தப் பெண் ஹாலில் போர்வை போர்த்தி தூங்குகிறது என்பது இடைவிடாமல் நெஞ்சில் உறுத்திற்று. மாடிப் படியேறி நாகராஜன் அறைக் கதவை திறந்தான். நாகராஜன் பால்கனியில் உட்கார்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

சுந்தரா வருவது தெரிந்ததும் அணைத்துவிட்டு நாகராஜன் எழுந்தான்.

''பரவாயில்லை புடி.''

''வேண்டாம்.''

'புடிறா,' சிகரெட் உருவி அவனுக்கு கொடுத்து மேட்சச்பாக்ஸ் தேட, நாகராஜன் வாங்கி பற்ற வைத்துக் கொண்டான்.

''என்ன சொல்லு!''

''மேஸ்திரி கன்னாபின்னான்னு பேசினான்.''

''என்னன்னு?''

''உன் பொண்டாட்டிய அடக்கி வை...அது இதுன்னு இன்ஜினியர் பையனோட சம்பந்தப்படுத்திப் பேசறான்''

''நீ நம்பறியா?''

''இல்லை''

''அப்ப ஏன் கத்தின?''

''எனக்கு வேற ப்ராப்ளம்டா,''

''என்ன?''

''எனக்கு இது பத்தி சரியா தெரியலை. பதட்டமா இருக்கு. பாதி நேரம்...''

''ம்ம் சொல்லு...'



'அவ பாவம்' ரொம்ப பாவம். தேவையில்லாம அவளை அடிச்சு ரகளை பண்ணி...

''டாக்டர்கிட்ட போனியா?''

''ஏன் அவ சொன்னாளா?''

''அவ பேசவேயில்லை. பேச மாட்டேங்கறா''

''பிறகு எப்படி டக்குன்னு டாக்டர்கிட்ட போனியான்னு கேட்கறே?''

''பாதி இந்த மாதிரி சந்தேகப்படற கேஸ்சுல வீக்னசா இருக்கும்.''

''வீக்தான் ''

''இது ஈசியா சால்வ் பண்ணலாமே. சாதாரண டாக்டர் போறுமே''

''ப்ச்சு''

''என்ன''

''இதைப் போய் டாக்டர்கிட்ட எப்படி...?''

''என்கிட்ட சொல்ற மாதிரி சொல்லலாம். நான் சொல்லட்டுமா. இது உடம்பு பலகீனம் இல்லை. மனசு பலகீனம்.''

நாகராஜன் பேசாதிருந்தான்.

''உனக்கு அவளைப் பத்தி தெரியத் தெரிய பயம் வர்றது. நாம ஒண்ணுமேயில்லை நமக்கு இப்படி ஒரு பொண்டாட்டியான்னு கலவரம் வர்றது''

''ஆமா...''

''எதுக்கு கலவரம்?''

''அவளுக்கு நான் சரியில்லடா?''

''ஏன்?''

'நிறைய தெரியறது அவளுக்கு...நான் ஒரு ஸ்லோகம் சொன்னா அவ பத்து ஸ்லோகம் சொல்றா. நான் ஒரு கார்

பத்தி பேசினா அவ உலகத்துல இருக்கற எல்லா கா பத்தியும் பேசறா நான் கடை வியாபாரம் பத்தி பேசினா அவ பிசினஸ் மேனேஜ்மெண்ட் பத்தி பேசறா சும்மா ஒருநாள் கையை முறுக்கி பெட்ல தள்ளினேன் 'வேணாம் இப்படி பண்ணாதிங்கன்னா' என்றாள் பண்ணுவேன் என்ன பண்ணுவன்னுகிட்ட போனேன் கையை இழுத்து காலால் தட்டி பெட்ல சுவற வச்சுட்ட கராத்தே தெரியறது அவளுக்கு. நாலுபேர் சேர்ந்தா அசைக்க முடியாது. மலை ஏறுவாளாம். மோட்டா சைக்கிள் விடுவாளாம். ஸ்விம்மிங் பண்ணுவாளாம் ஒரு நாளைக்கு ட்ராக் சூட் போட்டுண்டு சம்மர் சால் அடிச்சு காட்டினா. முன்னால ரெண்டு ஜம்ப் பின்னா ரெண்டு ஜம்ப் பூமில கையே படலை உதறிடுந்து எனக் அவளுக்கு நான் சரியில்லைடா. நான் சமையல் மா பெண் மல்லிகாவையே கல்யாணம் பண்ணிண்டு சந்தே ஷமாய் இருந்திருப்பேன். எல்லோரும் அதட்டி எங்கே கொண்டு போய் உட்கார வச்சுட்டேன்.''

''ராணி மாதிரி வளர்த்தவோ. நான் ரோடு பொறுக் வெறும் பீர் பாட்டில். ப்ச்சு...தேவையே இல்லா அவளை அடிச்சு ஆங்காரமா கத்தி என்னையே என்னையே தானே அவமானப்படுத்தி...'' முகம் பொத் அழுதான்.

''எகிறி ஜன்னல் வழியா குதிச்சு செத்து போயிடலாம்னு தோணறது'' சுந்தரா இறுக்கிக் கட் கொண்டான்'

இது உடம்பில்லை. மனசு. மிரண்டு போயிருக்கி மனசு.

''வெட்கத்தைவிட்டு சொல்றேன் சுந்தரா. ராத் பக்கத்துல படுத்திருக்கப்ப நான் விடிவிளக்கு வெளிச் துல ஆன்னு அவளைப் பார்த்திண்டிருப்பேன். இது எ கிட்ட வந்து மாட்டித்தேன்னு புலம்புவேன். நாம் வெ ஸ்டீல் பீரோ கடைக்காரா, டைம்பீஸ் விக்கறவா நம்ம



வைடூரியம் வியாபாரம் பண்ண முடியுமா...? தங்கச் சரங்கம் மெயின்ட்டெய்ன் பண்ண முடியுமா...? அவமேல சந்தேகமேயில்லை எனக்கு சுந்தரா...நான் சரியில்லை அவளுக்கு...

''அசடு...அசடு. அழுகையை நிறுத்து அது வைடூரியம். சந்தேகமேயில்லை. அது உன் மடில வந்து விழுந்திருக்கு. இது கொடுப்பினை. போன ஜன்மத்து கொடுப்பினை!''

''இல்ல சுந்தரா உனக்குப் புரியலை என் நிலைமை. ஒரு உதவி செய். பேசாம அவளை டைவர்ஸ் அப்ளை பண்ணச் சொல்லு.''

''போடா கூஸ்...செத்துரும் அது. நானும் பயந்தேன் உன்னை மாதிரி முதல்ல...எத்தனை இணக்கமா ஆயிடுத்து இந்த விட்டோட. ஒண்ணும் புரியலை உனக்கு. எவ்வளவு படிச்சிருந்தாலும் பொம்மனாட்டி. அடி மனசுல பொம்மனாட்டிதான். உனக்குப் புடிச்சது எனக்குப் பிடிக்கும்னு சாதாரணமா விட்டுக் கொடுக்கற ஜென்மம் தான். அவளை ஜெயிக்கறதுக்குப் படிப்பு வேண்டாம்'' பலம் வேண்டாம். அன்பு போறும். பாராட்டுடா. கை ஷுக்கு. அட இது எனக்குத் தெரியலையே எப்படின்னு கேளு...உடனே வெட்கப்பட்டுரும். ஐயோ எனக்குத் தெரி யாதுன்னு உட்கார்ந்துடும்.

''தப்பு உம்பேர்ல இல்லை. நீ தப்பான வளர்ப்பு. பொம்பளை, ஷோக்கு விஷயம்னு உன் மடன் ஏஜ்ல உன் புத்திலையால நினைச்சுட்டே. மல்லிகா வேலைக்காரி யாலே...கை போட்டா என்னன்னு தோணற திமிரோட வளர்ந்துட்டே. நான் அசிங்கமா பேசலை நாகராஜா. இது இன்னிக்கு பல இளைஞர்களோட மனோபாவம். ஏட்டாவது படிச்சது சீக்கிரம் படியும். எம். ஏ, படிச்சது படியாதும்னு கணக்கு போடறீங்க...''

''மறுபடி சொல்றேன்...மல்லிகாவை உன்னால நெருங்கக்கூட முடியாது. நெருங்கி நிக்கற உன்

பொண்டாட்டிய புரிஞ்சுக்க முடியாது. ஏன் தெரியுமா? பொம்பளை யாருன்னு உணராம உங்க கற்பனைலயே உங்க அனுமானத்திலயே பார்க்கறீங்க. சிரிச்சா டா... டிக்கத் தோணுது. கை குலுக்கினா 'கேசோ'ன்றீங்க. வெட்கப்பட்டா படிஞ்சுடும்ன்னு முடிவு கட்டறீங்க. ஜெர்மன்ல பேசினா...ப்ரஞ்ச் எழுதினா...கால் தட்டி மூஞ்சில இடிச்சா...கை பாவாத சம்மர்சால்ட் அடிச்சா... எந்த விஷயம் பத்தியும் தெளிவா பேசினா...நமக்கெதுக்கு வம்புன்னு ஓடி வந்துடறீங்க. ஏன்...? உங்க கணிப்புல அவ இல்லை. நீ கற்பனை பண்ணின மாதிரி அவ இல்லை. உடனே பயம்...கலவரம். ஜன்னல் வழியா குதிச்சு தற்கொலை பண்ணிக்கணும்னு புலம்பல். இல்லேன்னா தேவிடியான்னு அறையும் காட்டுத்தனம்.''

''கல்பனாவை நான் லவ் பண்ணினேன்னு உங்... யாருக்காவது தெரியுமா? என்னைக்கல்யாணம் பண்ணிக்... வியான்னு தாதர் ஸ்டேஷன்ல அவளைக் கெஞ்சினே... தெரியுமா? ஏன் கெஞ்சினேன்...? அவ எனக்கு ஈக்வல்... கொட்டற மழைல ரெண்டு ரோல் பிளாஸ்டிக் பேப்ப... வாங்கி...மரப்பெட்டிக்கு இரும்புத் தகடு அடிச்சு பாக்கி... பண்ண பொண், இது சந்தோஷம் இல்லையா? இது ஒ... பெருமை இல்லையா? இதுக்கு பயப்படலாமா? இதுக்... ஆங்காரப் படலாமா? தப்பு பண்ற நாகராஜா.''

''ஒரே ஒரு சல்யூஷன். இதுக்கு வெட்கப்படாம அ... கிட்ட மன்னிப்பு கேளு! புருஷன் பொண்டாட்டிக்குள்ள என்னடா வெட்கம்?''

கனைப்புச் சத்தம் கேட்டது.

திரும்பினார்கள்.

வேதவல்லி சதவருகே உட்கார்ந்திருந்தாள்.

# 9

''வா...உள்ளே வா வேதவல்லி'' சுந்தரா வாஞ்சையுடன் கூப்பிட்டான்.

''தற்கொலை பண்ணிக்கிற அளவுக்கு என்ன நடந்து போச்சு இங்க...?'' கம்மின குரலில் வேதவல்லி கேட்டாள்.

''பேசினது காதுல விழுந்துதா...அது ஒண்ணுமில்லை ஒரு துக்கம்.''

''நான் சரியில்லைன்னு பட்டதுன்னா என்னை அனுப்பிடலாம். ஜன்னல்லேர்ந்து குதிப்பானேன். மல்லிகா முக்கியமா இருந்தா தாராளமாக கல்யாணம் பண்ணிக்கலாம். இத்தனை வேதனையோட அழுவானேன்.'

''எல்லாமே கேட்டுட்டியா... மல்லிகா மேல ஆசையெல்லாம் இல்லை. உன்னைக் கண்டு ஒரு அச்சம்' இன்பீரியாரிடி காம்ப்ளெக்ஸ்—தாழ்வு மனப்பான்மை...''

''தொம்பச்சி கூடத்தான் சம்மர் சால்ட் அடிப்பா. சர்க்கஸ்ல பொண்கள் பண்றதில்லையா? இவரு சவால் விட்டாரு...விளையாட்டுக்கு புடிஞ்சு தள்ளினேன் அது மனசுக்குக் கஷ்டமாயிருந்தா பதிலுக்குத் தள்ளவேண்டியதுதானே...? அவருக்கு நான் சரியில்லைன்னு முடிவு பண்ணுவானேன்? டைவர்ஸ் கேட்பானேன்?''

''அவரே வீட்டை கட்டட்டும் அண்ணா, நான் பண்ணினது தப்பு இனி வாசப்படி தாண்டமாட்டேன்.''

''ஏய்...ஏய்...அவன் அப்படி சொல்லலை. அவன் உன்னை தப்பா சொல்லலை. வருத்தப்படறான். தப்பு பண்ணிட்டமேன்னு வெட்கப்படறான். உன் மேல அவனுக்கு சந்தேகமே இல்லை வேதவல்லி''

''அவர் பேசினது கேட்டேன். அது போறும் எனக்கு''

முகத்தை முந்தானையால் மூடிக்கொண்டு அழுதாள். நாகராஜன் மெல்ல அவள் அருகே போனான் தலை சாய்த்து அழும் மனைவியின் தலையை வருடிக் கொடுத்தான். இழுத்து தோளில் சாய்த்துக் கொண்டான். அந்தப் பெண் அவன் நெஞ்சில் புதைந்து கொண்டு மேலும் விம்மிற்று.

சுந்தரா வெளியே வந்தான். கதவு சாத்தினான். 'அப்பாடா' என்று ஒரு நிம்மதி பரவிற்று.

''ராஸ்கல்...அந்த மேஸ்திரி ஆட்டங் காட்டியிருக்கான். பொம்பளைதானே மேற்பார்வைன்னு இடிச்சுப் பார்த்திருக்கான். ஆம்பளை பத்திப் பொம்பளைகிட்ட கோள் மூட்டறதும் பொம்பளையப்பத்தி ஆம்பளைகிட்ட மட்டமா பேசறதும்...வா வைக்கிறேன். ஸ்டிரைக்கா பண்றே. கூட பத்து ரூபா கேள். பேசலாம். பிரிச்சுப் போடவா பாக்கறே உன் இஷ்டத்துக்கு கட்ட முடியலையேன்னு கோபம் கேள்வி கேட்க ஆள் கூட்டிட்டு வந்த ஆத்திரம். நீ இல்லைன்னா வேற ஆளே இல்லையா ஆயிரம் மேஸ்திரி நான் காட்டறேன் வா.''

விடிந்ததும், கார் எடுத்துக் கொண்டு மேஸ்திரி வீட்டுக்குப் போனான்.

வாசலில் ஆட்கள் கூட்டம் இருந்தது. எல்லாரும் நமட்டுச்சிரிப்புடன் இருப்பதுதெரிந்தது கும்பலாய் நின்று மடக்கற யுத்தியா? பிரிச்சுப் போட எத்தனை நாழி ஆகும்?

''என்ன மேஸ்திரி எப்ப வேலை?''

''நீங்கள் சொல்லுங்க ஐயா''

''இன்னிக்கு ஆரம்பிக்குமா?''

''நான் மட்டும்னா ரெடி.''

''இல்லைன்னா?''



''ஆள் வராது.''

''அந்தப் பையன் என்ன பண்ணினான் உன்னை?''

''என்னை என்னா பண்ணுவான் பையன்...அவன்'' அவன் இடத்துல விளையாடறான். நம்மகிட்ட நடக்குமா?

கூட்டம் சிரித்தது.

''அது அவங்க பாடு. நீ ஏன் அது பத்தி பேசற? அங்கிருந்து வூடுகள்ள அப்பிடி இப்பிடித்தான் இருக்கும். நாம கண்ணால பார்த்தமா காதால கேட்டமான்னு இருந்துடணும். பேசக்கூடாது''

பேசின சித்தாளை திரும்பிப் பார்த்தான், சுந்தரா!

''ஆ...ஆங்...அப்படித்தான் அது'' தலையாட்டிற்று.

''சரி அந்தப் பையனை வரவிடலை.''

தூசு தட்டி வேலையாட்கள் எழுந்தார்கள்.

''பெரிய இன்ஜினியர் வருவார். உன்னை மாதிரி நாற்பது அம்பது ப்ளாட் கட்டினவரு''

''அவரையே வச்சுக்க. என்னை ஏன் கூப்புடற?''

''அப்ப வரமாட்டே.''

''நான் தான்னா வரேன்.''

''சரி. அப்ப அறுவது மூட்டை சிமெண்ட் கொண்டாந்து வச்சுடு.''

''அறுவது மூட்டை...சிமெண்டா?''

''காணமே...கீழே அடுக்கி வச்சிருந்தது?''

''காணமா. என்னைய்யா விளையாடறியா?''

''பத்து மணிக்குள்ள சிமெண்ட் மூட்டை அறுபது வந்து சேரலை...போலீசுக்கு கம்ப்ளையின்ட் போவும்.''

கார் ஏறி சாவி போட்டு இன்ஜின் ஸ்டார்ட் செய்தான்.

''மேஸ்திரி...உம் இடம் தெரிஞ்சு இருந்தா பொழச்சே இல்லை. உன்னால முடிஞ்சது நீ பார்...என்னலா முடிஞ்சது நான் பார்க்கறேன்.''

கூட்டம் உறைந்து கிடந்தது. வண்டி கியர் மாற்றி கிளம்பி வீட்டுக்கு வந்தான்.

''என்னா சொல்றான்...மேஸ்திரி?''

பத்து மணிக்கு மேஸ்திரியும் நாலைந்து ஆட்களும் வந்தார்கள்.

''என்னங்க...என்னென்னமோ சொல்றிங்க?'' குரலில் பயம் இருந்தது.

''நீ என்னென்னமோ சொல்றியே அது மாதிரிதான்.''

''நான் ஒண்ணும் சொல்லலியே.''

''சொன்னியே. இடுப்பு புடிச்சு இறக்கினான். கை புடிச்சு ஏத்தறான்னு...சிமெண்ட் ஆள் கேட்டானாமே.. எங்க வூட்டு பொம்பளை படியுமான்னு? யார் அது பேர் சொல்லு...?''

''நான் சொல்லலீங்க''

''பேர் சொல்லுய்யா''

''எதுக்குங்க?''

''அவன் பொண்டாட்டி படியுமான்னு நான் பார்க்க வேண்டாமா?''

''அப்படி யாரும் சொல்லலீங்க''

''நீயா பேசினயா?''

''நான் பேசலீங்க. ஒரு சித்தாளு பொம்பளை அனாவசியமா பேசிடுச்சு. நான்கூட அதட்டினேங்க நான் யாரையும் ஒரு குத்தமும் சொல்லலைய்யா''

''யார் அது?''

''சித்தாளுங்க.''

''யார் அந்த சித்தாளு?'' சுந்தரா குரல் உயர்ந்து கோபம் கொட்டிற்று.

கூட்டம் மவுனமாய் இருந்தது.



''கார்த்தால என்கூட பேசினவைதானே?''

''அது தப்புதாங்க. வுட்டுருங்க.''

''எது தப்பு?''

''பேசினது தப்பு. ஏதோ நாக்கு தப்பி பேசிடுச்சு.''

''உன் சித்தாளு கை தப்பி சிமெண்ட் பைல ஒரு குடம் தண்ணி ஊத்தி வீணடிச்சுட்டான்னு வச்சுக்க. யார் பொறுப்பு?''

''நான்தாங்க!''

''யாரு?''

''நான்தாங்க.''

''யாரை நான் கேட்கணும்? உன்னையா சித்தாளையா?''

''என்னைத்தாங்க.''

'சித்தாள் நாக்கு தப்பி பேசனதுக்கு யார் பொறுப்பு?' மவுனம் மறுபடியும் நிலவியது.

''சொல்லுங்க. யார் பொறுப்பு?'' வீடு முழுவதும் வராண்டாவில் வந்து நின்றது.

''நான்தாங்க.''

''மன்னிப்பு கேள். ஒரு பாவமும் அறியாத பொண்ணை அவ புருஷன் முன்னாடி தப்பா பேசிருக்கியே...நீ குடித்தனக்காரன் தானா ஒத்தக்கல்லு ஏரச் சுவர்ல நின்னு வேலை செய்யறவன்யா நீ ஒரு கல்லு நகர்ந்தா உன் கதி என்ன ஆவும்? நாப்பதடி சாரத்துல நின்னு பூசற ஆளு ஒரு சவுக்குக் கட்டை நகர்ந்தா என்ன ஆகும்? என்னய்யா பேசறிங்க? யாரைப்பத்தி பேசறிங்க? பொம்பளை ராஜ்யம். கேட்க ஆம்பிள்ளை இல்லாத ஊடுன்னு நினைப்பா?''

''இரண்டு தளம் எழுப்பியாச்சு. ஆள் மாத்த முடியாதுன்னு பாக்கறியா? உன் கண் எதிர்க்க கட்டிக்காட்டட்டுமா...காசு தூக்கிப் போட்டா உன்னை மாதிரி பத்து மேஸ்திரி. காசு சிதறிடலாம்யா. வார்த்தை சிதறிடக் கூடாது. அறுபது மூட்டை சிமெண்ட் காணோம். பதில் சொல்லு.''

''ஐயா...அநியாயமா பேசாதீங்கய்யா''

''நீ பேசலை அநியாயமா? வாய் கூசாத''

' தப்புதாங்க...என் தப்புத்தாங்க. மன்னிச்சுடுங்க.''

''நீ மட்டும் உள்ள போய் நடு ஹால்ல நின்னு எங்க ஆட்ல இருக்கற எல்லார் முன்னாடியும் அந்தப் பொண்ணு கிட்ட மன்னிப்பு கேள்.''

மேஸ்திரி படியேறினான். ஹாலில் உள்ள கூட்டத்தில் வேதவல்லியைத் தேடினான். மாடிப்படியோரம் தலை குனிந்து நிற்கும் வேதவல்லியை நோக்கி கை கூப்பினான்.

''தப்பு தாயே...பேசினது எல்லாம் தப்பு. என் தப்பு. குத்தம்பொறுத்துக்கம்மா.''கன்னத்தில் போட்டுக்கொண் டான். மறுபடி கும்பிட்டான் மெல்ல வெளியே வந்தான்.

''போ. போய் வேலைய கவனி. எத்தினி மூட்டை சிமெண்ட் வேணும்னு கணக்கு சொல். எந்த இன்ஜினி யரும் வரமாட்டான். நீதான் கட்டணும். அந்தப் பொண்ணு கேட்கிற கேள்விக்கு பதில் சொல்லணும். போ. போய் வேலைய கவனி.''

கூட்டம் கலைந்தது.

''நில்லு மேஸ்திரி. அந்த சித்தாளு வரக்கூடாது. எங்க கட்டிடத்து கல்லை மிதிக்கக் கூடாது, அந்தப் பொம்பளைய அங்க பார்த்தேன்...நான் பொல்லாதவனா ஆயிடுவேன்.''

''சரிங்க.'' மேஸ்திரி தலையாட்டி தன் கூட்டத்தோடு வேலையிடம் நோக்கி நகர்ந்தான்.

சுந்தரா டன்னே வர வேதவல்லி நன்றியுடன் ஒரு கணம் அவனை நோக்கினாள்.

புருஷன் என்பவன் பணத்தாலோ படிப்பாலோ பெண்ணை நேரே உயர்வதில்லை. தீயிலிருந்து பெண்ணை காப்பாற்றுகிற ஒரே பண்பால் அவனுள் உயர்ந்து நிற்கிறான். அந்த ஒரு துணிச்சலுக்காகத்தான் பாராட்டப்



படுகிறான். வணங்கப்படுகிறான். சுந்தராவை மானசீக மாய் நமஸ்கரித்தாள் வேதவல்லி.

''வேதவல்லி...அஸ் யூஷ்வல் நீ போய் உன் சூப்பர் விஷனை கவனி. நாகராஜ், அந்தப் பையன்...இன்ஜினியர் அவனைப் பார்த்து பேசிட்டு மன்னிப்பு கேட்டுட்டு வா. அவனுக்கு மாசம் எவ்வளவு பேசின வேதவல்லி!''

''ஐநூறு போன மாசம் கொடுத்துட்டேன்.''

''பே ஹிம் பைவ் தவுசண்ட்...அது குறைச்சல் நீ மன்னிப்பு கேட்கற முறைலதான் அவன் காயம் ஆறணும் நாகராஜ். உடனே போ. காசு எடுத்துக்கொடு நாகராஜ னுக்கு.''

நாகராஜன் தெரு முனைக்கு நடந்து போனான்.

''என்னடா...என்ன நடந்தது இங்க?'' அப்பா எல்லாம் முடிந்த பிறகு கேட்டார்.

''ஒண்ணுமில்லப்பா. அந்த மேஸ்திரி குழப்பி விட்டுட் டான்.''

''குழம்பிட்டேளாக்கும்?''

''கொஞ்சம்.''

''நாகராஜனை நீ ட்ரெய்ன் பண்ணவேயில்லை. அது உன் தப்பு.''

''அப்பா...''

''அவனை தனியா அனுப்பு.''

'இப்போதைக்கு வேண்டாம்பா, பின்னால் யோசனை பண்ணலாம்.''

'செய்ய ப்ளான் இருக்கு. ஆசை இருக்கு. எக்ஸிக்யூஷன் வரலைடா. நிதானம் இல்லை. படபடப்பு இருக்கு''

''சரியாயிடும்பா''

''அவன்கிட்ட பொறுப்பு கொடு. கடைய இரண்டா பிரிச்சு இது உன் பிஸினஸ். உன் திறமையைக் காட்டு. லாபம் கொடுன்னு சொல்லு. தனியா விடு.''

போன் ஒலித்தது. கல்பனா எடுத்து பேசினாள்.

''நடராஜ் வரானாம். நாளைக்கு சிங்கப்பூர்லேர்ந்து. யார் யாருக்கு என்ன வேணும்னு கேட்கறான்''

இங்கு தேவை ஒரு நிர்வாகி. உபரி நிர்வாகி. நட்ராஜ் இதை தன்னோடு கொண்டு வருவானா இல்லை...அவனும் ஆசையும் படபடப்பும் உள்ளவன்தானா...?

சுந்தரா கவலைப்பட்டான்.

## 10

கலர் டி.வி.யும், வி. சி. ஆரும், வீடியோ காமிராவும் சிறிய கம்ப்யூட்டரும், சென்ட் பாட்டிலும், ஷிபான் புடவைகளும் கூடம் முழுக்கப் பரவின. பனியனும் அரைக் கால் சட்டையுமாய் சிங்கப்பூர் சாமான்களுக்கு நடுவே உட்கார்ந்திருந்தான் நட்ராஜ்.

''ஏகத்துக்கு வாங்கி இருக்கியேடா. செலவு இல்ல...'' அப்பா கேட்டார்.

''இல்லை. இது முதல் இன்வெஸ்ட்மென்ட். வீ.சி. ஆர்னா என்னான்னு மெட்ராசுக்குத் தெரிஞ்சிருக்கும். லட்சக் கணக்குல வியாபாரம் ஆகும். எப்படி தெரியு' நாம வாங்கி நம்ம வீட்ல போறபோதுதானே...பேப்பர்ல கட்டியா விக்கமுடியும் புடவை டிசைன் மாதிரி?''

''குட்...'' சுந்தரா மனசுல் நட்ராஜ் பற்றி முதல் டிக் விழுந்தது.

''கடை ஆரம்பிக்கிற அளவு விவரம் தெரியுமா அலட்டாம நிஜத்தை சொல்லு'' அப்பா கேட்டார்.



'டி.வி. தலைகீழ் பாடம்! வி.சி.ஆர் நிதானமா செய்வேன். கம்ப்யூட்டர் ஓரளவுக்குத் தெரியும்!'

'ஏன் கம்ப்யூட்டர் ஓரளவு தான் தெரியும்.'

'தினத்துக்கு ஒரு மாடல் ஒரு சேஞ்ஜ் வர்றது. கம்ப்யூட்டர்ல அடிப்படையை மாறுது. தபதபன்னு வளர்றது இந்த ஹால் அளவுக்கு கம்ப்யூட்டர் வந்துடுத்து. சாடிலைட்டோட கனெக்ட் ஆயிடுத்து. இந்த நேரம் மெட்ராஸ்ல என்ன வெய்யில், காத்து எப்படின்னு அமெரிக்கால உட்கார்ந்து சொல்வான். வர்ற வருஷம் உலகத்துல எத்தனை குழந்தை பொறக்கும் என்னோ ஆகும்...இப்படியே பெத்துக்கிட்டே போனா பூமி எப்ப வெடிக்கும்...'

'போறும்...போறும் நிறைய படிச்சிருக்க...போறும்'

'உனக்குப் புரியலைப்பா...கம்ப்யூட்டர்னா என்னன்னு நமக்கு புரியவேயில்லை. பேசதுப்பா. சைபர் சைபரால வகுத்து சைபர் சைபரால பெருக்குன்னா முட்டாள்ங்கறது...'

'நாம சொல்லித்தரது தானே.'

'வாஸ்தவம் நாம கொடுக்கற பீடிங்ஸ்தான். நம்ம குழந்தை நம்மமுட்டாள்னா ஒரு சந்தோஷம்வரலையா...அது மாதிரி.'

'சரி விடு...வேறென்ன கொண்டாந்து இருக்க?' சுந்தரா கேட்டான்.

'உனக்கு ஒரு லெதர் டைரி. மெமரிக்கு வச்சுக்கற கையகல டேப் ரெக்கார்டர்.'

'நடராஜா...நான் கேட்டது?'

'காசா...நாப்பது கொண்டாந்துருக்கேன்.'

'கம்ப்யூட்டர் இருக்கே. வித்துடலாம். இங்க மூணு மடங்கு போகும்.'

'வித்துடறதா?'

'வேணும்னா கடைக்கு வாங்கிக்கோ.'

சட்டென்று கால் இடறி பல் பெயர்ந்த மாதிரி மன வலித்தது. 'கடைக்கு வாங்கிக் கொள்வதா...அப்ப யெனில் கடை யாருடையது? என்ன பேசுகிறான் இவன்

சுந்தராவின் முக மாறுதலை அப்பா கவனித்தார்.

'வேண்டாம். எங்களுக்கு கட்டுப்படியாகா கம்ப்யூட்டரெல்லாம், நீயே வித்து காசு கொண்டு வந் வேதவல்லிகிட்ட கொடு. ஒருவேளை டி.வி. போட் கடைல வியாபாரம் பண்ணினா சர்வீஸ் செய்ய தனிய ஆள் பார்த்துடு சுந்தரா.'

'ஏம்பா?' நட்ராஜ் விழித்தான்.

'நீங்க சிங்கப்பூர் ரிட்டான் காஸ்ட்லி இன்ஜினிய நமக்குக் கட்டுப்படியாகுமா?'

'நான் ஒண்ணும் தப்பா சொல்லலையே?'

'கடைக்கு இந்த கம்ப்யூட்டரை வாங்கிக்கங்கறயே யார் கடை இது? என்ன விலைக்கு விக்கப் போற?'

'இல்லப்பா...அம்பது கேட்டேன். முடியலை நாப்ப ப்ளஸ் கம்ப்யூட்டர்னு கணக்கு வச்சிருந்தேன்.'

'நாப்பது தான் முடிஞ்சுதுன்னா சந்தோஷமா வாங் யிருப்பேன். கம்ப்யூட்டருக்கு விலை பேசினியே.'

'தப்புப்பா.'

'வர மாசத்துலேர்ந்து கடைல டி.வி.வரலாம். வத் சர்வீஸ், சேல்ஸ் எல்லாம் நீ தான். ஐநூறு ரூ ஸ்டைபண்ட் கடை திறந்து கடை மூடற வரைக்கு இருக்கணும். லீவுன்னா சொல்லிவிட்டுப் போகணும்.'

'சரிப்பா ...சில வசதி வேணும்.'

'என்ன?'

'கம்ப்யூட்டர் டிவி எதுக்கும் தூசு. ஆகாத விக் இடம், சர்வீஸ் பண்ற இடம் எல்லாம் ஏசி பண்ணணும்



'மொத்தக் கடையும் ஏசி பண்றதுங்கற ஐடியா இருக்கு.. சென்ட்ரல் ப்ளாண்ட் போட்டு.' சுந்தரா சமாதானமாகப் பேசினான்.

''இரண்டு வாரம் லீவு மாதிரி கிடைக்குமா?''

''போடா...போடா... போக்கத்த பயலே நாங்க குத்தினா அத்தனை வலிக்கறதா? லீவு கேட்கறான். போய் வேதவல்லி நாச்சியார் எழுப்பின கற்றளி பார். உன் ஐடியா கொடு.''

வீடு வாய்விட்டுச் சிரித்தது. கலைந்து அவரவர் இடம் திரும்பிற்று. வேதவல்லி மைத்துனனைக் கூட்டிக் கொண்டு கட்டிட வேலை நோக்கிப் போனாள்.

நாகராஜும் சுந்தராவும் கடைக்கு கிளம்பினார்கள்.

கல்பனா புடவைகளை பங்கீடு பண்ணினாள். மல்லிகாவுக்கு இரண்டு புடவை கொடுத்தாள். ஒரு வாட்ச் கொடுத்தாள்.

''இன்னிக்கு தமிழ் பர்த்டே அவளுக்கு. அதிர்ஷ்டம் பாருங்கோ...ஒத்தைக்கு ரெட்டையா புடவை கிடைச்சிருக்கு.''

''அப்படியா, மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆப் த டே.. போய் புடவை கட்டிண்டு அப்பாவை நமஸ்காரம் பண்ணு.'' துள்ளிக் கொண்டு ஓடிற்று. எட்டு ப்ளீட்ஸ் வைத்து முடிந்த வரை மேட்ச் ஆகிற சோளி போட்டு வாட்ச் கட்டி வந்தது நமஸ்கரித்தது.

''சுப சீக்கிர விவாஹ ப்ராப்தி ரஸ்து.''

''பெரியவா சொல்றபடி நடக்கணும்.'' சமையல் மாமி கண்ணீர் துடைத்துக் கொண்டாள். ''அவளுக்கு தாயார் தகப்பனார் எல்லாமே நீங்கதான்.''

''முடிச்சுடலாம். சிரமம் இல்லை. பையன் நீங்க பார்க்கறேளா. நான் பார்க்கட்டுமா?''

''எனக்கென்ன தெரியும் பார்க்கவும், பேசவும். உங்களுக்கு ஏகப்பட்ட செலவு இருக்கே.''

''என்ன செலவு...அதெல்லாம் ஒண்ணுமில்லை''

''வீடு கட்டி முடிக்கணும். புது டி. வி. பிசினஸ்க்கு காசு வேணும்.'!

''அடிசக்கை...சகலமும் தெரியும் போல இருக்கு. பேலன்ஸ் ஷீட் பார்க்காததுதான் குறை?''

''காதுக்கு மூடியில்லையே. எல்லா விவரமும் ஹால்ல தானே பேசறேள்.''

எங்க பிசினஸ்க்கும் இதுக்கும் சம்பந்தமில்லை. முடிச் சுடலாம். சுந்தரா கிட்ட ஒரு வார்த்தை பேசிடுங்கோ.''

''உங்ககிட்ட சொல்லியாச்சு...''

''அவன்கிட்ட சொல்றதுதான் முறை. நான் ரிடையர்ட். அவன் தான் இடம், பொருள் எல்லாத்தையும் பார்த்து முடிக்கணும்.'.

''திருப்பதியில கல்யாணம் வச்சுண்டா மனசுக்கும் நிறைவா இருக்கும். செலவும் குறைச்சலாகும்.''

''ஏன் அப்படி ஏதாவது வேண்டுதலா?''

''இந்த இடத்துக்கு வந்ததே வெங்கடாஜலபதிக்கு வேண்டுதல்தான். நல்ல இடமா எனக்கு வேலை கிடைச்சா வந்து அங்கப்பிரதட்சுணம் பண்றேன்னு மனசுல நினைச்சுண்டேன். போக முடியலை வருஷம் பத்தாறது. கல்யாணம் அங்க நடந்ததுன்னா இதையும் நிறைவேத்திடுவேன். உடன் பொறந்தான் வீட்லகூட இத்தனை சுதந்திரமும் சந்தோஷமும் நிம்மதியும் கிடைச்சிருக்காது.''

''இது தெய்வக் கட்டளை. உங்க வருகை, குழந்தை மல்லிகா வளர்ப்பு, எனக்கு அவர் போட்ட கட்டளை. பெரியவர் பார்த்து அனுப்பிச்சிருக்கற குடும்பத்தை நான்



...விட முடியுமா? நீங்க அவாளுக்குத்தான் நன்றி ...ல்லணும். உறவுன்னு உங்களுக்கு மனுஷா உண்டா?'

''இருக்கா போய் பார்க்கணும். என் புருஷனோட ..., தங்கை இருக்கா. மல்லிகாவை எனக்கு பதிலா ...யனுக்கு விட்டுட்டு...''

''வேண்டாம். கல்பனா பார்த்துப்பா...ஒரு வாரம் ...ஞ்சு இடம் போய் சுத்திட்டு வாங்கோ நீங்களும் ...ந்தையும்.''

''சிரமமில்லையே.''

சிரமப்பட்டது.

கல்பனா சமையலறையில் தவித்தாள். உப்பும் உறைப் ... இடம் மாறின. ரசமும், பொங்கலும் தினசரி ...ந்தவை. சுற்றி வந்த குழந்தைகளை கல்பனா சீறி ...த்தாள்.

'என்னாச்சு கல்பனா...?'' சுந்தரா கேட்டான்.

''சமையல் டச் விட்டுப் போயிடுத்து. சகலமும் ...ன்னு இருந்துட்டமா... எது என்ன இடம்னு ...யலை.''

''பொம்மனாட்டி சமைக்க மறந்துட்டா அது ...மானமில்லையா?''

''நானு !வருஷம் நீங்க கடைக்கு போகாத இருந்தா ...ளுக்கும் வியாபாரம் சிரமப்படும். சரியாக ஒரு மாச ...டும்.''

''ஐயோ ஒரு மாசமா?''

''மாமி அடுத்த வாரம் வந்துடுவா. ஏன் கத்தறேள். ...டவை மாமி வந்தா முதல்ல எது எது எங்க இருக் ...ு தெரிஞ்சுக்கணும்?''

''அப்ப இத்தனை நாளா என்னதான் பண்ண ...?'' சின்ன கோபத்துடன் கேட்டான்.

'நானா... மல்லாக்கப் படுத்துண்டு கதை புக் படி
க்கறேன். போறுமா? ஒரு நாள் உட்கார்ந்து பாருங்கோ
உன்னுக்கும் வாசலுக்கும் எத்தனை நடவை நட
றேன்னு. எட்டு பந்தி ஒரு நாளைக்கு. ஒவ்வொருத்தரு
கும் ஒவ்வொரு நேரம். ஒண்ணா உட்காரச் சொன்ன
யார் காதுலயாவது விழறதா? அப்பாவுக்குக் கரை
சாதம். உங்களுக்கு காரமில்லாத குழம்பு நாகரா
னுக்கு காது வழியா ஆவி போற காரம், வேதவல்லிக்
சாலட். இரண்டு குழந்தைகள். இது தவிர விட்டுக்கு வர
விருந்தாளி. வேலைககாரிய உதவிக்கு வச்சுண்டு மூ
மாடியும் அதையும் இதையும் நகர்த்தி, ஒட்டடை
அடிச்சு, துடைச்சு, மெழுகி, ஸ்கிரீன் துணி மாத்தி...''

''அதுனால சமைக்கலைங்கறியா?''

''சரி சமைக்கிறேன். இதுக்கு வேற ஆள் பாருங்கோ

சூப்பர்விஷன். சகலமும் என்ன ஏது என்று பார்க்
மேற்பார்வை உத்தியோகம் சரியாய் இருந்தது என்ப
வாஸ்தவம். ஆன ல் நேரம் பொழுது மாறினால் வீ
இப்படி ஸ்தம்பிக்குமா. தோட்டக்காரன் குறைந்தா
திசை மாறுமா? சுந்தரா கவலைப்பட்டான்.

சமையலுக்கு ஒரு வாரத்துச்குஆள் போடப்பட்ட
உறவோடு உறவாய் போன சரஸ்வதி மாமி சமைய
மாதிரி வரவில்லை. சட்டிக் குழம்பும், அண்டா ரசமு
வைத்துவிட்டுப் படுத்துவிடுவான். வீட்டுப் பெண்
நடமாட்டம் பற்றி அக்கறை இல்லை. இரவு எ
மணிக்கு சிட்டாடப் போய் காலை ஆறு மணி
வருபவனை யாருக்கும் பிடிக்கவில்லை.

மாமி திரும்பி வந்தாள். 'இன்னிக்கு ஒருநாள் ரெ
எடுத்துக்கறேனே.'' என்றாள்.

உடனே சமையலில் மாறுதல் என்ற ஆவலாய் இ
. தவர்களுக்கு ஏமாற்றமாய் இருந்தது



மறுநாள் சமைக்க வந்தாள்.

பாதி சமையலில் சுந்தராவைப் பார்த்து பேசணுமே
ன்றாள். சமையலை முடித்துவிட்டு ஹாலில் காத்திருந்
தாள்.

'என்ன மாமி?''

''மல்லிகாவுக்கு வரன் வந்திருக்கு. மல்லிகாவோட
த்தை மச்சினன். உரக் கம்பெனில ஸ்டோர் கீப்பர்.
த்துக்குடில கம்பெனி இருக்கு. அவானே ஆசைப்பட்டு
ட்டா.'

'ரொம்ப சந்தோஷம்.' அப்பா கை கூப்பினார்.

'ஜாதகம் பார்த்து பத்துக்கு அஞ்சு பொருத்தம்கறா.''

''ரொம்ப சந்தோஷம். என்ன எதிர்பார்க்றா?''

''கட்டின புடவையோடு வந்தாலும் சரிங்கறான்,
ப்பிள்ளை அது நன்னா இருக்குமா? முடிஞ்சது செய்ய
ம்னு வந்துட்டேன். உங்களையெல்லாம் பார்க்க
ம்னு ஆசைப்படறா.'

''வரச் சொல்லுங்களேன். நாங்களும் பார்த்த மாதிரி
ம்.''

வந்தான். ஒல்லியான உருவம். கூர்மையான நாசி.
துறுப்பு. இளமையில் கஷ்டப்பட்டு தானே கால்
ன்றி உத்தியோகம் தேடி நிலையாய் நிற்பவன். அந்த
ம் பேச்சில் தெரிந்தது.

''நான் அப்பா அம்மா இல்லாத அண்ணா தயவுல
ந்தவன். வீட்டில் பெரியவா இல்லைன்னா குழந்தை
படற கஷ்டம் எனக்குத் தெரியும். மல்லிகாவை கண்
கா வச்சுப்பேன். என் மாதிரி மல்லிகாவும்னு தும்
ஒப்பி சரின்னேன்.''

''குட் வெரிகுட்.''

''ஒரு சின்ன கண்டிஷன்.''

''என்ன?''

''மாமியை என் கூட அனுப்பிடுங்கோ. இந்த வச வராது. ஆனாலும் என் சம்பளத்துல கஞ்சியோ கூபே ஊத்த முடியும். கடைசி வரைக்கும் சந்தோஷமா வச்சுக் முடியும். தவிர பண்டிகை, பிள்ளைப் பேறு இதுக்கெ லாம் பொண்ணை அழைச்சிண்டு வந்துமாமிக்குசிராட்ட தோணும். உங்களுக்கெல்லாம் சிரமம்...''

''மாமி என்ன சொல்றா?''

''வரேங்கறா.''

தடேரென்று விழுந்தது. கல்பனா கலவரமானா

1

இப்படி திடும்னு போறேன்னா எப்படி மா கல்பனாவின் உரத்த குரலில் பயமும் ஆதங்கமும் கல ஒலித்தன.

''நான் போறேன்னு சொல்லலை, மாப்பிள் கூப்பிடறார்.''

''ஜாம் ஜாம்னு பொண்ணை அனுப்பிட்டு இருக்க தானே... எதுக்கு நீங்களும் அங்க போய் ... நன் இருக்குமா?'

''நான் வரேன்னே சொல்லலை. மாப்பிள்ளை தான்...''

''உங்க இஷ்டம்.''

''எப்பத்தலேர்ந்து நின்னுக்கட்டும்?''

''வேற ஆள் செட்டில் ஆற வரைக்கும் இருந்துட் போங்கோ.''

''எப்படி செட்டில் ஆகும்?''



வெறுப்பாய் இருந்தது. நன்றிகெட்ட ஜென்மங்கள் என்று ஸவயத் தோன்றியது மாமி காதுபடாமல் சுந்தரா அருகே படுத்துக் கொண்டு இரவு முழுவதும், திட்டினாள் கல்பனா.

''இரண்டு கிழிசல புடவையோட, நின்னவோ. எல்லா தீபாவளிக்கும் பட்டுப் புடவை வாங்கி கட்டிண்டு உன் பட்டுப் புடவையை பாத்திரக்காரனுக்குப் போடாதே எனக்குக் கொடுன்னு வாங்கிண்டு...இன்னி தேதிக்கு இருபது பட்டுப் புடவை இருக்கும் கிழவிகிட்ட. தேசலா வந்து நின்னது அந்தப் பொண்ணு...இன்னிக்கு பிடுங்கி வச்ச கிழங்கு மாதிரி இருக்கு. என்...தயிரான தயிர். பாலான பால். நெய்யில்லாத சோறு இறங்கறதில்லை இப்ப...''

போறும் கல்பனா. சுந்தரா திரும்பி படுத்தான்.

''எப்போத்திலிருந்து நின்னுக்கலாம்னு கேட்கறா பாருங்கோ இரண்டு நாள்ல விரட்டிடப் போறேன் போ. எங்கயாவது போ... எப்படியாவது போய் கல்யாணம் பண்ணுன்னு துரத்திடப் போறேன்.''

''கல்பனா.''

''என்ன?''

''அமைதியா பேசு.''

''எப்படி... எப்படி அமைதியா பேச முடியும்... இவ்வளவு நன்றிகெட்ட ஜென்மம் உண்டா?''

''ஏதோ பத்து வருஷம் உழைச்சா... அவளுக்கு ஒரு விடிவு வந்திருக்கும், மாப்பிள்ளை மூலமா. போறா. ஏன் கூச்சல்?''

இவ மாதிரி யாரும்கிடைக்கறது கஷ்டம். உங்களுக்குப் புரியலை?''

''தட்ஸ் த பாயிண்ட்' உழைச்ச வரைக்கும் அவ ரொம்ப சின்சியர். பகல்ல மாமி தூங்கினதேயில்லை' ராத்திரி எழுப்பி சமைன்னா கூட மறுத்ததில்லை.'

''அதுக்காக கொட்டி அனுப்பிடணுமா அவளை?''

''கொட்டறதுக்கு என்ன இருக்கு இங்க? அப்பா ஒத்துண்டது போட்டு அனுப்பணும்.''

''அதெல்லாம் ஒண்ணும்வேண்டாம்... ஒன்றரைசவரனுக்கு தாலித் தகடு வாங்கி அனுப்புங்கோ. இப்போதைக்கு இவ்வளவு தான் முடியும்.''

''என் கணக்கு ஆறு பவுன் செயின். இரண்டு வெள்ளி பாத்திரம், நாலு புடவை. நாலு ஜதைவேஷ்டி, ஒரு சூட்கேஸ், ஒரு பெரியவா படம்''

''ஆறு பவுன் எதுக்கு? எனக்கு மனசே ஆகலை.''

''கல்பனா.''

''ரொம்ப அதிகம், இந்த நன்றிகெட்ட ஜென்மங்களுக்கு.''

''கல்பனா.''

''நாம ஏன் போடணும்.'

''உன் கல்யாணம் கூட யாரோ தானமா போட்டு நடந்தது கல்பனா, மறந்துடாதே.''

''அதனால்?''

''வேற தானத்தை கெடுக்காதே.''

''எங்கப்பா நன்றி மறக்கலை. இன்னிக்கும் இந்த தள்ளாத வயசுலயும் அந்த சேட்டுக்கு உழைக்கிறார்.'

''இப்ப என்ன சொல்ற?''

''ஒன்றரை பவுன் தாலித் தகடு போறும்'''

''அதைத் தீர்மானம் பண்ண வேண்டியது அப்பா.''

சொல் தவறக் கூடாது என்று சொல்லி விட்டார் அப்பா. ஆறு பவுனும், நாலு பட்டுப் புடவைகளும் நாலு ஜதை வேட்டியும், பெரிய சூட்கேசும் கொடுக்கும் போது, ''இருப்பு பீரோ தவணையில் வாங்கிக் கொள்ளட்டுமா?'' என்று மல்லிகா கேட்க அதுவும் இனாமாய் கொடுத்தார்.



திருப்பதிக்கு அப்பா வரவில்லை. முடியாது. நாகராஜன் போகவில்லை. கடை முக்கியம். கல்பனா வர மறுத்தாள். மனசில்லை. வேதவல்லி வீடு கட்டுகிற வேலை, நகரக்கூட முடியாது. சுந்தரா மட்டும் போனான். நடராஜன் நண்பர்களைப் பார்க்க பாம்பே போய் அங்கே டி. வி. மார்க்கெட் விசாரிக்கத் துவங்கி இருந்தான்.

அமைதியான திருமணம். தூத்துக்குடி உரக்கம்பெனியிலிருந்து பத்து பேர், மல்லிகா உறவுகள் பத்து பேர். மலை மீது காட்டேஜில் கல்யாணம். அருமையான சுவாமி தரிசனம், கல்யாணத்தன்று ஆயிரத்தோரு ரூபாய் சுந்தரா ஓதியிட்டான்.

மாமி இரண்டு நாட்கள் கழித்து மாப்பிள்ளை பெண்ணோடு வந்து விருந்து சாப்பிட்டாள். சகலமும் எடுத்துக் கொண்டு பின்பக்க போர்ஷன் காலி செய்து கொண்டு போனாள்.

போகும் போது அந்தப் பெண் அழுதது. பத்து வயதில் பாவாடை சட்டையோடு வந்த பெண். இந்த வீட்டின் எல்லா இடங்களிலும் திரிந்து எல்லா வேலைகளிலும் பங்கு கொண்ட பெண்.

இங்கு உப்பு இவ்வளவுதான்.

தூத்துக்குடியில் பெரிய ரிசப்ஷனாம். நூறு பேர் சாப்பிட்டார்களாம். சரஸ்வதி மாமி தன்னை மங்களம் அண் கோ பேமிலி என்று சொல்லிக் கொண்டாளாம். டேபிளில் சாப்பிடுகிறாளாம். மொத்தமாய் மாறி விட்டாளாம். கல்பனாவுக்கு யாரோ சொல்ல பொருமினாள்.

மாறட்டுமே...

கல்பனா மாறவில்லையா? கொடி மாதிரி இருந்த கல்பனா இடுப்பு வளையாமல் தடித்து விடவில்லையா. அவளுக்குப் பின்னால் நிற்கிற கல்பனா இடுப்பில் கை வைத்து வராண்டாவில் நின்று வேலையாட்களை அதட்ட

வில்லையா? மாறுதல் இயல்பு தானே. பிறர் மாறுவது மட்டும் ஏன் தவறென்று சொல்கிறார்கள்? சுந்தராவுக்கு அதிசயமாய் இருந்தது. ஆனால், பெண்களே எப்போதும் யார் பற்றியும் குறை சொல்லும் பிராணிகள் என்று தோன்றிற்று.

வீடுகட்டி முடிந்து பூச்சு வேலை பூர்த்தியாகி, குழாய் மின் இணைப்பு நடந்து கொண்டிருந்தது. நிறையபேர் வாடகைக்குப் போட்டியிட்டார்கள். குறிப்பாய் பாங்கில் வேலை செய்பவர்கள் அதிகம் நச்சரித்தார்கள்.

''பாங்க் ஆபீசர்களுக்குக் கொடுக்கலாம். வாடகை பயமில்லை. அட்வான்ஸ் பெரிசா கேட்கலாம். இதைத் தவிர மூணு வருஷத்துக்கு ஒரு முறை மாத்துவா. வாடகை ஏத்தறது சிரமமில்லை.'' நாகராஜன் அட்வைஸ் இது.

அட்வான்ஸ் பணத்தில் சகல வேலையும் நடத்தி குடியிருப்பு துவங்க கையில் சுத்தமாய் பணமில்லை. நடராஜன் டி. வி. மார்க்கெட் முழு விவரம் தெரிந்து கொண்டு இருபது லட்சத்துக்கு முதல் போட கேட்ட போது அதிர்ந்து போயிற்று வீடு.

''தினம் மூணுமணி நேரம் புரோக்ராம். கருப்பு வெள்ளை. போணியாகுமாடா டி. வி?''

''கலர் வரும் மூணு வருஷத்துல''

''அதுவரை...? இருபது லட்சம் பெரிய காசுடா.''

''இப்ப வுட்டா மறுபடி இறங்கும் போது நாப்பது போட வேண்டி இருக்கும்.

இதுக்கு நிலம் வாங்கிப் போடலாம்.'' வேதவல்லி மெல்ல கூறினாள். ''அங்கங்க வாங்கிப் போட்டு ப்ளாட் கட்டலாம்.''

''தாயே...போறும்மா. ஒரு முறை பட்டது போதும்.'' நாகராஜன் கும்பிட வேதவல்லி அறைக்குள் மறைந்து கொண்டாள்.



தொழில் மூலதனமாய். பாங்குக் கடன் பத்து. மிச்சத்துக்கு வெளியே வடக்கத்திக்காரனிடம் கடைமீது நாலு. மாடி கட்டிடத்தின் மீது கடன்.

டி. வி. ஸ்டேஷன் கட்டி முடிப்பதற்கு முன்பு கருப்பு வெள்ளை டி. வி. பெட்டிகள் கடையில் வந்து இறங்கி விட்டன. வீட்டிலிருந்து வீ. சி. ஆரை கடைக்கு எடுத்துப் போய் இங்கிலீஷ் படம் போட்டு ஜன்னலருகே வைத்தார்கள்.

வாசலில் தெரு ஆட்கள் ஜமுக்காளம் விரித்து உட்கார்ந்து கொள்ள, உள்ளே ஒரு டி. விக்கும் அதே வீ. சி. ஆரிலிருந்து நடராஜன் இன்னொரு கனெக்ஷன் கொடுத்தான்.

''முதல் டி. வி சங்கர மடத்துக்கு தரலாமாப்பா.''

''இது வாங்கிப்பாளாடா. வேண்டாளுட்டா... எதுக்கும் போய் கேட்டுண்டு வா. எனக்கு அத்தனை தூரம் வரமுடியலைங்கறதை பக்குவமா சொல்லு.''

சுந்தராவும், நடராஜனும் காரில் டி. வி. பெட்டியை எடுத்துக் கொண்டு போனார்கள்.

கலவைக்குப் போவதா...? மடத்துக்குப் போவதா? என்று குழம்பினார்கள். காரிலேயே பெட்டி வைத்து விட்டு குடிசை வாசலில் நின்று வணங்கினார்கள். இவர்கள் பெயர் சொல்ல தன் முகம் தூக்கி தேடிற்று தாமரை. மூக்குக்கண்ணாடியின் விளிம்பில் கை வைத்து எங்கே என்று பார்த்தது.

''நான் சுந்தரா.'' உரக்க தன் பெயர் சொன்னான். விரலால் அவனை சுட்டிக் காட்டி அவனைவிட உயரமாய் கை தூக்கி ''எங்கே?'' என்றது. சுந்தரா வழித்தான்.

''உங்க தகப்பனார் எங்கேன்னு கேட்கறார்?''

''அவர் வரலை. நானும் தம்பியும் வந்துருக்கோம். அப்பாவுக்கு பிரயாணம் முடியலை. ஏதாவது சொல்வனுமா?''

தாமரை தரை நோக்கி பார்த்தது. மீண்டும் தலை நிமிர்த்திற்று. 'வரச்சொல்.' என்று சைகை செய்தது.

''நாளைக்கே வரச்சொல்றேன். பெரியவாகிட்ட ஒரு விண்ணப்பம்.டி.வி. வியாபாரம் ஆரம்பிச்சிருக்கேன். இவன் சிங்கப்பூர் போய் அதுக்கு படிச்சுட்டு வந்துருக்கான். மடத்துக்கு ஒரு டி. வி. தரலாமா? பெரிவா அனுமதி வேணும்.''

என்ன சொல்றான் என்று தலை நிமிர்ந்து அருகில் உள்ளவர்களைக் கேட்க அவர்கள் சுந்தரா சொன்னதையே மறுபடி சொல்ல, 'எனக்கு வேண்டாம் மடத்துல போய் கேள்.' என்று சைகையால் தாமரை பதில் சொல்லிற்று.

மறுபடி நமஸ்கரித்துவிட்டு காஞ்சிபுரம் நோக்கி போனார்கள். இளையவரிடம் விண்ணப்பித்தார்கள். 'மானேஜர்கிட்ட கொடுத்துடு...' என்ன நடக்கறது லோகத்துலன்னு தெரியணுமோன்னோ.' மடம் பெட்டியை வாங்கிக் கொண்டது.

திரும்ப சென்னை வந்தபோது நடராஜன் ஆரம்பித்தான். 'இந்த இருபதாம் நூற்றாண்டுல இந்த மடம் அவசியமா? அப்பா அவர் பிரியடுக்கு மடம், கோயில்னு அலைஞ்சார். சரி, நீயும் இப்படி சாஷ்டாங்கமா விழுந்து கும்பட்றே. வாய் பொத்திப் பேசல...எது முதல் வியாபாரமானாலும் மடம் 'ஓகே' சொல்லணுங்கறே... இதை நம்பறயா?''

''உனக்கு என்ன கெடுதல் செய்தது மடம்?''

''ஒண்ணும் செய்யலை. செய்ய முடியாது. எனக்கு எந்த நன்மையும் செய்யலை. ஷர்ட் போடாதே பேண்ட் போடாதே ... இடுப்புல துண்டு கட்டு. இதெல்லாம் இப்பவும் வச்சுண்டிருந்தா நடந்துதான் போவேன்னு பிடிவாதம் பிடிச்சா?''



''உனக்கு கடவுள் நம்பிக்கை இருக்கா?''

''இருக்கு அது எனக்குள்ள மட்டும் இருக்கு! உங்கிட்ட அது பத்திப் பேசறதுக்கு ஒண்ணுமில்லை. நான் என் கடவுள்...என் ப்ரேயர் அது என்னோட அந்தரங்கம். அதை உன்கிட்ட டிஸ்கஸ் பண்றதிலே புண்ணியமில்லை. பப்ளிக்கா காட்டறதிலே லாபமில்லை. காட்டினா அது கடவுளைக் காட்டறதா இருக்காது...வேற எதையோ?''

''எதையோன்னா?''

''நான் எவ்வளவு நல்லவன் பாரு. தினம் கார்த்தால குளிச்சு, விபூதி இட்டுண்டு, கடவுளை வணங்கி... யாரையோ இம்ப்ரஸ் பண்றதா ஆகும்!''

''நீ யாரையும் இம்ப்ரஸ் பண்றதில்லையா?''

''பண்றேன் சுந்தரா. தலை வாரிக்கறதிலேர்ந்து டி.வி. ரிப்பேர் வரைக்கும் பண்றேன். பேண்ட், ஷர்ட் போடறதிலேர்ந்து இங்கிலீஷ்ல பேசற வரைக்கும் இம்ப்ரஸ் பண்றேன் கடவுளை வச்சும் பண்ணணுமா? ப்ரேயர்ங்கறது நானும் என் மனசும் பேசறது சுந்தரா. கடவுளேன்னு நான் கூப்பிடறது எனக்குள்ள இருக்கற என்னைத்தான். 'கைத்தல நிறைகனி அப்பமோட வல் பொரின்னு' கத்தணுமா? கடவுள்கிட்ட, கூட்டிண்டு போன்னு யாரையாவது கேட்கணுமா. சுந்தரா நான் கேலி பண்ணலை. சீரியசா கேட்கறேன். சிங்கப்பூர், சிலோன், துபாய் போறதுக்கு ஏஜண்ட் இருக்கலாம். கடவுள்கிட்ட போறதுக்கு யார் ஏஜண்ட்... எப்படி ஏஜண்ட்?''

''உனக்கு புத்தி இருக்கு. படிப்பு இருக்கு. ஏஜண்ட் வேண்டாம். படிப்பு குறைவா இருக்கறவன் ஏஜண்ட் மூலமா போகக்கூடாதா. விண்ணப்பம் பூர்த்தி செய்யத் தெரியாதவனுக்கு வேற ஒருத்தர் உதவக்கூடாதா?''

''தப்பு சுந்தரா எஜண்ட் இருக்காரு பார்த்துக்கு வாருன்னு உட்கார்ந்துட்டா. கடைசிவரைக்கும் விண்ணப் பத்தை யாரோ பூர்த்தி பண்ணிட்டிருப்பாங்க! தானே தப்பு தப்பா பூர்த்தி பண்ண ஆரம்பிச்சா ஒருநாள் இல்லேன்னா ஒருநாள் புரியும்.''

''நட்ராஜ்''

''நான் பேசறது புடிக்கலைன்னா சாரி...எனக்கு இந்த மடம், இந்த கோயில், இந்தக் கூச்சல் பிடிக்கலை. எந்த மதமும் பிடிக்கலை. நான் கஷ்டப்பட்டு வேலை செய்யறேன். சம்பாதிக்கறேன். விழுந்து புரண்டு நடக்க றேன். தப்பு பண்ணி தண்டனை வாங்கி சுத்துக்கறேன். தப்பு தண்டனை, லாபம் வெற்றி எல்லாத்தையும் என்ஜாய் பண்றேன். இதை மறுக்கறபோது குழப்பம் வர்றது. பேராசைக்குப் பெயர் மதம். நான் என்ன பண்ணாலும் காப்பாத்துன்னு அலர்றதுக்குப் பெயர் கடவுள் வழிபாடு தான் சரியா?''

''சரி''

''என்ன வுட்டுட்டே....போட்டுப் புரட்டப் போறேன்னு நினைச்சேன்.''

''உன்னை வாழ்க்கை புரட்டும். அப்ப புரிஞ்சுப்பே.''

''சாபமா?''

''சேச்சே...ரொம்ப கெட்டிக்காரனுக்கு அவனோட கெட்டிக்காரத்தனம்தான் சாபம் கத்தி வச்சு விளையாடற வனுக்கு கத்திதான் தண்டனை!''

''சாபம்தான் இது.''

''இல்லை நட்ராஜ். இது தகவல் வெறும் ஸ்டேட் மெண்ட். இதுக்கு அர்த்தம் பின்னால புரியும். ஆனா ஒண்ணு நடராஜ், மதம் கடவுள் நம்பிக்கை இதெல்லாம் பெரியசுகம். அருவில குளிக்கற சுகம், மறுபடி அழுக்காகும் குளிக்கத் தோணும் எவ்வளவு குளிச்சாலும் அழுக்குதான் எதுக்கு குளிக்கறதுன்னு இருக்க முடியுமா?''

நடராஜன் பேசாது சென்னை நோக்கி வண்டி ஓட்டி னான்.

12

''என்னையா வரச் சொன்னார்...என்னையா வரச் ...ான்னார். பேசலைங்கறியேடா...அப்புறம் எப்படி ...வர் சொன்னது என்னைத்தான்னு சொல்றே?''

அப்பாவின் பதற்றம் ஆச்சரியமாய் இருந்தது.

''கூட இருக்கறவா சொல்லித்தான் அவர் பேசறது ...ன்னு புரியறது. வரச் சொல்லுன்னு சொன்னார். ...எதுக்கு...ஒண்ணும் சொல்லலை''

''நாளைக்கு கிளம்பறேன்...நானும் அம்மாவும். ...டப் பசங்க யாரையாவது துணைக்கு அனுப்பு.

''டிரைவர் ஏற்பாடு பண்ணு. நடராஜன் தன் ...பாரம் சொன்னானா?''

''ம்ம்''

''அதுக்கும் ஒண்ணும் சொல்லலையா?''

''இல்லை''

''என்னடா ஆச்சு?''

''தெரியலை''

''நான் நாளைக்கு நேர நின்னு கேட்கறேன்''

''அப்பா எதுக்கு அனாவசியமா''

''எதுக்கு ஊர் தாண்டி ஊருக்குப் போய் நாம ...காரம் பண்றோம்? ஒவ்வொரு காரியத்துக்கும் ...ளை கேட்கறோம்...வாயைத் திறந்து அவா இரண்டு ...த்தை நல்லதா சொல்லணும்னுதானே ... இப்படி ... சாமியாரா நின்னா?''

''மவுனம் பெரிய விஷயமில்லையா? அவர் பார்வை. ...ாதா''

'சைகை பண்ணினதே உனக்கு என்னன்னு தெரியலை யாரோ சொல்லித் தெரிய வேண்டியிருக்கு. பார்வை உனக்கும் எனக்கும் என்னடா புரியும்? இருவது வருஷ பழக்கம் உனக்கும் எனக்கும். நமக்கே புரியலை நடராஜுக்கும், நாகராஜுக்கும் என்னடா புரியும்?''

''நடராஜுக்கு மட்டுமே புரியலை. ஏன் நான் இந்துவ இருக்கணும்? ஏன் கோயிலுக்கும் போகணும்னு கேட் றான்.''

''கேட்கத்தான் கேட்பான். அவனுக்கு சொல்லி தரலை. நான், நீ, சங்கர மடம் எதும் சொல்லித் தரலை டி.வி. தெரிஞ்ச அளவுக்கு...மிஷின் தெரிஞ்ச அளவுக்கு மதம் தெரியலை. மதம் எவ்வளவு அவசியம்னு புரியலை

''வண்ணமா கேள்வி கேட்கறாம்பா. எனக்கு பதி சொல்லத் தெரியலை.''

''கடவுளே இல்லைங்கறானோ?''

''அடுத்த ஸ்டேஜ் அதான்.''

''பேசாத வுட்டுடு...வாழ்க்கைல பேய் அடி வாங்கின எல்லா கோயிலுக்குமே ஓடுவான்.

''எனக்கும் புரியலைப்பா. அடி வாங்க பயந்துதா கோயில் குளம் போறோமா?''

அப்பா உறுத்துப் பார்த்தார். சிரித்தார். 'அடப்பா களா'' முகவாயில் கை வைத்துக்கொண்டார். 'என்னன் புரியாம நீ கோயிலுக்கு போறதுக்கு, என்ன ஏதுன் கேள்வி கேட்டவன் மேல்'

''தெரிஞ்சுக்கத்தானே கேட்கறேன்.''

''கேள். எனக்கு நல்லது கொடுன்னு கேட்க தி தினம் போயிட்டு வந்தா நல்லது கிடைக்கிறபோது அ நானா சம்பாதிச்சதுன்னு கர்வம் இல்லாத இருக்கு கெட்டது வந்தா தினம் கோயிலுக்குப் போற பழக்கத்



அன்னிக்கும் போய் ஏம்மா இந்த சோதனை? எப்ப மீள்வேன் இதுலேர்ந்துன்னு ஒரு அழுகை இருக்கும். அப்படி துக்கப்படறதால மனசுல அமைதி இருக்கும். துன்பத்தை தாங்கிப்போம். இதுவும் கடவுள் கொடுத்த துன்னு தெம்பு இருக்கும். ப்ரேயர், மனசோட பேசறதுடா'

'இதாம்பா...நடராஜும் சொன்னான். இதுக்கு இத் தனை ஆரவாரமான்னு கேட்கறான். வாண வேடிக்கை உற்சவம் எதுக்குங்கறான்?'

'முட்டாள்.'

'யாரு?'

'அவன்தான். பின்ட்ராப் சைலண்டா ஒரு இடம் கிடைச்சா இவரு ப்ரேயர் பண்ணிடுவானா. உள்ளே இருக்கற கூச்சலைசப்தமே இல்லாத இடம் மாத்திடுமா...' இல்லை ஆரவாரமான இடத்துல அமைதியா இருக்க முடியா துங்கறானா. உலகத்துல சப்தம் இல்லாத இடம் எதுடா. காடா...? பூட்டிண்ட ரூமா? காடு முழுக்க தலை சப்தம், பூட்டின ரூம்லயும் காது ஙொய்ங்கும். மயிலாப்பூர் அதிகார நந்திக்குக் கூட்டமான கூட்டம் ஆயும். கார்த்தால ஆறு மணிக்கு சுவாமி வாசல்ல வந்து நிக்கும் சூரிய வெளிச்சத்துல தகதகன்னு நந்தி மின்னும். கண்ணை மூடி ஒரு செகண்ட் நில்லு. மறுபடி கண்ணைத் திற. சுவாமியைப் பாரு. கூட்டமே காணாமப் போயிடும். நீயும் சுவாமியும் மட்டுமே மனசுல நிக்கும்.'

'அப்பா ஒரு கேள்வி.'

'கேளு.'

'பொம்மைதானே அப்பா அது?'

'எது?

''அதிகார நந்தி. பஞ்ச உலோகத்துல பண்ணின பொம்மை தானே?'

'ஆமா.'

''அது, எப்படி நமக்கு நன்மையும், தீமையும்...?'

'விடியோல சுந்தரா எதோ படம் போட்டானே.. என்ன படம் அது?'

'சார்லி சாப்ளின்.'

'அவன் சிரிச்சா நாம சிரிச்சோம். அவன் அழுதா நா கஷ்டப்பட்டோம். அவனைக் கழுத்தப் புடிச்சு வெளி தள்ளினா உச்சு...உச்சுன்னு கஷ்டப்படறோம். சார் சாப்ளின் யாரு?'

'நடிகன்'.

'அவனை நெஜமாவா தள்ளினா. நிஜ வேதனையா, நிஜ சந்தோஷமா?'

'இல்லை நடிப்பு.'

'அது நடிப்புன்னு தெரியுமில்லை...? சினிமான் தெரியும் தானே?'

'தெரியும்.'

'அப்ப ஏன் பாதிச்சது?'

'தத்ருபமான நடிப்பு.'

'இன்னும் சரியா யோசி. நடிப்புன்னு தெரிய நடிகன்னு தெரியும். ஏன் பாதிச்சுது? அவன் குழந்தைக் தவிச்சபோது நாம தவிச்சமே...ஏன்?'

'நம்ம குழந்தை நினைவு.'

'அதாவது உன் துக்கமா போயிடுத்து இல்லையா'

'ஆமாப்பா. புரியறது.'

'டி.வி-ங்கறது நிழல். நிழல் பாதிச்சது. சுவிட்ச் அ தின உடனே நிழல் போயிடுத்து. ஆனா அந்த நி யாரைப் பார்த்தே...'



'அதே...அதே...அந்த பொம்மை...அப்படித்தான் சொன்னே...அந்த பொம்மைல உன்னைப் பார் தந்திங்கறது என்ன...பலம் பொருந்திய மாடு. வலிமை உள்ளது. உள்ளங்கைல சுவாமியை பவ்யமா தாங்கிண்டு மண்டி போட்டுண்டு ஊர் பார்க்க வலம் வருது. சுந்தரா யாரு? நந்தி அவனால பத்துக் கடை நடத்த முடியும். நூறு வியாபாரம் பண்ண முடியும். அப்பா ஆரம்பிச்ச கடையை ஒன்னுக்கு பத்தா விரிவுபடுத்த முடியும். உன்னுடைய இன்னிய தகுதிக்கு விரல் சொடுக்கினா என்ன வேலை கிடைக்கும். ஆனா சுந்தரா என்ன பண்றான். கலவை கிராமத்துல இருக்கற கிழவரைப் போய் பார்த்துட்டு சாஷ்டாங்கமா நமஸ்காரம் பண்ணி, நான் இது ஆரம்பிக்கட்டுமா அது ஆரம்பிக்கட்டுமான்னு? கேட்டு, சரி...கேட்கலை...யார் தடுத்தா? ஏன் காஞ்சிபுரம் போற...ஏன் பவ்யமா இருக்கே. மொத்த சொத்து ஒரு கோடி பெறும். கடையில வேலை செய்யற பொண்ணை உன் கையைப் புடிச்சு இழுக்காம இருக்கே?'

'ஏம்பா?'

'எப்ப வேணா உடையும்டா. இந்த வலிவு இந்தக் கூடு எப்ப வேணா உடையும் நரை வலிவும், பண வலிவும் புத்தி வலிவும் வலிவே இல்லை சுந்தரா. க்ஷண நேரத்துல ஒரு உத்தமியை கேவலமா பேசிட்டான் உன் தம்பி. சொந்த பொண்டாட்டிய, சந்தேகப்படறான். படிப்பு, திறமை விட நிறைய சொத்து. சம்பந்தமே இல்லாத. செய்யாத தப்புக்குப் பழி சுமத்தா அதுக்குப் பிறகு அந்தப் பெண் பட்டேர்னு அமைதியாயிடுத்து. தப்பு பண்ணி இருந்தா நிமிரா பேசியிருக்கும், உன் இந்த உடம்பு வச்சு நாலு பேரை அடிச்சுசாய்ச்சுடலாம்,சுந்தரா,ஆனா கல்லு வச்சி மோவாக் கட்டை பேந்துடும். என்ன செய்வே. நாலு பேரோட சண்டை போட்டு தோத்துட்டேன்னு நிக்கோ,மறுபடி. சண்டைக்குத்தயார்பண்ணிப்பே. வஞ்ச

ளையா எதாவது செய்லே. கல்லு தடுக்கி பல்லு போச் சுன்னா...?'

சுந்தரா அமைதியாய் இருந்தான்.

'நாம தூசு சுந்தரா. வெறும் தூசு. இந்தக் காசோ... வீடோ...காரோ...கரையோ எனக்குள்ள ஒட்டலை. நான் அதே கல்லிடைக் குறிச்சி விவசாயி. விதைச்சு அறுத் தின்னு விதைச்சு...'

'அப்பா...' சுந்தரா அவர் கைகளைப் பிடித்து கொண்டான்.

'இது நடராஜுக்குத் தெரியலையேன்னு மனக் கஷ்ட படாதே. உடம்பு உரம், ரத்தம் நான் நான்னு நினைக் வைக்கும் ரத்தம் சுண்டினா தசை சுருங்கினா அவ உலகமே வேற சுந்தரா. ரத்தம் சுண்டறதுக்கு முன் நெரிஞ்சுட்டா ஞானம். இது மறந்துடக் கூடாதுன்னுதா அந்த மாதிரி ஞானிகளைப் போய் பார்க்கறது. உன் கர்வ நீ எத்தனை அடக்கமாவேஷம் போட்டாலும் உன் கர்வ அது கண்ணுக்குத் தெரியும். உச்சி மண்டைல அடிச்சாப் ஒரு வார்த்தை சொல்லும்சொல்ல அவாளுக்குத் தெரிய மடம் எதுக்குன்னு கேட்கறானா நட்ராஜ்...வீடு முழு ஒரே சமையலறையா இருந்தா நன்னா இருக்குமா மெத்து மெத்துன்னு கட்டில் போட்டு ஏசி போட் படுக்கை அறை வேண்டியிருக்கோன்னோ. அப்பாடான் உழைச்சு களைச்சு வரபோது வசதியா இடம் வேண் இருக்குமோன்னோ...அப்படி மனசு படுக்கற அ மடம்...'

'ஏன் இந்த சிஸ்டம்னு கேட்கறான். இடு துண்டோட நமஸ்காரம் பண்றது' சுந்தரா கேட்டா

'இவன் வெறும் ஒடுங்கிய மார்வைக்கும் ஏத்தின் தூங்கறானே...பேண்ட் சூட்டோட தூங்கச் சொல்லே உடுப்புகர்வம்கூட வரக்கூடாதுன்னுதான் இடுப்புத் து



யோட பெரியவாளைப் பார்க்கறது. பட்டு சட்டைக்கு ஒரு மரியாதை, பருத்திச் சட்டைக்கு ஒரு மரியாதை அங்க கிடையாது. மானம் மறைக்க துணி. மத்தபடி அவா முன்னாடி நீ வெறும் மனுஷன். உன் கிரீடமோ, பதக்கமோ பவிசோ முக்கியமில்லை அங்கே.''

''நீ ஏன் மடத்துக்குப் போறதில்லைப்பா உடம்புக்கு முடியலைன்னா?''

''இல்லை!''

''பிறகு?''

''எனக்கு இனி மடம் தேவையில்லை.''

''ஏன்?,'

''கர்வப்படறதுக்கு என்கிட்ட எதுவுமில்லை. கர்வம் கலைக்கறதுக்கு யாரும் வேண்டியதில்லை. எனக்கு எல்லா இடமும் மடம்தான்.''

''ஹய்...கடை உன் பேர்லதான் இருக்கு.''

''கடை எந்தப் பக்கம் இருக்கு. எனக்குத் தெரியாதே.''

''டுப் அடிக்காதப்பா. என்கிட்ட டி.வி. சேல்ஸ் பத்தி அட்வைஸ் தரல்ல?''

''கேட்டே. கொடுத்தேன். நீங்க டி.வி. வித்தா என்—. விக்காட்டி என்ன...அது உங்க பாடு.''

சுந்தரா மவுனமாய் இருந்தான். முகம் முழுவதும் கவலை தேக்கி, தலைகுனிந்தபடி உட்கார்ந்து இருந்தான்.

''என்ன கவலை உனக்கு சுந்தரா...இந்த இடம் மாறணுமேன்னு கவலையா?''

சுந்தரா ஆச்சரியத்துடன் நிமிர்ந்தான். எப்படி கண்டு பிடிச்சே என்கிற வியப்புடன் பார்த்தான்.

''வரும் சுந்தரா. அமைதிக்கு ஆசைப்படறவனுக்கெல் லாம் வரும், அதுக்குமுன்னாடி ஒரு சூட்சுமம். ஜெயிச்சுடு. இன்னிக்கு உனக்கு உண்டான வேலையை உருப்படியா பண்ணிடு. வொர்க் ஹார்ட். அடுத்த தலைமுறைக்கு

உண்டானதை பண்ணிட்டு ஒதுங்கிக்கோ. இப்ப பண்ண லைன்னு வச்சுக்கோ. ரத்தம் சுண்டி சரிஞ்ச பிறகு, ஐயோ வேஸ்ட் பண்ணிட்டமேன்னு வேதனை வரும். வயசான காலத்துல அல்லாடத் தோணும். செய்து முடிச்சுட்டே.. சுத்தமா; ஒதுங்கிக்கலாம். இந்த மாதிரி ஒதுங்கறநிலைக் வானப்பிரஸ்தம்னு பேரு. வீடு விட்டுட்டு காட்டுல போ வசிக்கிற வாழ்க்கை. இப்ப காடு எது. வீட்டையே காடா மாத்திக்கோ.''

''ஜெயிக்கறதுன்னா.''

''உனக்கே தெரியும். உனக்குப் பின்னால இருக்கி வாளை உன்னைவிட கெட்டிக்காரனா, உன்னை வி வசதியா தயார் பண்றது. அப்பன் குடிச்சு அழி சான்னு வேதனைப்பட விடாத, தெருவுல அலையவிடா அவாளை ஒரு ஸ்திக்குக் கொண்டு வந்து விடறது. அ தான் ஒரு தலைவன் ட்யூட்டி. இன்னிய தலைமுறையி சவுக்கியம்தான் போன தலைமுறை லட்சியம். அடு தலைமுறைதான் இன்னிய தலைமுறையின் குறிக்கோள்.

''அப்பா...அப்பா...நீ ரொம்ப க்ரேட்'' சுந்தராவுக் நாக்கு தழுதழுத்தது.

''ச்சே...ச்சே! நீ கூட ஒரு விதத்துல க்ரேட். இ உட்கார்ந்து கேட்க என்னிக்கு ஒரு புள்ளைக்கு தோணித்தோ அன்னிக்கு அந்த அப்பா பாக்கியவான் இந்த பாக்கியம் எனக்கு மடம் கொடுத்த பரிசு''

''நாளைக்கு போகப் போறியா?''

''ஆமா.''

''போய் ஏதோ கேட்கப்போறேன்னு சொன்னியே''

''ஆமா.''

''என்னப்பா?''

''வந்து சொல்றேன்.''



மனத்திலும் மடியிலும் எதுவுமில்லாதவன் என்னிக்கும் பயப்பட மாட்டான். தன் கடமைகளை சரிவரச் செய்து தன்னால் எவருக்கும் தீங்கில்லை என்று உணர்ந்தவன், தன்னை அறிந்தவன் கடவுளுக்கும் கட்டுப்படுவதில்லை. அவனே ஞானியாய், அவனே கடவுளாய் நிற்கிறான்.

கலவை கிராமத்தில் குடிசைக்குள் தாமரை உட்கார்ந்திருக்க—

அப்பா வாசலில் நின்று கோபத்தில் அரற்றினார்.

''உனக்கென்ன... நீ மகா ஞானி. எல்லாத்தையும் உதறிட்டு ஒரு குடிசைக்குள்ள உட்கார்ந்துருவ. நாங்க புழுவா துடிச்சுண்டிருக்கறது தெரியுமா? உனக்கு வாயைத் திறந்து துக்கத்தை சொல்ல முடியுமா. சுத்திச் சுத்தி வரோமே புரியுமா உனக்கு. நீ ஞானி. பழுத்த பழம். உனக்கென்ன?',

கைபிடித்து அப்பாவைத் தடுத்தான் சுந்தரா. அப்பா உதறினார்.

## 13

'எனக்குப் பிடிக்கலை. இங்க வந்து உட்கார்ந்துண்டு இருக்கறது எனக்குப் பிடிக்கலை. எது பண்ணாலும் பெரியவா பண்றதுக்கு அர்த்தம் இருக்கும்னு நினைக்கலைங்கள். இதுக்கு அர்த்தம் தெரியாம, காரணம் புரியாம தவிக்கறது. கலவைக்குப் போறதா... மடத்துக்குப் போறதா... மடத்துக்குப் போயிட்டு கலவைக்குப் போறதா, கலவைக்குப் போயிட்டு மடத்துக்குப் போறதான்னு தவிக்கறதுகள்... தேவைதானா இது.''

''எல்லாரும் பயந்துண்டு வாயைப் பொத்திப்பொத்தி நிக்கறா உங்ககிட்ட நீங்க அடிச்சாலும் சபிச்சாலும் அது உங்க ஆசீர்வாதம்னு நினைச்சு சொல்லிட்டேன். இனி உங்க இஷ்டம்.''

''இனிமே நான் கலவைக்கு வர மாட்டேன். எனக்கு மடம்தான் பெரிசு என்னை கைபிடிச்சு நீங்க கூட்டிண்டு போன மாதிரி என் குழந்தைகளை சங்கர மடம் கை பிடிச்சு கூட்டிண்டு போக வேண்டாமா.''

''உங்க நிழல் என் வீட்டு வாசல்ல பட்டு வீட்டுக்கு என்னிக்கு பேர் வச்சேளோ, அன்னிலேர்ந்து எனக்கு எந்தக் குறையும் இல்லை. அந்த பாக்யம் எனக்கு மட்டும் தானா? எல்லார் வீட்டுலயும் மடத்தோட அட்சதை இருக்க வேண்டாமா?

''கலவைக்குப் போயிட்டு வந்துட்டேன். பெரியவா இல்லாத மடமே புடிக்கலைங்கறா ஒரு மாமி. மடம் வேற நீங்க வேறயா...என்ன கொடுமை இது?''

அழுகையும் அரற்றலுமாய் குரல் விட்டு அப்பா கதறினார், கூட்டம் உறைந்து போயிற்று.

''என் பேச்சு தப்புன்னா சுவாமிகள் என்னைமன்னிக்கட்டும். நமஸ்காரம் பண்றேன்.''

சாஷ்டாங்கமாய் கண்ணில் ஜலம் வழிய அப்பா குடிசையைப் பார்த்து நமஸ்கரித்தார்.

திரும்பி விருவிருவென்று காருக்கு திரும்பினார். வண்டியிலிருக்கிற பாட்டில் திறந்து ஜலம் குடித்தார். ''சங்கரா!'' என்று உட்கார்ந்து கொண்டார்.

''கிளம்புடா!'' அதட்டினார்.

யாரோ ஓடி வந்தார்கள்.

''பெரியவா கொடுத்தனுப்பினா...'' இரண்டு ஆப்பிளையும், துளசி தளங்களையும் அப்பாவிடம் நீட்டினார். பழத்தை வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, துளசி தளம்



சிரசில் வைத்து பிறகு காதில் சொருகிக் கொண்டதும் வண்டியை சுந்தரா கிளப்பினான்.

மடத்துக்குப் போய் கூடத்தில் அமைதியாக உட்கார்ந்திருந்தார். இளையவரையும் விழுந்து வணங்கினார். பிரசாதம் வாங்கி வீடு திரும்பினார். சுருண்டு படுத்து கொண்டார்.

அப்பாவின் தைரியம் சுந்தரராவை வியப்பில் ஆழ்த்தியது. எது பற்றியும், எவர் எதிரேயும் மனசில் பட்டது சொல்வதற்கு எத்தனை தெளிவு இருக்க வேண்டும், என்று யோசித்தான்.

சென்னை தொலைக்காட்சி நிலையம் துவங்கும் நாளில் கூட்டம் கடையில் அதிகமிருந்தது. கடையில் உள்ள பத்து கருப்பு வெள்ளை டி. வி. பெட்டிகள் உயிர் பெற்றன. பெரிய கண்களும், அடர்ந்த மீசையுமாய் ஒரு இளைஞன் வணக்கம் சொன்னான், ஜனங்கள் கை தட்டினார்கள். அன்று இரண்டு டி. வி. பெட்டிகள் விற்பனை ஆயின. ஒரு நகைக்கடை வியாபாரியும், ஒரு போலீஸ் கமிஷனர் மனைவியும் வாங்கிப் போனார்கள்.

மதில் மேல் முளைக்கும் அரசமரம் போல மாம்பலத்து மாடிகளில் ஆன்டெனா முளைக்க ஆரம்பித்தன. வாய் வழியே ஜனங்கள் விளம்பரம் செய்ய, தினம் நாலு பெட்டி போயிற்று. சென்னையில் உள்ள டி. வி. கம்பெனி கணக்கென்று கடையில் ஒரு தனி கண்ணாடி ஜன்னல் பதித்துக் கொண்டு விளம்பரம் செய்தது...பத்திரிகைகளில் கடை பெயர் கேட்டு தானாய் விளம்பரம் கொடுத்தது.

மறுமாசம் எண்பது டி. வி. விற்றது. பம்பாயிலும், டில்லியிலும் ஆர்டர் செய்து ஜனங்களிடம் அட்வான்ஸ் வாங்கி வந்தும் கொண்டு போய் கொடுத்தார்கள்.

ஆறு பெண்களை தனியே வைத்துக் கொண்டு அவர்களுக்கு வேலை கற்றுக் கொடுத்து இரவு பகலாய் உழைத்தான் நடராஜ். துபாய்க்குப் போன இளைஞர்கள் வீடியோவுடன் வர கலர் டி. வியும் கேட்டார்கள். பேரமே பேசாது வாங்கிக் கொண்டு போனார்கள். பெட்டிக்கு ஆயிரம் ரூபாய் நின்றது. தவணையில்கூட நானூறு கிடைத்தது.

ஆனால் சர்வீஸ் சமாச்சாரம்தான் கழுத்தை அறுத்தது. டி. வியில் பிலிம் சுருள் எகிறி எகிறி வந்தாலும் கடைக்கு உடனே ஓடி வந்தார்கள். புகார் செய்தார்கள். நாளை காலை வருகிறேன் என்றால் முகம் சுளித்துக் கொண்டார்கள்.

''ஆயிரம் ரூபா பீரோவா...நாலாயிரத்து நானூற்றி என்பது சுளையா கட்டியிருக்கேன் ... நாளைக்கு வரேன்னா என்ன அர்த்தம். பிற்பகல் முழுவதும் நடராஜ் சர்வீசுக்கு அலைந்தான். உதவிக்கு உண்டான ஆறு பெண்களில் இரண்டுதான் சரியானபடி தேறிற்று. அந்த இரண்டு பெண்களும் பத்து மணிக்கு வந்து ஐந்து மணிக்குத் திரும்ப ஆசைப்பட்டன. 'வேலை செய்ய அவசியமில்லை சார். சும்மா ஒரு இதுக்கு வந்தோம். ராத்திரி பூராகூட இருன்னா...இந்த வேலையே வேண்டாம்கறா எங்கம்மா.'

ஆண்களை உதவியாய் வைத்துக் கொள்ளலாம். ஆறு மாசம் வேலை கற்றுக் கொண்டு வெளியே போய் விடுவான். இல்லை...அதிக சம்பளம் கேட்பான். சர்வீஸ் சென்டர் சரியில்லை எனில் டி. வி. வியாபாரம் சரியாக வராது. டில்லி கம்பெனியும், பம்பாய் கம்பெனியும் ஆட்கள் அனுப்பி உதவின. தன் தொழிற்பேட்டையில் தயாரான இளைஞர்களை அனுப்பின. சிறிது பாரம் குறைந்தது. ஆனாலும் மேற்பார்வை தேவையாய் இருந்தது.

டி. வி. பார்க்க வந்த கும்பல் மற்ற சாமான்களிலும் நாட்டம் செலுத்த வியாபாரம் கணிசமாக உயர்ந்தது.



வங்கிகள் போட்டி போட்டு கடன் கொடுத்தன, மூன்று நான்கு லட்சத்துக்கு ஓவர் டிராப்ட் அனுமதித்தன. வருமானவரி சவுக்கு விளாராய் இருந்தது. சூப்பர் டாக்ஸ் கட்டும் நிலை வரும் என்று எச்சரிக்கப்பட்டது.

கடையை வருமான வரிக்காக பிரித்தார்கள். இரும்பு சாமான்கள், சுந்தராவுக்கு, கீழ்தளம். மரசாமான்களும் வீட்டு உபயோகங்களும் நாகராஜனுக்கு, முதல் தளம். டி. வி. எலக்ட்ரானிக்ஸ் சமாச்சாரங்கள் நடராஜனுக்கு. மனைவியர்கள் பங்குதாரர்களானார்கள். அப்பாவும், அம்மாவும் எல்லாவற்றிலும் பங்கு எடுத்துக் கொண்டார்கள். சங்கரா டிரஸ்ட் என்று ஒன்று அமைத்து அதற்கும் பத்து சதவீதம் பங்கு கொடுத்தார்கள். வரி குறைந்தது.

பாகம் பிரிக்க, யாருக்குக் கடன் தருவது என்று வங்கி தலை சொறிந்தது. சொத்து மதிப்பில் பாதிதான் கடன் தரமுடியும் என்று சட்டம் பேசிற்று. நாகராஜன் வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டு வந்தான்.

வேறு வங்கிக்கு மாற்ற வேண்டுமென்றான். அவன் சத்தம் போட்ட மாலையில் ஏழு வங்கிகள் உள்ளே வந்தன.

ஏழாவது வங்கி வீட்டிற்கே வந்தது.

பாங்க் மானேஜர், மனைவியோடு வந்து அப்பாவின் கால்கள் தொட்டு வணங்கினார்கள்.

''யாரு...புரியலையே?''

''எனக்கு கல்லிடைக்குறிச்சி. என் பேர் லட்சுமி நாராயணன். லட்சம்னு கூப்பிடுவா. ஆறு வருஷம் பெங்களூர். எட்டு வருஷம் டில்லி, ஏழு வருஷம் பூனா, இரண்டு வருஷம் பாம்பே. இப்பதான் மெட்ராஸ் போட்டிருக்கான். இந்த பிராஞ்சோட ரிடையர் ஆறேன். போற போது நல்ல பேரோட போகணும். இந்த சார்ஜ் எடுத்து இரண்டு மாசம் ஆறது. நெஞ்சு தட்டிக்கற மாதிரி ஒரு அக்கவுண்ட்கூட இல்லை. சுயஜாதி அபிமானத்துல...

''சுவாமி...ஜாதி கிடைக்கு. காசு வேணும், வியாபாரத்துக்கு நாபத்து அம்பது லட்சம் நிகர லாபம் காட்டலாம். கடன் கொடுக்குறபடி கொடுத்தா...''

''அதுக்குத் தானே பாங்க்.''

''நாங்க வரிக்கு பயந்து பிரிச்சோம். ஆளுக்குக் கையகலம் கிடைச்சுது' அதுக்கு கடன் தருவானா?''

''தப்பு அது. சொந்த பொறுப்புல நான் கடன் தரலாம். வாங்கின எல்லா காசுக்கும் எல்லாரும் பொறுப்புன்னு ஒரு அக்ரிமெண்ட் போடலாம். ஷ்யூரிட்டி மாதிரி.''

''போடறோம்.''

''என்கூட, என் செலவுல ஒரு தடவை ஹெட் ஆபீஸ் வரணும். ஹெட் ஆபீசரும் இங்க வந்து கடை பார்க்கணும்.''

''பார்க்கட்டும்.''

''இதெல்லாம் சடங்கு, எனக்கும் பவர் உண்டு. அந்த பவர்ல எத்தனை வேணா தரலாம்.''

''சுமாரா ஓவர் ட்ராப்ட் எத்தனை தருவேள்?''

''ஒருவார டயத்துக்குப் பத்து லட்சம் தரேன். ஒரு மாச டயத்துக்கு எட்டுலட்சம் தரேன். ஒரு வருஷத்துக்கு மூணுன்னு வச்சுப்போம். மினிமம் மூணு. மேக்சிமம் பத்து'''

''சொல் சொல்தானா?''

''சத்தியம்.''

''பசங்ககிட்ட கலந்து பேசறேன்,''

''எல்லாருமா ஒருநாள் என் வீட்டுக்கு வந்து பேசணும். மாமி மருமகள் எல்லாரையும் அழைச்சிண்டு வரணும்.''

''விருந்தா?''

''உபசாரம். இது தவிர என்னையும் ஒரு தடவை காஞ்சிபுரம் கூட்டிண்டு போகணும். பெரியவாளை ஒரு தடவைகூட பார்த்ததில்லை.''



அப்பாவுக்கு கடைசிக் கோரிக்கை பிடித்துப் போயிற்று.

ஒரு ஞாயிறு பிற்பகல் அப்பாவோடு வீடு முழுக்க பாங்க் மானேஜர் வீட்டு விருந்துக்குப் போயிற்று.

வியாபாரமா, இல்லை தன்னை வெளிச்சம் போட்டு காட்டுகிற தந்திரமா தெரியவில்லை. பேண்டும், பீரங்கி சத்தமும்தான் இல்லை.வெள்ளையாய் உடுத்திக் கொண்டு கதவு திறந்த காவலாளி முதல், புல்தரையில் அடை வார்த்துப் போட்ட தொப்பி வைத்த சமையல்காரன் வரை அசத்தினார்கள்.

இரண்டு பக்கமும் டேபிள் போட்டு, பதினாறு வகை பண்டம் அடுக்கி வேண்டுமென்பதுநீயே பரிமாறு.வேண்டுமென்கிற போது சாப்பிடு என்கிற பபே முறை விருந்தாய் இருந்தது வாழை இலையில் பச்சை மாவு தட்டி காத்திருந்தார்கள்.கேட்டவுடன் அடை வார்த்துக் கொடுத்தார்கள். சேமியா புலவு எப்போதுமே சூடாய் இருக்கும்படி வைத்திருந்தார்கள்.

மாமி வைரம் ஜொலிக்க வரவேற்றாள். 'சரியா' என்று கேட்பதற்கு பதில் 'டூக் ஹைற' என்றாள். மாமியின் பிள்ளையும் மருமகளும் ஆள் ஆளாய் நிறுத்தி வரவேற்றார்கள். மெத்தை போட்ட ஊஞ்சல், கூடை நாற்காலி, நீருற்று.புல்தரையில் விரித்த காஷ்மீர கம்பளம் எல்லாம் அதிசயமாய் இருந்தது.

இப்படித்தான்,இப்படித்தான் மாத்தணும்நம்ம வீட்டு இச்சனைனு நெனைச்சுண்டே இருந்தேன்.ஒரு ஷெல்ப்கூட வெளியே தெரியக் கூடாது. ஒரு பாத்திரம்கூட கண்ணுக்கு படக்கூடாது வேதவல்லி கூவ, இது சலவைக்கல்லா? மொசைக்கா? என்று நாகராஜு ஆச்சர்யப்பட, ஒரு ஸ்விட்ச் போட்டால் வீடு முழுக்க வாசலிலிருந்து பாத்ரூம் வரை சானல் ம்யூசிக்கை நடராஜன் பாராட்ட,அம்மாவும் அப்பாவும் பூஜையறை விக்கிரகங்களைப் பார்த்து விட்டு கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள்.

'இது ஐம்பொன் அன்னபூரணி. பண்ணச் சொன்னேன். கிட்ட உட்கார்ந்து பாருங்கோ. நார்த் இண்டியன் டைப். காசியில சொல்லி வாங்கினது. சதானந்த சுவாமிகள்னு ஒருத்தர் கட்டளை போட்டு எனக்கு பண்ணி கொடுத்தார்.'

'எல்லா பாத்ரூமிலும் பிளாஸ்டிக் பாத் டப் இருக்கே அது எங்கே ஆர்டர் பண்ணினது?' சுந்தராவின் மனைவி பேசிக் கொண்டிருக்கும் விஷயம் தெரியாமல் கேட்டாள். அதற்கும் பதில் சொன்னார்கள். டேபிள் சேர் முழுக்க ஜெய்ப்பூர் டிசைனாம் லாரி சத்தமே பதினாறாயிரம் ஆயிற்றாம்.

சுவரோடு ஒட்டிய ஒரு மாடிப்படி. ஷெல்பை தள்ள, படிகள் தெரிந்தன. பூமிக்கு கீழே ஒரு அறை இருந்தது. 'கணக்கு வழக்கு வைக்கிறதுக்கா' சுந்தரா கேட்டாள்.

'இல்லை நான் தியானம் பண்றதுக்கு வருவேன் எப்பவாவதும்.'

காசு மட்டும் சவுகரியமில்லை. அந்த காசை கடைந்து கடைந்து வெண்ணையாக்கி பரமசுகமாம் வாழுகிற முறையும் தெரிந்திருக்க வேண்டும்.

'ஆமாம் பாங்க் மானேஜருக்கு இவ்வளவு காசு எப்படி?'

'என் உத்தியோகம் புருஷ லட்சணம் அவ்வளவுதான். என் மாமனார் வசதி உள்ளவர். பெரிய செருப்பு கம்பெனி வடக்கே. இந்தியா முழுக்க. ஏன் ஜெர்மன், லண்டன் எல்லா இடத்திலேயும் இருக்கற செருப்புகம்பெனி. அதுலே அட்வைசர் டு. எம். டி. அட்வைசர் என்ன அட்வைசர், எம் டி எங்கயாவது ஒரு தீவுல கப்பல் விட்டுண்டுருப்பான். இவர்தான் சகலமும். அறுபத்தியேழு வயசு. இன்னமும் வாக்கிங் போறார். தன் காரை தானே ஓட்டறார்.



கல்கத்தாவுலே செட்டில் ஆயிட்டார். டெல்லில ப்ளாட் இருக்கு. பாம்பேல ஓட்டல் கட்டி விட்டுருக்கார். பெரிய பையன் ஏர் இந்தியால பி.ஆர்.ஓ-வா இருக்கான் இவ ஒரே பொண்:சகலமும் மாமனார் காசு.செருப்பு கம்பெனி அக்கவுண்டாலதான் நான் பெரிய ஆளா ஆனேன்:'

'லந்து கடை கணக்குக்கு செஞ்சினீரே.' அப்பா மறித்தார்.

'என் முயற்சியா கொஞ்சம் இருக்க வேண்டாமா? என் சந்தோஷத்துக்கு ஒரு அக்கவுண்ட் வேண்டாமா?'

'என்னுது உங்க செருப்பு கடை மாதிரி இல்லை லட்சுமி நாராயணா, மாம்பலத்துல மட்டும்தான் என் ராஜ்யம்'

'விடப் படாதுங்கறேன். வேற பிராஞ்ச் ஆரம்பிக்கறும். இது ஹை டைம். இது மாதிரி மைலாப்பூர்ல ஆரம்பிச்சா என்ன?'

'முப்பது ரூபா வேணுமய்யா.'

''நான் தர்றேன்.''

''பாங்க்லேர்ந்தா?''

'எப்படி வேணா.'

'புரியல,'

'என்கிட்டே கொஞ்சம் காசு இருக்கு. நானும் முதல் போடறேன். பாங்க் வெளிய அனுப்பின பிறகு எனக்கும் ஏதாவது ஊனுகோல் வேணுமே?'

'ஊனுகோலா காலே வேண்டாய்யா உனக்கு. றக்கை கட்டிண்டு பறக்கற பணம் உமக்கு.'

'இரண்டு நிமிஷத்துல அறிச்சுடலாம், தப்பா முதல் பண்ணினா. நான் கம்பல் பண்ணலை...ஒரு ஐடியா.'

'எத்தனை குழந்தைகள் உங்களுக்கு?' அம்மா கேட்டாள்.

'ஒரு பையன், ஒரு பொண். புள்ளை இலினாய்ஸ்ல எம். பி. ஏ. பண்றான். பொண் இங்க ஸ்டெல்லால சேர்த்திருக்கேன்.'

'கண்ல காணமே?'

'டென்னிஸ் மேட்ச்லேர்ந்து வருவோ.'

வந்தாள். சின்ன பேபி ஆண்டிரிச்வெள்ளை பனியனும் சிறகு சிறகாய்ப் பிரிந்த வெள்ளை ஷர்ட்டும், புசு புசுவென்ற தலைமுடியும், கோதுமையை உடைத்த நிறமும் வாளிப்புமாய் அந்தப் பெண் இறங்கிற்று. சகலரும் திரும்பிப் பார்க்க பொதுவாய் பளீரென்று சிரித்து எல்லாருக்கும் 'ஹலோ' சொல்லிற்று நட்ராஜ் வசமிழந்தான்.

## 14

அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு வேதவல்லி முகத்தில் அறைந்தது போல் நின்றாள். சுந்தரா வீட்டில் உள்ள யாரும் அலட்சணமில்லை. தெருவில் நடந்து போக திரும்பிப் பார்க்கும் முகம்தான். ஒருமுறை. ஒரு கடைக்கு போனால், 'போன வாரம் வந்தீங்களாம்மா' என்று நினைவில் வைத்துக் கொள்ளும் முகம்தான்.

ஆனால், லட்சுமி நாராயணன் மகள் தேவதை மாதிரி இருந்தாள். செதுக்கின மூக்கும், முகவாயும், வெள்ளைப் பல்வரிசையும், வளைவு முகவாயும், கொஞ்சம் செம்பட்டை ஏறின சுருள் முடியும். ஒல்லியா... இல்லை குண்டா... இல்லை. நடையில் ஒருதிடம் இருந்தது. வேகம் இருந்தது அதற்காக ஆம்பளை உடம்பு என்று சொல்ல முடியாது. முன்னும் பின்னும் வளைவுகள் அழுத்தமாய் இருந்தன.



''ஒரு நிமிஷம்... குளிச்சுட்டு வந்து ஜாயின் பண்ணிடறேன்.' சொல்லிவிட்டு உள்ளே போனாள். பதினைந்து நிமிடங்கள் கழித்து காட்டன் சாரியும், கையில்லாத ரவிக்கையுமாய் வெளியே வந்தாள். இப்பவும் ஒரு பூச்சு பவுடர் கூட இல்லை. ஆனால், நறுமணம் இருந்தது சின்னக் கொண்டை போட்டுக் கொண்டு இரண்டு தங்க வளையல் மட்டும் அணிந்து, காதில் ஸ்டட் மாட்டி சிரிப்போடு தோட்டத்துக்கு வந்தாள். இரண்டு தம்ளர் ஆரஞ்சு ஜூஸ் குடித்தாள். மூன்றாவதில் ஐஸ் கட்டி போட்டுக் கொண்டு வேதவல்லி அருகே உட்கார்ந்து கொண்டாள்.

'டேய் இங்க வாடா.' லட்சுமி நாராயணன் குரல் கொடுக்க ஜூஸ் தம்ளரை வேதவல்லி அருகேவைத்துவிட்டு அப்பாவிடம் போனாள்.

'ஒரு நிமிஷம்.' உரக்க லட்சுமி நாராயணன் குரல் கொடுத்தார்.

''இவள் என்பெண் அனிதா, ஸ்டெல்லா மாரீஸ்லபி.ஏ. லிட்டரேச்சர்பண்றா. தனித்தனியா அறிமுகப்படுத்தறதுக்கு சோம்பப்பட்டு ஒட்டு மொத்தமா சொல்றேன். டென்னிஸ் ஆடுவோ. டான்ஸ் ஆடுவோ. பெயின்டிங் பண்ணுவோ. சமைப்போ சமையல்ல ஒரே ஒரு பிரச்னை. புதுசு புதுசா ட்ரை பண்ணுவோ. நான் மாட்டிப்பேன். நல்லா இல்லைன்னு சமையலை மட்டும் யாரும் சொல்லக்கூடாது சொன்னா மறுபடி அதே டிஷ்ஷை வேற விதமா ட்ரை பண்ணி எதிரே வெச்சுடுவோ. வேற வழி ஏக்னாஸ்னு சாப்பிட்டுத்தான் ஆகணும்.''

அப்பா கேலிக்கு சிணுங்கவேயில்லை. அப்படித்தான் சிரித்துக் கொண்டே நின்றது.

'டேய், இது ராமநாதன் மாமா, இது 'மாமி'. குனிந்து கால் தொட்டு சிரசில் வைத்துக் கொண்டது. வடக்கத்தி பாணியாய் குனிந்து நிமிர்ந்தது.

''இருக்கட்டு இருக்கட்டும்' அப்பா கால் இழுத்து கொண்டார். நகர்ந்து மறுபடி வேதவல்லி அருகே வந்து 'உங்க பேர் என்ன?'' என்று கேட்டது. வேதவல்லி சொன் னான். கைகுலுக்கிற்று கல்பனாவிடம், நாகராஜுவிடம் சுந்தராவிடம் கை குலுக்கிற்று. நடராஜுவைப் பார்த்து ஹை என்றது. நடராஜு ஹை சொன்னான்.

'ஹவ் அபவுட் எ கிளாஸ்' ரச நம்பர் உயர்த்தி அவனிடம் காட்டிற்று. வேகமாய் நகர்ந்து அவனுக்கு ஒரு கிளாஸ் ஆரஞ்சு ரசம் ஊற்றிக் கொண்டு வந்துநீட்டிற்று

எல்லோரும் அந்தப் பெண்ணையே பார்த்துக்கொண் டிருந்தார்கள். பார்க்கும்படி அந்தப் பெண் வைத்தது

'என்ன மேட்ச்?' நடராஜ் கேட்டான்.

'சும்மா...கினப் டோர்னமென்ட்...ஈசியா அடிச்சேன் நீங்க டென்னிஸ் ஆடுவீங்களா?'

'இல்லை கிரிக்கட் ஆடிண்டிருந்தேன். இப்பபல் தேய் கறது தவிர வேற எக்சர்சைஸ்?''

''அப்பத்தான் கொஞ்சம் வேகமாக அசையறது மத்தபடி என் வேலை பூ பறிக்கற மாதிரிதான். நோண் நோண்டி பிரிச்சு பத்த வைக்கறதுதான்.''

'புரியலை.'

'எலக்ட்ரானிக்ஸ். டிரான்சிஸ்டர் முதல் கம்ப்யூட்ட வரை.''

'ஸ்டீரியோ சிஸ்டம் தெரியுமா?''

''தெரியும் ஏன்?''

''என் ரூம்ல ரொம்ப நாளா ஒண்ணு சும்மா இருக் ப்ளவர்வாஸ். ஒண்ணுல அப்பா அம்மா படம் வச்சுரு கேன். மத்தபடி உபயோகமில்லை.''



'நீங்களுறி உக்காரலையே அப்பா,சரி பண்ணிடலாம்.' த்தார்கள்.

''உங்க ரூம் எங்க இருக்கு?''

போனார்கள்.

லட்சுமி நாராயணன் மனைவிக்கு அடங்கி நடப்பவர் பது தெரிந்து விட்டது அவர்களுக்கு பணம் பிரச்னை லை. பெண் பற்றியும் பிள்ளை பற்றியும் கவலைப் டார்கள்.

ஊர் ஊரா சுத்திவிதவிதமா உடுத்தி நானும்பாத்துட் ன். அனுபவிக்க ஒண்ணும் இல்லை, குழந்தைகளை பிடிச்சு கொடுத்துட்டா, இப்படியே மெட்ராஸ்ல டியும் அரைக்கை சட்டையுமா வாழ்ந்துடலாம்.''

''கிராமத்துல போய் தங்க முடியாது. காசு உள்ள று தெரிஞ்சா ஹான்னு பார்க்கறான். என் பிள்ளை ப்பு செலவு ஏத்துக்கோயேன். உங்கிட்ட காசு இருக் கறான். பிள்ளை படிப்புக்கு தரலாம். அப்பனை அது ாரியாக்கறது. நகை கடன் கேக்கறாங்க சார். ானத்துக்கு போட்டுண்டு போய் வந்து நாராளாம். டேன்னாஉங்கிட்டதான் இருக்கேகொடுத்தாஎன்ன... வேயில்லை அந்த சைகாலஜி. மெட்ராஸ் அப்படி லை. நாம உண்டு நம்ம வேலை உண்டு. அதே சமயம் ஹா சிநேகிதமாவும் இருக்கா' யாரும் பேசாது கவே, தானே தொடர்ந்தார்.

''என்ன ட்ரஸ்ட் அது. சங்கரா ட்ரஸ்ட்னு ஆரம்பிச் சோமே.''

''ஏழை பொண்களுக்கு கல்யாணம் பண்ணலான்னு டியா. இரண்டு அல்லது மூணு பேர்க்கு, மூணு நகை. ஒரு வெள்ளி பாத்திரம். இரண்டு ஜோடி லை, இரண்டு ஜோடி வேஷ்டி. வைதீக செலவு நாம த்துக்கறது.''

'வெரிகுட். ட்ரஸ்டுக்குன்னா டொனேஷன் வா வேளா.''

'இல்லை. வர லாபத்துல ட்ரஸ்டும் கொஞ்சம்போ உங்க வார்த்தையை நம்பி பாங்க் மாத்தப் போறே எப்ப ஹெட் ஆபீஸ் போகலாம்?''

''நாளைக்கே.'

''நான் பார்த்து போகலாம். வங்கி உதவி செ ஒத்துக் கொண்டது. கூட்டம் வந்து கடையைப் பா நது. கடையை எடை போட்டது.

நடராஜன் டெக்கோடு ஸ்டீரியோ சிஸ்டம் வீட் கொண்டு வந்து பிரித்துப் பார்த்தான்.

'ஏ க்ளஃஸ் ஜெர்மன் சென்டுடா. யாரோ கு போட்ருக்காங்க. ஹெட் அடி வாங்கியிருக்கு, எ நாகராஜனிடம் வருத்தப்பட்டான்.

லட்சுமி நாராயணன் மனைவி விசாலம் மாமி பிற்பகல் வீட்டிற்குவந்து சுற்றிப்பார்த்தாள். 'கிளி செ சறது வீடு, கிளி கொஞ்சறது வீடு' என்று வியந் பெண்களுக்கு நடுவே நகைகள் பற்றி பேச்சு வ அவரவர் பங்கு நகைகளை கூடத்தில் பரப்பிக்காட்டி கள்.

வேதவல்லியிடம் இத்தனை நகையா. என்று கல் வியந்தாள் 'எப்ப பண்ணினே சிகப்பு கல் செட் போட்டு பார்த்ததே இல்லையே?' கல்பனா நகை வேதவல்லி ஆராய்ந்தாள். அம்மாவுடைய வைர எல்லாரையும் வியக்க வைத்தது. பல தலைமுறையா நூறு வயசு இருக்கும் இதுக்கு. மாமி போட்டுப் பா ஜாக்கிரதையாய் திருப்பிக் கொடுத்தாள்.

கடையை வங்கி எடை போட்டது போல, வீட்டை எடை போடுகிறாள் என்பது புரிந்தது. என்று தெரியவில்லை. ஒரு வேளை நடராஜனுக்கு



ன்னைத் தர ஆயத்தமானாளோ? நடராஜ் சாதாரண ஆள். அவர்கள் மதிப்புக்கு இன்னும் உயரமான ம் நிச்சயம் கிடைக்கும். இது வெறும் இமையலா லை. ஏதாவது விசேஷமா தெரியவில்லை.

நாலு மாதத்தில் டி.வி. விற்பனை விஸ்தரிக்கப்பட்டு கம் கட்டிய வெளிநாட்டு கலர் டி.வி. முதல் இந்தியா ஆறு ஏழு தயாரிப்புகள் வரை கடையில் பிரகாசித் டி.வி. பெட்டி கவுரவ சொத்தாய் ஸ்டேடஸ் ளாய் மாறிவிட்டது. நடராஜன் நான்கு இரவுகள் விழித்து ஸ்டீரியோ செட்டை லட்சுமி நாராயணன் டில் பதித்துவிட்டு வந்தான். அந்த வீட்டின் பாதிப்பு ரா வீட்டில் அதிகமிருந்தது.

நடராஜன் காலையில் ஐந்து மணிக்கு எழுந்து ஜாகிங் னான். வேதவல்லி வீட்டுக்குள்ளேயே ஸ்கிப்பிங் த் துவங்கினாள். கல்பனாவை நடுஇரவில் அணைத் கொள்ள முயன்றபோது உடம்மெல்லாம் எண்ணைப் யாய் இருந்தது. விளக்குப் போட பாலேட்டை திரித் ய் உடம்பு முழுவதும் அப்பிக்கொண்டது தெரிந்தது ராஜ் அந்த வங்கி கொடுத்த கடனுக்கு, மானேஜர் டில் காய்கறி வாங்கிப் போட தயாராயிருந்தான்.

லட்சுமி நாராயணனையும் அவர் மனைவி விசாலத் யும் காஞ்சிபுரம் அழைத்துப் போகும் வேலை சுந்தரா வந்தது.

வழி எல்லாம் அந்த மாமி பயந்துகொண்டே வந்தாள் லாமா? உட்காரலாமா? பேசலாமா? எப்படி அட்ரஸ் றது அவரை? சுவாமின்னா? அவர் பேசினாத்தான் ணுமா? நாமா பேசக்கூடாதா? என்ன கொண்டு ம்? என்ன கொண்டு வரக்கூடாது? மடிசார் எனக்கு தே. மாம்பழக்கட்டு தப்பா?' காஞ்சிபுரத்துக்குள் நுழையும்போது அவளுக்கு சின்ன ஜுரமே வந்து டது.

''எனக்கு கலவரமா இருக்கு சார். அமெரிக்கன் பே பிரசிடென்ட்கூட போய் சங்கோஜமில்லாத பார்ட் பேசி இருக்கேன். இரண்டு மூணு சீப் மினிஸ்டர் பாத்துருக்கேன். என்னமோ இவர் பேர் சொன்னா வேர்க்கறது.''

உச்சி வேளையில் கலவையில் வெளியே போட்டிரு பந்தலின் கீழ் உட்கார்ந்து சிலரோடு தாமரை பே கொண்டிருந்தது.

பழத்தட்டுகளை வைத்துவிட்டு லட்சுமி நாராய ணும், அவர் மனைவியும் நமஸ்கரித்தார்கள். சுந் வணங்கி எழுந்ததும் தாமரை அப்பாவை விசாரித்தது.

''ராமநாதன் புள்ளை இவன். மாம்பலத்துல தவ கடை வச்சிருக்காரே தெரியுமா உனக்கு. மங்களம் அ கோதானே கடை பேரு?''

சுந்தரா வாய் பொத்தி தலையாட்டினான். ''மட பேர்ல ட்ரஸ்ட் ஆரம்பிச்சுருக்கான் ஏழை பொண்களு கல்யாணம் பண்ணி வைக்கப் போறானாம். கடி போட்டிருந்தான். எல்லாத்துக்கும் வந்து பர்மி கேட்பான் இதுக்கு கேட்கலை. நான் இங்கு வந்து கார்த்துண்டதுல கோவமான கோவம் ராமநாதனு இல்லையாடா?''

''கோவமில்லை. வருத்தம்,'' சுந்தரா பதில் சொ னான்.

'வருத்தம் அதிகமானா கோபம் வந்துடறது. வரு துக்கு எது காரணம் சொல்லு பாப்போம்?' யாரை கை காட்டினார்.

அவன் அமைதியாய் உட்கார்ந்திருந்தான்!

''தெரியலையா? ஆசை! ஆசையே வியாதி காரணம்னு புத்தர் சொன்னதை பள்ளிக்கூடத் சொல்லித் தரலையா? துக்கம்தான் பெரிய வியாதி. து



துக்கு காரணம் ஆசை! காமம்னு சமஸ்கிருதத்துல சொல்லுவா. காமத்தை எப்படி போக்கறது? அம்பாள் காலை கெட்டியா பிடிச்சுண்டா காமத்தை அறுத்துடுவோ அப்பாகிட்ட சொல்லு...'' இரண்டு கணங்கள் பேச்சை நிறுத்தியது. ''நான் விசாரிச்சேன்னு...' வாக்கியத்தை முடிந்தது. சுந்தரா தலையாட்டினான்.

லட்சுமி நாராயணனும், அவர் மனைவியும் 'ஹா' ன்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

யாரோ ஒரு அறுபது வயது கிழவரை மடத்து ஆட்கள் ன்னே கொண்டு வந்து நிறுத்தி அவர் வணங்கும்போது வர் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்தினார்கள். மரை கை உயர்த்திற்று.

''எம்பேரு கிருஷ்ணமூர்த்தி. நன்னிலம். ரிடையர்ட் ல்லே சூப்பரின்டெண்டன்ட்.

''எத்தனை குழந்தைகள்!''

''இரண்டு பையன். ஒரு பொண்! ஒரு பையன் ல்வே. ஒருத்தன் ஸ்டிக்குல இருக்கான். மாப்பிள்ளை ம்பு கடை வெச்சிருக்கான்.''

''சௌக்கியமா இருக்கேளா எல்லாம்?''

''உங்க ஆசீர்வாதத்துல எல்லாரும் சௌக்கியம். ரியவனுக்கு வேலை போட்டுக் கொடுத்து திருச்சில வீடு ங்கித் தந்துட்டேன். சின்னவன் மெட்ராஸ்ல ப்ளாட் றும்னு கேட்டான். போன வாரம் ஒண்ணு வாங்கித் தேன். பொண்ணுக்கு ராயப்பேட்டை வீடு எழுதி கட்டேன்.''

''உனக்கென்ன பண்ணிண்டே?''

''ஊர்ல நிலம் இருக்கு!''

''இல்லடா உனக்கு என்ன பண்ணிண்டே,'' தாமரை த்திக் கேட்டது.

''மெட்ராஸ்ல அசோக்நகர்ல பெரிய பங்களா எம் பேர்ல இருக்கு. மாடில குடி வெச்சு, கீழ் போர்ஷன்ல...''

''உனக்குன்னு ஒண்ணுமே பண்ணிக்கலையா?''

''இல்லை...மெட்ராஸ் வீடு எம்பேர்ல...'' கிழவர் ஏதோ தவறு என்று உணர்ந்து பேச்சை நிறுத்தி மலங்க மலங்க பார்த்தார். தாமரை சிரித்தது.

''அறுவத்தியோரு வயசு வரைக்கும் ஓடியாடி அதை இதை பண்ணி சம்பாதிச்சே. உனக்குன்னு ஒண்ணுமே பண்ணிக்கலை இல்லையா. பண்ணினதெல்லாம் என்ன?''

''சேறு, சேறு, சேறு.'' கிழவர் கண்ணீர் மல்க புலம்பினார். பளீர் பளீர் என்று கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

''போ, போய் முழுகி ஸ்நானம் பண்ணிட்டு உனக் குன்னு ஏதாவது பண்ணு போ''

தாமரை அந்தக் கிழவரை கட்டளையிட, தன்னிடம் விட்டு லட்சுமி நாராயணன் விசுக்கென்று எழுந்தார். நெடுஞ்சாண்கிடையாய் விழுந்தார். உடம்பு விசும்பி விசும்பி அதிர்வது தெரிந்தது. எழுந்து நிற்கையில் முகம் கோணி உதடு துடிக்க, கண்ணில் தாரை தாரையாய் ஜலம் வழிய நிற்பது தெரிந்தது.

''ராமநாதன் உறவுக்காரா இளம்பறேங்கறா...'' மடத்து ஆள் சொல்ல, தாமரை நிமிர்ந்து பார்த்தது.

''உறவா? சந்தோஷம். இந்தா இதக் கொடு,'' ஒரு மாம்பழத்தை எடுத்து உருட்டிவிட்டது.

ஆறு ஏழு பேர் திடீரென்று தாக்கி சகலமும் பிடுங்கிக் கொண்டு போன அதிர்ச்சி மாதிரி, காரில் ஏறி லட்சுமி நாராயணன் உட்கார்ந்தார்.

''மெட்ராஸ் போலாமா?''



''வேண்டாம். எங்கயாவது ஒரு கோயிலுக்கு போ.''

காமாட்சியம்மன் கோயில் வாசலில் கார் நின்றது. உள்ளே போய் மண்டபத்தில் கல் தூணில் தலை சாய்த்து உட்கார்ந்து விட்டார் 'த்ங்க போய் சுவாமி தரிசனம் பண்ணுங்கோ. என்னை தனியா விடுங்கோ.' கண்களை மூடிக்கொண்டார்.

பிராகாரம் சுற்றி வரும்போது துண்டு விரித்து கல் தரையில் படுத்துக் கிடந்தார். சுந்தரா பயத்தோடு ஓடிப் பார்த்தான். 'தலையை வலிக்கிறதா?' என்று தொட்டான்.

''எனக்கொண்ணும் இல்லை சுந்தரா. உடம்புக்கு ஒண்ணும் இல்லை. மனசுதான் பிழிஞ்சு உணர்த்தின மாதிரி ஆயிடுத்து.''

''எனக்குன்னு நான் என்ன பண்ணி வச்சிருக்கேன் எதுவும் பண்ணலையே. உடம்பெல்லாம் சேறு அப்பிண் டேனே தவிர, ஊர் ஊரா போயி புழுதி அள்ளி அலஞ்சேனே தவிர எனக்குன்னு என்ன...? மறுபடி அழுகை வந்தது.''

''உங்கப்பாவ விட ஒசத்தி பணத்துல பவிஷுலன்னு நெனைச்சேன். நான் குப்பைன்னு தெரிஞ்சு போச்சு. பெரியவாசாய்திறந்து அப்பாவப்பத்தி எத்தனை வாஞ்சை யோடு பேசினா. விசாரிக்கிறா. நானும்பணக்காரன் தான். எம்பக்கம் திரும்பிக் கூட பார்க்கலையே ராமநாதனுக்கு உறவுன்னதும் ஒரு மாம்பழம் கொடுத்தார். ராமநாதன் பேர் சொன்னதும் கொடுத்தார். ராமநாதனுக்குளம்பேர்ல கோவங்கறாரே. கோவப்பட்ற அளவுக்கு பெரியவா மேல கோவப்பட்ற அளவுக்கு ராமநாதன்...'

''எனக்குஎன்ன சொல்றதுன்னே தெரியலை. உங்கப்பா வேஷ்டியையும், அரைக்கை சட்டையையும் கேலி பண்ணு வேன் இவகிட்ட. எப்பேர்பட்ட தப்பு...'

''சுந்தரா கண்ணு திறந்து விட்டுட்டே சுந்தரா, இத்தனை வருஷத்துல இன்னிக்குத்தான் என்னை தூசா

நினைச்சேன். இந்த லட்சம் வெறும் குப்பைன்னு நினைச்சேன். சும்மா அலம்பிவிட்டா மாதிரி இருக்குடி அம்மா...' அரற்றினார்.

''ஏம்பா சுந்தரா...'

''சொல்லுங்கோ...'

''நாங்க உங்களுக்கு உறவா. மடத்து ஆள் அப்படி சொன்னானே.''

''எல்லாரும் எல்லாருக்கும் உறவுதான்.''

''இல்லை சுந்தரா உறவா... சந்தோஷம்னாரே அவரும் மாம்பழம் உருட்டினாரே. சுந்தரா.''

''சொல்லுங்கோ...''

''உறவான என்ன?''

சுந்தரா மவுனமாய் இருந்தான்.

''என் பொண்ணை உன் தம்பிக்கு கேக்கறேன் தருவியோ?''

''அப்பாகிட்ட கேட்கணும். பெரியவாகிட்ட கேட்கணும், கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர். நாம இங்கு பாக்கு வெற்றிலை மாத்திக்க முடியுமா?''

''மாத்திண்டா என்ன? இது கோயில் வா, எங்க விசாலம் இப்படி வா. பைலேர்ந்து வெற்றிலை பாக்கு எடு. இந்தா புடி சுந்தரா புடி சொல்றேன்.''

''என் பெண் அனிதாவை ராமநாதனுடைய புத்திரன் நடராஜனுக்கு கன்னிகாதனமாய் தர முழு மனதுடன் சம்மதிக்கிறேன். ஸ்ரீ ஈஸ்வர சங்கல்பப்படி பெரியவா உத்தரவுபடி...''

''சார்' சுந்தரா தயங்கினான். வெற்றிலை பாக்கு திணிக்கப்பட்டது. பேசாமல் வாங்கிக் கொண்டான்.

''என்ன சார் எமோஷனலா ஆயிட்டேள். இடீர்னு என் கூட சம்பந்தம் பேசி என்னை பெரியாளா ஆக்கி...''



'நீ பெரியவன்தான் சுந்தரா, நாப்பத்திரண்டு வயசாகலை உனக்கு. இந்த வயசுல இத்தனை பக்குவம் ரொம்ப பெரிசு. இவ்வளவு பெரிய கம்பெனி, அத்தனை பேரும் உன்சொல்லுக்கு காத்திண்டிருக்கா. கட்டுப்படறா. நான் சொல்லலை சுந்தரா. எங்க பாங்க் டைரக்டர் சொன்னான். அப்பனை விட புள்ளை கெட்டி, ரொம்ப திடானம். பார்ட்டி நாங்கும், கடன் கொடுத்தான்.''

'சரி, சார், கடன் கொடுத்தா அடைச்சுடலாம். பொண்ணை கொடுக்கறேங்கறேனே.'

''நடராஜனை பார்த்தா தப்பா தெரியலை. கைல. வேலை இருக்கு. சொந்த தொழில் இருக்கு. இது தவிர உங்க குடும்பம் சுத்தமா இருக்கு. இரண்டுமருமகள் ஒன்னா ஒரே கட்டடத்துல இருக்கா. என் பொண்ணு சிரமப்படமாட்டா.'

'இல்லை சார். அவ வேற விதமா வளர்ந்த குழந்தை. டென்னிஸ், டான்ஸ், ஸ்விம்மிங்குன்னு.'

'அட போய்யா. கான்வெட்ல படிச்சா வெள்ளைக் காரனைத்தான் கல்யாணம் பண்ணிக்கணுமா என்ன? வசதி இருந்தது கத்துண்டா. இது என் வசதியா, அவ பாட்டனார் வசதியா, என் மாமனார் வசதி, வளர்ந்தா. அவ கெட்டிக்காரி. அட்ஜஸ்ட் பண்ணிப்பா. எனக்கு பிடிச்சிருக்கு.

'மாமி பேசலே இல்லையே?''

'பேசு விசாலம்.'

'உண்மையைச் சொல்லட்டுமா உங்கட்ட இருக்கற நகைல்பா இஎன்கிட்ட இல்லை. நாங்ககாசை கட்டடித்துல போட்டிருக்கோம். நீங்க நகைல போட்டிருக்கேள். உங்க அம்மா தோடும் பேசரியும் லட்ச லட்சமா கொடுத்தாகூட இன்னி தேதிக்கு வாங்க. முடியாது. காசுன்னு பார்த்தா ஸ்டேட்டஸ் ஒரு மாத்து கம்மி. எங்க அப்ப அதிகாரம்

கொண்டவர்தான். பெரிய கம்பெனி அட்வைசர்தான். ஆனாலும் கைகட்டி உத்யோகம்தானே. உன்னை மாதிரி உங்கப்பா மாதிரி சுதந்திரம் இல்லையே.'

'அடிசக்கை. நூத்துல ஒரு வார்த்தை சுந்தரா அவ சொல்றது புரிஞ்சுதா? எங்க வீடு, எங்க மொத்த குடும்பமும் வாணவேடிக்கை குடும்பம்தான். சத்தம்தான் பெரிசு கோட்டு சூட்டு போட்டா பணக்காரனா? டில்லி குளிருல அத்தனை பேரும்தான் கோட்டு சூட்டு போடறா.'

'உங்க பொண்ணு சம்மதம் கேட்கவேண்டாமா? தவிர நடராஜன்...'

'மீதி ஈஸ்வர சங்கல்பம்னுட்டேனே. மனசு கர்வம் அழிஞ்சு, உத்தமமான வேளைல, உத்தமமான இடத்துல சம்மதம் சொல்லியிருக்கேன் தப்பாயிடுமா.''

அப்பா சிரித்தார்.

'பயந்துட்டானா.' என்றார். 'சரி இரண்டு குழந்தைகளையும் கேட்டுக்கோ. அதுகள் சரின்னா எனக்கும் சரி. ரயில்வே சூப்பரின்டென்டென்டுன்னா முன்னபின்ன காசு சம்பாதிச்சிருப்பான். அந்த சம்பளத்துலே இத்தனை சொத்து சேர்க்க முடியுமா? அவன் சேறு சேறுன்னு கன்னத்துல போட்டுக்கறதுல அர்த்தம் இருக்கு. இவன் ஏன் பயப்படணும்? மாமனார் காசுன்னு உறுத்தியிருக்கும் எதுக்கும் நீ நம்மாத்து பொண்டுகளையும் கலந்து பேசிக்கோ.'

வேதவல்லி சரியென்று சொன்னாள் கல்பனா நமக்குத் தாங்குமா. என்று கவலைப்பட்டாள். நாகராஜ் பாங்குல இருக்குற வரைக்கும் மதிப்பு. ரிடையராயிட்டா இத்தனை சௌகரியம் செய்வாரா கவலைப்பட்டான். நடராஜன் வெட்கப்பட்டான்.



''என்னடா, தலை குனிஞ்சா என்ன அர்த்தம்? வாய் திறந்து பதில் சொல்லு!''

''தப்பா நினைக்கலேன்னா உன்கிட்ட மட்டும் ரகசியமா ஒண்ணு சொல்றேன் சுந்தராண்ணா...''

''என்ன?''

''அதை கிஸ் அடிச்சுட்டேன்!''

''என்னது?''

''டெக்கு மாட்டி சானல் மயூசிக் ஏறி செக் பண்ற போது, இரண்டு பேரும் ஒரே ஏணில நின்னுகிட்டு இருந்தோம். கரண்ட் கட் பண்ணிட்டு கனெக்ஷன் குடுத்துட்டு இருந்தேன். நெத்தியெல்லாம் வேர்வை. பெஞ்சு போட்டு ஏணில ஏறி மூஞ்சில துடைச்சு வுட்டுது. ரொம்ப கிட்டமா பார்த்தேனா. கேராயிடுச்சு கிஸ் அடிச்சுட்டேன்.''

''டேய்!''

''அதுக்கும் இஷ்டம்தான் போல, நாட்டி பாய்ன்னு சொல்லிட்டு போயிடுச்சு.''

''ஒருவேளை, சின்ன பையன்னு உன்னை நெனச்சுட்டாளோ என்னமோ?''

''மார்னிங் ஜாகிங் வருது என்கூட. மாம்பலத்துல இருக்கற பசங்க எல்லாம் செத்துட்டாங்க.''

''என்னடா சொல்றே?''

''பல பேர் சுத்திகினு இருந்தாம்பா நெறைய பேர் ட்ரை பண்ணான். நம்மகூட ஒட்டிக்கிச்சா, செத்துட்டாங்க பசங்க.''

''சொல்றத தெளிவா சொல்லுடா. உனக்கு...''

''எப்படியாவது எல்லாத்தையும் அட்ஜஸ்ட் பண்ணி எனக்கு அவளை கட்டி வச்சுடு சுந்தரா.''

''இல்லேன்னா...?''

"நான் செத்துருவேன்." தழுதழுத்தான்.

சிரிப்பு பிய்த்துக்கொண்டு வந்தது சுந்தராவுக்கு. எவ்வளவு பெரிய வித்தியாசம். தான் கல்பனாவை நேசித்ததற்கும், இவன் ஒரு பெண்ணை காதலிப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்?

ஆனால், இந்த துக்கம், அழுகை, வேதனை நிஜம். காதலிக்கிற எல்லாருக்கும் அழுகை வரும். அடேயப்பா காதல் எத்தனை சுகம்.

## 15

பிற்பகலில் வெற்றிலை, பாக்கு, பழங்களை அப்பாவுடன் மாற்றிக்கொண்டார் லட்சுமி நாராயணன். தன்னுடைய பரிசு என்று நடராஜனுக்கு மூன்று கல் வைர மோதிரம் போட்டார். கண் சிமிட்டினார்.

நடராஜன் கார் எடுத்துக் கொண்டு அனிதாவை தேடிப் போனார்.

"கல்யாணம் எப்படி நடத்தணும்?" கைகட்டி லட்சுமி நாராயணன் கேட்டார்.

"சிம்பிளா நடத்துங்கோ"

"திருப்பதிக்கு போயிடலாம்?"

"உங்க விருப்பம்."

"ரிசப்ஷன் கொஞ்சம் ஸிமர்சையா பண்ணட்டுமா? எனக்கு ஒரே பொண்ணு. என் குடும்பத்துல நடத்தற முதல் விசேஷம்."

"சரி."



"எப்ப முகூர்த்தம்."

"சுப சீக்கிரம். பத்திரிக்கை எடுத்துண்டு சுந்தராவோட காஞ்சிபுரம் போய்ட்டு வந்துருங்கோ"

"ஆஹா."

லட்சுமி நாராயணனுக்கு பொய்யான பயம்தான் வந்தது. சாலங் காலமாய் ஊறின சேறிலிருந்து வெளியே வர முடியவில்லை. பெரியவரை பார்க்கும்போது 'ஆஹா, திருவல்லவோ உன்னத நிலை.' என்று தோன்றும். காஞ்சிபுரம் தாண்டினதும். 'இந்த வெய்யிலுக்கு பீர் நன்னா இருக்கும்.' என்று பேச்சு வரும். எல்லாவற்றுக்கும் ஆசைப்பட்டது போல லட்சுமி நாராயணன் துறவுக்கும் ஆசைப்பட்டார்.

இந்த முறையும் தாமரை அவரோடு பேசவில்லை. 'உட்கார்' என்று சுந்தராவை கை காட்டினரே தவிர லட்சுமி நாராயணன் தம்பதிகளை கவனிக்கவில்லை.

லட்சுமி நாராயணனை அறிமுகப்படுத்தியபோது இரண்டு குத்தீட்டிகளைப் போல தாமரையின் கண்கள் அவர்களை வருடுவின. அந்த கண்களில் கோபம் இல்லை, எந்தவித உணர்வும் இல்லை. 'நீ யார்?' என்கிற கேள்வி மட்டுமே இருந்தது. அதைத் தாங்க லட்சுமி நாராயணனுக்கு சக்தி இல்லை.

'சந்தோஷம்' அட்சதையை தூக்கி பத்திரிக்கையில் தாமரை போட்டது. யாருடனோ வடமொழியில் பேசத் துவங்கியது.

திருப்பதியில் இருநூறு இலை விழுந்தது. பாங்க்காட்கள் தனி பஸ் ஏற்பாடு பண்ணி வந்திருந்தார்கள். பஸ் ஏற்பாடு லட்சுமிநாராயணன் என்பது பிறகுதான் தெரிந்தது.

வடபழனியில் உள்ள பெரிய கல்யாண மண்டபத்தில் ரிசப்ஷன் நடந்தது. வேதவல்லியே மிரண்டு போனாள்.

நூற்றுக் கணக்கில் வட இந்திய வாழ் தமிழர்கள் வந்திரு தார்கள். மறந்தும்கூட தமிழில் பேசாமல் இருந்தார்கள் எல்லாப் பக்கமும் டி.வி. பொருத்தி வருபவர்களை வெளிச்சம் போட்டு காட்டினார்கள். வட இந்தி உணவும், தென் இந்திய உணவும் இரண்டு இடங்களி போடப்பட்டன.

''ஏண்டா, மாமிசம் சமைக்கிறானா? கெட்டவாசனை வருது அது மசாலாவா?'' அப்பா கோபப்பட்டார்.

''அது எல்லாம் சைவம்தான். பார்க்கறதுக்கு மாமிச மாதிரி பண்றான்''

''பார்க்கறச்சே கூடவா,'' அப்பா வியந்தார்.

வட இந்திய நடிகன் உள்ளே வர, கூட்டம் நட்டிற்று. அப்பாவை அறிமுகப்படுத்த அவர் கா தொட்டு வணங்கினான். ஆறு மணிக்கு துவங்கிய கூ பத்து மணி வரைக்கும் நடந்தது. இயல்பாகவே அழக இருக்கும் அனிதா அன்று முகமெங்கும் ஜிகினாத்து மினுக்க தேவதை மாதிரி இருந்தாள். சகலரும் விட்டி வந்து அவளை பெண்கள் சூழ முதலிரவுக்கு அனு னார்கள்.

''வெட்கப்படாதே, நடராஜு என்ன சொல்றாே அதுபடி நடந்துக்கோ, கல்பனா எதார்த்தமாய் சொ னாள்.''

''மறுபடியுமா?'' தேவதை கண் சிமிட்டிற்று.''

''மறுபடியுமான்னா?''

''பெட்ராத்தல் அன்னிக்கே 'பிஷர்மென் கோ இன்னுடுத்து. நான் கர்ப்பம்னு நினைக்கிே தெரியலை,''

கல்பனா மிரண்டு போனாள்,

''இப்படியா பேசுவோ...இப்படியா பேசுவோ சுந்தராவிடம் அரற்றினாள்.

''தனியா வைச்சுடலாம்னு தோண்றது. மசா வாசனை அப்பாக்கு ஆகாது!''



'இதோ பார் கல்பனா, அப்பாவை இனி வாசனையோ பேச்சோ எதும் பண்ணாது. உன்னால அட்ஜஸ்ட் பண்ணிக்க முடியுமா பாரு. முடியலையா, இதமா சொல்லி தனி இடத்திலே வச்சுரு. உன்னை மாதிரியே அவ இருக்கணும்னு பார்க்காதே.'

நைட்டியை சுற்றிக் கொண்டு யாருமே சமையல் அறைக்கு வரமாட்டார்கள், மாமனார் முன்னே உட்கார மாட்டார்கள்.

'கல்விடைக்குறிச்சிங்கிறது எங்கே இருக்கு? அங்க நீங்க என்னவா இருந்தேள்?' இடுப்பில் இறுக்கிக் கிடந்த பெல்டால் நெஞ்சுப்பகுதி விம்மிக் கிடக்க சோபாவில் சம்மணமிட்டு காப்பி குடித்தபடி அப்பாவோடு பேசிக் கொண்டிருந்த அனிதா, சகலருக்கும் ஆச்சர்யமாய் இருந்தாள்.

'மாமிக்கும் உங்களுக்கும் பதிமூணு வயசில கல்யாணமா? யார் பதிமூணு வயசு? உங்க பதிமூணு வயசிலேயா? எப்ப தனிக்குடித்தனம்? நாற்பத்திரண்டு வயசிலயா? ஐயோ...ஆமா சின்ன வயசிலே உங்க பாஸ் டைம் என்ன?

'கோயிலுக்குப் போறது.'

'சரி கோயில் பிரே பண்ண. பாஸ் டைம் என்ன?'

'அதான். அப்ப கோயில்லதான் பாட்டுக் கச்சேரி, கூத்து, வாணவேடிக்கை, திருவிழா, எல்லாம் கோயில் தான். பிரேயர் ஹால், கோயில்தான். ரிக்ரியேஷன் ஸெப்டும் கோயில்தான். கம்யூனிட்டி சென்டரும் கோயில் தான்.'

''சரி அனிதா, குளிச்சிட்டு டிரெஸ் பண்ணின்டு வந்து பேசேன்,' கல்பனா மெல்ல விரட்டினாள்.

'நா மொள்ள குளிச்சுக்குறேன் மன்னி. நீங்க சினிமா போவேளா?'

'புராண படம் வந்தா போவோம்.'

'அதாவது எல்லா விஷயத்திலேயும் ரிலிஜன் இருந் திருக்கு.'

'ரிலிஜன்கறது தனியா இல்லைம்மா. அதான் வாழ்க்கை. ஒரு மெத்தட் ஆப் லிவ்ங், பின்னால ரிலிஜனா மாறியிருக்கு.'

'உங்களுக்கு இந்த மகாபாரதம் தெரியுமா?'

'ஏதோ கொஞ்சம்.'

'நிறைய டவுட் இருக்கு அதிலே. எனக்கு தொடர்ச் சியா அதை சொல்றேளா?'

'படியேன். புஸ்தகம் தரட்டுமா?'

'தாங்கோ. அப்புறம் இன்னொரு கேள்வி. சன்யாசி வேறே, முனிவர் வேறயா?

'ஆமாம் முனிவர் ஒரு புரபொஷன். சன்யாசம் ஒரு நிலை.'

'உங்களை என்ன சொல்றது?'

'குடும்பி. குடும்பஸ்தன். வியாபாரி. ஆமா, தெரிஞ் சிக்க கேட்கறியா, இங்க வந்து இரு தெரிஞ்சுக்கறது நல்ல துன்னு கேட்கறியா?'

'இரண்டுதான்.'

'தெரிஞ்சுக்கக் கேளு போதும். மத்தபடி உன் இஷ்டம் எப்படியோ அப்படி இரு.'

'கீழ வரபோது புடவையிலே இரு. முக்கியமா கல்பனா இடைமறித்தாள்.

'ஏன் நைட்டிக்கு என்ன?'

'தெரியறதே.'



'உத்து உத்து பாக்கறவாளுக்கு தெரியும்.'

'கண்டும் காணாமல் போக முடியுமா? நாலு பிள்ளைகள் புழங்கற இடமில்லையா?

'நீங்க கட்டற புடைவையைவிட நைட்டி பெட்டர். ளை வெளேர்னு இடுப்பை காட்டறபோது எனக்கே னா என்னன்னு தோணறது.'

'அனிதா,' கல்பனா அதட்டினாள்.

'லிக். என்னுடைய ட்ரஸ்சென்ஸ் பத்தி எனக்குத் யும் மோர் ஓவர் நான் யாரையும் அட்ராக்ட் பண்ண தலை. ஐ ஹேட் சாரீஸ் பர்ட்டிகுலர்லி யுவர் ஸ். து செக்சியஸ்ட் ட்ரஸ் ஐ ஹெவ் எவர் சீன். '

கல்பனா பதறினாள். வேதவல்லி அவளை அமைதி னாள்.

காலையே அந்தபெண் கல்பனாவை தாஜா செய்தது. சொன்னதுக்கு நானும் சொன்னேன். என்கூட பேசமாட்டிங்களா? திட்டுங்க, சண்டை போடுங்க. ம இருக்காதிங்க.'

த்தானம் நட்ராஜுக்கும் எனக்கும் சண்டை. இப்ப னமாயிட்டோம்.'

எனக்கு சொல் தாங்காதும்மா' கல்பனா முகம் க் கொண்டாள்.

வார்த்தைக்கெல்லாம் பயப்படக் கூடாது. வாயிருக்கு றாம். கொன்னுடுவேன்னு ஒரு அம்மா சொன்னா ழந்தைய கொன்னுடுவாளா? அபத்திய மனநிலை. தங்கமேன்னு சொல்லுவா மறுநிமிஷம். அது ஒரு லை.'

முனிவர்கள் வாழ்கன்னு சொல்றா மாதிரி, நாயாப் னு சாபம் கொடுக்கறா மாதிரி. முனிவர்களா ளாமே தவிர சன்யாசியாயிடக் கூடாது. இனிமே

பேச்சேயில்லை. யார்கூடயும் போயிடக் கூடா அப்பா நான் சுரக்ட்டா,' அனிதா கேட்க கல்ப சமையலறைக்குள் ஓடிவிட்டாள்.

'ரைட்டுடி குழந்தை.' அப்பா பதில் சொன்னார்.

'நான் நைட்டிலே கிழ வர்றது உங்களுக்கு பு லையா?'

'உன் நைட்டி, உன் சவுகரியம்.'

'பின்ன ஏன் மன்னி விரட்டறா?'

'அவளையும் உடுத்திக்க வச்சிடு. வெரட்ட மாட்

'தேர் யூ ஆர், கை கொடுங்கோ அப்பா.'

மாமனாரும் மருமகளும் கைக்குலுக்கிக் கெ டார்கள்

இரவு படுக்கப் போகும் போது சுந்தராவின் அ கதவை தட்டினாள்.

'என்ன?'

'காலைல டு விட்டேனோன்னோ? இப்ப நான் ப வெறும் பழம் விட்டா நன்னாயிருக்குமா? சாக் கொடுத்து சமாதானமாகிக்கறதில்லையா? அது ம என்னோட ப்ரசன்ட்.'

பெட்டி பிரித்து நீட்டினாள்.

மஞ்சளாய் மெல்லியதாய் நைட்டி இருந்தது.

'புடவையை அவுறுங்கோ,' இழுத்தாள்.

'இருடி அவர் இருக்கார்.'

'அவர் இருக்கற போது புடவை அவிழ்க்க டேளா?'

'நீ இருக்கியே.'

''நா பொம்மனாட்டி தானே.'

'அவரும் இருக்காரே.'



''அவர் புருஷன் தானே.'

'இரண்டு பேரும் இருக்கறபோது எப்படி?'

'கஷ்டகாலம்பா...எப்படி இந்த லேடியோட காலந் ளரீங்க சுந்தரா? ஒரே 'பஸ்' பண்ணிண்டு. நீங்களிதை த்திண்டாதான் போவேன்.' வந்து கால்மாட்டில் கார்ந்து கொண்டது.

'எனக்கு இதெல்லாம் பிடிக்காது.'

'நைட்டியா...நான் இங்க உட்காறதா?'

கல்பனா பதில் சொல்லவில்லை.

'ரொம்ப ஜாஸ்தி 'ராங்' காட்டினீங்க சுந்தராவை க்கு பண்ணிடுவேன். நாலு தடவை வெட்கப்பட்டா, ஆம்பளையு க்னோஸ். கரெக்ட்தானே நான் ல்றது.' சுந்தரா சிரித்தான்.

கல்பனா நைட்டிக்கு மாறிக் கொண்டாள். தோள் ம் பிரில் வைத்து புஜம் தெரிய இடுப்பு பக்கம் பெல்ட் த்து நழைய நழைய நைட்டி இருந்தது. பெல்ட் உருவ, டி இரண்டாய் பிரியும். சுருக்கு போட்டுக் கொள்ள லோடு ஒட்டும்.

'எனக்கு இது நன்னா இருக்கான்னா?'

உடுப்புதான் பெண்களை தேவதை ஆக்குகிறது. நிர்வாணம் அழகேயில்லை.

'சௌகரியமா இருக்கும்னு தோன்றது.'

சுந்தரா பதில் சொன்னான்.

'பரம சௌகரியம் சுருக்கு பிடிச்சு இழுத்தா ன்னு அவுந்துடும். நெஞ்சு கூடு கூனி ஜாக்கெட் க்க வேண்டாம். ப்ளீஸ் ப்ளீஸ்ன்னு பொண்டாட் கொஞ்ச வேண்டாம்.' அனிதா நடித்துகாட்டினாள்.

சுந்தரா வெட்கத்தில் சிரிக்க, கல்பனா சிலந்துபோக...

'ஹேவ் ஏ நைஸ் டைம்.' அந்தப் பெண் கையசை
விட்டு போயிற்று

'இவ நல்லவளா கெட்டவளான்னா?'

'வெள்ளைக்காரனை கெட்டவன்னு சொன்னே
ஆனா அவனால நிறைய நல்லது நடந்தது.'

மூன்று பேரும் நைட்டியில் ஹாலுக்கு வந்த பே
அப்பா வாய் விட்டுச் சிரித்தார்.

'மங்களம் நீ ஒண்ணு மாட்டிக்கறது தானே?'

'எனக்கு இதொண்ணும் புதுசு இல்லை. நடரா
வைப் பெத்தபோது ஆஸ்பத்திரில இதுதான் மா
விட்டா. சமையல் பண்றதுக்கு இதுதான் வசதி.
ஒன்றுவிட்ட தங்கை, புடவைகுமுட்டில விழுந்துபோ
செத்தா இப்பகேஸ்லைட். இன்னும்கஷ்டம்உடுத்திக்க

'உன்னை உடுத்திக்கச் சொல்றேன் மங்களா.'

'நான் சமைக்கறதே இல்லையே.'

'அடி சக்கை.'

'மாமி உங்களுக்கும் பிடிச்சது என்ன?' அனிதா இ
அம்மாவை பிடித்துக் கொண்டாள்.

'என் புருஷன் என் குழந்தைகள்.'

'உங்களுக்கு புடிச்சது என்ன? உங்க ஆசை என்

'அவா நன்னாயிருந்தா.' நா நன்னாயிருப்பே
அவா சந்தோஷம் என் சந்தோஷம்.'

'உங்களுக்கு புடிச்சதா ஒன்று நான் செ
கூடாதா?'

'செய்யேன்.'

'என்ன செய்யணும்?'

'செய்வியா?'

'செய்வேன்.'

'குழந்தை வேண்டாம்னு கலைக்காம, கா
பண்ணாத சமத்தா ஒரு பேரனோ, பேத்தியோ பெ
கொடு''



'இதானா. இதுதான் உங்க சந்தோஷமா?'

ஆமான்டி தாயி. உனக்கு குழந்தை பொறந்தா நடராஜுக்கு சந்தோஷம்.' நடராஜு சந்தோஷம் என் சந்தோஷம்.'

'மாறவே மாட்டேளா?'

'நீ மாறப் போற பாரு என்னைமாதிரி. எல்லாரையும் எல்லா விதமாகவும் சந்தோஷப்படுத்த முடியாது பொண்ணே. உன் காரியத்தை நீ ஒழுங்கா செய்தா போறும் அது எல்லோருக்கும் நானா சந்தோஷம் தரும் உன் காரியம் என்ன? புருஷனை சீராட்டறது. அவன் மேம்மேல வளர தட்டிக் கொடுக்கறது. அவன் வந்து இளைப்பாற இடம் கொடுக்கறது. அவன் பொறுப்புக்கு குழந்தைகள் பெத்து தரது.'

'அப்ப என் சந்தோஷம்ங்கறது?'

'இது பண்ண பண்ண சுத்தி சுத்தி வருவான் எந்த புருஷனும். புருஷன் தன்னை சுத்தி வர்றதவிட பொண்டாட்டிக்கு சந்தோஷம் உண்டா? அதைவிட கர்வம் உண்டா?'

அடித்துப் போட்டாற்போல அந்தப்பெண் உட்கார்ந்திருந்தது.

'இல்லை நான் சொல்றது...'

'புரியலை உனக்கு நீ பெரிய கலெக்டர், இல்லை டென்னிஸ் பிளேயர். ஆனா உன் புருஷன் உன்னை சுத்தலை. வேற எங்கேயோ சுத்தறான். இப்படி நினைச்சு பாரு. நிறைவா இருக்குமா அது. என்ன வேணா செய்யறது வேணா உடுத்து. ஒருத்தரை ஒருத்தர் சுத்திண்டிருக்கறது நின்னு போச்சு, நீ உடுத்தினாலும் ஒண்ணுதான். உடுத்தாட்டாலும் ஒண்ணுதான்.'

'புரியறது.'

'மேற்கொண்டு நான் சொல்றேன். இப்படி சுத்தற தையோ கொஞ்சறதையோ மத்தவாளுக்காக செய்யாதே உனக்காக செய். அவனுக்காக செய் எது பண்ணாலும் நைாவஸ்டா செய். தானா அமைதியாய்டும். எது? நீ செய்யறது கொஞ்சறது எல்லாம். நிமிர்ந்து ஒரு தடவ பார்த்தா நானு கொஞ்சல் தெரியும். உன்கல்யாணத்தில் நான் ஒரு கோடி, மங்களம் ஒரு கோடில இருந்தோம் நடராஜு, தாலி கட்டி முடிச்சது பளிச்சுன்னு இவளுக்கு அழுகை வந்துடுத்து. அந்த கோடிலேர்ந்து ஒரு பார்வை, கண்ல ஜலம் வழிய பார்த்தா எனக்கும் கண்லஜலம் பொங் கிடுத்து. பதினாறு வயசுல இவ கையைப் பிடிச்சது ஐம்பத் தொம்போது வயசுல அஞ்சு குழந்தைகள் பெத்த, ஒன்னை வாரிக்கொடுத்து, நாலுக்கு சல்யாண பண்ணி நானும் மறுபடி நிமிர்ந்து நிக்கறேன்னா அதுக்கு யார் காரணம் என் கடமை முடிஞ்சுதுன்னு நிம்மதி வர யார் காரணம் இந்த பொம்மனாட்டியல்லவா? நாப்பத்தாறு வருஷ குடித்தனத்துக்கு இவள் பொறுப்பில்லையா? இவ இல்லா இது நடந்திருக்குமா? இது நாங்க பேசிக்கவேயில்லை அனிதா பார்த்துண்டோம்.'

அனிதா சுருண்டு அம்மாவின் மடியில் விழுந்தது 'ஐ லவ்யூ அம்மா, ஐ லவ்யூ,' என்று இறுக்கிக் கொண்டது

'அப்பா கைகொடுங்களேன்,' கேட்டு வாங்கி புறங்கையை முத்தமிட்டது.

பாஷை வேறு, செய்கை வேறு. உணர்வு ஒன்றே அனிதா பெண். எல்லாரையும் போல சாதாரண பெண் கார் ஓட்டும் போது, கெட்டவார்த்தையில் 'பாஸ்ஸ்' என்று மோட்டார் சைக்கிள்காரன் திட்டினாலும், அதரச்சிவப்பு பூசிக்கொண்டாலும், விரித்த சடையும் தொளதொள சட்டையும் போட்டுக் கொண்டாலும், பன்னீர்பாலை சமைத்து பரிமாறினாலும் அடிப்படையில் பெண்.



'சோ யூ ஆர் நியரிங் சிக்ஸ் டிவி ஹெல்டு செலிப் ரேட்பா. அதுக்கு என்ன பேர் சொல்றது...என்னமோ சொல்வாளே.'

''சஷ்டியப்த பூர்த்தி.''

''கரெக்ட். சுந்தராண்ணா இப்ப புடிச்சு பிளான் பண்ணி தூள் பரத்திடணும். அப்பா சிம்பிள் சிம்பிள்ம் னு சோ சிம்பிள். இட்ஷுட் பி கிராண்ட்.''

'எதுக்குடா' அப்பா மறுதலித்தார்.

''எல்லாரும் ஆசைப்படறாப்பா.''

''வேண்டாம் சிம்பிளா...''

''அம்மா கிராண்டா வேணுங்கறா. ஆசைப்படறா. அவ சந்தோஷம் உங்க சந்தோஷம் இல்லையா அவ ஆசை உங்க ஆசை இல்லையா?'' அனிதா மடக்கினாள்.

''என்ன மங்களம்''

''குழந்தைகள் ஆசைபடறது.''

''சரி.''

நாளிதழ்களில் சஷ்டியப்த பூர்த்தி விளம்பரம் வந்தது. வீட்டு வாசலில் பெரிய பானர் போடப்பட்டது. அம்பலத்தில் பெரிய சத்திரம் பார்த்து, தெரு அடைத்து பந்தல் போடப்பட்டது. முதல் நாள் முகூர்த்தத்தில் அம்மாவின் விருப்பப்படி ஏழு ஏழைப் பெண்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது

''ஹிந்துவா இருந்தா போதும். ஆனா பெரியவங்க பார்த்து பண்ற கல்யாணமா இருக்கணும்.''

மடத்திலிருந்து புடைவையும் வேஷ்டியும் பிரசாதமும் தம்பதிகளுக்கு வந்தன.

மறுநாள் அப்பா தாலி கயிறு எடுத்து அம்மாவின் கழுத்தில் கட்டினார் வணங்கியவருக்கு எல்லாம் தலையில் அட்சதை போட்டார். அனிதா பம்பரமாய் வேலை செய்தாள். வேதவல்லி பந்தியை கவனிக்க, கல்பனா

வருபவர்களை வரவேற்றான். நடராஜ எல்லா நிகழ்ச்சிகளையும் படமெடுத்தான். மடம் சால்வை அனுப்பிற்று. தங்க காசு பரிசளித்தது.

நாலு நாள் கழித்து அப்பா அம்மாவுடன் சகலரும் வேன் ஏற்பாடு பண்ணி காஞ்சிபுரம் போனார்கள்.

தாமரை மடத்துக்கு திரும்பி விட்டதாம். நேற்று காலையில்தான் இது நிகழ்ந்ததாம். எல்லையில் தகவல் கிடைத்தது.

அப்பா சிரசுமேல் கை கூப்பினார்.

இறங்கி அம்மாவை கைப்பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே போனார். நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து வணங்கினார். ஆள் வரிசையாய் வர போட்டிருந்த கம்பியில் முதுகு சாய்த்து தாமரை எதிரே உட்கார்ந்து கொண்டார்.

அம்மாவை அருகே உட்காரச் சொன்னார். வேதபாடசாலை குழந்தைகள் ருத்திரம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். தாமரை கவனமாய் கேட்டுக் கொண்டிருந்தது.

நடுவே திருத்தம் சொன்னது.

''எல்லாம் நல்லபடி முடிச்சுட்டியா?'' சட்டென்று தாமரை திரும்பி அப்பாவை கேட்டது.

அப்பா வாய்பொத்தி எழுந்து நின்றார். 'ஆச்சு' என்று தலையசைத்தார்.

''அப்ப என்ன போய்ட்டு வா.''

''நான் ஏதாவது தப்பு பண்ணியிருந்தா பெரியவா பெரிய மனசு பண்ணி மன்னிக்கணும்!''

''என்ன சொல்றான் இவன்'' தாமரை தலை நிமிர்ந்து கேட்டது.

''தப்பு ஏதாவது பண்ணியிருந்தா மன்னிக்கணும்னு வேண்டிக்கிறார்.'' அருகே இருந்தவர்கள் பதில் சொன்னார்கள்.



''இது என்ன காலம்?''

''பகல்.''

''அது இல்லைடா இந்த காலத்தை என்ன காலம்னு சொல்லுவா.''

''வேனிர் காலம்'' தாமரை தவறு என்று தலையசைத்தது.

புரியலை உங்களுக்கு நாம வாழற காலத்தை என்னன்னு சொல்வா?

கூட்டம் அமைதியாய் இருந்தது.

''சுந்தரா மெல்ல, கலிகாலம்னு சொல்வா'' என்று குரல் கொடுத்தான்.

''கரெக்ட், யாரு சுந்தராவா?''

''இங்க இருக்கேன்.''

இரு இரு. இது கலிகாலம், கலிகாலத்துல தப்பு பண்ணினா...'

'கைமேல பலன்' அப்பா பதில் சொன்னார்.

''தப்புக்கு என்ன பலன்?''

''தண்டனை.''

''உனக்கு தண்டனை ஏதாவது கிடைச்சதா?''

''இல்லை''

''அப்ப என்ன அர்த்தம்?''

''அவர் எதுவும் தப்பு பண்ணலைன்னு அர்த்தம்.'' கூட இருந்தவர்கள் பதில் சொன்னார்கள்.

''பின்னே ஏன் அழறான் இவன்?''

''ஒரு அஞ்ஞானம்தான்.''

''இவனா அஞ்ஞானி? அடேயப்பா என்ன விரட்டு விரட்டினான் என்னை...''

''சர்வேஸ்வரா'' அப்பா கதறியபடி மறுபடி காலில் விழுந்தார். அம்மாவும் நமஸ்கரித்தாள்.

கை நிறைய அட்சதை எடுத்து அப்பாவின் கையில் கொடுத்தார் வாய் நிறைய சிரித்தார். தலையில் குடிக் கொண்டிருந்த விஸ்வநளம் எடுத்து நெஞ்சில் வைத்து கண்மூடி தியானித்து அப்பாவின் கைகளில் போட்டார். கூட்டம் நுனி நாக்கில் சில்லிட்டது.

''இது போறும் பகவானே. இது போறும்,'' அப்பா கண்ணில் ஒற்றிக்கொள்ள.

'சௌக்கியமா போய்ட்டுவா' கை உயர்த்திற்று.

அப்பா விடைபெறுகிறார் என்பது அப்போது தெரிய வில்லை.

## 16

கடைக்கு வந்து அப்பா உட்கார்ந்தது தெரியவே இல்லை. பிற்பகலில் உணவு இடைவேளைக்குப் பிறகு திடீரென்று அப்பா கடைக்குள் வந்து ஸ்டீல் பீரோ ஓரம் உள்ள நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். யாரோ ஒரு ஆள் கவனித்து வணக்கம் சொல்லியிருக்கிறான் அவ்வளவே. மற்றபடி கடை, ஆண்களும், பெண்களுமான ஊழியர்களோடு சளசளத்த வண்ணம் இருந்திருக்கிறது கண்ணாடி அறைக்குள் சுந்தரா அன்று காலை தவணை விற்பனையான பத்திர விஷயங்கள் பார்த்து கையெழுத் திட்டுக் கொண்டிருக்க, அக்கவுண்டண்ட் பக்கத்து சீட்டு பெண்ணிடம் குழந்தைக்கு மாந்தம் வந்தால் கை வைத்தியமாக செய்ய வேண்டியவற்றை விவரித்துக் கொண்டிருந்தார்.

யாரோ ஒரு பெண் உள்ளே நுழைந்து, ''பாய்லர் கிடைக்குமா?'' என்று கேட்டாள். சேல்ஸ் பையன்



எலக்ட்ரிக் ஹீட்டருக்கு அழைத்துப் போனான் ''இது இல்லை பாய்லர்.''

அந்த பெண்மணி மறுத்தாள்.

''இதுதான் பாய்லர், ஹீட்டர் எல்லாம் இதுதான்.''

''அவங்க அடுப்பு கரி போடறது கேக்கறாங்க. அது இல்லை மேடம்.'' சேல்ஸ் பெண் பதில் சொல்லிற்று.

''அடுத்த தெரு கடைல கேக்க வேண்டியத இங்க கேக்கறிங்களே,'' பையன் கேலி செய்தான்.

''இதுவும் வெந்நீர் போடறதுதானா?''

''ஆமாம்.''

''என்ன விலை?''

''இரண்டாயிரத்து நானூற்று நாப்பது.''

''ஐயோ. வெறும் வெந்நீர்போடறது தானே இது?''

''மேடம் ப்ளீஸ், நீங்க அந்த கடையே பாருங்க உங்களோட பேசறது கஷ்டம்.''

''இது தவணைல வாங்கினா என்ன விலை?''

உங்களுக்கு பாய்லர் கரி போடறது வாங்கணுமா, வாட்டர் ஹீட்டர் வாங்கணுமா?''

''பாய்லர்தான்...ஆனா...''

''இல்ல நீங்க அந்தக் கடைக்கே போங்க. தப்பா வந்துட்டீங்க,'' அந்த பையன் அவளை விரட்டினான்.

அந்த சேல்ஸ் பெண் அவன் விரட்டலைக் கண்டு மெல்ல சிரித்தது.

''நியூசன்ஸ் கஸ்டமர்,'' பையன் முணுமுணுத்தான்.

''யாருடா?'' அப்பா நாற்காலி விட்டு எழுந்தார்.

''யாரு நியூஸென்ஸ்?''

''ஸார் குட் ஈவ்னிங்.''

''நோ. இட்ஸ் கோயிங் டு பி எ பேட் ஈவினிங். யார் நியூசென்ஸ்?''

''ஸார் அவங்க கரி பாய்லர் கேக்கறாங்க.''

''வாட்டர் ஹீட்டருக்கு விலை கேட்டாங்களே. நீ என்ன சொன்னே?''

''விலை சொன்னேன் ஸார். ஐயோன்னாங்க.''

''நவணைல விலை கேட்டாங்களே நீ என்ன சொன்னே?''

''ஸார் அவங்க கரி பாய்லர் ...''

''வெளியே போ.''

''ஸார்...''

''வெளியே போடா. இன்னியோட உன் கணக்கு இங்க முடிஞ்சது. நாளைக்கு காலைல உன் கணக்கு செட்டில்பண்ணிக்கோ. போ வெளியே.''

''ஸார். ஐயம் ஸாரி.''

''இது கவர்மெண்ட் ஜாப் இல்லை. சேல்ஸ்ன்னா விசிறி கீழே, பொம்மனாட்டி பெண்ணோட ஜதையா நிக்கறதுன்னு நினைச்சுண்டுருக்கியா? செட்டில் பண்ண காசுல சுண்டல் வடை போடு. தோள்ல பாத்திரம் தூக்கி பிச்சுல வித்து பாரு. பத்து பைசா பொட்டலத்துக்கு கஸ்டமர் நாலு கேள்வி கேட்பான். அஞ்சு பைசா சுண்டல் சாம்பிள் கேட்பான்.''

''ஸார்'' அந்த மேடம் ஹீட்டர் வாங்க வரலை. அத புரிஞ்சுக்கங்க.''

''அவங்க உன்னோட ஜாதகம் கேட்க வந்தாங்களா?'' அப்படி வந்தாலும் அவங்கட்டயும் இரண்டு சாமான் சேல்ஸ் பண்ணனும்டா முட்டாள்.''

''ஸார் அனாவசியமா பேசறீங்க.''

''செருப்பு பிஞ்சிடும் வெளியே போடா''

''எவ் யாரப் பார்த்து...'' அவன் சட்டையை மடித்து அப்பாவிடம் முன்னேற அப்பா கடும் கோபமாகி அவனை



வெளியே தள்ள சுந்தரா வெளியே ஓடி வந்தான். அப்பாவை நோக்கி முஷ்டி காட்டும் பையன் தோளில் கை வைத்தான்.

''என்ன உன் ப்ராப்ளம்?''

''அவரு என்னை வெளியே போடான்றாரு ஸார்.''

''அவருதான் முதலாளி வெளியே போய்டு.''

''சும்மா போய்டுவேனா இத்தோட முடிஞ்சுபோச்சா?''

''என்ன வேணா செய். இப்ப வெளியே போ...''

''ஸார் என் பேர்ல தப்பில்லை.''

''அது எனக்குத் தெரியாது எனக்கு தெரிஞ்சது இந்த கடை முதலாளிய நீ அடிக்க வந்தது. இது சரியில்லை வெளியே போ.''

''நடந்தது என்னன்னு உங்களுக்குத்தெரியலை ஸார்.''

''நாளைக்கு விசாரிக்கறேன். உன் பேர்ல தப்பில்லைன்னா உன்னே சேர்க்கறேன்.''

''இப்ப வெளியே போன்றீங்களே. இது பனிஷ்மெண்ட் இல்லையா?''

''எஸ். உன் னுடைய ரப் பிஹேவியருக்கு பனிஷ்மெண்ட்''

''முடியாது. இப்ப விசாரி. வெளியே வாங்கய்யா எல்லா சேல்ஸ்மென்னும். மாடிக்குப் போய் கூப்பிடு எல்லாரையும்.'' நடராஜுக்கு இண்டர்காமில் தகவல் தெரிவித்து கீழே வர அவன் படியேறும் வழியில் மடக்கப் பட்டான்.

''எங்க போற? கீழே இறங்கு.''

''எல்லா க்ளீக்ஸ் கூப்பிடப் போறேன். உங்க அப்பா என்னை அடிச்சுட்டாரில்லை. எல்லாரையும் கூட்டிக் கிட்டு வெளிய நின்னு நியாயம் கேட்கப் போறேன்.''

''உன்னை மாடிக்கு போக விடமாட்டேன். அது உன் இடம் இல்லை.''

''வழி விடுங்க சார்.'' அவன் தள்ளி முன்னேற நடராஜு கொத்தாய் அவனை பிடித்து கீழே கூட்டி வந்தான்.

''என்கூட பழகின மரியாதைக்குச் சொல்றேன். பல காட்டினே, முட்டிக்கு முட்டி தட்டுவேன். அமைதியா போ.''

அவன் செய்வதறியாது கீழே இறங்கினான். பெண் களுக்கு நடுவே அவமானப்பட்டதுக்கு பதறினான். நால புறமும் அலைந்தான்.

சட்டென்று டைம்பீஸ் எடுத்து, சுந்தரா உட்காரு கண்ணாடி அறைக் கதவு நோக்கி அடித்தான். சு சுக்கலாயிற்று.

அவன் இன்னொரு டைப்பீஸில் கை வைக்க நடரா முன்னேறி, இரண்டு விநாடிகளில் அவனை தரைய கிடத்தினான். காலர் பிடித்து, இழுத்து போய் வெளியே தள்ளினான்.

அவன் எழுந்து, தெருவில் கல் எடுத்துக் கொண் நடீராஜனை குறிபார்த்து அடிக்க, நடராஜ" ந இரும்பு பீரோ அடிபட்டு உதிர்ந்தது. இன்னும் இரண் கற்கள் பறந்து உள்ளே வந்து, கடிகாரத்தையும் கு பெட்டியையும் தாக்கின.

நடராஜன் இறங்கி அவன்மீது பாய, அவன் தப்பி தெரு வழியே ஓடினான். வாசலில் கூட்டம் கூடிய நின்று வேடிக்கை பார்த்தது.

சுந்தரா டெலிபோன் சுழற்றி போலீசுக்கு தக சொல்ல, பத்து நிமிஷத்தில் போலீஸ் வந்தது. பு எழுதி வாங்கிக் கொண்டது.

''ஒழுங்கா வேலைக்கு வந்தமா போனமான்னு இ கணும். எவனா ராங் காட்டுனீங்க கொத்தா மசிர புடி கொண்டுகினு பூசிவோம். அப்பால கஷ்டம். எ புரியுதா?''

வந்த சப்-இன்ஸ்பெக்டர் லட்டி உயர்த்தி, க சிப்பந்திகளைபார்த்து அதட்டியதோடு நாடகம்முடிந்



கடையில் கலவரமும், அயர்ச்சியும் கலந்த ஒரு நிலை மிதந்தது.

நாகராஜன் ஆறு மணிக்கு கடைக்குள் ஏறினான்.

'எங்க போயிருந்த?' அப்பா படியேறியதும் கேட்டார்.

'இங்கதான் ..என்ன?'

'இங்க நான்னா...எங்கே'

'ஒரு சிநேகிதன பார்க்க, பிசினஸ் விஷயமா.'

'என்ன பிசினஸ், என்ன சிநேகிதன்?'

ஏம்பா குடையறே?'

'சொல்லுடா, கடைய விட்டு எங்கே போயிருந்த?'

'என்ன ஆச்சு?'

நடராஜன் விஷயம் சொன்னான்.

'எங்க அவன்? யார் அது?'

'ராஜகோபால்னு பேரு'

'கருப்பா உயரமா இருப்பானே அவனா?'

'ஆமா.'

'ப்ராப்ளம் வருமே. அப்பா எதுக்கு அவனை வெளியே போகச் சொல்லணும். பத்து கஸ்டமர்ல இரண்டு பேரை சரியா அட்டெண்ட் பண்ண முடியாது போகலாம். கஸ்டமர் க்யூரியசா இல்லைன்னா, சரி வேடிக்கை பார்க்க வந்த ஆளுன்னு அனுப்பிடலாம். இதுக்கு பனிஷ்மென்ட் தேவையா?'

'பனிஷ்மென்ட் அதுக்கு இல்லை. இந்தா பாரு. இது நேத்திக்கு எனக்கு வந்த லெட்டர். இத காட்ட பண்ண வந்தேன்.' அப்பா கடிதம் நீட்டினார்.

ஐயா, உங்கள் கஸ்டமர் எழுதிக் கொள்வது. உங்களு டைய கடை ஆட்கள் என்னைப் போன்ற ஏழை கஸ்டமர்

களை அதிகம் கேலி செய்கிறார்கள். விவரங்கள் சொல்ல மறுக்கிறார்கள் தமிழில் கேட்டால், ஆங்கிலத்தில் பதில் சொல்கிறார்கள். பெண் தொழிலாளர்களோடு பேசிக் கொண்டே இருக்கிறார்களே தவிர வியாபாரத்தில் நாட்டம் இல்லை. குறிப்பாய் மின் கருவிகள் விற்கும் இடத்தில் உயரமான ஒரு பையனும் கண்ணாடி அணிந்த பெண்ணும் ஒருவரை ஒருவர் ரகசியமாக கிள்ளிக் கொள்கிறார்கள். இதை நான் கவனித்து விட்டதால், என்னை உடனடியாக அப்புறப்படுத்த இருவரும் முயன்றார்கள்.

ஆங்கிலத்தில் என்னை கேலி செய்தார்கள். இது குறித்து தயவு செய்து நடவடிக்கை எடுப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

ரமா. கஜேந்திரன், மகாகவி பாரதியார் நகர், சென்ட்ரல் அவென்யூ, ப்ளாட் எண்பது, வியாசர்பாடி என்று எழுதப்பட்டிருந்தது.

'ஸோ வாட். இது விசாரிக்கிற முறை இதுவா? இதுக்கு போலீஸ் கம்ப்ளெய்ண்டா. தப்பு பண்ணிட்டீங்க.'

'இல்லை நாகராஜு. போலீஸ் கம்ப்ளெய்ண்ட் நடராஜன் பேச...அப்பா அவனை அடக்கினார்.

'நீ எங்கேடா போயிருந்தே. அத சொல்லு முதல்ல.'

'க்ளப்புக்கு.'

'சீட்டாடவா?'

'பிஸினஸ் சீட்டாடறது, சாப்பிடறது எல்லாம் எனக்கு பிஸினஸ்.'

'பட்டப் பகல்ல ஒரு கோடி சாமான் இருக்கற கடைல உடமஸ்தன் இல்லை அவன் கிளப்புல சீட்டாடப் போனா இதுவும் நடக்கும். இதுக்கு மேலயும் நடக்கும்.'

'ஆக, தப்பு என்னுதா,' நாகராஜு சீறினான்.

'ஆமா, ஆமா ஆமா', அப்பா உரக்கக் கத்தினார்.



'கடை சரியா இல்லை. மிதப்பு வந்தாச்சு எல்லாருக்கும் கண்ட்ரோல் இல்லை. சுந்தராவைத் தவிர யாரும் பொறுப்பா இல்லை.'

'அப்பா என்னை ஏன் திட்டற? நடராஜு இடைமறுத்தான்.

'பிரிச்சு விட்டது வரி சௌகர்யத்துக்கு. உனக்கு டூவின்னு பிரிச்சதும், அந்த இடம் விட்டு நகர்ந்து வந்ததேயில்லை. ஒரு நாளும், பிரோ கஸ்டமரை, ஹட்டர் கஸ்டமரை அடெண்ட் பண்ணதில்லை. இது தப்பு.'

'அப்பா இது பத்திவீட்ல பேசலாம். இங்க வேண்டாம்

கண்ணாடி அறையிலிருந்து கலைந்தார்கள். மாலைவிட்டு ஹாலில் கூடினார்கள், பெண்களுக்கு விஷயம் தெரிந்து அவர்களும் வந்து சுவரோரம் குழுமினார்கள்.

'நாங்க பேச்சுல கலந்துக்கலாமா?' அனிதா கேட்டாள்

'தாராளமா. வா இப்படி வந்து என் பக்கத்துல உட்கார். அப்பா தனக்கருகே அவளை அமர்த்திக் கொண்டார்.

'வேதவல்லியும், கல்பனாவும் உட்கார்ந்து முழுக்க விஷயம் கேளுங்கோ. 'ஸைட்' எடுக்க வேண்டாம். கடை நம்ம கடை. அது நன்னாயிருந்தா நாம நன்னாயிருப்போம். எனவே, கடை நல்லதுக்கு முடிவு சொல்லணும் இரண்டு பேரும்.'

,நீங்க இருக்கற போது...'வேதவல்லி இழுத்தாள்.

'நான் பிராது கொடுக்கறவன். எல்லார் மேலயும் குற்றப்பத்திரிகை சொல்றவன். நான் முடிவு எடுக்கக் கூடாது. உட்கார் வேதவல்லி. உட்காரு கல்பனா.'

பேச பேச கூட்டம் இரண்டு பட்டது. பெரிய வாக்குவாதம் நடந்தது.

'அப்பா ஒரு தப்பு கண்டுபிடிச்சேளா, உள்ளற ரொமான்ஸ் நடந்துதா, கஸ்டமர்கிட்ட மிஸ்பிஹேவ் பண்ணினானா, சரி உள்ள கூப்பிடு, விசாரி. சமாதான மாகலையா, கணக்கு செட்டில் பண்ணிடு. பத்து ஸேல்ஸ் மென் முன்னாடி வெளிய போடான்னு ஒருத்தனை சொன்னது முட்டாத்தனம்.'

நாகராஜு சத்தமிட்டான்.

'அப்பத்தான் மத்தவனுக்கு பயம் வரும்,' அப்பா அடித்துப் பேசினார்.

'ஸேல்ஸ்மென் உன் பண்ணை ஆளு இல்லை. வெளிய போன்னு சொல்றதுக்கு.மத்த ஸேல்ஸ்மேனுக்கு யொரேல் கொறைஞ்சு போகும். நம்மையும் ஒருநாள் இப்படி நாலு பேர் நடுவே வெளிய துரத்திடுவான்னு பயம்வரும் உற்சாகம் குறையும்.'

'பாய்லர் வாங்க வந்தவனை வாட்டர் ஹீட்டர் வாங்க வைக்கிறதுதாண்டா, ஸேல்ஸ்மென்ஷிப். வெளிய துரத்துறது இல்லை.'

'தப்புதான்'

ஆனா......

'அதுக்கு காரணம் நீ. பொட்டை குட்டியோட பேசற ஜோர்ல கஸ்டமரை அவன் துரத்தினான் கேட்பார் இல்லை. உள்ள ஒரு முதலாளி பேப்பர் கையெழுத்து போட்டுண்டு இருக்கான், வெளிய என்னன்னவோ நடக்குறது. இது கடையா இல்லை வே... எதாவதா. பொம்மனாட்டி குழந்தைகள் சேர்த்தது நீ.'

'ஆம்பளை பொம்பளை இருந்தா கசமுசான்னு எதாவது நடக்கும் அது கண்டுக்கப்படாது.'

'காமுசாவா, கடையிலயா? சுந்தரா இழுத்து மூடு கடையை.'

'ஏன், ஏன்?' நடராஜு கோபமானான்.



'சிரைக்கறதை, கடைல சிரைங்கடா. எங்கியோ ளெப்புல போய் சிரைக்காதீங்க.'

-அப்பா, அனாவஸ்யமா பேசற.'

'பேசுவேன். உனக்கு கிளப்புல என்னடா வேலை? நீ கிளப்புக்கு போனியா இல்லை, எங்கியாவது தேவிடியா குடிக்குப் போனியா?'

'போவேன். எங்க வேணா போவேன். நான் சம்பாதிக்கிறேன். நான் போவேன். அதை கேட்க நீ யாரு. கல்லிடைகுறிச்சி பண்ணையார் மாதிரி நடு கூடலை வேலையாளைக் கத்திட்டு என்னைக் குத்தம் சொல்றியா? நாளைக்கு அவன் நீ செருப்பால அடிச் சேன்னு வழக்கும் போடப் போறான். அப்படி போட வைக்க வெளிய ஆள் இருக்கு தூண்டிவிட ஆள் இருக்கு. இது முடிஞ்சு போச்சா. இது வளரும். உன் முட்டாள் தனத்துனால சந்தி சிரிக்கும்.'

'நாகராஜு, ப்ளீஸ்' சுந்தரா அடக்கினான்.

'சும்மா இருடா. என் பொண்டாட்டி எதிர்க்க என்னை இந்த கேள்வி கேட்கறவர் வேலை செய்றவனை எத்தனை கேட்டிருப்பார்.'

'நீங்க பொறுப்பா இருந்தா நான் ஏண்டா கடைக்கு வரேன்.'

'என் பொறுப்பு பத்தி என் பேலன்ஸ்ஷீட் சொல்லும். என் பின்னாடியே வந்து மோந்து பார்க்க வேண்டாம்.'

'இந்த கம்ப்ளெய்ண்ட் எழுதினவனுக்கு என்னபதில்?'

'தெருவில போறவன் வறவன் எதாவது எழுதுவான் இதை தலைல வச்சுண்டு ஆட முடியுமா? கிழிச்சு குப்பைல போட்டுட்டு லேசா கண்காணிக்க வேண்டியதுதான்.'

'கண்காணிக்கறவனை காணமேடா.'

'என்ன பண்ணச் சொல்ற. வாசல்ல காவல் காக்கணுமா?'

'என் கடைக்கு கெட்டபேர் வரக்கூடாது.'

'அது உன் கடையா. என் கடையான்னு இப்ப முடிவு பண்ணிடு. நீ இங்க இல்லைன்னு ஒரு வார்த்தை சொல் லிடு. நான் விலகிக்கறேன்,'

'போதும் நிறுத்துடா.' அம்மா இடைமறித்தாள் அப்பா சொல்றதுக்கு கட்டுப்படு.'

'முடியாது. எப்படி என்ன வேலை செய்யணும்னு எனக்கு யாரும் உத்தரவு போட முடியாது.'

'டி. வி.யே பார்க்கற. மத்தது ஏன் பார்க்கலேன்னு கத்தறா அப்பா. ஒருநாள் உட்கார்ந்து டி. வில என்ன வேலைன்னு பார்த்துருக்காளா.' நடராஜு குறை பட்டான்.

'முட்டாள். அதுக்கு ஆறு பொம்பளை வச்சருக்கி யோன்னோ. அதுதவிர மத்ததுக்கு சம்பந்தம் இல்லைன்னு உட்கார்ந்தா என்ன அர்த்தம்?'

'என்ன பார்க்கணும். மிக்ஸில இருநூறு லாபம் பீரோல முன்னூறு லாபம். டி. வில என்ன லாபம்ன்னு தெரியுமா?'

'அப்படி பேசாத நடராஜு நூறு மிக்ஸி விக்ற இடத் துல இரண்டு டி. வி. விக்கறது.' சுந்தரா மறுத்துப் பேசினான்.

'இன்னும் இரண்டு வருஷத்துல மிக்ஸி வேகம் நின்னு போய் டி. வி. கொடி பறக்கும். அப்ப இதைவிட லாபம் கிடைக்கும். அதுக்கு இப்ப வொர்க் பண்ணாதான் முடியும். மிக்ஸியே நம்பிண்டு இருக்காதே.'

'நிறுத்து நடராஜு டி. வி. சேல்சுக்கு ஹெவி காம்பி டீஷன் வரப்போறது. மூலைக்கு மூலை டி. வி. கடை திறக்கப் போறான். டி. வியே நம்பிண்டு இருக்காதே.'

'காம்படீஷனுக்கு பயந்து கண்ட்ரோல் பண்றதா?'

'எல்லாத்துலையும் கை இருக்கணும். டி. வியவிட வர வருஷம் ரெப்ரிஜிரேட்டர் போகப் போறது பார்



என்ன தெரியும் உனக்கு ஐஸ் பொட்டி பத்தி,' அப்பா கேள்வி கேட்டார்.

'எல்லாத்தையும் எல்லாரும் பார்க்க முடியாது.'

'பார்க்கணும். இல்லைன்னா, நீ கடைக்கு லாயக் கில்லை.'

'ஒண்ணு புரியறது அப்பா, ஓவர் ஆல் கண்ட்ரோல் கேக்கறேன். சுந்தரா இருக்காரே அதுக்கு.' அனிதா வாய் திறந்தாள்.

'ஒரு ஆள் தலைல போடச் கூடாது அனிதா. ஓவர் ஆல் கண்ட்ரோல் மூணு பேரும் செய்யணும். ஸ்பெஷ லைஸ் பண்றதும் செய்யணும்.'

'வீணா குழப்புற.' நாகராஜு அலுத்துக் கொண்டான்

வாசலில் சப்தம் கேட்டது. அனிதா எழுந்து போனாள். ஒரு கல் பறந்து வந்து அவள் நெஞ்சைத் தாக்கிற்று ஐயோ என்று அலறியபடி பின்வாங்கினாள்

ஹாலில் கண்ணாடிகள் சிதற பல கற்கள் வீட்டை நோக்கி வீசப்பட்டன. அப்பா ரவுத்திரமானார், வாக்கிங் ஸ்டிக்கோடு வெளியே போனார். சுந்தரா அவரை மறித்துக் கொண்டான். ஒரு சோடா பாட்டில் சுவர்மீது அடித்து சிதறி இருவரையும் தாக்கிற்று

## 17

சரிந்து கீழே விழுந்த அனிதாவை நாகராஜன் வாரி உள்ளே எடுத்து வந்தான். அப்பாவுக்கு வலது காதில் சோடா பாட்டில் துண்டு கிழிந்து ரத்தம் கொட்டியது. சுந்தராவுக்கு புஜத்திலும் புறங்கையிலும் அடிபட்டது.

'நடராஜு ஓடுறா, ஓடிப்போய் கடையப்பாரு. உடனே. பின்சுவர் வழியா குதிச்சு ஓடு,' நாகரா விரட்டினான். 'கல்பனா, குழந்தைகளை, அம்மா மாடிக்கு எடுத்துண்டுபோ. எங்க குரல் கேட்கா திறக்காதே.'

'மாதர் சோத் வாங்கடா இப்ப.'

பிரம்புக்கூடை சங்கிலியை அவிழ்த்து, சுற்றிய தோட்டத்துக்கு ஓடினான். மதில்சுவர் மீது தாவி, கை கிடைத்தவர்கள் மீது வீசினான். வேதவல்லி போலீக போன் செய்தாள். நடுநாயகமாய் ராஜகோபால் குடி சிவந்த கண்களும் உருளைக் கட்டையுமாய் வரு தெரிந்தது

'ராஜகோபால் நில்லு. என்ன வேணும் உன சுந்தரா முன்னேறி பேசத் துவங்க கற்கள் பறந் நாகராஜன் கணுக்காலில் கட்டையால் அடித்து விட் கள். தோட்டத்திலிருந்து கிட்டத்தட்ட தவழ்ந்து வி கூடத்துக்கு வந்தான். தெரு கதவுகளை அடைத் கொண்டு ஜன்னல் வழியே வேடிக்கை பார்ப்பது தெ தது. லட்சுமி நாராயணனுக்கு போன் செய்தார் அ அரை மணியில் உயர் அதிகாரிகளுடன் போலீஸ் வந் ஜீப் பார்த்து கூட்டம் கலைந்து ஓடியது. தெருவின் நின்ற காய்கறிகாரனையும் வேலைக்கார பெண்களை போலீஸ் அடித்து விரட்டியது. போட்டோக்கள் எடு பட்டன. சுந்தரா எழுத்து மூலம் விவரம் எழுதிக் கொ தான். கடை எதுவும் ஆகவில்லை. கடை திற ராஜகோபால் விலாசம் தேடி நடராஜு கொ வந்தான். இரவே ராஜகோபால் சில ஆட்களு பிடிபட, காலைப் பத்திரிகையில் செய்தி வெளியாயி அப்பாவின் போட்டோ தலைக்கட்டோடு வெளியா யிருந்தது



மறுநாள் கடை திறக்கப்பட வில்லை. மூன்று நாள் விடுமுறை என்று சொல்லி விட்டார்கள். போலீஸ் ஸ்டேஷ க்கும் வக்கீலுக்கும் அலைந்தார்கள்.

'கிரிமினல் கேஸ், செயிச்சுடலாம் சுந்தரா. நா ஜெயில் வாங்கித் தரலாம். ஆனா, அக்கவுண்டண்ட் ஒரு ஆள் கூட பர்மனென்ட் இல்லை, ராஜகோபால் கோர்ட்டுக்குப் போனா கஷ்டம். பிராவிடண்ட் ., ஈ.எஸ்.ஐ., எதுவும் இல்லை. உடனே பத்து பாலது கன்பார்ம் பண்ணு. டி.ஏ. குடு. பி.எப்., ல பண்ணு.'

'ராஜகோபால் நிச்சயம் சிவில் கோர்ட்டுக்குப் வான்,' அட்வகேட் பயமுறுத்தினார்.

'எப்படி சொல்றீங்க?'

'அவன் வக்கில் கம்யூனிஸ்ட் தொழிற்சங்க வக்கில்.

'கா எல்லோருக்கும் மாசாமாசம் ஆயிரம் ரூபா பளம் தரேன் சார்,'

'என்ன புண்ணியம்? ரிகார்ட்ஸ் பிராப்பரா இல்லை.'

'ராஜகோபாலனுக்கு கிரிமினல் கேசில் தண்டனை முன் சிவில் கேஸ் நடத்த உரிமை தரவேண்டும். வில், இந்த கிரிமினல் வழக்குக்கு அடிப்படையே ஜகோபால் ஏமாற்றப்பட்டது தான். எனவே, அவரை மீனில் விடுதலை செய்து...'

தினம் போலீஸ் ஸ்டேஷனில்கையெழுத்தும் போடும் நிபந்தனையுடன் ஜாமீனில் வெளியே வந்தான் ராஜ கோபால்.

கடை முடிந்த பின் ஊழியர்களை கூப்பிட்டு கடை வாசலிலேயே பேசினான்.

ஒரு வாரப் பத்திரிகை ஆய்வுத் தகவலில் மங்களம் அண்ட்கோ தகராறு மர்மம் என்று நடுப்பக்க கட்டுரை வெளிவந்தது.

நிர்வாகத்தை கிழிகிழி என்று கிழித்திருந்தார்கள். 'பகல் கொள்ளைக்காரர்கள்,' என்று பட்டம் சூட்டியிருந்தார்கள்.

ஒரு டி.வி. விலை நாலாயிரம் என்று வைத்துக் கொள்வோம் மொத்தமாக வாங்க பத்து சதவிகிதம் அதில் கழிவு. வாடிக்கையாளருக்கு வரியோடு நாலாயிரத்து ஐநூறு வருகிறது. அதற்கு மேல் 15 சதவிகிதம் லாபம் வைத்து தவணை முறையில் நாலாயிரத்து ஐநூறுக்கு. வட்டி பதினைந்து சதவிகிதம் வட்டி, முதல் தவணையோடு வசூலிக்கப்பட்டு இரண்டாயிரம் ரூபாயைப்பத்து தவணையாகப் பிரிக்கப்படுகிறது. அதாவது முன் பணத்துக்கும் கட்டின பணத்துக்கும் வட்டி உண்டு.

யாருடைய திறமையால். கடை முதலாளியாலா, விற்கிற விற்பனையாளரால், சேல்ஸ்மென்னால் அவருக்கு மாதம் எண்ணூறு சம்பளம். நட்டிக்கேட்டால் கிரிமினல் கேஸ்.

ஏன் இவர்கள் அடுக்கு மாளிகை கட்ட முடியாது?

மங்களம் அண்ட் கோவை கொடுங்கோலர்களாய் எழுதியிருந்தார்கள்.

அப்பா பதறிப் போனார்.

நாகராஜன் பத்திரிகையை கிழித்துப் போட்டான். பத்திரிகைக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினான். கடையில் எல்லாவாடிக்கையாளர்களும் தகராறு பற்றி கேட்டார்கள்.

'என்டியம்மா இத்தனை அழகா பொறுப்பா பதில் சொல்றே. உனக்கு எண்ணூறு ரூபா தானா சம்பளம்?



'தவணை முறையில் வாங்கறது நஷ்டம் தான். காசாக இல்லாத குறை வாங்கறோம். மொத்த காசுக்கும் வட்டி போடறானாமே.'

'பத்து பர்சன்ட்தானே போடறோம்,

'ஹாய் முதல்லயே வாங்கிக்கறேளே வட்டி. மாசா மாசம் கட்டறோமோ வட்டி குறையவேண்டாமா? இரண்டாயிரமா பத்தா மாசம் கொடுத்தா வாங்கிப்பேளா? இரண்டு தேதி தள்ளினாலும் கார்ட் அனுப்பறேள். கொள்ளை தான் இது.' வாடிக்கை வயிற்றில் அடித்துக் கொண்டு பேசியது.

பத்திரிகைக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியது தவறு. அந்த வாரப் பத்திரிகை, 'வா, சண்டைக்கு.' என்று. தோள் கொட்டியது. ஒருவார கூச்சலோடு போயிருக்க வேண்டிய விஷயம், 'முகமூடியைக் கிழித்தெறிவோம். முச்சந்தியில் நிற்க வைப்போம் மங்களம் அண்ட் கோ காட்டு தர்பார் மறுபடியும் அம்பலம். என்று பேசப்பட்டது.

சுந்தரா இடிந்து போனான்.

ஆள் ஆளுக்கு இறங்கி எதற்கும் யாரும் முழுப் பொறுப்பு ஏற்காமல் இருப்பதைக் கண்டு கவலைப் பட்டான்.

லட்சுமி நாராயணன் வங்கி, அந்த பத்திரிகைக்கும் பேப்பர் வாங்க கடன் கொடுத்திருக்கிறது. நடராஜ அவரோடு அந்த பத்திரிகைக்கு போனான். சமரசம் பேசினான். மேற்கொண்டுசெய்திவராதிருக்கபத்திரிகை ஒரு லட்ச ரூபாய் நிதி உதவி கேட்டது.

'செட்டில் பண்ணிடலாம் சுந்தரா,' நடராஜ்வற்புறுத்தினான். நாகராஜ், 'கோர்ட்டுல அவனை சாவடிப்போம்டா,' என்றான்.

டெல்லியிலிருந்து மாப்பிள்ளை போன் செய்தான். என்ன ப்ராப்ளம். என் ஷேர் குறையாது இல்லையா?

குறையற மாதிரி இருந்தா வித்ட்ரா பண்ணிப்பேன்,' என்று பயமுறுத்தினான்.

ஒரு லட்சம் காசு கைமாறிற்று. அந்த பத்திரிகை மவுனமாக, வேறு பத்திரிகை கூவ ஆரம்பித்தது.

'பத்திரிகைக்கு லஞ்சம் கொடுத்து அமுக்கப் பார்க்கிற மங்களம் அண்ட் கோ. தொழிலாளர்களுக்கு கொடுத்தால் என்ன அரசு தலையிடுவது அவசியம்.' என்று விளம்பரப் படுத்தியது. தொழிலாளர் கமிஷனர் அலுவல், கடைக்கு வந்தது.

வேறு வழியில்லாமல்பிராவிடண்ட்பண்டும். ஈஎஸ்ஐ உதவியும் வேலை செய்யும் நாற்பது பேருக்கும் தரப் பட்டன. எல்லாருக்கும் சம்பள உயர்வும் ஏழு நாளில் ஒருநாள் கட்டாயம் விடுமுறையும், ஞாயிறு வேலை செய் தால் ஓவர் டைம் காசும் கொடுக்கும்படியாயிற்று.

'தலைவர் ராஜகோபால்வாழ்க. என எதிர் சுவரிலும் தெரிய 'மங்களம் அண்ட் கோ அடி பணிந்தது. தமிழ அரசுக்கு நன்றி நன்றி.' என்கிற போஸ்டர் கடை வாச லிலும் ஒட்டப்பட்டன.

சுவரைக் கல் சுவரில் ஒட்டப்பட்ட போஸ்டரை நடராஜரு கிழித்து எறிந்தான்.

பிற்பகல் இடைவேளையில் அக்கவுண்டண்ட் தவிர எல்லா ஊழியர்களும் வெளியேறினர். சுவரொட்டி கிழித் ததற்கு எதிர்ப்பு வதவுலித்தனர்.

கடை மூடப்பட்டது கிட்டத்தட்ட 37 லட்ச ரூபாய் வெளியேயிருந்து வசூல் ஆக வேண்டியிருந்தது. 'கட்ட வேண்டிய காசை கிரிரோட் வீட்டு விலாசத்துக்கு வந்து கட்டலாம்.' என்று போர்ட் எழுதி வைக்கப்பட்டது.

நூற்றுக்கு பத்துபேர் வீட்டு வசாலுக்கு வந்து காசு கட்டினார்கள். வேதவல்லி வராந்தாவில் சேர், டேபிள் போட்டு காசு வாங்கி அட்டையில் கையெழுத்திட்டு



கொடுத்தான். நடராஜாவும், அனிதாவும் இதர வாடிக்கை யாளர்களைப் பார்த்து காசு வசூலித்தனர்.

கடைக்கு எதிர் சாரியில் தவணை முறைக் கடை விரைவில் திறக்கப்படும் என்று துணியில் எழுதி விளம்பரம் செய்தார்கள்.

மாப்பிள்ளை நேரே வந்து தன் பங்கு தொகை கேட்க, அப்பா வீட்டு காசையும் வசூலையும் சேர்த்து ஏழு லட்சம் ரொக்கமாய் அவரிடம் கொடுத்தார்.

வங்கிக்கு பணம் கட்ட முடியாமல் போயிற்று வட்டி விஷம்போல் ஏறிற்று.

தொழில் சங்க கோர்ட்டில் ஒரு மாதம் வழக்கு நடந்து வேலை செய்த சகலருக்கும் மூவாயிரம் ரூபாய் நஷ்டஈட் டோடும் அம்மாதம் வேலை செய்த தேதிவரை சம்பளமும் தர உத்தரவாயிற்று.

சுந்தரா கோர்ட்டில் காசு கட்டினான்.

'யார்டா அது எதிர்பக்கம் புதுசா கடை போடறது?'

''தெரியலையா?''

''தெரிஞ்சுண்டு வா!''

சுந்தரா விசாரித்ததும் அதிர்ந்தான்.

''நாகராஜு, யார் தெரியுமா எதிரே கடை போடறது.''

''அந்தத் தேவடியா மல்லிகா!''

''எப்படி தெரியும் உனக்கு?''

''கிளப்ல அவனையும் அந்தப் பொம்பளையும் பார்த்தேன். ஹெல்ப் பண்ணுன்னு கெஞ்சினான்.''

''நாகராஜு''

''சரி, போனா போறதுன்னு நான்தான் சில வழி சொல்லிக் கொடுத்தேன்...''

இப்ப...நாம கல்யாணம் பண்ணி வெச்சது நமக்கே எதிராய்டுத்து.

'அப்பாக்கு தெரிஞ்சுது ரொம்ப வேதனைப் படுவார்.'

''சொல்லதே''

''எப்படிடா? கேட்பாரே.''

''ஏதாவது பொய் சொல்லி சமாளி.''

சுந்தராவால் பொய் சொல்ல முடியவில்லை. சுந்தரா கிளப்புக்குப் போனான். மல்லிகா புருஷன் பெயரைச் சொல்லி விசாரித்தான். அப்படி யாரும் இல்லை என்று பதில் வந்தது.

கலவரம் நடந்த தேதியில் சுந்தரா கிளப்புக்கு வந்தானா என்று பார்த்தான். இல்லை. வரவில்லை.

அப்படியானால்...

''அப்பா சகலமும் சொன்னான்.''

''அப்பா தலைகுனிந்து உட்கார்ந்திருந்தார்.''

''நேரே போய் விசாரி.''

''இதுக்குப் பின்னாடி ஏதோ ஒரு கை இருக்கு ரகசியமா நமக்கு எதிரா விளையாடறது. அது கண்டுக்காம போய் மல்லிகாவை குசலம் விசாரி. தந்திரமா நடந்துக்கோ. நாகராஜ் அங்க வந்தானான்னு தெரிஞ்சுக்கோ'

''அப்பா''

''சுந்தரா...நான் எது சொன்னாலும் அதுக்கு அர்த்தம் இருக்கும். வேதவல்லிக்கு முன்னாடி நாகராஜ் வால அலட்ட முடியலை. அவன் அலட்றதுக்கு இடம் கிடைச்சா அலட்டம இருக்க மாட்டான்.'

''தப்பா நடந்துண்டிருப்பான்னு நினைக்கிறியா?''

''வாய்ப்பு இருக்கு.''

சுந்தரா மௌனமாய் அப்பாவைப் பார்த்தான்.

''என்னை கைத்தூக்கி விடக்கூடாதான்னு பொம்மனாட்டி கேட்டா, ஆணுக்கு ஆசாத்திய பலம். பெண் வெட்கப்பட்டா ஆணுக்கு காமம் வரும். அது நின்னா



ரோஷம் வரும். அலட்சியம் பண்ணா வஞ்சனை வரும். பெண் ஒரு சக்தி. கிரியா ஊக்கி என்ன கிரியைங்கறது தான் முக்கியம்.''

''அப்படி இருந்துதுன்னு வெச்சுக்கோ ஏதோ தப்பு இருக்குது. நான் என்ன பண்ணனும்.

''மங்களம் அன்ட் கோவை கோடு போட்டு பிரிச்சுடுவேன். துண்டு துண்டா பண்ணிடுவேன். நோமோர் மங்களம் அன்ட் கோ. அது மூணு பெயரா மூணு முதலாளியா மாறும்.''

''நான் கிளம்பறேன்பா.''

''போ. அதுக்கு முன்ன வேதவல்லியை என்கிட்ட அனுப்பு அவளோட பேசணும்.''

''ஐயோ, எதுக்கு?''

''என் சந்தேகம் சொல்லணும்.''

''என்னப்பா இது?''

''தப்பு நடந்தா நீ பிரிச்சுண்டு போகலாம். அவ பிரிஞ்சு போக முடியுமா? போனா நன்னாயிருக்குமா? பிரிஞ்சுடும் ஜாக்கிரதைன்னு சொல்ல வேண்டாமா?''

''தப்பு நடந்த மாதிரி பேசறியே?''

''நடந்திருக்கணும். என் மனசு சொல்றது.''

அந்த 'வீட்டுக்கு இரண்டாயிரம் ரூபாய் வாடகை இருக்கும். முழு வீடு, வாசலில் கார். கதவு திறக்க வேலை ஆட்கள் என்று டாம்பீகம் தெரிந்தது.

''நான் சுந்தரா வந்திருக்கேன்னு சொல்.''

பதினெழு வயசுப் பெண் விசாரிக்க, சொல்லி அனுப்பினான்.

ஹாலில் ராதை கிருஷ்ணர் சிலை. சுவரில் பெரிய வெங்கடாஜலபதி. லெதர் டச் சோபாக்கள். ஷோகேசில்

சின்னச் சின்ன சாம்பிள் மது பாட்டில்கள்.' கதவில் ஆர். எஸ். ராமோன் என்று எழுதியிருந்தது.

அந்த ஆள் மல்லிகாவின் புருஷன் வெளியே வந்தான்.

''அடடா வாங்கோ.''

கை கூப்பினான்.

அவன்தான். உரத்தொழிற்சாலை ஆள்தான். பருத்து அகண்டு போயிருந்தான்.

'எப்படி இருக்கே? சௌக்கியமா? தங்கராஜு ரிலேஷன்ஸ் கடை திறக்கப் போறியாமே! ஆமா, இது என்ன ராமோன்?''

ராமன் ஸ்பெல்லிங் நியூமராலஜிபடி மாத்திண்டேன்.

''பேரு வேற இல்லயோ கல்யாணத்தும் போது?''

''ஆமா...ராசிப்படி மாத்திண்டேன்.''

''வெரிகுட். நாகராஜு சொன்னான் உன்னையும் மல்லிகாவையும் பார்த்ததா.''

அவன் முகத்தில் சின்ன திகைப்பு ஓடிற்று.

''மல்லிகா நன்னாருக்காளா? அப்பவே அவ மேலே எங்களுக்கு ரொம்ப பிரியம். ரொம்ப சூடிகை. அப்பாவுக்கு பயந்துண்டு நாங்க அதிகம் பேசமாட்டோம் எப்படி இருக்கா?''

''பாருங்களேன் மல்லிகா...''

குரல் கொடுக்க வெளியே வந்தாள். கதவருகே நின்று வேடிக்கை பார்த்திருப்பாள் போல, சட்டென்று வெளிப்பட்டாள். 'வாங்கோ' என்று கரம் குவித்தாள்.

''அடடா மாறிப் போய்ட்டியே''

புடைவைதான். உடுத்தின விதத்தில் புத்தி தெரிந்தது. வெற்றிலை மென்று சிவந்த உதடும், பெரிய பொட்டும் சிறிய திருநீறும், காதில் வைரமும், இடுப்பில் வெள்ளி சதங்கையும் அகன்று வெளிச்சமாய் இடுப்பும், நெஞ்சில் நிற்காத தலைப்பும்.



''வா உட்கார்.''

சுந்தரா தன் பக்கம் தட்டிக் காட்டினான்.

வந்து உட்கார்ந்தாள்.

சுந்தரா திரும்பி அவளை உற்றுப் பார்த்தான். அவள் மெல்லிய சிரிப்புடன் பதிலுக்குப் பார்த்தாள்.

''மல்லிகாவா இது? இத்தனை அழகு எங்க ஒளிச்சு வெச்சிருந்தே?''

''போங்கோ சுந்தராண்ணா'' சிணுங்கினாள்.

''போய்டுவேன், சுந்தராண்ணா அது இதுன்னு கூப்பிட்டா போய்டுவேன். ஏதோ உதவி பண்ணலாம்னு வந்தா...''

''ச்சீ...'' தோள் தொட்டாள்.''

''என்ன சாப்பிடறேள்? ஹாட் ஆர் கோல்ட்?''

''காப்பியா, மோரான்னு கேட்கறியா? அந்த பாட்டில் எல்லாம் ஷோவுக்கா?''

''ஐயோ அதெல்லாம் சாப்பிடுவேனா? நான் இவரையே திட்டறேன் உங்களுக்கு எதுக்கு?''

''பிரச்னை ஜாஸ்தி மல்லிகா.''

''பிசினஸ்னாலே பிரச்னைதான்'' அவன் பதில் சொன்னான்.

''என்ன தைரியத்துல இதுல இறங்கற ராமா? ராமான்னு கூப்பிடணுமா ராமோன்னு...''

''அது எழுத மட்டும்தான். ராம்னு கூப்பிடுங்கோ. உங்க ஒபீனியன் என்ன...'' மல்லிகா எழுந்து உள்ளே போனாள்.

''காப்பிடல் நிறைய வேணும்... மெள்ள மெள்ளத் தான் போட்டது திரும்பும். கண்கொத்தி பாம்பா இருக்கணும்.''

காப்பிடல்பற்றி கவலையில்லையாம். தூத்துக்குடியில் எலச்சீட்டு நடத்தி ஏக லாபமாம். ஆறு பேரிடம் ரண்டு உண்டியல் வாங்கி கையில் நல்ல கேஷ் வைத்திருக்கிறானாம்.

எவர்சில்வரிலிருந்து ஹீட்டர்வரை ரேடியோ டேப் ரிகார்டரிலிருந்து படுக்கை தலையணை வரை புதுசாய் எந்த ஐட்டம் மார்க்கெட் வந்தாலும் தவணையில் கிடைக்குமாம்

''நீ சொல்ற ஐட்டம் நாகராஜு கண்ட்ரோல் அவனை கேளேன். கைட் லைன்சுக்கு,'' மல்லிகா பேச்சு கேட்டபடி மறுபடி உள்ளே வந்தாள்.

''அவர்தான் ஹெல்ப...'' மல்லிகா அவசரப்பட்டு உளறினாள். அவன் முகம் கூர்மையாகி உற்றுப் பார்த்தான்.

''என்கிட்ட ஸ்மூல் ஐட்டம் கேளு சொல்லித் தரேன். ஒரு ரிக்வெஸ்ட். நான் வந்தது நாகராஜுக்கு தெரிய வேண்டாம் அப்பா காதுக்கு போக வேண்டாம். நான் சொல்றது புரியறதா?''

''அதைத்தான் நாகராஜும் சொன்னார்,''

''வெரிகுட். ஏதோ குடிக்கக் கொண்டு வரேன்னா விசேஷமா. வெறும் கையோட வரே.''

''கடைக்கு அனுப்பியிருக்கேன். ஸ்வீட்ஸ் ரீகா சாப்பிடுவேளோன்னோ?''

''தாராளமா உன் புருஷன்கிட்ட சொல்லிட்டேன் ஸ்மூல் ஐட்டம் முழுக்க நான் ஹெல்ப் பண்றேன்னு எப்படி?''

''ரொம்ப தேங்க்ஸ் நீங்க கடைக்குப் போய் வேலை நடக்கறது பார்க்க வேண்டாமா. இங்க உட்கார் திருந்தா எப்படி? சுந்தரராஜஉக்கு நான் கம்பெனி கொடுக்கறேன்'' புருஷனை விரட்டினாள்.

''ஆமா சுந்தரா, எனக்கு வேலை இருக்கு.''

''இல்லை நானும் இன்னொரு நாள் வரேன்.''

''நோ...நோ...இருந்து சாப்டுட்டு போகணும் மல்லிகா! இருக்கா அவ பாத்துப்போ.'' கண் சிமிட்டினான். வெளியேறினான்.



''எனக்கு காட்ரெஜ் கான்டாக்ட் யாருன்னு சொல் ங்கேளேன். நோட் பண்ணிக்கறேன்.'' நோட்டுப் த்தகமும் பால்பாயிண்ட் பேனாவும் எடுத்து நெருங்கி ட்கார்ந்து கொண்டாள். இடது பக்க மார்பு முழுவதும் ம்பித் தெரிந்தது.

துளசிமாடம் சுற்றும் மல்லிகாவா இவள்? என் ழந்தைக்கு சோறு ஊட்டி பாட்டுப் பாடிய பெண்ணா ளள்? அப்பா பூஜைக்கு மலர் பறித்து கோலமிட்டு ங்கி நின்ற குழந்தையா இவள்? காசு வேண்டும், அவசியம். ஆனால், இப்படி திறந்துபோட்டா பாதிக்க வேண்டும்,

''என்ன பாக்கறேள்?'' முகத்தில் கை வைத்துத் ம்பினாள்.

''கொண்டா எழுதித் தரேன்'' நோட்டு பிடுங்கி கம் புரட்டினான்.

நாகராஜன் கையெழுத்தில், பதினாறு கம்பெனிகளின் யர், விலாசம், முக்கிய ஆள், போன் நெம்பர்கள் ல் எழுதப்பட்டிருந்தன.

''அடி சக்கை. நாகராஜு உன்கிட்ட முழுக்க ண்டரா? பெரிய ஆள் நீ.''

''பாவம் அவருக்கு பொண்டாட்டி சரியில்லை. ந்த முழுக்க ரணம்.''

''ஆமா. காசுள்ளவோ!''

''அதுக்காக புருஷனை துச்சமா மதிக்கணுமா? னை சந்தோஷப்படுத்த தெரியலைன்னா நீ என்ன ண்டாட்டி? உனக்கெதுக்கு...?' இதுவும் உதவும் று அவள் சொன்னதை மட்டமான பெண்கூட ல்ல மாட்டான்.

''சரி விடு.''

''என்ன விடு, எனக்கு டீடெயில்ஸ் வேணுமே,'' ளில் சாய்ந்து கொஞ்சினாள்.

புரிந்துவிட்டது. அப்பாவின் கணக்கு சரியெ புரிந்துவிட்டது. இனி இங்கே வேலையென்ன?

எழுந்தான்.

''என்ன, பாட்டில் வருதே... எழுநதுட்டீங்க?''

''மல்லிகா, மங்களம் அண்ட் கோ கடும் உழைப் உண்டானது. நேர்மைல வளர்ந்தது. அதை உன் புட யால மூடிட முடியாது. நீ சௌகர்யமானது, எவக்கு தோஷம். இந்த சௌகர்யம் வளரணும்னா நேரடிய காம்படீஷனுக்கு வா. புத்திதான் வியாபாரத்துல மு முதல். உடம்பு இல்லை.''

''என்ன சொல்ற சுந்தரா?''

''பேர் சொன்னே பளார்ன்னு அறைஞ்சுடு நாயே. உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்றியா? சோத்துல வளர்ந்தவடி நீ.''

''தப்பா இனி ஒரு மூவ் பண்ணினே. தொலை வேன்! எனக்கு கோவம்வராது. கோவம் வந்தது, எவ தாங்க மாட்டீங்க.''

நோட்புக்கிலுள்ள பக்கங்களை கிழித்து வை போட்டுக் கொண்டான்.

''போய், பாம்பே, டெல்லின்னு அலைஞ்சா தெரியும், இது எவ்வளவு கஷ்டமான வியாபாரம் கட்டில்ல உட்கார்ந்து வியாபாரம் பண்றியா? எத் நாள் பண்ணுவே? பழகின தோஷத்துக்கு விட வால் ஆட்டினே ஒட்ட நறுக்கிடுவேன். சுபர்தார்.''

உதறி வெளியேறினான். தோட்டம் தாண்டி திறந்தான். அவள் ஹால் விட்டு அறைக்கு ஓ தெரிந்தது. வாசலில் வரவேற்ற பதினெட்டு வயசுப் தோட்டக் கதவு மூட ஓடி வந்தது. சுந்தரா காரில் தோட்டக்கதவு கொக்கியிட்டது. சுந்தராவையே பார்த்தது.



'என்ன?'

'எனக்கு உங்க கடைல வேலை தருவேளா? பெருக்கற லையானாலும் பரவால்லை.'

'ஏன்?'

'எனக்கு இங்க இருக்கப் பிடிக்கலை. செத்துடலாம் ாலருக்கு. ஹிம்சை படுத்தறா என்ன...'

சுந்தரா யோசித்தான்.

காரின் பின்கதவு திறந்தான்.

'வா' என்றான்.

அந்தப் பெண் தோட்டக்கதவுதிறந்து மறுபடிகொக்கி டு ஓடிவந்து காரில் ஏறிற்று. கார் கதவு மூடி, சுந்தரா நோக்கி வண்டியைச் செலுத்தினான்.

அப்பா வராண்டாவில் காத்திருந்தார். சுந்தரா ண்ணோடு இறங்குவது பார்த்து புருவம் சுருக்கினார்.

சுந்தரா கசங்கின நோட்டுப் புத்தகப் பேப்பரை பாவிடம் காட்டினான்.

'நாகராஜனா?'

ஆமென்று தலையசைத்தான்.

'இது யார்?'

முழு விவாம் சொன்னான். அப்பா முகம் இருண்டார்.

'கெஞ்சித்துப்பா. விட்டுவர மனசில்லை.'

'மிசஸ் சாவித்திரி வைத்தின்னு ஒரு லேடி, சமூக வகி இருக்கா. அவாளுக்கு போன் பண்ணு, இந்த ண்ணை அவகிட்ட தற்சமயத்துக்கு அனுப்பு.'

'இங்க வா, அதோ ஒரு பெரியவர் படம் இருக்கே, யார் தெரியுமா?' அருகே அந்த பெண்ணை பிட்டார்.

'தெரியும்.'

'அவர் சத்தியமா உனக்கு இந்த வீட்ல யாராலையும் கெடுதல் வராது. உனக்கு சின்ன வயசு. அதனால உன்னை ஒரு சமூக சேவகிகிட்ட அனுப்பறோம். எங்க பேர்ல தப்பு வரக்கூடாதில்லையா? எங்க சார்பு சாவித்திரி வைத்தி உன்னை ஜாக்கிரதையா பார்த்துப்பா கவலைப்படாம போ. நான் இருக்கேன்.'

அந்தப் பெண் விழுந்து வணங்கிற்று.

அப்பா 'கிருஷ்ணார்ப்பணம்' என்றார்.

தள்ளாடி உள்ளே நடந்து போனார். அந்த தள்ளாட்டம், அப்பா உடைந்து போனதைத் தெளிவாய்க் காட்டிற்று.

## 18

வேதவல்லி, கொல்லைப்பக்க பவழமல்லி செடி அருகே, பழைய கான்க்ரீட் கட்டை மீது உட்கார்ந்திருந்தாள்.

கண்கள் கலங்கியிருந்தன. அழுதிருப்பாள் போலத் தெரிந்தது. பின்பக்க கதவு விரியத் திறந்து வைத்து அவளருகே போய் உட்கார்ந்து கொண்டான் சுந்தரா.

அவள் எழுந்திருக்க முயற்சி செய்ய, 'வேண்டாம் உட்கார்' என்றான்,

'என்ன அப்பா சொன்னபடிதான்?'

'ம்.'

'பிசிகல் காண்டக்ட் இருந்திருக்க?'

'இருந்திருக்கணும். வாய்ப்பு இருக்கு.'

'இதுக்கெல்லாம் அவதான் காரணமா?'



'அதுவும் தெரியலை. ஆனா, அதுக்கும் வாய்ப்பிருக்கு. எல்லா தயாரிப்பாளர் பெயர், காண்டாக்ட் ஆள், பிஸினஸ் டீல் பண்ற விதம், பர்ஸென்டேஜ் ஆப் பிராபிட் நாம இஞ்ச் இஞ்சா போனதை ஒரே நோட் புக்ல எழுதி கொடுத்துட்டான். அவன் குடிக்கறானா? வேதவல்லி?'

'தெரியலை பீடா போட்டுண்டுதானே வரார் தெனமும்.'

அப்பா என்ன சொன்னா?

'ரொம்ப திட்டினா. உனக்கு அவன் சரியில்லைன்னு படறதா? வெட்டி விலகிப் போயிடு. வேற கல்யாணம் பண்ணிக்கோ. அட்ஜஸ்ட் பண்ணி போறயா. அவனை உன் கண்காணிப்புல வை. அவன் ஒரு பிராஜெக்ட். நீ ஒரு பிராஜெக்ட்ன்னு தனித்தனியா அலையறதுல லாபம் இல்லை. இன்னும் பிரிவு அதிகமாகும் அவனை உன் பிராஜெக்ட்டுக்கு கொண்டா. இல்லை அவன் வேலையில துணையா இரு. இப்படியே திக்குக்கு ஒண்ணா போனா. அவன் தேவடியா வீட்டுக்கு போறானே. நான் போனா என்னன்னு உனக்கு படும்?' மனசுல பட்டா செய்கைக்கு பழியாகாது.'

'ச்சே.'

'இல்லை எனக்கு கோபம் வரல. ஆனா அப்பா வேற ஒண்ணு சொல்லி திட்டினார்; அது வருத்தமாயிடுத்து.'

'என்ன?'

'எல்லாத்துக்கும் சுந்தராவை பர்மிஷன் கேட்கறே. அவனை சப்போர்ட்டுக்கு தேடற, அவனை வெளிப்படையா ஒஹோங்கற. உனக்கு ஏன் அவன் மேல மயக்கம்னு கேட்கறார்?' உதடு கோணி கண்களில் ஜலம் பெருகிற்று

'உங்களுக்கு தப்பா படறதா சுந்தரா, என் பிஹேவியர்?'

'ச்சேச்சே...அப்பா...'

'இல்லை. அப்பா தப்பு சொல்ல மாட்டார். உங்க கம்பீரம் என்னை அட்ராக்ட் பண்ணிடுத்து. இந்த வீட்ல ஆம்பளைங்கறது நீங்கதான். உங்ககிட்ட எல்லாத்துக்கும் வந்து கன்சல்ட் பண்றதும் நிஜம்தான். ஆனா, அது என் புருஷனை உதாசீனம் பண்றதுக்கு இல்லை. அவரை இன்சல்ட் பண்ண நான் நினைக்கவேயில்லை.

'தெருவுல போறவன் பேசினதுக்கு என்னை அவர் அடிச்சதும், எவன்டா என் வீட்டு பொண்ணை தப்பு சொல்றதுன்னு? நீங்க போனதும் மடுவுக்கும் மலைக்கும் உண்டான வித்தியாசம். இந்த இரண்டு பேர்ல யாரை ஆம்பளையா பொம்மனாட்டி நினைப்போன்னு குழந்தை கூட சொல்லிடும்.

'ஆனா, இதனாலதான் சகலமுன்னு அப்பா சொல்றது எப்படி? அதுதான் தாங்கலை எனக்கு. நான் எப்படி குத்தவாளி? அதுதான் புரியலை. நான் அறுத்துக் கட்டுமா சுந்தரா? போறும் இந்த வீடுன்னு போய்டட்டுமா? என் புருஷன்கிட்ட ஆயிரம் குறை இருக்கு. வெளியே சொன்னா வெட்கக்கேடு. உடம்பிறந்தான் கிட்டகூட சொல்ல முடியாது. 'ஆனா மங்களம் அண்ட் கோ வீட்டு மருமகள்ங்கற அந்தஸ்துல எல்லாம் பொறுத்துக்கறேன். இது, இந்த வீடு அழகான ஆலமரன்னு ஒண்டிக்கறேன். நீ வேண்டாம் போன்னா...'

வாய்விட்டு அழத்துவங்கினாள்.

'என் படிப்பு கர்வத்தை என்னிக்காவது காமிச்சிருக்கேனா? எங்கப்பா பணத்தை, செல்வாக்கை என்னிக்காவது உபயோகப்படுத்தியிருக்கேனா? நான் கேட்டேனா இவர்கிட்ட, எங்கப்பாவும், பத்திரிகையை நமக்கு ஆதரவா எழுதச் சொல்லட்டுமான்னு? ஊர் முழுக்க நான் பத்திரிகை ஆசிரியர் மாப்பிள்ளைன்னு தெரியும். இது எடுபடாதுன்னார்.'



'எனக்கு வெறுத்துப் போய்டுத்து சுந்தரா. இவர் ஏதோ பண்ணிட்டு என் தலைல விழறது. எனக்கு தண்டனை கிடைக்கிறது. எந்தத் தேவடியா வீட்டுக்கு வேணா நான் கூட்டிக் கொண்டு போய் விடறேன். கம்பெனியை காட்டிக் கொடுக்கறது அதுக்கு எதிரோ இவரே வேலை செய்யறதும் என்னாலையா நடக்கறது? என்ன காரணம்? ஏன் அப்பா இப்படி பேசறார்?'

கண்ணில் ஜலம் வழிய புலம்பினாள்.

'வேதவல்லி' சுந்தரா அடிக்குரலில் மெல்ல மிருதுவாய் விளித்தான் 'மத்தவங்க எமோஷனை நாம வாங்கி அப்படியே பிரதிபலிக்கறது நாம முட்டாள்கள் இல்லை. கோவத்துக்கு கோவம், துக்கத்துக்கு துக்கப்படறது சாதாரண ஆட்கள் செயல், புத்தியுள்ளவா எதிராளி கோவத்தை புரிஞ்சு நிதானமா நடக்கணும் இது எமோஷனல் நேரம். யாரோ சொல்லின்டாளேன்னு துடிக்கறதுக்கு நீ என்ன சின்னக் குழந்தையா, விடலைப் பெண்ணா?

'கம்பெனி மறுபடி திறக்கணும். அதுக்கு என்ன வழி. யோசனை பண்ணுபிரிஞ்சுபோன்னுட்டா, போய்டுவியா. அப்பா திடமா இல்லை. வயசாக வயசாக அவருக்கு கோபம் வர்றது உண்மையா இந்த நிலைக்கு அவர் கோவமும்காரணம்எப்பவோ ஒருநாள்வெடிக்கவேண்டிய விஷயம் இப்படி வெடிச்சது. வெடிச்சதுல பல நன்மை இருக்கு. இந்த விஷயத்துக்கு பின்னாடி பெரிய சூழ்ச்சி இருக்கு. வேதவல்லி. அதை கண்டு பிடிக்கணும். இப்ப நீ போகாதே. போகக்கூடாது. உன் வேலை என் வேலை. கம்பெனியை சரிபண்ணறது. ப்ளீஸ் பொறுத்துக்கோ. எனக்காக பொறுத்துக்கோ.

'தேவையில்லாத இடத்துக்குபடியேறிநான்போனேன் பொய் சொல்லி சிலது கண்டு பிடித்தேன். எனக்கு இஷ்டமில்லை. ஆனா செய்ய வேண்டியிருந்தது. மல்லிகாமாதிரி

வீட்டுக்கு நான் படியேறணுமா? இது விதி. அவ உடம்பு விக்கற பெண். அவளை மிரட்டிட்டு வரணுமா? கடிக்க வரபோது செய்யதான் வேண்டியிருக்கு நான் வேஷம் போட மாட்டேன்னா ஜெயிக்க முடியுமா? பொறுமையா இரு வேதவல்லி. நாம ஜெயிப்போம். வித் காட்ஸ் கரேஸ்.

'நீ என் பேர்ல வச்சருக்க மதிப்பு எனக்கு தெரியும். அதே மதிப்பை உன் பேர்ல நான் வச்சருக்கேன். நீ என் தம்பி பொண்டாட்டி நீ இல்லை. என் சிநேகிதி. கெட்டிக் கார சிநேகிதி. கண்ணை துடைச்சு எழுந்து நின்னு சண்டை போடு. எழுந்திரு வேதவல்லி. ஐ நீட் யூ நவ்.'

வேதவல்லி முகம் துடைத்து எழுந்து நின்றாள்.

கல்பனாவுக்கு பதிலா நான் உனக்குபொண்டாட்டியா இருந்தா சுந்தரா, நான் வித்தை காட்டி இருப்பேன். என் சக்தி இவாளுக்கு புரியலை.'

'எனக்கு புரியறது வேதவல்லி, ஆனா, ஒரு வயசுக்கப் புறம் கனா காண்றதை நிறுத்திடணும். நம்ம சூழ்நிலை நம்ம யோக்கியதைய நாம சரியா எடை போட்டுக்கணும். கனவு—விடலை சமாச்சாரம். எப்பவுமே விடலையா இருக்க முடியாது. இருந்தா கஷ்டம் வரும். இனி என்ன? யோசனை பண்ணு போ.'

வேதவல்லி அவனை உற்றுப்பார்த்தாள். சுந்தராவின் வலக்கையை வாங்கித் தன் உள்ளங்கையில் தாங்கினாள். குனிந்து, அவன் புறங்கையை முத்தமிட்டாள்.

'நன்றி என் சிநேகிதனே நன்றி. கொழுகொம்பால் மட்டும் செடிகள் வளர்வதில்லை. அது உயர ஒரு உபாயம் தான், மண்ணும், நீரும் சூரியனுமே கொடியை வளர்க் கின்றன. என் புத்தி எனக்கு மண். இந்த வீடு எனக்கு நீர். நீ என் சூரியன். நன்றி நண்பனே' நிதானமாய் ஆங்கிலத்தில் பேசினாள்.

இடம் விட்டு அகன்றாள்.



இலையனைத்தும் பார்த்துக் கொண்டிருந்த அனிதா. பனிச்சென்று தன் அறை ஜன்னலில் இருந்து. பின் வாங்கி னாள். நகம் கடித்து குழம்பினாள்.

ரேக்ளா ரேசில் முதலில் வந்து கொண்டிருந்த வண்டியின் கடையாணி தெறித்து, ஓட்டுபவன் முகத்தில் அடிப்பட்டது. வலியில் அவன் துடிக்க, குதிரை மிரண்டு கடிவாளம் அறுத்தது. குதிரை அறுபட வண்டி தரையில் சரிந்து பின் வண்டியில் இடிபட்டு உடைந்து. உருண்டு உடம்பு சிராய்ந்தது. விழுந்தவன் எறும்பு புற்றுமீது கிடந்தான்.

அவன் எழுந்து ரத்தம் துடைத்து, எறும்புகளை தட்டி விட்டு, கட்டுப்போட்டு, குதிரையை தேடி, மறுபடி வண்டி கடையாணி சரியாய் அடித்து, பந்தயத்தில் கலந்துகொள்ள வேணும். ஜெயிக்க வேண்டும். ஜெயிப்பது முடியுமா?

சுந்தரா அந்த கான்க்ரீட் கட்டையின் அப்படியே படுத் தான். காலம் உதவி செய்யும் என்று நம்பினான்.

என்ன செய்யவேண்டும் என்று யோசனை செய்தான். உள்ளே திட்டங்கள் மடமடவென்று தோன்றின.

நாகராஜன் ஒரு ஸ்லிப். அதை பெரிதாக்கக்கூடாது. மல்லிகாவுடையது வலை. அதை அறுத்தெறிதல் அவசியம்.

ஓட்டு மொத்த மேற்பார்வை கடையில் இல்லை. முழுவாய் பிரித்தது தவறு. அப்பா இடத்தை யாரும் நிறைவு செய்யவில்லை. வேதவல்லியை என்னிடத்தில் உட்கார வைத்துவிட்டு, மேற்பார்வைக்கு நானும் அனிதா வும் என்று வரவேண்டும். அரை மணிக்கு ஒருமுறை நானோ, அனிதாவோ, கடையைச் சுற்றி வரவேண்டும். மறுபடி புது ஆட்களை சிறிது அதிக சம்பளத்தில் நியமிக்க வேண்டும். ஒரு வருடம் ப்ரோமேஷன் பிறகு டி.எ ஸ். எஸ். ஐ தரவேண்டும். தொழிற்சாலை விதிகளுக்கு

உட்பட்டு சம்பளம் தரவேண்டும் யூனியன் துவங்கினால் உடனே கலைக்க வேண்டும். ராஜகோபால் மறுபடி தலை தூக்காமல் செய்யவேண்டும். மல்லிகாவின் திட்டம் என்ன என்று கண்டுபிடிக்க வேண்டும். எப்படி? அந்த பெண்ணிடம் விசாரிக்கவேண்டும். அந்த ராமன் யார் என்ன? ஏது இவ்வளவுபணம்? ஏன் பெயர் மாற்றினான்? தூத்துக்குடியில் என்ன செய்தான்? வங்கியில் கடன், வட்டி அப்படியே நிற்கிறது. உடனடி காசு வேண்டும். கடைவிட்டு விலகி மாப்பிள்ளை போனது நல்லது. உடனடியாய் நாலுலட்சம் காசுவேண்டும். யாரை கேட்பது? வேதவல்லி நகப்பனாரைக் கேட்கலாமா? எதிர்பக்க பிளாட் கட்டின கட்டிடம் அவரிடம் அடமானம் வைத்து வாங்கலாமா? கேட்டுப் பார்ப்போம் இல்லையெனில் சேட், மார்வாடி என்று போகலாம் எப்படியாவது கடை வரும் வாரம் திறக்கவேண்டும். இது யுத்தம் எழுந்திரு. குந்தியின் மைந்தா போர் செய்! காஞ்சிபுரம் போய் பெரியவரை பார்க்கலாமா? வேண்டாம். ஜெயித்துவிட்டு போவோம். இங்கிருந்தே மனசில் அதனை தியானிப்போம்.

சுந்தரா எழுந்து உட்கார்ந்தான். சம்மணமிட்டான். கண்கள் மூடினான். தும்பையாய் நரைத்த தாடியோடு தாமரை கண் முன்னே வந்து நின்றது. கண்கள் தாழ்ந்து நிலம் நோக்கியிருந்தன.

குருவே சரணம் என்று மனசுக்குள் கைகூப்பினான்.

என்னைப் பார், என்னைப் பார். என்னை ஒரே ஒரு முறை பார் என்று கெஞ்சினான். உன் அருள்மிகுந்து ஊடுருவி என்னைப் பார். அடிபட்டுக் கிடக்கிற என் ரணங்கள் மறையும் வண்ணம் ஒருமுறை பார். எனக்கு பலம் தரும் வகையில் உன் சக்தியை கண்களின் வழியே என் நெஞ்சுள் அனுப்பு.

சத்குருவே, சரஸ்வதியே, சந்திரசேகரா, சங்கரா, என் தெய்வமே என்னைப் பார். கெஞ்சினான்.



தாமரை முகம் நிமிர்த்தி அவனைப் பார்த்தது. ஜொலிக்கும் வைரங்களாய் அந்தக் கண்கள் கண்ணாடிகளுடன் அவனை நோக்கின. தலை உயர்ந்தது. அருள் முத்திரை காட்டியது.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே!

அன்பினில் விளைந்த ஆரமுதே!

மனசு கேவி அழுதது.

''இன்னும் ஒண்ணு இருக்கு. இன்னும் ஒண்ணு இருக்கு''

யாரோ கூவினார்கள்.

சுந்தரா கண் திறந்தான்.

அடுத்த வீட்டு கொல்லையில் மாங்காய் அறுத்துக் கொண்டிருந்தார்கள். குறடு போட்டு கிளையை உலுக்கினார்கள்.

சுந்தரா வீட்டுப்பக்கம் உள்ள கிளையும் ஆடியது. மாங்காய் ஒண்ணு தட் என்று தரையில் விழுந்து இரண்டு துள்ளு துள்ளி மூணாவது துள்ளலுக்கு இவன் முகவாயில் வந்து மோதியது. மோதிய இடம் வலித்தது.

சுந்தரா மாங்காயை குனிந்து எடுத்து எழுந்து போய் அடுத்த வீட்டு சுவர்க்கட்டையில் வைத்தான். முகவாய் தடவி உள்ளே வந்தான்.

வாசலில் யாரோ தோட்டக் கதவு திறந்து வருவது தெரிந்தது. ஹாலில் நின்றபடி பார்த்தான்!

யாரோ வயதான அம்மா பட்டுப்புடவை சரசரக்க உள்ளே வந்தாள். காசு கட்ட வருகிறாளோ என்று நினைத்து, 'வாங்கோ' என்று அழைத்தான்.,

''வரேண்டா வரேன். எப்படியிருக்கு உடம்பு உனக்கு?'' வந்த பெண் குரலை உயர்த்தி அதட்டினாள். குரல் அடையாளம் காட்டிற்று. சரஸ்வதி மாமி. சமையல் வேலை செய்த சரஸ்வதி மாமி.

''ஆம்பளையில்லாத நேரத்துல பொம்மனாட்டிய மிரட்டிட்டுப் போனியாமே. எப்படியிருக்கு உடம்பு? உங்க சோறு தின்னு வளர்ந்தோமா நாங்க? ஓசிலியா சோறு போட்டே? மாடு மாதிரி உழைச்சேண்டா. வழிச்சித் தின்னேல்லே இதப் பண்ணு. அதப் பண்ணுன்னு. மறந்து போச்சா உத்து உத்துப் பார்த்துட்டு ஏண்டி காட்டறேன்னியாமே? உனக்கு தெம்பில்லைன்னா, அவ என்னடா பண்ணுவோ?''

குரல் உயர்ந்து கொண்டே போயிற்று.

''அதுக்கு இவனும் உடந்தையா' ஊருல எல்லாரும் கிழிச்ச துணி கட்டிண்டே இருந்தா உங்களுக்கு சந்தோஷமா? உங்களோட இருந்தவா பட்டுகட்டிண்டா' பொறுக்காதா? நாங்க உன் கடையை தொட்டமா? வீட்டு படியேறினோமா? உன் தம்பி வந்து நின்னான்டா. அவன் நெஞ்சிலேருந்து 'லவ்' போகவே இல்லையாம். நாக்கத் தொங்கப் போட்டுண்டு நின்னான். எங்க அப்பா என்னை கேட்காம எங்கேயோ தள்ளிட்டார்னு அழுதான்.''

அப்பா வெளியே வந்தார்.

''வாங்கோ சௌக்கியமா? என்ன பார்க்கறேள்? பட்டு புடவை...ல் அடையாளம் தெரியலையா? உங்க புள்ளைய அடக்கி வையுங்கோ. இவன் சோறு போட்டு நாங்க வளர்ந்தமாம். நாங்க செழிச்சது உடம்பு வித்துதானாம். உங்க பொண்டாட்டிய எவனிடமாவது நாங்க சொல்லி யிருக்கோமா இப்படி? ஏது ராமநாதனுக்கு காசுன்னு குடைஞ்சுருக்கோமோ? குடிக்கறதுக்கு பாட்டில் வாங்கிண்டு வரச் சொல்லிட்டு குத்தலா பேசிட்டு போனான் மகா யோக்கியன் மாதிரி.

''என் வீட்டுப் படியேறி என் பெண்ணை திட்டினா, உன் வீட்டுப் படியேறி உன் குடும்பத்தைத்திட்ட எனக்குத் தெரியாதா? பம்பாய்ல குடித்தனம் போட்டுட்டு தானே உன்பொண்டாட்டிய இங்க வந்துதாலிகட்டினே. நீ லவ்வு



பண்ணலாம், உன் தம்பி லவ்வு பண்ணக் கூடாது...' அதை அழுத்தி அழுத்திச் சொன்னான்.

'பெரிய மனுஷன் வீட்டுப்பிள்ளை படியேறி வந்து அழறதேன்னு பார்த்தா, என்பொண்ணை தேவடியான்னி யாமே நீ? செருப்பு பிஞ்சி போய்டும் ஜாக்கிரதை.'

'ஏய் கிழட்டு நாயே, யார்கிட்ட என்ன பேசற?' சுந்தரா கோபத்துடன் முன்னேறினான்.

'வா. வாடா வந்து தொட்டு பாரு. சந்தி சிரிக்க வச்சுடறோம் பாரு.'

அப்பா கை உயர்த்தினார்.

'என்ன வேணும் சரஸ்வதி, எதுக்கு வந்தே?'

'உம்பிள்ளை மன்னிப்பு கேட்கணும்; என் கால்ல விழுந்து. என் பொண்ணை பேசினதுக்கு மன்னிப்பு கேட்கணும்,' கைதட்டி பேசினாள்.

'என் குடும்பம் என் இஷ்டம். என் சம்பாத்தியம், என் விஷயம். நீ யாரு பேசறதுக்கு அதுபத்தி? உன் வீடு யோக்கியமா?' மேலும் கத்தினாள்,

'கேட்கலைன்னா?'

'கத்துவேன் வாசல்ல நின்னு கத்துவேன்.'

'டேய் சுந்தரா, அடிச்சு விரட்டுடா இவளை என் சொத்தே அழிஞ்சாலும் பரவாயில்லை. வெரட்டு இந்த நாயை.'

'யாரைப் பார்த்து நாய்ங்கற? கிழட்டு பொணமே. உன் மருமா, கட்டடம் கட்டி அடிச்ச கூத்து ஊரே சிரிச்சது. கொளத்துக்காரன், சித்தாள் வரைக்கும் வழிச்சி சிரிச்சா. என்னைப் பார்த்து நாய்ங்கறயா?' அலறினாள்.

மாடியிலிருந்து அனிதா பாய்ந்து வந்தாள். இறுக்க அவன் தோள் பிடித்தாள். நெட்டித் தள்ளி வாசலுக்குப்

போனாள். பிடித்து தோட்டத்தில் தள்ளினாள். வராண்டாவில் விட்டிருந்த அப்பாவின் செருப்பை எடுத்துக் கொண்டாள்.

'ஒரு வார்த்தை பேசின, கன்னா பின்னான்னு அடி வாங்கிடுவ. போய்டு வெளியே.'

'அடி போடீ.'

'யேய்...' அனிதா எழுந்து அவள் மீது பாய, சுந்தரா பிடித்துக் கொண்டான்.

'நீ இன்னிக்கி வந்தவடி. இந்த வீட்டு பவிஷு என்னைக் கேளு சொல்றேன்.'

சுந்தராவிடம் இருந்து உதறி ஓடி, செருப்பு எடுத்து ஒரு அடி வாயில் ஓங்கி வைத்தாள். அடிபட்ட வேகத்தில் கிழவி விழ, மறுபடி காலால் எத்தினாள்.

'கொலை பண்ணிடுவேன் உன்னை.'

அந்த ராமோன் தோட்டக்கதவு திறந்து ஓடி வந்தான். கிழவியை வாரித் தாங்கினான்.

'நான் போகாதேன்னு சொன்னேனே கேட்டியா. இவாளை நான் கவனிக்கிறேன் வா.' இழுத்துக் கொண்டு போனான்.

'அனிதா இது தப்பு.' சுந்தரா அவளை உள்ளே இழுக்க திமிறினாள்.

'விடுங்க என்னை. இதுக்கு பயந்தா முடியாது. நடுக்கூடத்துல ஏறி நம்ம அப்பாவை திட்டறா. கொலை பண்ணாத விட்டது தப்பு.'

'வா அனிதா, உள்ள வா. தெரு வேடிக்கை பார்க்கறது. உள்ளே வா.'

அனிதாவை இழுத்துக் கொண்டு உள்ளே வந்தான். செருப்பை பிடுங்கி போட்டான்.



வீடு மௌனமாய் இடிந்து உட்கார்ந்தது.

இது முடியவே முடியாதா? இதற்கு முடிவே இல்லையோ? என்று கவலைப்பட்டது.

'இங்க வாங்களேன், அப்பாவை பாருங்களேன்', கல்பனா உரக்க கத்தினாள்.

அப்பா கட்டிலில் மல்லாக்க கிடந்தார். மேல் சுவாசம் வாங்கிற்று. கண்கள் சொருக துவங்கின.

'அப்பா அப்பா என்னப்பா பண்ணறது?'

'கஷ்டமா இருக்குடா.,

'ஒரு டாக்டரை கூட்டிண்டு...'

'வேண்டாம், நீ போக வேண்டாம். நீ இரு என் கூட. யாரையாவது அனுப்பு' அனிதா டெலிபோனுக்கு ஓடினாள். நடராஜு கார் எடுத்து விரைந்தான்.

'சுந்தரா...சுந்தரா...என்ன பிடிச்சுக்கோடா.'

அப்பாவின் கைகளை சுந்தரா பிடித்துக்கொண்டான். அம்மாமெல்ல அவர்தலை தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள் கல்பனா நெஞ்சு நீவி விட ஆரம்பித்தாள். நாடித் துடிப்பு குறைவது தெரிந்தது.

## 19

கண்மூடி 'பெரியவரைக் காப்பாற்று,' என்று இறைஞ்சியதும், 'இன்னொன்று இருக்கு,' என்று அடுத்த வீட்டுக்குரல் அசரீரி மாதிரி கேட்டதும்...மாங்காய் துள்ளி விழுந்து முகவாயில் இடித்ததும் நினைவுக்கு வந்தன.

இன்னொரு அடி இருக்கோ?

அதுதானோ இது? இந்த அடி தாங்குமா இந்த வீடு?

'சுந்தரா ஹால்ல இருக்கற பெரியவா படம் எடுத்து என் முன்னால, நான் பார்க்கறா மாதிரி வை.'

'அப்பா, உனக்கு ஒண்ணுமில்லைப்பா'

'சொன்னாசெய்.'

வேதவல்லி அவனை இருக்கச் சொல்லிட்டு, ஹாலுக்கு ஓடினான். நாற்காலி போட்டு படத்தின் கம்பிகளைப் பிரித்தான். இரண்டு கைகளாலும் இறுகப் பற்றி கீழிறக்கினான். தூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டு வந்து அப்பாவின் அறைக்குள் வைத்தான்.

'மங்களம், நாக்கு வரள்றது. குடிக்க ஏதாவது கொடேன்.,

அம்மா, அப்பாவின் தலைக்கு இழுத்து வைத்துவிட்டு சமயலறைக்கு ஓடினாள்.

'தலைகாணி சரியா இல்லைடா. எடுத்துடு. கெட்டியா ஏதாவது வை, மணைப்பலகை மாதிரி.'

மணைப்பலகை உண்டா இந்த வீட்டில் தெரியவில்லையே? அப்பா அறையில் கணக்கு ரெஜிஸ்டர் இருக்கிறது. முதல் வருட கணக்கு ரெஜிஸ்டர். ஒரு சந்தோஷத்திற்காக தன்னிடம் வைத்துக் கொண்டிருந்தார்.

சுந்தரா அதை எடுத்து தலைக்கடியில் வைத்தான். 'ரிஜிஸ்டரா?' அப்பா மெல்லியதாய் சிரித்தார்.

'இப்ப எப்படிப்பா இருக்கு?'

'எனக்கு முடிவு வந்துடுத்துடா சுந்தரா, இன்னிக்கு காலமேயே தெரிஞ்சுடுத்து, எனக்கு. உன் அம்மாவைப் பார்த்துக்கோ. இப்போ நடக்கறதுக்கு பயப்படாதே இன்னும் இரண்டுநாள்ல சரியா போய்டும். கண் திருஷ்டி



ல்லாத்தையும் கவனிச்சுக்கோ. உந்தலையே இழுந்து ட்டுக்காதே. எல்லாருக்கும் பொறுப்பு குடு. வேதவல்லி னிதா எல்லாரையும் கடைக்கு கொண்டு போ.'

மறுபடி மூச்சு பொங்கி பொங்கி இழுத்தது.

'அப்பா...அப்பா.'

'பெரியவா நினைவாலே கடைசி வரைக்கும் இருந் ன்னு சொல். எனக்குமந்திரம், பூஜை, பெரிய சாஸ்திரம் நும் தெரியாது. எனக்குத் தெரிஞ்சது...' குரல் நடுங் ற்று

'ஜய ஜய சங்கர

'ஹர ஹர சங்கர... சொல்லுடா. எங்காது குளிர ால்.'

சுந்தரா சொன்னான் குனிந்து அப்பா காதில் மட்டும் ழும்படி சொன்னான்.

'ஜய ஜய சங்கர

ஹர ஹர சங்கர...

ஜய ஜய சங்கர...

ஹர ஹர சங்கர...

அம்மா வெதுவெதுப்பாய் காபியோடு ஓடி வந்தாள். தவல்லி கால்கள் தேய்த்து சூடு செய்தாள். கல்பனா, ாசலுக்கும் அறைக்கும், டாக்டர் வருவாரா என்று அலைந் ள். ஒரு மடக்கு காபி உள்ளே போயிற்று. 'போதும்.' ன்றார்.

நெற்றியில் வியர்வை பொங்கியது. அம்மா, புடவைத் லைப்பால் துடைத்தாள். நிமிர்ந்து அம்மாவை ஒரு ர்வை. நாற்பத்தியேழு வருடப்பார்வை பார்த்தார். ல்ல கண்கள் தழைத்து சுந்தராவை நோக்கினார். அவர் கைகளை மெல்ல இறுக்கினார்.

'ஜய ஜய சங்கர
ஹர ஹர சங்கர.'

அவர் பார்வை படத்தின் மீது படர்ந்தது. அறை கண்ணை மூடியது. அப்படியே நின்றது. மெல்ல நா இடைவெளி அதிகமாவது புரிந்தது.

'வேதவல்லி... டாக்டர், டாக்டர் பாரேன் வேதவல்லி எழுந்தாள். வாசலில் நடராஜ் கார் சத் கேட்டது. தட தடவென்று ஆட்கள் வருவது கேட்ட டாக்டர் நாடி பார்த்தார். இருதய சப்தம் கேட்டார்.

'ஹி ஈஸ் ஸிங்கிங்.
ஊசியில் மருந்தேற்றி புஜத்தில் சொருகினா விரல்களைக் கோர்த்துக் கொண்டு நெஞ்சில் வைத் அழுத்தினார்.

'ஜய ஜய சங்கர
ஹர ஹர சங்கர.'
எல்லாரும் வாய்விட்டு சொன்னார்கள். சுற்றி நின் உரத்த குரலில் இடைவிடாது சொன்னார்கள்.

சட்டென்று நாடி நின்றது...
சுந்தரா தலைதூக்கிடாக்டரைப்பார்த்தான். டாக் இன்னொரு ஊசி எடுத்து இருதயத்தில் நேரடியா போட்டார் முப்பது விநாடிகள் காத்திருந்தார்.

நாடி நின்று போயிருந்தது.
நெஞ்சில் கை வைத்தான் சுந்தரா. அமைதியா இருந்தது

'அம்மா.' வேதவல்லி எழுந்து அலறினா மாமியாரைத் தாவிப் பிடித்துக் கொண்டாள். அம் புரியாமல் டாக்டரையும், சுந்தராவையும், மாறி மா பார்த்தாள். சுந்தரா உதடு பிதுக்கினான். நிமிர்ந்து ம பார்த்துக கொண்டான்.



''என் ஜயா, என் ஜயா, போய்ட்டேளா. மங்களத்தை ட்டுட்டுப் போய்ட்டேளா. ஜயா, என் ஜயா' அம்மா தூக்கி கூப்பிட்டாள்.

''தெய்வமே'' என்று இரண்டு கைகளையும் வானம் நாக்கி விரித்து அழைத்தாள். நெஞ்சில் அடித்துக் கொண்டாள். அழுதாள்.

நடராஜு அருகே வந்து சுந்தராவின் தோள்களைப் பொத்திக் கொண்டான்.

உடைந்து தரையில்விழுந்து அழுதான். கல்பனா கதறி னாள். குழந்தைகள் வீறிட்டன. மூக்கு உறிஞ்சியபடி அனிதா குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஹாலுக்குப் போனாள். தோட்டக்கதவு திறக்கும் சப்தம் கேட்டது. க்கம்பக்கத்து ஆட்கள் உள்ளே வந்தார்கள்.

அறை வாசலை அடைத்துக்கொண்டார்கள். அனிதா டலிபோன் சுழற்ற ஆரம்பித்தாள். சுந்தரா கூட்டம் லக்கிக் கொண்டு ஹாலுக்கு வந்தான். வராண்டா ஞ்சலைக் கழற்றி பலகையை ஹாலுக்குக் கொண்டு ந்தான். நடுவாகப்போட்டான். படத்தைஎடுத்து நேரே லைமாட்டில் கொண்டு வந்து வைத்தான்.

கல்பனாவை அழைத்து விளக்கு கொண்டு வரச் சான்னான் எண்ணையிட்டு அவனே விளக்கேற்றினான். ப்பாவை அவனும், நடராஜனும் கொண்டு வந்து ாலில் போட்டார்கள். அரை மணியில் மாம்பலம் முழுவதும் ஹாலில் வந்து அடைத்துக் கொண்டு நின்றது,

''அனிதா போலிசுக்குப் போன்பண்ணி பந்தோபஸ்து று வேதவல்லி, மாடி போன் எடுத்து உங்கப்பாவை டனே வரச் சொல். ஆட்கள் வேணும்.''

''நாகராஜு எங்கே?' ஒரு மணி நேரம் கழித்து கராஜு, 'அப்பா' என்று கதறிக் கொண்டு வந்தான். ர் மீது கதறியபடி விழுந்தான்.

''உன்னைப் பார்க்கலையே...உன்னைப் பார்க்
லையே,'' என்று கத்தினான். வேதவல்லி அவனை இறு
அணைத்துக் கொண்டாள்.

உறவுகள் குவியத் தொடங்கின.

வேதவல்லியின் அப்பா நேரே நின்று கட்டளைக
போட்டார். அனிதா வீட்டிலிருந்து காபியும், குழந்
களுக்கு பழமும் வந்தன.

பம்பாய்க்கு டெலிபோனும், ட்ரங்காலும் பறந்த
துபாயிலிருந்து பம்பாய் வழியாக வரும் ஏர் இந்தி
விமானம் பிடித்து கல்பனாவின் தகப்பனார் வ
ஏற்பாடாகியது.

தோட்டத்தில் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் வைக்க
பட்டன.

ட்யூப்லைட் வெளிச்சமும், பெட்ரோமாக்ஸ் வெளி
மும் கலந்து ஒரு விநோத துக்கக் கலவை கொடுத்தது.

சுந்தரா வெளிச்சம் தாங்காது பின் பக்கம் போ
உட்கார்ந்து கொண்டான்.

''அழுதுருங்கோ சுந்தரா.'' வேதவல்லி அருகே வந்
அவன் தோள் உலுக்கினாள். அனிதா பக்கத்
உட்கார்ந்து முதுகு தடவினாள்.

கல்பனா காலடியில் வந்து அமர்ந்து, ''உங்களை
பார்த்தாதான் பயமா இருக்கு ஏன் இப்படி இறு
கிடக்கேள்?'' என்று அழுதாள்.

''என்னமோ எனக்கு இதுவரைக்கும் அழு
வரலை. எனக்கும் இது முன்னாடியே தெரிஞ்சு போச்
''காபி குடிச்சியா கல்பனா. ஒட்ட ஒட்டகிடக்காதே
''உங்களுக்குக் கொண்டு வந்து தரட்டுமா?''

''வேண்டாம் ஐஸ்வாட்டர் கொண்டா.'' ஒரு ஐ
ஐஸ் வாட்டர் குடித்தான்.



''வேதவல்லி நாகராஜுவை யாரும் ஒரு வார்த்தை சொல்லக்கூடாது. இது என் கட்டளை.''

''கல்பனா. அம்மா காசுமாலைய வேதவல்லி அப்பா கிட்ட கொடுத்து. இரண்டு நாள்ல காசா கொண்டு வந்து தரச்சொல்.''

''எதுக்கு காசுமாலை எங்கிட்ட...'' வேதவல்லி அப்பா பத்து நிமிடம் கழித்து கொல்லைப்புறம் வந்தார். 'கைல பன்னெண்டு ரூபா எடுத்துண்டு வந்தேன். இரண்டு நாளைக்குப் போதும். பிறகு பார்ப்போம். காசுக்குப் பயப்படாதே நான் இருக்கேன்.''

''அப்புறம், ஏர் போர்ட்டுக்கு கார் போயிருக்கு'' சாஸ்திரிகளுக்குச் சொல்லிட்டேன். ஏழு மணிக்கு எடுத்துடலாமா? எட்டாகட்டுமா? பார்த்துண்டு செய்வோம். காட்டுக்கு விடிஞ்சதும் சொல்லணும். மனசுல பாரத்தைப் போட்டு அழுத்திடாத சுந்தரா அழுதுடு.''

ஏனோ அழுகை வரவில்லை, கல்பனா அப்பா வருகிற வரையில்.

தாடியும், மீசையும் தும்பையாய் நரைத்து ஒடுங்கி அந்த கிழவர் உள்ளே நுழையும்போது, சுந்தராவுக்கு செய்தி வர ஹாலுக்கு வந்தான்.

படியேறியதும், அந்த கிழவன் இரண்டு கைகளையும் விரித்து, 'சுந்தரா ' என்று அலற, ஓடிப்போய் அவரைத் தழுவிக் கொண்டபோது, உள்ளே இறுக்கம் உடைந்து 'அப்பா' என்கிற அலறல் வந்து விட்டது.

''என்னை விட்டுட்டுப் போய்ட்டானே. எல்லாத்தையும் என் தலைல விட்டுட்டு போய்ட்டானே.''

எத்தனை உயர்வு வரினும், நாலுமுழ வேட்டியோடும், அரை சட்டையோடும் மெலிதாய் நிற்கிற கிழவரைப் பார்க்க அப்பா ஞாபகம் வந்தது இது இன்னொரு அப்பா என்கிற வாஞ்சை வந்து அழுகை வந்தது.

கிழவரும் இறுக்க கட்டிக் கொண்டு அழுதார்.

''ராமனாதா, ராமனாதா,'' என்றுநெற்றியைத்தடவினார். விபூதி குழைத்து அப்பாவின் நெற்றியில் பூசினார். அருகே சம்மணமிட்டமர்ந்தார். உரத்தகுரலில்பாடினார்:

''பயின்மதி நீயே, பயின்மதி தருதலின் வெளியும் நீயே. வெளியுற நிற்றலின் தாயும் நீயே. சாயைத் தந்து உகந்தலின் தந்தையும் நீயே முந்தி நிற்றளித்தலின், உறவும் நீயே. துறவா தொழிதலின், உற்றது நீயே: சிற்றின்ப மின்மையின் ஆறும் நீயே. ஆற்றுக் கருள்தலின் அறமும் நீயே. மறநிலை மாய்தலின், துணைவனும் நீயே. இணையிலையாதலின், துய்யனும் நீயே. செய்யா ஞுறைதலின் காரணன் நீயே. நாரணன் ஆதலின், கற்பகம் நீயே நற்பதம் தருதலின், இறைவனும் நீயே. குறையொன்றில்லாமையின், இன்பமும் நீயே துன்பம் துடைத்தலின் யானும் நீயே என்னுள் உறைதலின்...''

சுந்தரா அவருக்கருகே உட்கார்ந்து அவர் பாடுவது கேட்க பொழுது விடிந்தது.

காலைப் பத்திரிகையில் முதல் பக்கம் துக்கச் செய்தி விளம்பரமாகி இருந்தது.

எட்டரை மணிக்கு அப்பா மாலைகளுடன் கிளம்பினார். சுந்தரா தீச்சட்டியுடன் முன்னே நடந்தான்.

மங்களம் அண்ட் கோ. கம்பெனி கடையைக்கடக்கும் போது, உடம்பு நடுங்கிற்று. லட்சுமி நாராயணன் ஓடி வந்து அணைத்துக் கொண்டார். துக்கத்தில் கண் சொருகிற்று. யாரோ தீச்சட்டி வாங்கிக் கொண்டார்கள்.

தோள் சாய்ந்தபடி கடந்தான். பித்தனை தவலையில் கொண்டு வந்த காசு இது. விவசாயம் லாயக்கில்லை எனக்கு, வியாபாரம் பண்ணப் போறேன் என்று ஆரம்பித்த உழைப்பு இது.



நாலுமாடி உயரமாய் நிற்கிறது. காட்டில் புகுந்ததும் ...ஸ்திரிகள் கூவினார்

'எத்தனை குழந்தைகள் அவருக்கு! நாலா? ஒரு ...பொண்,மூணு புள்ளையா? நாலு ஒரு ரூபா காசா வாங்கு ...ணயமா வாங்கு,சுந்தரா,அந்த நாலு ரூபாயும் ...ங்கப்பா வோட வலது உள்ளங்கைல வச்சு மெள்ளத் ...டவச் சொல்லு...அப்பா உன்கிட்ட இருக்க எல்லா ...செல்வத்தையும் எங்ககிட்ட கொடுத்துட்டுப் போன்னு ...ளு!

'செல்வம்னா காசு மட்டுமில்லை. ஞானம், அறிவு, ...மை, உண்மை,சாந்தம் எல்லாத்தையும் கேளு அப்படியே ...ந்த அகல்ல போட்டு மூடி தலைமாட்டுல வை!

'ஜலப் பானையை இடது தோள்ல வச்சுக்கோ.பிரதட் ...ணமா வா, நாகராஜு,நடராஜு தொட்டபடி வரட்டும்

ஒவ்வொரு சுற்றுக்கும் பானையில் ஓட்டை போட் ...டார்கள். சில்தெறுக்க உடைத்தார்கள். உடைந்த ...யைத்தி நீரை வாயில் வார்த்தார்கள்.

'அக்கினியே, என் தகப்பனார் உடம்பை உன்கிட்ட ...ப்படைக்கிறேன். அவர் ஆத்மாவை சொர்க்கத்துக்கு ...க்கிரதையா எடுத்துண்டு போக பிரார்த்திக்கறேன்னு ...சால்லு.'

'அப்படியே மூங்கில் பிடிச்சு வயிறு பாகத்துல ...றட்டிக்கு நடுவே வச்சுடு...

'அப்படியே திரும்பி பாக்காம வா...'

வந்து வீட்டுக் கொல்லையில் குந்தியிட்டு உட்கார ...ணற்றில் ஜலம் இழுத்துகல்பனா தலையில் ஊற்ற ...பாங்கி பொங்கி அழுகை வந்தது.

கல்பனா ஈரத்தோடுஇறுக்கிக் கொண்டு அவனை சமாதானப்படுத்தினாள்.

மறுநாள் இடக்கையில் முடிக்கயிறும், கண்ட சுத்திரியும் அணிந்து பாலில் விரல்கள் தொட்டு ஒவ்வொ எலும்பாய் பொறுக்கி பானையில்போட்டபோது இதுவ அப்பா என்று மனசு அடித்துக் கொண்டது.

என் தலையை கோதிய விரல்கள். எனக்கு வாழ்க்கை சொல்லித் தந்த வாய். என்னை இறுக்கித் தூங்க வைத் விலா. என்னை தூக்கி நடந்த கால்கள். என்னை அமர்த்திக் கொண்ட தொடை. உழைத்து உழைத் உரமேறிய முதுகு!

பாலில் சமலம் செய்த பானையை திருவல்லிக்கே கடற்கரையில் இடுப்பு அலையில் நின்று தூக்கி எறிந் போது, இனி அவர் இல்லவே இல்லை என்று புரிந்தது!

மிகப்பெரிய பாரம் தன் மீது விழுந்திருப்பதை உண முடிந்தது.

சுந்தரா அன்று பிற்பகல், வேதவல்லியின் தகப் னாரோடு தனியே பல மணி நேரம் பேசினான்.

ராமோன் பற்றி, அவர் பத்திரிகை ஆட்களை விட் விபரம் விசாரிக்கச் சொன்னான். வீட்டுப் பேரில் ஐந் லட்சம கடன் கேட்டான்.

நிச்சயம் பதிமூன்றாம் நாள் காலை கடை திறக் படும் என்றான்.

நான்காம் நாள், நாகராஜுவை அவன் அறைய அவன் மனைவியோடு சந்தித்தான்.

'எல்லாவற்றையும் சொல்.' என்று கட்டளை யிட்டான். நாகராஜு, வேதவல்லி முகம் பார்த்து விட் தயங்கினான்.

'நாகராஜு,பொண்டாட்டிகிட்டகூட மனசு திறந் உண்மை சொல்ல முடியாதவன் வேற எங்கயும் சொல்



முடியாது. இது விசாரணை இல்லை நாகராஜு, உனக்கு தண்டனை தரப்போறதில்லை. நமக்கு எதிரா யார் இருக் கான்னு தெரியணும். மல்லிகா 'மட்டும் தான் எதிரா, இல்லை அதை விட பெரிய கை அங்க இருக்கா. மல்லிகா இத்தனை உசரம் வந்தது எப்படி? யாரால்?

'நாகராஜு,நீ மறுபடி போகணும் மல்லிகா வீட்டுக்கு பழையபடி. அதே உறவோட அதே நட்போட என்னைப் பிடிக்காதவனா, என் கூட சண்டை போட்டவனா...'

'எதுக்கு சுந்தரா. நான் ஏதோ ஒரு மனக் குழப்பத்துல பண்ணைப் போய் இத்தனை பெருசா...அந்த கிழவி இங்க வந்து கத்தினது எனக்கு ஆறவேயில்லை!'

'முள்ளை முள்ளால எடுக்கணும், நாகராஜு. நீ அங்க போன்னு உன் ,பொண்டாட்டிய வச்சுண்டு சொல்றேனே புரியலையா?'

'ஏன் போனேன்னு கேளு...'

'ஏன் போனே?'

நாகராஜு போசத் துவங்கினான்.

## 20

'நான் பெரிய ஹீரோ இல்லை சுந்தரா. ஆனா, ஹீரோவா இருக்கணும்னு ஆசைப்படறவன். மோட்டார் சைக்கிள்ல நாப்பது கிலோ மீட்டர் வேகத்துக்கு மேல் போகமாட்டேன் பயம், ஆனா நானூறு கிலோ மீட்டர் வேகத்துல போறதா நினைச்சுப்பேன்.'

'புகையிலை போட மாட்டேன் பயம் ஆனா, மீட்டர் பான் போட்டு வாயில குதப்பி புகையிலை போட்டா மாதிரி நடிப்பேன்.'

'நான் யார் தெரியுமா, எப்பேர்ப்பட்ட பிசினஸ் மேக்னட் தெரியுமா, இவகிட்ட அலட்ட ஆசை—ஆனா பயம். இவ என்னைவிட பல மடங்கு உசத்தின்னு எனக்குத் தெரியும். இந்த ரூம்ல இவளோட நான் பேசவே மாட்டேன் சுந்தரா. உனக்குத் தெரியுமா இது? எந்த விஷயத்துலயும் இவகிட்ட நான் அலட்டவே முடியாது. இது எனக்கு குறை தான் உனக்கு அல்பமா படறதா நான் சொல்றது?'

'இல்லை உன் நிலை புரியறது.'

'இவளும் புரிஞ்சுண்டா. இது என்ன, அது என்னன்னு தெரியாத மாதிரி கேட்டா. இவ நடிக்கறான்னு எனக்குப் புரிஞ்சுது. எனக்கும் தெரியாதுன்னு நகர்ந்துடறேன். வேதவல்லி நல்லவள். ஆனா கெட்டிக்காரி. வேதவல்லி மக்கா இருந்து கொஞ்சம் கெட்டவளாயிருந்தா சந்தோஷப் பட்டிருப்பேன். அவ கெட்டிக்காரியா, நல்லவளா இருந்தா, நான் புறக்கணிச்சேன்.

'எனக்கு, மல்லிகா மாதிரி எடுப்பார் கை பிள்ளையா இருக்கற ரெண்டுங்கெட்டான் பொண்ணுதான் சரின்னு பட்டுது ஏமாத்தலாம். அலட்டலாம். உனக்குப் புரியறதா அன்னிக்கு அவளை நான் சுத்தினதுக்கே இதுதான் காரணம் கைக்கு அடக்கமான பொண்ணு. சமையல்காரி யோட பொண்ணுன்னு ஒரு எண்ணம் ஆனா நடக்கலை. மலரும் நினைவுகளில் சிறிது நேரம் இருந்தான். தொடர்ந் தான்

'மறுபடி பார்த்தப்போ...'

'ம்ம் சொல்லு...'

'மறுபடி பார்த்தப்போ, அதே வெட்கம், பயம். உதவி செய்னு கெஞ்சற சுபாவம் எல்லாம் பார்த்து, அடக்கி வச்சிருந்த பேய் எழுந்து ஆடித்து. எதையும் கண்டுக்காத அவ புருஷன், எனக்கு சௌகர்யமா இருந்தது நான் அவளை உபயோகப் படுத்திண்டேன். என்னை அவ உபயோகப்படுத்திண்டா. நான் செய்தது தப்புதான் சுந்தரா. ஆனா...'



'புரியறது நாகராஜ'. மனச கிழிச்சு காட்டினியே அது பெரிய விஷயம். இப்ப நான் பேசட்டா...பரம தரித்திரனுக்கு, ஒரு பை நிறைய தங்க காசு கிடைச்சா; பூமில புதைச்சு வச்சா மாதிரி நடந்துண்டே. உன்னை விட வேதவல்லி பெரியவோன்னு பயப்படற. இருக்கட் டுமே. 'வேதவல்லி, இது என்ன? எனக்கு சொல்லிக் கொடேன். எனக்கு இங்கிலீஷ் பேச கத்துக் கொடேன்னு' கேளேன். கெஞ்சேன். மண்டி போடேன். பொண் டாட்டிகிட்ட கெஞ்சக் கூடாதுன்னு உனக்கு யார் கத்துக் கொடுத்தா நாகராஜா? அப்படி கத்துக் கொடுத்தவா, கெஞ்சாதவா சந்தோஷமா இருக்காளா? உனக்குத் தெரியுமா?

'வேதவல்லி ஒரு ஜெம். மாணிக்கம் அது. அதை நெஞ்சில் பூட்டிக்கோ. கம்பீரமாவா. அவளை நடு றோல்ல புரட்டி புரட்டி அடிச்சியே அன்னிக்கு உன்னை வெட்டிப் போட்டிருப்பேன். அதனால வேதவல்லிக்கு கெட்ட பேர் வரும்னு அடக்கிண்டேன்.

'தன்னுடைய இயலாமைக்கு பொண்டாட்டியப் போட்டு அடிக்கறவன் ஆம்பிளையா சொல்லு? வெளிய வெத்திலை எச்சலை மேல துப்புட்டு, சாரின்னு சொல் றவன்கிட்ட தேங்க்யூன்னு சொல்லிட்டு வர்றீங்க வீட்டுல பொண்டாட்டி பயப்படறான்ன உடனே அடுக்கறீங் களேடா...எப்படி அது.

'அடிப்படைல நீ கோழை. ஏன் தெரியுமா? பொறந்த துலேர்ந்து வேற ஆள் நிழல்ல வளர்ந்துட்டே. நீயா ஒரு காரியமும் செய்தது இல்லை. சுயமா ஒரு தடவைகூட யோசனை செஞ்சது இல்லை. யூ ஆர் ஆல்வேஸ் நம்பர் டூ. எங்க? வெளிய. அது சௌகர்யம் உனக்கு. வீட்லயாவது நம்பர் ஒன்னா நிக்கப்பார்த்தே. முடியலை. நின்னு பழக்கமில்லை. பொம்பளை நிக்கறான்ன உடனே கோபம். போட்டு அடிக்கறே.

'புரியறதா நாகராஜ்? நீ நம்பர் ஒன்னா, இரண்டா, முடிவு பண்ணு. இப்ப இந்த கணம் முடிவு பண்ணு. நம்பர் ஒன்னாகணுமா? எல்லா பொறுப்பையும் நீயே எடுத்துக்கோ. கன்சல்ட் பண்ணாதே. சண்டை போட்டு, போராடி ஜெயிக்க கத்துக்கோ. அடி விழும். தாங்கு. நம்பர் டூவா? நம்பர் ஒன்கிட்ட கொடுத்துட்டு ஒதுங்கி நில்லு. அவங்க சொல் பேச்சை கேளு.'

'அவளை கூப்பிட்டு, 'அறுத்துண்டு போன்னு,' அப்பா அட்வைஸ் பண்ணினார். போய் வேற கல்யாணம் பண்ணிக்கோன்னு புத்தி சொன்னார். பொம்மனாட்டிய இழிவு படுத்தது அவருக்குப் புடிக்காது. அது உன்னை, நீயே இழிவு படுத்தறா மாதிரி சொல்லு நாகராஜா. அவளை உங்கிட்டேர்ந்து பிரிச்சு அனுப்பட்டுமா? அவளை டைவர்சுக்கு அப்ளை பண்ணச் சொல்லட்டுமா? அவமானத்துக்குப் பயப்படாதே. அது தானா உலர்ந்து போய்டும். ஏதும் பேசாம ஒரே ரூம்ல இருக்கறதுக்குப் பேர் குடித்தனமா? இதுக்கு கல்யாணம் அவஸ்யமா?

நாகராஜன் மௌனமாய் தலை குனிந்தபடி உட்கார்ந் திருந்தான்.

'கெட்டிக்காரியா பொண்டாட்டி இருக்கறது ஒரு குறையா; அது கொடுப்பினை இல்லையா? உன் ஆண்மை எப்படி குறைஞ்சிடும்? ஊர்ல வேதவல்லிக்கு பெத்த பெயரா இருக்கலாம். உனக்கு தலைய வலிக்கிறதுன்னு தெரிஞ்சா, சகலமும் போட்டுட்டு உனக்கு தைலம் தடவ வரமாட்டாளா? எவ்வளவு பெரிய குடும்பத்துப் பொண்ணு, எத்தனை செல்வாக்கு, எனக்கு கால் பிடிச்சு விடறதேன்னு உனக்குத் தோணாதா? சொல்லு வேதவல்லி வேணுமா, வேண்டாமா?'

'இந்த கேள்வியே தப்பு,' வேதவல்லி இடையே புகுந் தாள். 'நான் வேணுமா, வேண்டாமான்னு அவர் மட்டும் தீர்மானம் பண்ண முடியாது. நானும் இதுல பேசமுடியும்.



...ன் டைவர்ஸ் பண்ண மாட்டேன். இவர் பேசினாலும் ...சாம போனாலும், நான் சரின்னு போவேனே தவிர...'

'ஏன்?'

'நான் ப்ளாட் கட்டறதுக்கோ கடை நடத்தவோ ...றதலை. வேதவல்லி, ஜெர்மன் ரிட்டன்ங்கறது ...ங்கப்பாவுக்கு மதிப்பில்லை அவ 'மங்களம் அண்ட் சோ' ...ட்டு மருமகள். குடித்தனக்காரி. அவளுக்கு குழந்தை ...றக்கும். வளர்ந்து நிறைய படிச்சு பெரிசாகி இன்னொரு ...ம்பெனி திறக்கும், அதுதான் எனக்கு மதிப்பு. என் ...ப்பாவுக்கு மதிப்பு. அன்னிக்கு இவர் தேவடியான்னு ...ட்டினதோ, அடிச்சதோ மறந்து போய்டும். புடவை ...ழிஞ்சா அவுத்துப் போட்டுற முடியுமா? புடவைங்கறது ...னம். கிழிசலோட இருப்பேனே தவிர...'

''ம்ம்...இதுதான்டா இவ பலவீனம். இந்த பலவீனம் ...ரிஞ்சுதான் ஏறி மிதிக்கறோம். என்னிக்கோ ஒருநாள் ...ந்த தேசத்து பொம்மனாட்டி எழுந்துக்கப் போறா. ...டா நாயேன்னு ஆம்பளைய பதிலுக்கு மிதிக்கப் ...றா. இன்னிக்கு உங்க மீசைக்கும், மோட்டார் ...க்கிளுக்கும், பூணூலுக்கும் அர்த்தமே இருக்காதுபோ. ...கராஜா, ஜெர்மன் படிச்ச பொண்ணை, எம். ..., ...ிவர்சிடி பர்ஸ்டை அடிச்சுக் கொல்லு. நாலு பேர் ...ன்னாடி புரட்டி எடு. அவளை உள்ள வச்சு பூட்டிட்டு ... வீட்டுக்கு வேணா போ.'

'இல்லை சுந்தரா. தப்பு என்னுது. என் முட்டாள் ...னம்' நாகராஜன் மருகினான்.

'என்கிட்ட ஏன் சொல்ற?'

'வேதவல்லி...நான் பண்ணினது...' நாகராஜன் ...ன்னிப்பு கோரும் வகையில் எழுந்து நின்றான்.

'ச்சு, என்ன இது? அண்ணா இருக்கற போது... ...சாம உட்காருங்கோ.'

‘குட், நான் கௌம்பறேன். மல்லிகாவை நீதா மடக்கி விசாரிக்கணும். ஞாபகம் வச்சுக்கோ. மல்லி வுக்குப் பின்னால யாராவது நமக்கு எதிரி உண்டா பார் கணும். ராத்திரிசாப்பிடறபோது பேசுவோம். வேதவல் கடைக்கு இனிமே நீயும் வரணும். தயாரா இரு.’

சுந்தரா வெளியேறி கதவு சாத்தினான். பத் விநாடிகள் நின்றான். படியிறங்கினான். கதவு பூட் கொண்டது.

தலை குனிந்து உட்கார்ந்திருந்த நாகராஜனை வேதவல்லி நெருங்கினாள்.

‘நான் வேண்டாமா உனக்கு? சொல்லுடா. என்னை புரியலையா உனக்கு உன் கைக்கு நான் அடங்கலையா உனக்கு அடங்க மாட்டேன்னு என்னிக்காவது நா சொன்னேனா? நீயா கற்பனை பண்ணி உன்னை வதைச்சுக்கறே? ஜெர்மன் என்ன ஜெர்மன் ஆறு மாச ஆறே மாசம், உன்னை நான் ஜெர்மன் படிக்க வை றேன். நாறு எம். பி. ஏக்கு ஈக்வலா, உன்னை நா மாத்தறேன். புகையிலை போடறதுக்கு பயமா? இரண் தடவை காரம் ஏறும். மூணாந்தரம் புடிபட்டுடு நாளைலேர்ந்து நீயும், நானும் புகையிலை போடலாம ஜர்தாலேர்ந்து ஆரம்பிக்கலாமா? சொல்லுடா. உன என்ன வேணும்? என்கிட்ட சொல்லு ... தேவடி வேணுமா? என்ன பண்ணணும் உனக்கு? ஏ கிளா தேவடியா உனக்குக் கிடைப்பாளா. பாரேன் நிமிர்ந் அந்த உடம்பைப் பாரேன். செமகட்டை இல்லை நா எதுக்குடா நீயும், நானும் பிரியணும்? ஏய் கன்னு குட்டி...வரியா?’ என்றாள். அவன் முன்நெற்றி கோ னான்.

அவன் முகம் நிமிர்ந்தான் கண் கலங்கினான்.

‘ச்சீ எதுக்கு அழுகை...?’



அவன் இறுக்கிக் கொள்ள, அவள் வயிற்றில் முகம் புதைத்து உறுக்கி, இடுப்பு தழுவி வாய்விட்டு அழுதான். அவன் முதுகு தடவி புஜங்கள் வருடி, அவளும் அழுதாள்.

நிலவே, நீ இந்த சேதி சொல்லாயோ.

நீல வண்ணத் திருமாலின் தங்கையிடம்...

நிலவே. நீ இந்த சேதி சொல்லாயோ.

ஆலம் உண்ட, திருநீல கண்டனிடம்...

அந்த வெய்யில் நேரத்தில் வானொலி தூது விடும் பாடல் ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. நாகராஜனும், வேதவல்லியும் மனசை தெரிவிக்க உடம்பை தூதாய் பயன் படுத்தினார்கள். அவை இறுக்கிக் கொண்டன. இழைந்து வலித்தன. வலிக்க வைத்தன. வலி தாங்கின, வழங்கின. வாங்கின.

ஆலம் உண்ட திருநீல கண்டனிடம்... நாகராஜன் விஷம் விழுங்கினாலும்,வேதவல்லி அதைத்தடுத்து அவனை விஷம் பாதிக்க வொட்டாமல் அங்கேயே நிறுத்தினாள்.

அளவிலாச் செல்வம் பெற்ற திருமால் வீட்டு பெண் ணோடு, இந்த பித்தன் நடனமாடினான். என்னுள் பாதி ஆன்றான்.

சிலசமயம் வீட்டுக்குள் ரகளை வருவது நல்லது; யமுறுத்த—விக்கல் போகும். உரத்தக் கத்த, சண்டை ர, காதல் மிகும். இன்னும் ஆழக் காலூன்றும்.

மாலையில்,புருஷனும், மனைவியும்உடுத்திக்கொண்டு மாடிப்படியிறங்கி வருகையில் அங்கே பிணைப்பு இறுகி விட்டது தெரிந்தது.

புத்திச் சுடரொளியோடு விளங்கும் வேதவல்லி முகம் மேலும் பிரகாசித்தது. ஒரு முறைசுந்தராவைநன்றியோடு

நோக்கி வெட்கத்துடன்கண்கள் தாழ்த்திக்கொண்டுநிமி
இன்னும் பிரகாசம் கூடிற்று.

மல்லிகாவிடம் மறுபடி நாகராஜன் போக வேண்டி
நிலைமை பற்றி வீட்டில் அனைவரிடமும், சுந்தரா விளக்
னான்.

'இது அவஸ்யம்தானா?' கல்பனா வினவினாள்.

'கெட்டதுகள்னு தெரிஞ்சு போவானேன் மேனு
கெடுதல் வந்ததுன்னா?'

'வரட்டும். ஒட்டு மொத்தமா நின்னு சந்திப்போம்.'

'நாலு பசுவும் ஒண்ணா சேர்ந்து சிங்கம் விரட்டி
கதையா?'

'கரெக்ட் சிங்கமா, சிறு நரியான்னுதெரியலை.அதை
தெரிஞ்சுக்க இதைச் செய்ய வேண்டியிருக்கு. அப்போ எ
திட்டம் சரியா?'

'நீ சொன்னா சரி,' நாகராஜு இழுத்தான்.

'நோ இதுக்கு நீயும் பொறுப்பு. நழுவாதே இ
தப்புன்னா காரணம் சொல்லு.'

'தப்புன்னு தோணலை. மல்லிகாவுக்குப் பின்னா
அவ புருஷனுக்கு பின்னாடி யாரோ பெரிய கை இ
குன்னு நெனைக்கிறியா?'

'எஸ்.'

'ஏன்?'

'இன்னி நேத்திக்கு அறுவது லட்சம் முதலீடு இல்லா
தவனை கூட ஆரம்பிக்க முடியாது. அதுவும்மாம்பலத்
எடுத்தவுடனே இரண்டு மாடி, நியான் லேம்ப்னு ஆரம்
கறான். இது மல்லிகா, அல்லது அந்த ராமோன்... இ
லைன்னு தோணறது.'



'புரியறது. நான் இதுக்கு ஒத்துக்கறேன்.'

'அனிதா நீ?'

'எஸ்.'

'கல்பனா ... நீ.'

'எனக்கு என்ன தெரியும்?'

'எனக்கு என்ன தெரியும்னு இனி யாரும் இருக்கக்
கூடாது. சொல்லு எஸ் ஆர் நோ...'

'எஸ்.'

'வேதவல்லி.'

'வேற வழியில்ல. இதுதான் வழி.'

'நாகராஜ் உனக்கு சம்மதா?'

'எஸ்.'

'ஜாக்கிரதையா முடிப்பியா?'

'எஸ்.'

அவன் கிளம்பினான். வேதவல்லி அவனை கார்
வரையில் கொண்டு போய் விட்டுவிட்டு வந்தாள்.

பத்தாம் நாள் சடங்குக்கு கடிதம் பிரிண்ட் பண்ணி
குடும்பம் உட்கார்ந்து விலாசங்கள் எழுதியது.

கடையில் ஸ்டாக் டேக்கிங் செய்ய தீர்மானம்
போடப்பட்டது. அனிதா, வேதவல்லி அதனை மேற்
கொண்டு பைல்களைப் புரட்டினார்கள். பதிமூன்றாம்
நாள் விருந்துக்கு சமையல் ஆள் வரச்சொல்லி, சுந்தரா
வும் கல்பனாவும் மெனு தயாரித்தார்கள்.

அப்பா உயிலை வக்கீலிடம் எடுத்துப் போய் கம்பெனி
டைரக்டர்களின் பெயர்களை மாற்றி அமைக்க நடராஜு
டினான்.

ஆனால் எல்லாரும் நாகராஜனுக்கு காத்திருந்தார்
கள். இரவு இரண்டு மணிவரை நாகராஜு வரவில்லை.

சுந்தரா வாசல் விளக்கு போட்டு வராண்டாவில் உலாவினான்.

வேதவல்லியின் தகப்பனார் போன் செய்தார். ஆறு லட்சரூபாய் கடன் ஏற்பாடு செய்வதாய் உறுதி கூறினார். அடமானம் வேண்டாம் என்று சொல்லி விட்டார். குறைந்தபட்ச வட்டி தருமாறு கேட்டார். விடிவியலில் மூன்று லட்சம் செக்கும் மூன்று லட்சம் கரென்சியும் தருவதாகச் சொன்னார்.

உள்ளே பெரிய நிம்மதி வந்து படர்ந்தது. வங்கிக்கு குறிப்பிட்ட தொகையை கொடுத்துவிட முடியும்.

வேதவல்லி, தகப்பனாரோடு பேசினாள்.

'மாமிக்குத்தான் சிரமம்? மத்தபடி நாங்கல்லாம் ஒரு மாதிரி மனசு தேத்திண்டோம் நான் சௌக்கியமா இருக்கேம்பா. என்னடா. பொண் இப்படி சொல்றா ளேன்னு நினைக்காதே. இந்த உதவிக்கு ரொம்ப தேங்க்ஸ் இது டைம்லி ஹெல்ப் எங்களுக்கு.'

அப்பாவைப் பிரித்து தன்னை இந்த குடும்பத்தோடு ஒட்டிக் கொண்டு, அந்தப் பெண் சந்தோஷமாய் பேசிற்று.

'பேப்பர்ல உண்டான ஸ்டாக் இது. ஸ்டேட்மெண்ட் எடுத்து முடிச்சுட்டேன்.'

'கிட்டத்தட்ட எண்பத்தியாறு லட்சத்துக்கு ஸ்டாக் இருக்கு நம்மகிட்ட. நாளைக்கேகூட கடை திறக்கலாம்னு தோண்றது.' அனிதா விபரம் சொன்னாள்.

'வேண்டாம். அப்பா, இதைக் கண் திருஷ்டின்னா கடை மூடியே இருக்கட்டும். நமக்கு வேண்டாதவா மனம் குளிர, கடைமூடி இருக்கட்டும். வீ வில் ஓபன் வித் பேங் சாவு திட்டு முடிஞ்சு ஆரம்பிப்போம். இந்த வருஷம் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை. மறுபடி இது நடக்காத விதமா கடை நடத்துவோம்.'



'அனிதா பேப்பர் விளம்பரம் கொடு. போஸ்ட் பாக்ஸ் நெம்பர் போட்டு, சேல்ஸ்மென் அண்ட் விமென் வேணும்னு...பதினோராம் நாள் வீட்ல இண்டர்வியூ வெச்சுப்போம். முன் அனுபவம் எதுவும் தேவை யில்லைன்னு தனியா எழுது.'

'ஏன்?'

'நானு கடை பார்த்தவனுக்குத் நாவத் தோணும். புதுசா வரவன் நம்மகிட்ட கொஞ்ச நாள் தங்குவான். நம்பினவனை, தாராளமா கொடுத்து நிக்க வைக்கலாம் நம்மகிட்டயே!'

'வந்து வந்து சந்தேகம் கேட்பானே?'

'பதில் சொல்ல ஆட்கள் உண்டே. நம்ம வீடு முழுக்க அங்கதான் இருக்கும்.'

வெளியே கார் வரும் சத்தம் கேட்டது. நாகராஜன் கொஞ்சம் களைத்துப் போயிருந்தான் கீழே இறங்கினான்

'கண்டு பிடிச்சுட்டேன் சுந்தரா.'

'யாருடா?'

'பெரிய கை, ரொம்ப பெரிய கை.'

'யாரு?'

'இங்க சொல்லவா, இல்லை தனியா போய் பேசலாமா!' சுந்தரா யோசித்தான்.

'இல்லை சொல்லு. எல்லார்க்கும் தெரியட்டும்.'

நாகராஜன் சொன்னான். வீடு திகைத்தது.

## 21

'நாகராஜா சரியா தெரிஞ்சுண்டுதான் சொல்றியா?' சுந்தரா சந்தோஷத்துடன் கேட்டாள்.

'நிச்சயமா! இப்ப என் கூட வா. இடுப்பு வேஷ்டி அவிழ்ந்தது தெரியாம அந்த ஆள் மல்லிகா வீட்ல குடிச் சுட்டு படுத்துக் கிடக்கறதை காட்டறேன்.'

சுந்தரா தலையில் அடித்துக் கொண்டாள்.

'நம்பவே முடியலை நாகராஜா.'

'மறுபடி சொல்றேன். நமக்கு எதிரா இத்தனையும் செய்தது அனிதா அப்பா லட்சுமி நாராயணன். பாங்க் ஜெனரல் மேனேஜர்!'

'குடிக்கறாரா?'

'நானும் 'குடிச்சேன். ரெண்டு பெக். வேற வழி யில்லை.'

'அது பரவாயில்லை. என்ன கோவம் நம்ம மேல?'

'அப்பாகிட்ட கேட்டாராம். பார்ட்னரா சேர்த்துக்கச் சொல்லி, புடிவே கொடுக்கலையாம். நடராஜ"கிட்ட கேட்டாராம், தனியா டிவி. கம்பெனி ஆரம்பிச்சுடலா மான்னு. இருக்கற வேலைல உம்ம பொண்ணை கொஞ்சவே நேரமில்லை, இன்னொரு கம்பெனி வேற வேணவே வேணாம்னுட்டானாம். என் ஸ்டேட்டஸ் கீழ இறங்கி வந்து பொண்ணு கொடுத்தேன். அந்த வீட்ல யாரும் என்னை மதிக்கறதில்லைன்னு பேசறார். சும்மாவா கடன் வாங்கிக் கொடுத்தேன். ஒரு நன்றி வேண்டா மான்னு கத்தறார்!'



''நாம போய் கேட்டமா? இவரே கைகூப்பி படியேறி ...ப்பா கால்ல விழுந்து, எங்க பாங்க்ல அக்கௌண்ட் ...றக்கச் சொல்லி கெஞ்சி...என்ன இது...?''

''பதினாறு லட்சம் கொடுத்துருக்கார் அந்த ராமோன் ...ட்ட...''

''ஐயோ. அவன் எப்படி இவரோடு ஜாயிண்ட் ...ாட்டான்?''

''மல்லிகாவோட எக்ஸ்போர்ட் கார்மெண்ட்ஸ"க்கு ...ான் கேக்கப் போயிருக்கான். யாரு என்னன்னு இவர் ...ாரிக்க, நம்ம அப்பா பேர், இங்க வேலை செய்தது ...ல்லாம் சொல்லியிருக்கா. நிறையபொய். கடை லேபிலே ...லதான் கவனிச்சதா பொய். தவணை முறை விஷயம் ...முக்க அத்துப்படின்னு சொல்லியிருக்கா. அப்ப கார் ...மண்ட்ஸ் எதுக்கு? நீயும் நானும் பார்ட்னரா சேர்ந்து... ...வணை கடைனு யோசனை சொல்லியிருக்கா. காசு ...ப்படி வந்தா என்னன்னு சரின்னுட்டா.''

''ராமோன் எப்படி?''

''ஒண்ணாம் நம்பர் பிராடு. எல சீட்டு தூத்துக்குடில ...த்தினது நெஜம். இரண்டே முக்கா லட்சம் காசு ...மாத்திட்டு இப்ப பேர் பாதி மாத்தி ஒளிச்சுண்டு இருக் ...ன். மாசாமாசம் தூத்துக்குடிலேர்ந்து போலீஸ் இன்ஸ் ...பக்டர் வரான். வீட்டுக்கு லஞ்சம் வாங்க...''

''ம்ம். அப்புறம் வேற எதுக்கு வரான்?''

''எல்லாத்துக்கும்தான். வந்து குடிச்சு கட்டில்ல ...ண்டு, அவளோட புரண்டுட்டு...''

''இவர் ஏன் அங்க போய்...?''

''போறாத நேரம். பேங்க் சர்வீஸ் முடிஞ்சா தன்னை ...ாரும் மதிக்க மாட்டான்னு பயம். காசு ஆசை ...பொம்பளை ஆசை...''

''இவரா நமக்கு தொந்தரவு செய்தார்.''

''எஸ்...நடராஜன் ராஜகோபால் துரத்தின் ஓடறது, ராமோன் பார்த்து என்னவோ கலாட்டா கடைலன்னு சொல்லியிருக்கான். இது சான்ஸ், உள்ள பூந்துடுன்னு ராஜகோபால் வரவழைச்சு அவனுக்கு காசு கொடுத்து வக்கில் ஏற்பாடு பண்ணி போஸ்டர் அடிக்க ஏற்பாடு பண்ணி, நம்ம கடை ஆட்களை அங்க அவங்க கம்பெனிக்கு வரச் சொல்லி, இருநூறு ருபா அதிக சம்பளம்ன்னு பேசி...''

''சிப்பை ஒளிச்சு வச்சா கல்யாணம் நின்னுடுமா?''

''சிப்புலேர்ந்து ஆரம்பிச்சார். நாளைக்கு காசு கட்டல, உனக்கு பேங்க் வக்கில் நோட்டீஸ் வரும். பத்திரிகைல வக்கில் நோட்டீஸ் விளம்பரமாவும் வரும்...''

''அப்புறம் அந்த பத்திரிகை விளம்பரம் நாம பண்ற எல்லா கம்பெனிகளுக்கும் போஸ்ட்ல போகும்.''

''வாரப் பத்திரிகைக்கு நியூஸ் கொடுத்தது இவரே. ஒரு லட்சம் ருபா லஞ்சம் கேளுன்னது இவரே. அடுத்த பத்திரிகைய, போடு நியூசுன்னு உற்சாகப் படுத்தினது இவரே. மாஸ்டர் மைண்டாம் அப்பா மாதிரி பத்து மடங்கு புத்திசாலியாம் நம்ம கடை மூடிட்டு அவர்கிட்ட பார்ட்னரா சேர கெஞ்சற வரைக்கும் தூங்கமாட்டாராம்.''

''எங்க இருக்கு அந்த மல்லிகா வீடு?'' நடராஜ் எழுந்தான்.

''ச்சு...சும்மா உட்கார்'' சுந்தரா அதட்டினான்.

வீடு அமைதியாய் இருந்தது.

அனிதா எழுந்தான்.

''நடராஜ் போறது தப்பு. நான் போறேன் அந்த மல்லிகா வீட்டுக்கு. எங்கப்பன் சட்டையைப் பிடிச்சு தெருவுல வச்சிக் கேட்கறேன்.'



''எதுக்கு?''

''நானும் உன் கையோன்னு உங்களுக்கு சந்தேகம் வரலாம்.''

''இல்லை...வரலை. நீ உன் கையா இருந்தா அந்த பிரவியை, மல்லிகா அம்மாவை பாஞ்சு அடிச்சிருக்க மாட்டே'' சுந்தரா சாய்ந்து கொண்டான்.

''என் கவலை வேற இப்ப...இவர் உறவு நமக்கு. இவரை எப்படி தண்டிக்கறது? எதிரி உறவா இருக்கறபோது சண்டை எப்படி போடறது?''

''ஏன் போட முடியாது? நான் இங்க இருக்கேன்னு தெரிஞ்சும் இத்தனை செய்தவரை ஏன் தண்டிக்கக் கூடாது?'' அனிதா சீறினாள்.

''உணர்ச்சி வசப்பட்டு பேசாதே அனிதா. அது உங்கப்பா. தன் உழைப்புல நம்பிக்கை இல்லாம ஏன் போச்சுன்னுதான் தெரியலை. இப்ப என்ன செய்யறது?''

''நாகராஜு, மல்லிகா பக்கம் போயிருந்தா என்ன செய்திருப்பேள்?'' அனிதா கேட்டாள்.

''வெட்டிப் போட்டுருப்பேன்.''

''அதையே இங்க செய்யறது.''

''நான் செய்யமுடியாது. பெரிய இடத்துல பெண் எடுத்து காசு கிடைச்சதும் ஏமாத்திட்டான்னு பேர் வரும்.''

''நான் செய்யறேன்.'' அனிதா எழுந்தாள்.

''உட்கார் அனிதா.''

''என்ன செய்யப் போறேன்னு சொல்லிட்டுப் போ.''

''அவரை இங்க கூட்டிண்டு வரேன். ஒட்டு மொத்தமா எல்லாரும் கேட்போம்.''

''குட். இப்ப வேண்டாம். காலைல விடிஞ்சதும் பார்த்துக்கலாம். போ. போய்ப் படுங்க எல்லாரும்.

யாருன்னு தெரிஞ்சாச்சு. இனி பிரச்னையை தீர்க்கறது சுலபம்...ரிலாக்ஸ்.'

சுந்தரா கட்டிலில்போய் விழுந்தான். கண் மூடினான்.

அனிதாவும், நடராஜுவும் ஹாலில் தனித்து விடப்பட்டார்கள்.

''எனக்கு ஆச்சர்யமா இருக்கு அனிதா...ஏன் இப்படி?''

''எனக்கு இல்லை. இதுவரையில் சுலபமா சேர்ந்த காசு. மாமனார் கொடுத்த காசு. பேங்குல ஏமாத்தின காசுன்னு புரண்டது. அடுத்த வருஷம், ரிடையராகப் போறோம். சம்பாத்தியம் இல்லை. உடனே பயம் வந்துருக்கும்...''

''நியாயம்...ஆனா...?''

''ஏன் சுயமா உழைக்கலைன்னு கேட்கறீங்களா. பழக்கமில்லை. தனுக்குத்தனம்தான் இதுவரைக்கும்.''

''காஞ்சிபுரம் போய் விழுந்து விழுந்து நமஸ்காரம் பண்ணது?''

''இன்னொரு பொய். ஒரு இடத்துல நடிக்க ஆரம்பிச்சா, அது எல்லா இடத்துக்கும் பரவும். ரிலிஜன் வரைக்கும், உறவின் வரைக்கும் நடிப்பு வந்துரும். டோட்டலா பொய்யான ஆசாமி இவர்.''

''துக்கமா இருக்கா அனிதா உனக்கு?''

''பாவமா இருக்கு. எல்லாத்தையும் காசால அடிக்க ட்ரை பண்ணி...டென்னிஸ் மேட்சா இது?''

''டென்னிஸ் மேட்சா? புரியலையே?''

''நான் கிளப் டோர்னமெண்ட்ல ஜெயிச்சது இவரால இது எனக்கு கல்யாணத்துக்கு பிறகு தெரிஞ்சது. எனக்கு எதிரா ஆடறவ வீட்டுக்குப் போய் காசு கொடுத்துட்டு



வருவார். எனக்குத் தெரியாம போவார். போய் என் பொண்ணுகிட்ட தோத்துடுன்னு பேரம் பேசுவார்.

'உன்மேல அத்தனை பிரியமா?'

'இல்லை.'

'பிறகு...எதுக்கு?'

'நான் டென்னிஸ்ல கப் வாங்கணும். அத வீட்ல வெக்கணும். நாலு பேர்கிட்ட எம்பொண்ணு கிரேட்னு பேசணும். எங்கண்ணா இது பொறுக்காம ஓடிட்டான், வீட்டைவிட்டு, இங்க வரவே மாட்டேன்னு ஓடிட்டான்.'

'உங்கம்மாவுக்குத் தெரியுமா?'

'தெரியும்...அவளும் அப்பா மாதிரிதான். காசுதான் உசத்தின்னு எண்ணம், பேச்சு.'

'உன் நிலைமை ரொம்ப கஷ்டம் அனிதா.'

'இல்லை...நடராஜு. இது சான்ஸ். நான் சுத்தமா வெட்டிக்கப் போறேன். இனி இங்க வரமாட்டேன்னு தூரத்திடப் போறேன். ஆனா...'

'நாகராஜு, வேதவல்லியை நடத்தின மாதிரி, நீங்க நடத்தினா, வெளியே போடின்னு சொன்னா, எனக்கு போக்கிடம் இல்லை. சாவு தவிர.'

'ச்சிய்...என்ன பேச்சு இது?'

'நடராஜ்...எனக்கு என்ன ஆசை தெரியுமா? நாம எல்லாம் ஒட்டு மொத்தமா எங்கயாவது கிராமத்துப் பக்கம் போய், வயல்ல வேலை செய்யணும். கஞ்சியும் ஊறுகாயும் சாப்பிடணும். மாடு மேய்க்கணும். வறட்டி தட்டி சம்பாதிக்கணும். எட்டணாவுக்கு சினிமா டிக்கெட் வாங்கி தரைல உட்கார்ந்து பார்க்கணும். நமக்குள்ள ஒரு பொய்கூட சொல்லாத இருக்கணும்.'

'ஏய்...'

'பொய்யும், புனை சுருட்டும் நம்மை பாதிக்காம இருக்கலாம். நம்ம குழந்தைகளை பாதிக்கும்னு எனக்கு தோன்றது. நொண்டியாவோ, ஊமையாவோ, மண்டை வீங்கிப் போயோ எனக்கு குழந்தை பொறந்துடு மோன்னு பயமா இருக்கு.'

'ஐநூறு ரூபா லோன் கொடுத்துட்டு ஐயாயிரம் ரூபான்னு எழுதி வாங்கின்டது எனக்குத் தெரியும் ஏம்பான்னு கேட்டேன். அவன் எத்தனை கடன் கொடுத்தாலும் திருப்பி தரமாட்டான். அவனுக்கு கொடுன்னு கவர்ன்மெண்ட் கட்டளை. இப்ப அவனுக்கும் லாபம் எனக்கும் லாபம்னார்.

'நாங்க இருக்கற வீட்டை ஆறு லட்ச ரூபாய்க்கு வாங்கினார். ஒரு வயசான விடோகிட்ட. மூணு லட்சம் வொயிட். மூணு லட்சம் ப்ளாக். பத்திரம் கையெழுத்து போட்டதும் இன்கம்டாக்ஸ் ஆளோட போய் மிரட்டி ப்ளாக் மணியை கொடு, இல்லேன்னா கோர்ட்ல ஏத்துவேன்னு சத்தம் போட்டார். அந்த காச அப்படியே புடுங்கிண்டு வந்துகூட, வந்தவனுக்குப் பங்கு கொடுத்தார்.

'அந்த மாமி மண்ணு வாரி இறைச்சா. நீ உருப்படுவியா? உன் குழந்தைகள் நன்னாயிருக்குமான்னு சாபம் கொடுத்தா...'

'ஒரு லட்சம் பத்திரிகைக்கு கொடுத்தாளே நிச்சயம் அதுல இவருக்கு பங்கு போயிருக்கும். காசு வேண்டாம் நடராஜ் காசு பொய். காசால சந்தோஷமில்லை. கர்வமும், அகம்பாவமும் தரும். தவிர, காசு நிம்மதி தரவேயில்லை.'

''எனக்குப் புரியறது அனிதா.'

'எங்கப்பா பண்ண பாவம், என் தலைக்கு என்னிக்கு வந்து விடியப் போறதுன்னு தினம் கவலைப்படுவேன். இன்னிக்கு வந்துவிட்டது. இது இதோட முடியுமான்னு கவலையா இருக்கு...'



'பயப்படாதே அனிதா, நான் இருக்கேன்.'

'நடராஜ்...'

'சொல்லுப்பா...'

'நேத்திக்கு கனா...யாரோ என் முடிய பிடிச்சு இழுத்துண்டு போறா மாதிரி. தரையோட தரையோ தேச்சு இழுத்துண்டு போய் மலக்குப்பையல தள்றா மாதிரி.'

'வெறும் பிரமை.'

'இல்லை நடராஜ், எழுந்ததும், தோணித்து. கனவுல இழுபட்ட முடிய வெட்டி எறியணும். அப்பத்தான் தப்பிக்க முடியும்னு, அரை மயக்கத்துல தோணித்து...'

'விடு அனிதா...'

'ஒரு விஷயத்துக்கு பர்மிஷன் கொடுக்கணும் எனக்கு...'

'என்ன...?'

'இவ்வளவு நீள முடி வேண்டாம்...'

'ஏய்...'

'நான் மொட்டை அடிச்சுக்க முடியாது. கழுத்து வரைக்கும் வெட்டி எறிஞ்சுடப் போறேன்.'

'அனிதா...'

'பிரார்த்தனை மாதிரி ப்ளீஸ்...'

'எதுக்கும்மா?'

'காசு மனுஷா இல்லை. முடி பொம்மனாட்டி இல்லை. காசும், மயிரும் ஒண்ணு...'

'ச்சே...ஏன் இப்படி உணர்ச்சிவசப்பட்டு...'

'என் அழகு மட்டுமே உனக்கு விஷயமா நடராஜ்?'

'இல்லம்மா. நிச்சயமா இல்ல.'

'அப்ப...வா...' ஹால் ஓரம் போய் மேஜை இழுப்பறை திறந்து கத்திரிக்கோல் எடுத்தாள். அவனை இழுத்துக் கொண்டு கொல்லைப்புறம் போனாள்.

'இந்நா...இங்க கழுத்துக்குக் கீழே தண்டுவடம் ஆரம்பிக்கற இடத்துல அளவு வெச்சுக்கோ...வெட்டு...'

'அனிதா யோசனை பண்ணு...'

'எனக்கு நல்ல குழந்தைகள் வேணும்பா. சுந்தரா மாதிரி அமைதியான ஆம்பிளை பையன் வேணும்பா. உன்னை மாதிரி உழைப்பாளி வேணும்பா. எனக்கு மண்டை வீங்கினது வேண்டாம்...'

'அனிதா...'

'ப்ளீஸ் ஹெல்ப் மீ. போகட்டும். இதோட என்னை பிடிச்சது போகட்டும்...'

'சுந்தராவை ஒரு வார்த்தை...'

'கொண்டா இங்கே...' ஆத்திரத்துடன் அவள் கத்திரிக்கோல் பிடுங்க, அவன் தடுத்து, தன் கையில் கருவி எந்தினான். அவள் கன்னங்களில் முத்தமிட்டான். கூந்தலை வருடினான். கழுத்துக்குக் கீழே தண்டுவடம் ஆரம்பிக்கும் இடத்தில் மெல்ல கத்திரிக்கோல் பிடித்து அவள் தலைமுடியை நறுக்கிப் போட்டான்.

அவள் நிமிர்ந்தாள். பின்னால் முடிதடவி நடக்கென்று நிறுத்தினாள். திரும்பி அவனைப் பார்த்தாள்.

'நா அழகா இருக்கேனா நடராஜ்...'

'எஸ்...யூ ஆர் லோ பியூட்டிபுல்...' அவன் நிதானமாய் உச்சரித்தான். கத்திரிக்கோல் தோட்டத்தில் வீசினான். அவளை அணைத்துக் கொண்டு படியேறினான். மறுநாள் காலை காபி குடிக்கும் போது சகலரிடமும் விஷயம் சொன்னான்.

வீடு திகைத்தது.

'எங்கேடா அவோ? பதறிற்று.

'வருவா.'



அவள் குளித்து தலை உலர்த்தி பொட்டு இட்டு படியிறங்கினாள். வீடு அவளை வியப்புடன் பார்த்தது.

'இங்க வா' சுந்தரா அவளைக் கூப்பிட்டான். அவள், அருகே வந்து நின்றாள்.

'நீ எங்கேயும் போய் யாரையும் கூப்பிட வேண்டாம். இனி அது என் வேலை. கடை சாவிய எடுத்துண்டு வேதவல்லியோட கிளம்பு. ஸ்டாக் செக் பண்ணு. உங்க வீட்டை நீ வெட்டி விட்டுட்டேன்னு எனக்குத் தெரியும். மறுபடி இப்படி ஒரு பைத்தியக்காரத்தனம் பண்ணாதே.'

'அந்த ஆளை எப்படிடா மடக்கறது?'

'நாம ஏன் மடக்கணும்? அவன், அவன் காசாலேயே அழிவான். மறுபடி அந்த ஆள் இந்த வீட்டு படியேற விடவேண்டாம்.'

'காம்பவுட்டரா வந்துட்டா...?'

'வரட்டுமே. ஒதுக்கி வைப்போம்...'

'வம்பு பண்ண வந்தா...?'

'அடிப்போம். தெளிவா இருக்கற அப்பாவே, ராஜகோபால் விஷயத்துல குழம்பிட்டா இவன் நாலு மாசம் கடையத் தாக்குப் பிடிக்க மாட்டான். நீ பெங்களூர் கொண்டுபோய் காசு கட்டு நடராஜ் கல்பனா, பத்தாம் நாள் திதிக்கு. லட்சுமி நாராயணனுக்கு கார்ட் போட வேண்டாம்.

'நாகராஜ், நீ பாம்பே போ, கடைக்கு கூட்ஸ் சப்ளை பண்றவாளைப் போய் பார். கர்ட்டசி கால்னு சொல்லு. அப்பாக்கு உடம்பு சரியில்லாம இருந்தது. அதனாலதான் பல பிரச்சனைகள்...னு சொல்லு ஒருவேளை 'ராமோஸ்' கம்பெனி, பத்தி கேட்டா அதுபத்தி தெரியலைன்னு சொல்லிடு. பட்டுக்காத பதில் சொல் நைன்த் டே அன்னிக்கு மெட்ராஸ் வா போறும். நடராஜன் டெல்லி

போகட்டும், மாப்பிள்ளைய பார்க்க வேண்டாம். புது ஐட்டம் ஏதாவது இருந்தா எனக்குப் போன் பண்ணு...'

நம்பிகள் பயணமானார்கள்.

'சுந்தரா, புதுசா...உடையாத பீங்கான் தட்டு வந்துருக்குடா. மெர்மலாய்டுங்கறது பேரு அட்ராக்டிவா இருக்கு. ஒரு செட் தொள்ளாயிரம் சொல்றான்.' நாகராஜ் போன் செய்தான்.

'வாங்கு. அம்பது ருபா அட்வான்ஸ் பண்ணு...'

'ஸ்டீல் சேர்...வெல்வெட் துணி தைச்சு வச்சுருக்கான் போல்டிங்டைப். லைட் வெயிட். நூறு தரேங்கறான்...' நடராஜ் போன் செய்தான்.

'அனுப்பச் சொல் உடனே. நாலு நாள்ல வரணும்னு சொல். பாதி வித்ததும் காசு தரேன்னு சொல்...'

'ஸ்கை பேக் வந்திருக்கு சுந்தரா' நாகராஜ் பேசினான்.

'சேம்பிள் நாலு வாங்கி அனுப்பு...'

'கேஸ் ஸ்டவ் புது மாடல் வந்துருக்கு...'

'நமக்கும் வரட்டும் நடராஜா...'

'டேய் சுந்தரா, வாட்டர் ப்யூரிபையர் வேணுமா?'

'போகுமா தெரியலை. ஒண்ணு நம்ம வீட்டுக்கு வாங்கிண்டு வா. சரியா இருந்தா ஆர்டர் தரலாம்...'

'சுந்தரா வாட்டர் பில்டர் எவர்சில்வர்ல...'

'வாங்கு. நாப்பது போறும். கேண்டல், கூட பத்து வாங்கிக்கோ...

இரவும் பகலும் கொள்முதலில் முழு கவனமும் வீடு செலுத்திற்று.

நாலு மணி வரை தூக்கம். ஐந்து மணி நேர தூக்கம் தான் முடிந்தது.

வங்கிக்கு கட்டின காசு தவிர, மீதி மூன்று லட்சம் கொள் முதலுக்குப் போதவில்லை.



அம்மா சகல நகைகளும் கொண்டு வந்து, சுந்தரா கேட்காமல் அவன் மடியில் வைத்தாள்.

அம்மாவின் ப்ளு ஜாகர் மூக்குத்தியும், தோடுகளும், மோதிரமும் தவிர மற்றது எடுத்துக் கொண்டு சுந்தரா நகைக் கடைக்குப் போனான். அப்படியே வைத்து பின்னொரு மூன்று லட்சம் வாங்கினான்.

கொள்முதல் செய்த எல்லா இடத்துக்கும், ஆரம்பத் தொகைக்கு செக் அனுப்பினான்.

தோட்டத்தில் கல் நட்டு, அப்பாவுக்கு தினமும் தர்ப்பணம் செய்தான். நம்பிகள் திரும்பினார்கள்.

அப்பா இறந்த ஒன்பதாம் நாள் எல்லாரும் மறுபடி கூடினார்கள். கடை திறக்க தயார் என்றார்கள்.

பத்தாம் நாள் அம்மா, சாஸ்திரப்படி அமைதியாய் விதவையானாள். தாலி கழட்ட விம்மினாள். குங்குமம் அழிக்க தேம்பினாள்.

'தைர்யமா இரும்மா. நம்ம வீட்ல இனி எல்லா நல்ல காரியமும் உன்னாலதான் நடக்கணும். ட்ரஸ்ட்டுக்கு நீ தான் பொறுப்பு. தைர்யமா இரு...'

புருஷன் இறந்த துக்கத்தைவிட பிள்ளைகள் படும் அவஸ்தைதான் வேதனையாய் இருந்தது அவளுக்கு. நான் நிறைவாக வாழ்ந்து விட்டோம். குழந்தைகள் வாழ வேண்டுமே என்கிற கவலை இருந்தது. அழுது அதிகம் ஆற்றாமல் அந்தக் கிழவி குழந்தைகளை உற்சாகப் படுத்தினாள்.

பத்தாம் நாள் லட்சுமி நாராயணன், அழையா விருந்தாளியாய் உள்ளே நுழைந்தார்.

## 22

என்னப்பா, வீட்டுக்குப் பெரியவனாய்ட்டியா?' சம்பிரதாயமாய்லட்சுமி நாராயணன் சுந்தராவை விசாரிக்க, சுந்தரா மௌனமாய் நின்றான். தகப்பனார் இறந்தாரா? என்று கேட்காமல், அவர் இறக்க, அவர் ஸ்தானத்துக்கு நீ வந்து விட்டாயா? என்று 'இடக்கர் அடக்கலாக' கேட்கும் துக்கம் இது.

'ஆம்...' என்றோ, 'இல்லை'யென்றோ சொல்லாது இக்கேள்விக்கு மௌனமாய் இருத்தலே மரபு. மெல்ல ஹால் தாண்டி அம்மா இருக்கும் அறைக்குள் போன லெட்சுமி நாராயணனை வீடு மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது.

'மகாலட்சுமி மாதிரி இருப்பேள். நெத்தி நிறைய பொட்டும், தழைய தழைய தாலியுமா. பகவானுக்கே பொறுக்கலை. விதி வலியது. அவர் நேரம் முடிஞ்சு போச்சு. படுத்து, 'போய்ட்டு வரேன்னு' சொல்ற சாவு கிடைக்குமா எல்லாருக்கும். புண்யாத்மா.'

'நல்லது பண்ணினார். நல்ல சாவு கிடைச்சிருக்கு.' அம்மா வறண்ட குரலில் பதில் சொன்னாள்.

'அது வாஸ்தவம்...'

'மத்தவாளுக்கு என்ன எழுதி வெச்சிருக்கோ. இங்க வந்து கொஞ்சி குலாவி முதுகுல குத்தறவாளுக்கு என்ன எழுதி வெச்சுருக்கோ.'

'அது வாஸ்தவம்'' புரியாமல் முதலில் சொல்லிவிட்டு பிறகு என்ன என்பது போல் பார்த்தார்.



'இருக்கறது போறாதா? இன்னும் என்ன காசு ஆசை? ...ருக்கு சம்பாதிக்கனும். சரி சம்பாதிங்கோ வேண்டாங் ...லை. பெண் கொடுத்த இடத்துல இப்படி போக்கிரித் ...னம் பண்ணலாமா? பொறுப்பு வேண்டாம். அது முகம் ...ரங்கி ஐயோ, நம்ம அப்பாவால நமக்கு இந்த இடத்துல ...வமானமாயிடுத்தேன்னு நினைச்சா நன்னாயிருப் ...னா?''

''என்ன போக்கிரித்தனம். யாரைச் சொல்றேள்?''

இவர் இல்லை இதற்கு காரணம் என்று இந்த கணம் ...டிக்கப்பட்டால்கூட சந்தோஷமாய் இருக்கும் என்று ...ன்றிற்று சுந்தராவுக்கு. ஆனால், அவர் பதற்றம் ...வரைக் காட்டிக் கொடுத்தது. எப்படி தெரிஞ்சது? ...ன்று அவர் யோசிக்க ஆரம்பித்தது புரிந்தது.

''உன்னைத்தான்யா சொல்றாங்க...'' நாகராஜு ...டிக்குரலில் கத்தினான்.

பளீரென்று அவருக்கு புரிந்து போயிற்று. அன்று ...றைய உளறியிருக்கக்கூடும் என்பது தெரிந்து விட்டது.

''என்னடா சொல்றே?''

''அடச் புடான்னா செருப்பு பிஞ்சிடும்.''

''சுந்தரா என்ன இது? இவனை கண்டிக்க வேண் ...மா? நீ பெரியவயா லட்சணமா...'' லட்சுமி ...ராயணன் கூவினார்.

''நீ பெரியவனா, வயசாளியாடா நீ? குடிச்சுட்டு துணி ...ல்லாத வேறு ஒருத்தன் பொண்டாட்டியோட ஆடற.''

''நீதான். நீகூடத்தான.''

''உனக்காக ஆடினேன்டா, உன்னை யாருன்னு ...ண்டுபிடிக்க ஆடினேன். இவங்க எல்லார்கிட்டயும் ...சிட்டு வந்து ஆடினேன்.''

''சின்ன வயசுலேர்ந்து மல்லிகாவை லவ் பண்ணைது ...ா, தானா? இவன் என்ன சொன்னான் தெரியுமா ...குடிச்சுட்டு?''

''டேய். அது எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயம்! உன் கதைய பேசு'' நாகராஜு உட்கார்ந்த வண்ணம் உரக்கக் கூவினான்.

வீடு முழுவதும் அவரையே பார்த்துக் கொண்டிருப்பது அவருக்குப் புரிந்தது.

''லட்சுமி நாராயணன் நீங்க எப்ப அப்பாகிட்ட பார்ட்னராக கேட்டேன். ஏன் மாறுதல் எனக்குத் தெரியாது. நான் ரெடி. இப்ப உங்களை பார்ட்னரா சேர்த்துக்கறேன். என்ன சொல்றேள்?''

வீடு எழுந்தது. என்ன என்பதுபோல் சுந்தராவைப் பார்த்து.

சுந்தரா கையமர்த்தினான். அவன் விரலுக்கு அந்த வீடு கட்டுப்படுவதை அவர் உணர்ந்தார். எத்தனை சதவீதம் காசு போட்டாலும் இவன்தான் முதலாளி என்பது அங்கே உடனே தெரிந்தது.

''நான் ஏன்டா உன்கிட்ட பார்ட்னராகணும். நாப்பது லட்ச ரூபா காசுக்காரன்டா நான். நாலு வருஷத்துல உன்னைவிட உசரமா நிப்பேன். நான் என்ன போக்கிரித்தனம் பண்ணினேன். கடைல வேலை செய்றவனை உங்கப்பன் கழுத்தப் பிடிச்சுத் தள்ளினான். அதனால வந்த வினை.''

''முதல்ல பெரியவாளை மரியாதையாப் பேசுங்கோ'' வேதவல்லி அதட்டினாள்.

''யாரு நீயா? உன் மரியாதை எனக்குத் தெரியாதா. ஒரு இன்ஜினியரை ஒச்சுட்டே. இப்ப யாரு...கூட மாரத்தாசைக்கு...'' நாகராஜ் எழுந்து அவர் சட்டையைப் பற்றி இழுத்து தள்ளினான்.

அந்த மனிதர் ஹாலின் நடுவே கைகள் விரித்துக் குப்புற விழுந்தார்.



''எனக்கு உறவுக்காரன்கறதால விடறேன். உன் பொண்ணு எதிர இருக்கான்னு விடறேன். தப்பா ஒரு வார்த்தை பேசின கொலை விழும்.''

''என்னடா என்ன தப்பு நான் பண்ணைதுல? ப்ளினஸ்னா ஆயிரம் இருக்கும். உனக்கு வேண்டான்ன அவனை, நான் சேத்துக்கக் கூடாதா? உனக்கெதிர்க்க கடை போடக் கூடாதா? இந்த மாதிரி தலையணை கடை எனக்கு மட்டும்தான் காப்பிரைட்டா. கை வச்சுட்ட இல்லை. பாரு நான் யாருன்னு காட்டறேன் பாரு. டேய் சுந்தரா, தம்பிய அடிக்க வச்சு வேடிக்கை பார்க்கறயா? பெண்ணை கொடுத்துட்டா உங்களுக்கு கைகட்டி சேவகம் பண்ணணுமா; என் பெண் அழகுக்கும், அறிவுக்கும் இந்த வீடு கால் தூசு பெறாது. அனிதா நீ கிளம்பு, உடனே இந்த இடம் விட்டு கிளம்பு. ஒண்ணுல ரெண்டு பாத்துடலாம். வெளியே வந்துடு நீ.''

''நான் ஏன் வரணும்?'' அனிதா நிதானமாய்க் கேட்டாள்

''இது என் வீடு. இவர் என் புருஷன் இந்த வீட்டு சௌந்தர்யத்துக்கு முன்னால என் அழகோ, அறிவோ கால் தூசு பெறாது.''

''ஓஹோ. உன்னை அடிச்சு மடக்கிட்டாளோ?

''என்னை யாரும் அடிக்கவும் இல்லை. மடக்கவும் இல்லை. பத்திரிகைக்கு லஞ்சம் கொடுக்க என் புருஷன் கிட்ட வாங்கின லட்ச ரூபாயை ஒரு வாரத்துல திருப்பிக் கொடுக்கல. உனக்கும் எனக்கும் அப்பா பொண்ங்கற உறவு அறுந்து போயிடும். கொடுத்திட்டியா, கண் காணாத போ. இங்க வராதே. நீ செத்துப் போனா வீட்டு வாசலுக்கு வந்து ஒரு குறை அழுதுட்டுப் போறேன்.''

''அத்தனை விட்டுப் போயிடுத்தா?''

''ஆமாம்.''

''என் காசுல நின்னு கொழுத்துட்டு என்னையே எதுத்துப் பேசறியா?'' பேங்குல லோன் வாங்க நாயா அலைஞ்சேளே... அது மறந்து போச்சா இவானுக்குன்னு நீ கேட்க வேண்டாமா?''

''லோன் கொடுத்தது பேங்க்,'' நடராஜு பேசினான்.

''இந்த லட்சுமி நாராயணன் இல்லேன்னா மசி கொடுத்துருக்கும் பேங்க்.

''வாசப்படி ஏறி கைக்கூப்பி கடன் தரேன்னது நீங்க. பொண்ணு தரேன்னு கோவில்ல காலைப் புடிச்சது நீங்க. வார்த்தை சரியா வரட்டும். கல்பனா எகிறினாள்.

''அதான் தப்பா போச்சு. நா உதவி செய்தா நமக்கு உதவி செய்வான்னது தப்பா போச்சு. நன்றி கெட்ட ஜென்மங்கன்னு தெரியாத போச்சு''

''என்னைய்யா நன்றி மறந்தோம்? துரோகி போஸ்டர் ஒட்ட காசு கொடுத்த துரோகி நாகராஜ்'' கத்தினான்.

''முடிஞ்சு போச்சா இது. நாளை பேப்பர்ல வரும் என் பொண்ணை அடிச்சு சித்ரவதை பண்ணி வீட்டு லேயே ஜெயில் மாதிரி வச்சுருக்கேன்னு பேப்பர்ல வரும் சந்தி சிரிக்கப்பண்றேன் பாரு மங்களம் அண்ட் கோவை நான் எதுக்குடா பார்ட்னரா சேரணும். உன் கம்பெனி அழிச்சுட்டு உனக்கு நான் என் கம்பெனில துடைக்க வேலை தரேன். இரண்டே வருஷத்துல பண்ணிக்காட்டு றேன். முடிஞ்சு போச்சுடா. மங்களம் அண்ட் கோ ஆட்டம் குளோஸ். இதோட நீங்க காலி.''

பித்துப் பிடித்தவர்போல் கத்திக்கொண்டு நிற்கிறவர் எதிரே போய் சுந்தரா கை கூப்பினான்.

''என்னடா வெளிய போங்கறியா? ஊமைக் குசும்பா நீ உன்னாலதான் ஆடறது இதுகள் எல்லாம். தப் பொண்டாட்டியப்பத்தி ஆயிரம் குறை சொன்னான் அங்கவந்து இங்க நியாயம் பேசறான் உத்தம்பி.''



சுந்தரா கூப்பிய கை விலக்காது நின்றான். லட்சுமி நாராயணன் நிமிர்ந்து பார்த்தார். வெளியேறினார். கார் கிளம்பும் சத்தம் கேட்டது.

வீடு அமைதியாயிற்று.

''எப்படி கத்தி கூச்சல் போடறார். இவரைப் போய் எப்படி பார்ட்னராச் சேத்துக்கறேன்னு சொன்னேள்?'' கல்பனா வியந்தாள்.

''அந்த ஒரு வார்த்தைதான் அவரை இவ்வளவு பேச வச்சுது. இத்தனை ஆட வச்சுது. இப்படி செய்தேனான்னு கேட்டா கதாரிச்சு இல்லவே இல்லைன்னு சாதிச்சுருப்பார்.'.

''எனக்குப் புரிஞ்சது சுந்தரா. நீ எங்கதொடறேன்னு, அவரை கத்தவிட்டு, அவர் வாயாலயே அவரை காட்டி கொடுக்க வச்சு துரத்திட்டே.''

'அனிதா' சுந்தரா திரும்பி அவளை அழைத்தான். அவள் அருகே வர, அவள் தலையை கோதினான்.

'ஐயம் சாரி. உங்க அப்பாவை இங்க பண்ண எல்லா இன்சல்ட்டுக்கும் நா உன்கிட்ட மன்னிப்பு கேக்கறேன். அவரே அவரைக் கெடுத்துக்கறார். யாரும் அவரைக்காப் பாத்த முடியாது''

''எனக்கு துக்கம் இல்லை சுந்தராண்ணா ''

''இருக்கும் குழந்தே. துக்கம் இருக்கும். போ. போய் அழுதுடு மனசு விட்டுக் கதறு. நடராஜனை கெட்டியா பிடிச்சுக்கோ, அவன் தோள்ல ஏறி விரட்டு.''

தேம்பத் துவங்கிய அனிதாவை நடராஜன் தாங்கி மாடிக்குச் கூட்டிப் போனான்.

பத்தாம் நாள் துக்கம் முடிய, வீட்டில் உள்ள விளக்கு களைத் தேய்க்கத்துவங்கினார்கள். தூசு தட்டி, ஒட்டடை அடித்து படங்கள் துடைத்து வீடு முழுக்க, வீட்டு காரியத்தை கவனித்தது.

மறுநாள் எட்டு மணிக்கு இளைஞர்களும், யுவதிகளும் வரத் தொடங்கினார்கள்.

படிப்பு சாமத்தியமும், அமைதியும் கொண்ட நபர்கள் ஐம்பதுபேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பெண்களை, அனிதா பல்வேறு கேள்விகள் கேட்டாள். சிறந்தவர்களை சுந்தராவிடம் அனுப்பினாள்,

தன்னிடம் வேலை செய்த ஆறு பெண் டெக்னிஷியன்களை மறுபடி நடராஜ் வேலைக்கு வைத்துக்கொண்டான்.

நாகராஜ் கடை திறந்து நாலு வேலையாட்கள் வைத்து மொத்த இடமும் சுத்தம் செய்தான். வேதவல்லி அவனுக்கு துணை செய்தாள். தனக்கும் அனிதாவுக்கும் தனி டேபிள் சேர்; மற்ற ஆட்களுடன் சமதையாய்ப் போட்டுக்கொண்டாள்.

பத்திரிகை விளம்பரத்துக்கு ஓடினாள். நடராஜன் கருவிகள் வாங்க கடைகளுக்குப் போனான்

சுந்தரச ஆடிட்டருடன், இந்த பதினைந்து நாள் கடை அடைப்பு, எப்படி கணக்கில் ஏற்பது என்பது ஆலோசனை செய்தான். பிரதிமாதம் என்ன டர்னோவர் காட்டினால் லாபம் வரும் என்கிற கணக்குப் போட்டு வைத்துக் கொண்டான்.

தேர்ந்தெடுத்த யுவதிகளுக்கும், பையன்களுக்கும் நீ யூனிபார்ம் தைக்கப்பட்டது மாம்பலம் கடையில் சீட் கொடுத்தவுடன் துணி கிழித்து அளவு எடுக்கப்பட்டது

அப்பா படம் மூன்று, பெரிது செய்யப்பட்டு கடையில் இரண்டும், வீட்டில் ஒன்றும் வைக்கப்பட்டன.

அக்னி வளர்த்து பதிமூன்றாம் நாள் வீடு சுத்திகரிக்கப்பட்டு, வேலையில் புதிதாய்ச் சேர்ந்தவர்கள் உட்பட உறவும், நட்பும் விருந்துண்டன வீடு முழுவதும் புனித ஜலம் தெளிக்கப்பட்டு சடங்குகள் நிறைவே றின



பற்பகல், வீடு அயர்ந்து தூங்கிற்று. மாலையில் சகலரும், கடைக்குப் போய் எல்லாம் சரியாய் இருக்கிறதா என்று பார்த்தார்கள். இளைஞர்களையும், யுவதிகளையும் இடம் பிரித்துக் கொடுத்தார்கள்.

இரவு பாலும், பழங்களும் சாப்பிட்டுவிட்டு, ஹாலில் உட்கார்ந்து அரட்டை அடித்தார்கள். வேதவல்லியையும், நாகராஜனையும் கேலி செய்தார்கள்.

''ஏண்டி, பேசறதேயில்லை...வேற ஏதாவது நடந்தது ' கல்பனா, வேதவல்லி இடுப்பில் கிள்ளினாள்,

''நாகராஜன் அவளைப் பார்த்தாலே கர்ப்பம் உண்டாயிடும்னு நினைச்சுட்டா போல இருக்கு.' அனிதா கண் சிமிட்டினாள்.

''ஆமா...இப்பவாவது பேச நீங்களா...'' நடராஜன் கேட்டான்.

''அடடா. பேச்சு, பேச்சு பேச்சுதான். ஊர்பட்ட அரட்டை அடிக்கிறார். இவரா பேசாத இருந்தார்னு ஆச்சரியமா இருக்கு.'

''மேடம். அரட்டை அடிச்சா குழந்தை பொறக்காது தெரியுமா?'' அனிதா மறுபடி இடித்தாள்.

''நீ ஒன்றும் சொல்லித் தர வேண்டாம். மகாபாவி. இடுப்புக்கு கீழே முடி தொங்கிற்று. எப்படி வெட்டிப் போட மனசு வந்தது.''

''இல்லம்மா. அவளுக்கு பாப் பண்ணிக்கணும்னு ஆசை. சுந்தரா ஏதாவது சொல்வானோன்னு பயம் செண்டிமெண்டா ஒரு ட்ராமா போட்டு கட்பண்ணி எறிஞ்சுட்டா.'' நாகராஜன் விசிலடித்துப் பேசினான்?

''ஓ எனக்கு யார்கிட்டயும் பயம் கிடையாது. ஒரு துக்கம். செய்துட்டேன்''

''உங்களுக்கு துக்கம் வந்தாலும், சோகம் வந்தாலும் ஒரு படி மேலே போய்டறீங்க நா சொல்லிட்டேனே

வாரண்டால செருப்பே வைக்கக் கூடாதுன்னு. அப்படி வச்சாலும் உன் கண்பார்வைல இருக்கக் கூடாதுன்னு.''

வீடு சிரித்தது.

''மல்லிகா என்ன பண்ணா உங்களை? ஒன் வொண்ணா சொல்லுங்களேன். ரொம்ப அழகியா அவள்?' அனிதா குனிந்து சீரியசாய் நாகராஜனைக் கேட்க, வீடு மறுபடி சிரித்தது! எழுந்து ஓட முயற்சித்த வனை, வேதவல்லியும் அனிதாவும் அழுத்திக்கொண்டார் கள். அவன் தவித்தான்.

கல்பனா வாய்விட்டுச் சிரித்தாள்.

'கானல் வரி பாடுவீங்களா இரண்டு பேரும்?'' அனிதா தொடர்ந்து துளைத்தாள்.

''கானல் வரின்னா?''

''சாக்கடை வரின்னு அர்த்தம். யார்டா இவன்? காலேஜ்ல படிக்கல. கோவலன், மாதவி பாடினது,' நடராஜ் கேலி செய்தான்.

''கயல் எழுதி, வில் எழுதி, கார் எழுதி...'' அனிதா பாட வேதவல்லி அவனை இழுத்து தாலாட்டினாள்.

''அனிதா பாடற்த நீங்க நன்னா கேட்டு மனப்பாடம் பண்ணி, இன்னிக்கு ராத்திரி பாடல, எனக்கு கெட்ட கோபம் வரும்.'' வேதவல்லி சொல்ல வீடு சிரித்த சிரிப்பில் வெளியில் பூத்த பூக்கள் குலுங்கின.

''அ...கானல் வரி கண்ணகியோட பாட முடியுமா'' நடராஜ் இடைமறிக்க...

''என் பாடினா என்ன? நான்தான் கண்ணகி. நான் தான் மாதவி. ராத்திரி பாடியே ஆகணும்.''

''ராத்திரி என்ன. இப்பவே பாடச் சொல்லுங்கோ மன்னி.'' நடராஜன் நேயர் விருப்பம் கேட்டான்.

''ம்ம். பாடுங்கோ.'' வேதவல்லி மிப்பனை சொடுக் கினாள்.



''கயல் எழுதி வில் எழுதி கார் எழுதி...'' நாகராஜன் கட்டைக் குரலில் பாடினான்.

''கயல்ன்னா...மீனு...எழுதின்னா?'' கேட்டான்.

''அதாவது கண்ணுக்கு மை எழுதி, புருவம் வரைஞ்சு, கார் மேக கூந்தலுக்கு எண்ணை தடவி,'' அனிதா விளக்கம் சொன்னாள்.

''ஐயோ. நான் ஆக்ஷனோட பாடறேனே...''

நாகராஜன் வேதவல்லியைத் தேட, வேதவல்லி உள் அறைக்கு ஓட, அவன் தொடர மற்ற தம்பதிகள் ஜோடி யாய் பிரிந்து தத்தம் அறைகளுக்குள் புகுந்து கொண்டார் கள்.

அங்கே இரவு கயலும், புருவமும் எழுதிற்று. கார்மேக கூந்தலை கோதிற்று. காமன் செயலெழுதிற்று.

எது துக்கமோ, எது வேதனையோ, எது அவமா னமோ அதை அந்த வீடு வெற்றிகொண்டு துக்கத்தையும், வேதனையையும், அவமானத்தையும் வேடிக்கையாக்கி னார்கள். துடைத்து எறிந்தார்கள்.

விடிய சகலரும் குளித்து நல்லுடை உடுத்தி ஹாலில் கூடினார்கள்.

அப்பா படத்துக்கு முன் கல்பனா விளக்கேற்றினாள். அனிதா ஸ்டூலில் ஏறி மல்லிகை சரம் சாற்றினாள். வேத வல்லிய ஊதுபத்தி கொளுத்தினாள்.

''இடதும், வலதும் தம்பிகள் நிற்க படத்துக்கு நேரே நின்று கை கூப்பினான். கண் மூடினான்.

''குருப் பிரம்மா...குரு விஷ்ணு
குரு தேவோ மஹேஸ்வரஹ...
குரு சாட்சாத் பரப் பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ...''

மூவரும் வாய் திறந்து சொன்னார்கள். அமைதியாய் இருந்தார்கள்.

''அப்பா அப்பா, இவ்வளவு பெரிய சுமைய என் தலைல வச்சுருக்கியே நான் தாங்குவேனா? என்னால முடியுமா? எனக்கு தெம்புண்டா? அப்பா, அப்பா எனக்கு துணை வா. எனக்கு உதவி செய்...!'' சுந்தரா மனமுருகி நின்றான். உள்ளே மனசுள் முகம் மலர சிரிக்கும் நகப்பனை நோக்கி யாசித்தான்.

உடம்பு குலுங்கிற்று. அவன் இல்லாமல் நானில்லை என்கிற பாவனை லுங்கி, உள்ளே நான் அழிந்தது. அது கரையக் கரைய அழுகை பொங்கிற்று.

''தம்பிகள் பயந்து அவனை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார்கள்.

அந்த இறுக்கத்தில் புதிய பலம் பெற்றான்.

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்.

ஏமாப்போம், பிறப்பறியோம்...' என்று பாடினான்

கல்பனாவை அம்மாவுக்கு துணையாக விட்டு கடை நோக்கி புறப்பட்டது வீடு. கடகடவென்று ஷட்டர் கதவு உயர்ந்தது உள்ளே குளுமையான காற்றுப் புகுந்தது.

## 23

கடைக்குப் புதிதாய் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பது விற்பனையாளர்களும் வரிசையாய் நிற்க, சுந்தரா அமைதியாய் பேசினான்.

''நண்பர்களே சேல்ஸ்ங்கறது எளிதான வேலையில்லை. இதற்கு அடிப்படையான தகுதி பொறுமை. அடுத்தபடி புத்திசாலித்தனம். இது தாண்டி பேச்சுல நயம்



உங்களுக்கு முதலாளி நான் இல்லை.கஸ்டமர். நாலு ருபா காசு பைலவச்சுக்கிட்டு ஒரு பொருள் வாங்க, நானூறு கேள்வி கேட்பாங்க. அத்தனைக்கும் பதில் சொல்ல வேண்டியது நம்ம கடமை. அவரை நாலு கேள்விக்குமேல கேட்கவிடாத இன்ன கேள்விதான் கேட்பார்ங்கறதபுரிஞ்சு கிட்டு நீங்களா பதில் சொல்றது புத்திசாலித்தனம்.'போன நடவை உங்களோட. ஒரு குழந்தை வந்தானே பாபு பாபு தானே பேரு...சௌக்கியமா இருக்கானா...', இது நயம்...

''கஸ்டமர் பொருள் வாங்கலைன்னாலும் பரவா யில்லை. மறுபடி இந்த படியேறி வரும் வகையா செய்ய றதுதான் உங்க வேலை.

''எல்லாரும் சேல்ஸ்க்கு புதுசு. கொஞ்சம் நெர்வஸ்ஸா இருப்பீங்க. இரண்டு நாள்ல சரியாயிடும். என்ன சந்தேகம் வந்தாலும் என் ரூம் கதவு தட்டிக் கேளுங்க. அனிதா, வேதவல்லி இவங்க ரெண்டு பேர்கிட்டயும் கேட்கலாம். அவ்ஸ்யம்னா நடராஜ், நாகராஜுகிட்டயும் கேட்கலாம்.

''இந்த கடைல இரண்டு வருஷம் வேலை செய்துட்டு உங்க எங்க வேணாலும், எந்தவிதமான வேலையா இருந்தாலும் செய்து ஜெயிக்க உங்களாலே முடியும்.

''சுயமா ஒரு கடை நடத்தக்கூடிய பொறுப்பும், திறமையும் தானா வரும். ஐ விஷ் யூ ஆல் த பெஸ்ட்.''

சுந்தரா உள்ளே போய் எல்லா பத்திரிகைகளிலும் வந்த முழு பக்க விளம்பரங்களைப் பார்த்தான்.

பையன்கள் மிக ஆர்வமாக இருந்தார்கள். ஒரு ஆளை பத்து பேர் சுற்றிக்கொண்டார்கள். பெண்கள், பொருள் வாங்கும்படி கெஞ்சினார்கள். அனிதா கவலையுடன் பார்த்தாள்.

''ஒரு வாரத்துல சரியா போகும் அனிதா. ரொம்ப கத்துக்கொடுக்காதே' வியாபாரம் மெல்லத்தான் நடந்தது பழைய பாக்கி சற்று விரைவாக வசூலாயிற்று.

''பழைய பெப் இல்லையேடா நாகராஜு,'' நடராஜ் கவலைப்பட்டான். ''புதுசா விளம்பரம் ஏதாவது பண்ண ணுமா?''

''ரேடியோல போடணுமா?''

''சுவர்ல எழுதினா?''

'தினம் பேப்பர்ல கால்பக்க விளம்பரம் கொடுத்தா...' சுந்தரா சகலமும் மறுத்தாள்,

''இல்லை. வேதவல்லி அப்பாவை கூப்பிடு போன்ல. அரைமணி, நேர நாம போய் பேச முடியுமான்னு கேளு.'' வேதவல்லி ஓடினாள்.

''என்ன பண்ணப் போற சுந்தரா?''

''மலர்க் குவியல் பத்திரிகையும், மங்களம் அண்ட் கோவும் இணைந்து நடத்தும் மெல்லிசைப் போட்டி ஆறு வாரம் ரேடியோல விளம்பரம் ஆகும். நுழைவு இலவசம். நுழைவு கூப்பன் கடைல கிடைக்கும்.''

முதல் பரிசு கலர் டி.வி.

இரண்டாம் பரிசு காட்ரெஜ் பீரோ.

மூன்றாம் பரிசு வெட் கிரைண்டர்.

'மெல்லிசைன்னா சினிமா பாட்டா?'

'எது வேணா.'

''என்ன செலவாகும் சுந்தரா?''

''கொஞ்சம் அதிகம் வேற வழியில்லை.''

வேதவல்லியின் அப்பா ஏற்றுக்கொண்டார். தன் பத்திரிகையே ஏற்று போட்டிகள் நடத்தும் என்றார். போட்டி நடத்துவது மலர்க்குவியல் பத்திரிகை பரிசு



கொடுப்பது மங்களம் அண்ட் கோ. பரிசு பெற்றவர் படங்கள் பத்திரிகையில் வெளியாகும்.

மலர்க்குவியலும், மங்களம் அண்ட்கோவும் நகர் முழு தும் சுவரொட்டிகள் ஒட்டினார்கள். பத்திரிகையில் போட்டி அறிவிப்பு பற்றிய விளக்கங்கள் வந்தன. கடைசி யில் நுழைவுத் தாள் வாங்க கூட்டம் கூடியது. நூறு பேரில் முப்பது பேர் கடை சுற்றிப் பார்க்க விற்பனைப் பையன் களும், பெண்களும் மொய்த்துக் கொண்டார்கள்.

'வளமான குரல், சாஸ்திரிய ஞானம், இதைவிட பாட்டை புரிஞ்சுகிட்டு அனுபவிச்சுப் பாடற சந்தோஷம் முக்கியம் பேசத் தெரிஞ்சவங்க யார் வேணா பாடவும் முடியும் முயற்சி செய்யுங்க.' ரேடியோ விளம்பரம் ஒலித்தது.

வாராவாரம் ஞாயிறு பிற்பகல் கல்யாண மண்டபம் ஒன்றைக் எடுத்து போட்டி நடந்தது. ஐந்து வாரம் நடந்து கொண்டு அதில் தேறியவர்களுக்கு ஆறாவது வாரம் போட்டி இருந்தது. ஒவ்வொரு வாரமும் வெற்றி பெற்றவர்களுக்கு எவர்சில்வர் வாட்டர் பில்டர் பரிசளிக் கப்பட்டது.

ஆறாவது வாரம் ஏகக் கூட்டம் அன்று வந்தவர் களுக்கு ஐந்து சதவிகித டிஸ்கவுண்ட் கூப்பன் வழங்கப் பட்டது. ஆயிரம் ரூபாயில் ஐம்பது ரூபாய் தள்ளுபடி பெரிய விஷயம். மிக்ஸியும், வால் கிளாக்கும், மின் விசிறியும், கேஸ் ஸ்டவ்வும் பறந்தன.

குளிர்பெட்டி கணிசமாய் போயிற்று கூட்டி கழித்து கணக்குப் பார்த்தால் நஷ்டமில்லை என்று தெரிந்தது, முன்னைவிட அதிகமாய் கடையில் கூட்டம் இருந்தது.

லெதர் சூட்கேஸ்கள், நுரை மெத்தைகள், மடக்கு நாற்காலிகள் கணிசமாய்ப் போயின.

மூன்று மாதத்தில் விற்பனை இளைஞர்களும், யுவதிகளும் வேலை கற்றுக் கொண்டார்கள். அனிதாவும், வேதவல்லியும் மெல்ல பின்னே நகர்ந்து கொண்டார்கள். வேதவல்லி கர்ப்பமுற்றாள். தகப்பனார் வீட்டுக்குப் போய் சீராடினாள்.

ராமோன் பற்றி முழு விவரமும் மலர்க்குவியல் ரிப்போர்ட்டர்கள் எடுத்து வந்து விட்டார்கள். பல தகிடுதத்தங்கள் தெரிந்தன.

அந்த ஆளை நான் எழுதி பிறகு பிடிக்கறீங்களா! இல்லை நீங்களாவே...என்று வேதவல்லி அப்பா உயர் போலீஸ் அதிகாரிகளைக் கேட்க, மறுநாள் ராமோன் கைது செய்யப்பட்டான். போலீஸ் தானே அந்த பெருமை எடுத்துக் கொண்டது.

லாக்கப்பில் வைத்து அவனைப் பிரித்துக் காட்டியது.

லட்சுமி நாராயணனைக் குறி பார்த்தது. பெரிய பேங்க் என்பதால் நிதானம் காட்டியது. தலைமை நிர்வாகம் அணைகட்டி, லட்சுமி நாராயணனை கோழிக்கோட்டிற்கு மாற்றியது.

அங்கங்கே தவணைக் கடைகள் தோன்றினாலும், மங்களம் அண்ட் கோ தன் கொடியை உயரப் பறக்கவிட்டது.

அக்டோபர் மாதம் வீட்டில் தீபாவளிப் பண்டிகை இல்லை. வேதவல்லி ஆண் குழந்தைக்குத் தாயானாள்.

அதே தேதியில் பிறந்த இருபது குழந்தைகளுக்கு அரை சவரன் நகையும், அலுமினியத் தொட்டிலும் வழங்கப்பட்டன.

கலர் டி.வி நகருக்கு வர, இந்தியா முழுவதும் டெல்லி நிகழ்ச்சிகள் தெரிய, டி.வி. விற்பனை உச்சக்கட்டம்



போயிற்று. டி.வி. பெட்டி தயாரிப்புகள் அதிகமாக, பல்வேறு கம்பெனிகள் வளர, தள்ளுபடி சதவிகிதம் உயர்ந்தது.

சங்கரா ட்ரஸ்ட்டை விரிவு படுத்தினான் சுந்தரா. அதிக பங்கு கொடுத்தான். பள்ளியிறுதி மாணவர்களுக்கு பரிசு வழங்கினான். ஸ்டீல் பீரோ பரிசு வாங்கியது. கலெக்டர் பையன். படிப்பு மேஜை நாற்காலி வாங்கியது டாக்டர் பெண். மூன்றாவது பரிசு காலேஜ் விரிவுரையாளர் பெண்.

'எதுக்கு இது. காசா கொடுத்துடுங்கோ. இடத்தை அடைக்கிற மாதிரி பொருள் வேண்டாம்' மூவருமே சொன்னார்கள்.

வேதவல்லி கோபமானாள். 'இந்த முதல் பரிசு ஐடியா தப்பு' என்றாள்.

'தாழ்த்தப்பட்ட ஜாதியில் முதல் மார்க்கு வாங்குகிற. நாகராஜ் பேச...

எல்லாரும் இடைமறித்தனர்.

'இப்படி பேசறது கேட்கவே கஷ்டமா இருக்கு நாகராஜா. எக்னாமிக்கல் ஸ்டேடஸ் முக்கியமே தவிர, யார் என்ன ஜாதின்னு நான் கேட்க மாட்டேன், கேட்கவும் கூடாது.'

'அப்படியில்லை சுந்தரா. கீழேர்ந்து ஒரு பையன் மேல பலருக்கு சமமா வரான்னா...' அனிதா மறித்தாள்.

'எண்பது சதவிகிதத்துக்கு மேல மார்க் வாங்கினா கடைக்கு வா, மார்க் ஷீட் காட்டு. உங்கப்பா சம்பளம் இரண்டாயிரத்துக்கு கம்மின்னா நான் காலேஜ் சம்பளம் கட்டறேன். புஸ்தகம் வாங்கித் தரேன்' சுந்தரா சொல்ல,

'வெரிகுட்' என்று வீடு கூவியது. வாரப் பத்திரிகையோடு மறுபடி கை கோர்த்துக் கொண்டது.

மலர்க்குவியில்—மங்களம் அண்ட் கோ உதவித்திட்டம் தயாராயிற்று.

விளம்பர போர்டை விட நியான் விளக்கை விட, பத்திரிகையில் இப்படி போட நகரம் முழுவதும் பேசப் பட்டது.

தானம் விளம்பரமாயிற்று. விளம்பரத்தால் விற்பனை கூடிற்று விற்பனைகூட தானம் அதிகரித்தது வியாபாரின் உலகம் தனியானது. அவனால் விற்பனை தவிர வேறு எதையும் யோசித்துப் பார்க்க முடியாது. அவன் பொழுது போக்கும், மன நிம்மதியும், தானமும், தர்மமும், இறை வேண்டலும் இதை ஒட்டியே அமையும்.

வியாபாரி கலைஞனாய் இருப்பதில்லை. கலையை ஆதரிக்கிறவனாய் இருப்பான். வியாபாரி கல்வி கேள்வி களில் சிறந்தவனில்லை. கல்விக்கு தலை வணங்குபவன். வியாபாரி மதகுரு இல்லை. ஆனால், மதம் மீதும், கடவுள் மீதும் மிகுந்த நம்பிக்கை உடையவன். வியாபாரி அரசியல்வாதி அல்ல, ஆனால் அரசியல் சதுரங்கம் ஆடுவதே அவன்தான். வியாரிக்குத் தெரிந்த ஒரு விஷயம் வியாபாரம்தான். அது சரியாய் நடக்க, நல்ல லாபம் காட்ட சகலரும் அவனைச் சுற்றி நிற்பார்கள்.

இந்த தேசத்தில், கல்வியும், மொழியும், மதமும் வளர்ந் தது இவர்களால்தான். இந்த தேச சரித்திரம் பிரித்துப் பார்க்க வேத விற்பன்னர்களின் காலம் ஒன்று இருந்தது வீரர்கள் காலம் ஒன்று இருந்தது- இது வணிகர்கள் காலம் வியாபாரி மறை முகமாய் ஆட்சி செய்யும் காலம்.

டிசம்பர் மாதம் முதல் பத்து தேதி அனிதாவும், நடராஜுவும், வெளியூர் பயணமானார்கள். விடுமுறை போல கழித்தார்கள். நடராஜுவும், வேதவல்லியும் குழந்தையை எடுத்துப் போய் அடுத்து பத்துநாள் கோவில் கோவிலாய்ச் சுற்றினார்கள். இருபது தேதிக்கு மேல் சுந்தரா பம்பாய் பயணமானான். கல்பனாவும் குழந்தை



...ளையும் கூட்டிக் கொண்டு போய் அரபிக்கடல் எல்லை ...ல் சுற்றினான். குழந்தைகள் கேட்ட பொம்மைகளெல் ...ம் வாங்கித்தந்தான். வெறுமே டாய்ஸ் என்கிற தனிப் ...தி திறக்க திட்டத்துடன் வந்தான்.

ஜனவரி முதல் தேதி வழக்கம் போல களைகட்டிற்று. ...ப்பாவின் ரிஜிஸ்டரே பூஜையாயிற்று. குழந்தையை ...லைக்காரியிடம் விட்டுவந்த வேதவல்லியும், அம்மாவும் ...ட்டுக்குப் போனார்கள். வேதவல்லி இடத்தை கல்பனா ...டித்துக் கொண்டாள். அனிதா கைதேர்ந்த வியாபாரி ...னாள். குழந்தை பிறந்த பிறகு நாகராஜுவுக்கு ...யிரம் யானை பலம் வந்துவிட்டது. எல்லா கான்ட் ...க்டும் அவனே பேசினான். கையெழுத்து சுந்தராவிடம் ...தான். நடராஜ் எலெக்ட்ரானிக்ஸில் கொடி கட்டிப் ...ந்தான். வெளிநாட்டிலிருந்து நாலு துண்டாய் வந்த ...விஷை ஒரு பெரிய நடிகர் கொண்டு வந்து காட்ட, ...ண்டு மாதத்தில் அது ஒன்றாய் இணைக்கப்பட்டது. ...லியமாய் நிகழ்ச்சிகளைக் காட்டியது.

அந்த நடிகர்தானி நடராஜனை அணைத்துக் கொள்ள ...து போட்டோ எடுக்கப்பட்டு, பத்திரிக்கையில் செய்தியா ...து. கடையிலும் அதே போட்டோ வைக்கப்பட்டது.

...மாம்பலத்தில் குழந்தைகூட மங்களம் அண்ட் ...வுக்கு வழி சொல்லிற்று.

...என்றும் இல்லாதபடி இந்த வருடம் ஆறுமாச டார் ...ட்டை முதல் நாளே எட்டினார்கள். பணம் எண்ண ...டி ஆட்களை உதவிக்கு கூப்பிட்டார்கள். அந்தந்த ...ழிப்பு ஆட்களை சர்வீஸ் துணைக்கு வைத்துக் கொண் ...கள்.

இரவு ஒன்பது மணிக்கு கஸ்டமர் கடையை விட்டு ...றங்க, ஷட்டர்கள் இறங்கப்பட்டன. விற்பனை இளை ...கள் அலுத்து தரையில் உட்கார்ந்தார்கள். ஒரு பெண் ...ல் நீட்டிப் படுத்து விட்டது.

சுந்தரா எல்லாருக்கும் தனித்தனியே ஆயிரம் ரூபாய் போனஸ் வழங்கினான். பொங்கலுக்கு மூன்று நாட்கள் விடுமுறை. நானூறு ரூபாய்க்கு துணி வாங்கிக் கொள்ள லாம் என்றான்.

வீட்டுக்குப் போய் நோட்டுக் கட்டுகளை எண்ணி னான். முப்பத்தேழு லட்ச ரூபாய் வியாபாரம் ஒ நாளில் பீரோவில் அடுக்கி வைத்துவிட்டு, அம்மாவை கூப்பிட்டுக் காட்டினான்.

அவள் எல்லாரையும் உட்கார வைத்து திருஷ் சுற்றிப் போட்டாள்.

'உன்கூட பேசணுமேடா சுந்தரா' என்றாள்.

அம்மா நாற்காலியில் உட்கார்ந்து கொள்ள, பிள்ளை தரையில் உட்கார்ந்து அவள் முகம் நிமிர்ந்து பார்த்தது.

'என்னம்மா?'

'லாபம் நிறைய வருதா?'

'வருதும்மா.'

கடைய விரிவு பண்ணப் போறியா?'

'பேசணும் எல்லார்கிட்டயும்.'

'யாரால லாபம் அதிகம் வருது?'

'அப்படி குறிப்பா சொல்ல முடியுமா?'

'குறிப்பா சொல்லணும்னா...'

'நடராஜுன்னு சொல்லணும். டி. வில அவனை அடிச்சுக்க ஆள் இல்லை...'

'அடுத்தபடி...'

'நான் கொஞ்சம் சரியா பார்த்து வாங்குவே சுரெக்டா வியாபாரம் செய்வேன்...

'நாகராஜு?'

'சொன்னது செய்வான்...'

'உனக்குப் பிறகு யாரு கடைக்கு?'



'அம்மா என்ன இது?'

'அப்பா தனக்கு பின்னாடி உன்னை எடுத்து நிக்க ச்சா இல்லையா? அது மாதிரி நீ வளர்ற போதே யாரை ாவது உனக்குத் துணையா வளர்க்க வேண்டாமா?'

'என்னது ஒவர் ஆல் ஓர்க். நடராஜு டி. வி. விட்டு மாட்டாங்கறான். நாகராஜன் ஐடியா வச்சுருப் ானே தவிர, நிதானம் இன்னும் வரலை. தடதடன்னு றங்குவான். இவன் ஐடியாவே இவனை இடிக்கும்.'

'வேதவல்லி?'

'இப்பதானே வந்துருக்கா...'

'அந்த பெண்ணை தயார் படுத்து. உன் இடத்துக்கு த்தபடி.'

'எப்படியம்மா?'

'இனிமே நாகராஜுக்கும், அவளுக்கும் சண்டை ாது மறைமுகமா அவகிட்ட அவகிட்ட அடிபணிஞ்சுட் ான் அவனால எதையும் தூக்கி நிறுத்த முடியும்.'

'எம்பொண்டாட்டிக்கு ஆசையா இருக்கு...கடைல லை செய்ய.'

'போறவே போறாது. விடு அவ பார்த்துண்ட யா வேதவல்லிக்கு தெரியலை...அவளை வீட்டுல விடு.'

'கேட்கணுமே.'

'உன் சொல்லை யார் மீறமுடியும்? எப்படி மீறலாம்?'

'மனசுல ஏதாவது வச்சுண்டு பேசறியா?'

'இது, தலைமுறை தலைமுறையா வளரணும். ஒரே ாத்தா ஒரே தாவரமா வளரணும்.'

'என்னுடைய திறமை வேதவல்லிக்கு உண்டு. ரையின் பண்ணா தாங்குவோ. ஆனா, பொம்பனாட்டி வாகமான்னு கேலி வரும்மா.'

'வரப்போற காலம் பொம்மனாட்டி காலம். இது பெரிசா தெரியாது.'

'உன் மனசுல நினைச்சுண்டுருக்கறதுச்கு ஒரு வடிவம் கொடுத்து பேசு. யார் யார் என்ன சொல்ற?'

'கல்பனா வீடு. வேதவல்லி உன் இடம். அனிதா கேஷ் கவனிச்சுக்கட்டும். நடராஜு டி. வி. நாகராஜ் மத்த ஐட்டம். நாலு வருஷம், சங்கரா டிரஸ்ட்ல செய் தோம், போறும்னு ஆகக்கூடாது. இன்னும் நிறைய செய்யணும்.'

'அனிதாவுக்கு கோபம் வரும்மா.'

'தானா வராது. யாராவது சொல்லிக் கொடுத்தா வரும்.'

'வேதவல்லிய, நான் பாம்பே டெல்லி கூட்டிண்டு போக முடியுமா? தம்பி பொண்டாட்டி இல்லையா அப்படி வராம முடியுமா?'

அம்மா யோசித்தாள்

'முதல்ல நாகராஜனோட அனுப்பு, பிறகு நடராஜ னோட அனுப்பு. அப்புறம் நீகூட்டிண்டு போய் சொல்லி கொடு.'

'தடார்னு ஆரம்பிக்காத... மெள்ள மெள்ள ஆரம் பிக்கச் சொல்ற.'

'ஆமாம்.'

''எம்மா, திடீர்னு இப்படி யோசனை?'

'நமக்கு உண்மையிலேயே உதவினது வேதவல்லி தகப்பனார். அவருக்கு பெண் நிலைமை சந்தோஷமா இருக்கும். அவனுக்கு வரப்போற சொத்தை அவளே நேர நிர்வாகம் பண்ண முடியும். அனிதாவவிட கல்பனாவவிட அவ சூட்சமம், அழுத்தம், இங்க நடந்த எந்த அவமானத்துக்கும் அவ நகரவேயில்லை நா னும்னு நினைக்கக்கூட இல்லை. அவ வித்தியாசமான பொம்மனாட்டிடா' சரஸ்வதி அவ.'

'சரிம்மா,' என்றான். எழுந்தான்.

# 24

சிக்கல் வருமோ? நாகராஜன் இயல்பாகவே கர்வம் கொண்டவன். எப்போதுமேதான் என்ற அகம்பாவத்தில் வளர்ந்தவன். அடி விழுதுவதுவதும், தெளிந்து எழுஆடுவ தும் அவன் இயல்பு. எனக்குப் பிறகு இங்கே நம்பர் ஒன் வேதவல்லி என்றால் விடுவானா? வேதவல்லி இதற்கு தயாராய் இருப்பாளா? வேதவல்லி இரண்டும்கெட்டான், அனிதாவிடம் உள்ள சுயமரியாதை இவளிடம் இல்லை. கொஞ்சம் பழைய தலைமுறை பாதிப்பு உண்டு. தடதட வென்று வேலையில் இறங்கி திறம்பட முடிக்கும். சொல் தாங்காது அடி வாங்கி அழும், புலம்பும்.

இதே அனிதாவுக்கு நேர்ந்திருந்தால், கட்டிடமேஸ்திரி, சற்பு பற்றி குறை சொல்லியிருந்தால், 'ஆமா நான் கேஸ் தான், நீ கூலிக்குத்தானே வேலை செய்யறே. அதைச் செய் முதல்ல,'' எகிறி அடித்திருப்பாள். வேதவல்லிக்கு எப்போதும் துணை ஆள் போக வேண்டியிருக்குமோ? பம்பாய்க்குப் போய் ஓட்டலில் தங்கி தனியே வியாபாரம் பேசி முடிக்க முடியுமா? நாகராஜன் அனுமதிப்பானா?

அம்மா ஏன் அடுத்த ஆள் தேர்ந்தெடுக்கச் சொல் கிறாள்? சுயமாய் எல்லார்க்கும் பொறுப்பு கொடு என் கிறாள். லாபம் நிறைய வருகிறது. நானே இதற்கு காரணம் என்று யாரும் கேள்வி கேட்பார்கள் என்றா? அப்படியானால் நடராஜன் எடுத்துக் கொள்வானா வேதவல்லி தலைமையை?

வேதவல்லி நிர்வாகி. நடராஜ் இஞ்ஜினியர் நாகராஜ் விற்பனை. அனிதா அக்கவுண்ட்ஸ் கல்பனாவை என்ன செய்யச் சொல்வது? ஸேல்ஸ் மேற்பார்வை என்றா?

பத்திரங்களில் கையெழுத்திடுவது நாகராஜ். அதை தயாரித்து சோதனை செய்து அவனிடம் அனுப்புவது கல்பனா.

சரியாய் இருக்கிறதே. அப்போது எனக்கு என்ன வேலை? பிஸினஸ் ப்ரமோஷன். வியாபாரம் விரிவு படுத்துகிற வேலை.

அட, அம்மா எங்கோ நூல்பிடித்துவிட்டாள். அப்பா வோடு கடைசி வருஷங்களில் பேசி பேசி சரியாய் யோசிக்கத் துவங்கி விட்டாள்.

கூட்டம் போட்டு இந்த திட்டம் சொல்லலாமா. எதிர்ப்பார்கள். ஏன்கலைக்கிறாய். இருக்கிறசெட்டப்பை என்பார்கள். ஐயையோ என்னால் முடியாது என்பார் கள் வேலையோடு வேலையாய் பார்த்துவிட வேண்டும். காரணம் கேட்டால் சொல்றதைச் செய் என்று சொல்லி விட வேண்டும்.

ஒரு வாரம் அமைதியாய் யார் யார் என்ன வேலை... எப்படி செய்கிறார்கள் என்று யோசித்தான். நடராஜ னிடம் போய் உட்கார்ந்தான்.

''என்ன சுந்தரா, திடீர்னு இங்க?''

''என்ன பிராப்பளம் இந்த டி. வி. செட்ல?''

''தெரியலை, நேத்திலேர்ந்து அல்லாடறேன். ஏ. பி. ஸி. டின்னு ஒவ்வொரு இடமா போகணும். ஸி.டி? ப்ளேஸ்லயும் தப்பு கண்டுபிடிச்சுடலாம். சில சமயம் செக்ஸ் வொய்லதான் கிடைக்கும்.

''தப்பு கண்டுபிடிச்சுட்ட பிறகு?''

''கூப்ட்டு எப்படி சரி பண்றதுன்னு சொல்லி லேடிஸ் கிட்ட கொடுத்துருவேன்.''

''மறுபடி செக் பண்ணுவியா?''

''அநேகமா தேவை இருக்காது?''



''டி. வி. ஸேல்ஸ் எப்படி பார்க்கற?''

''பசங்க பாக்கறாங்க. நான் ப்ராப்ளம்னா போறேன். பெரிய பார்ட்டி வந்தா போறேன். அந்த பைவ் ஸ்டார் ஹோட்டல்ல பதினேழு டி. வி. செட் நானே நின்னு வித்தேன்.''

''ஸோ, இங்க கடை பசங்கதான் அநேகமா வியாபாரம் முடிக்கறது.''

''யெஸ்.''

''கல்பனாவை ஒரு மாசம் இங்க போடட்டுமா?''

''எதுக்கு சுந்தரா?''

''ஒரு சூப்பர்விஷனுக்கு. கடை பசங்களை மட்டும் நம்பாம, நாம ஒருத்தர் என்னன்னு கவனிக்கறதுக்கு. டி. வி. ஸேல்ஸ் அனேகமா ஈவினிங்தான் அதிகம் இல்லையா?''

''ஆமா. மார்னிங் இரண்டு மூணு வரும். நேத்து ராத்திரி ஸெலக்ட் பண்ணி வச்ச செட் எடுத்துகிட்டு போவாங்க. மத்யானம் வீட்ல ஆண்டனா செட் பண்ணி அன்னிக்கு ப்ரோக்ராம் பார்ப்பாங்க.''

''நான் கல்பனாவை வர திங்கள் கிழமைலேர்ந்து இங்க போடறேன். சொல்லிக் கொடு.''

''சரி சுந்தரா. நாகராஜுக்கு ஆள் வேணுமே.''

''அது நான் பார்த்துக்கறேன்.''

ஏதோ சொல்ல வாய் எடுத்த நடராஜ், மறுபடி 'சரி' என்றான். வேலையில் மூழ்கினான்.

''நாகராஜ் அடுத்த டூர் எங்க?''

''ஹைதராபாத்.''

''என்ன?''

''வாட்டர் ப்யூரிபையர்னு பேம்ப்லெட் அனுப்பி இருக்கான். என்னன்னு தெரியலை. போய்ப்பார்க்கணும். புது டி.வி. சதுர டைப்ல பண்றான். விலை சரியா இருக்கு.

மற்றகண்டிஷன் பேசணும். அப்புறம் கல்கத்தா.பேனுக்கு அட்வான்ஸ் பண்ணணும். பாக்கிங் ஆள் இல்லை. பெயிண்ட் உரியறது. மின்விசிறி ஸேல் சரி இங்க வர மாட்டான். போன்ல உயிர வாங்கறான். கொஞ்சம் தலைல தட்டணும். வேற டீலர் பார்த்துக்கறேன்னு மிரட்டணும்.''

''வேதவல்லிய கூட்டிண்டு போ.''

''எதுக்கு?''

''என்ன பேசறது? எப்படி பேசறது? தெரிஞ்சுக் கட்டும்.''

''எதுக்கு?''

''எல்லாத்துக்கும் நீயே அலைய முடியுமா? இங்க என்ன நடக்கறதுன்னு உனக்கு தெரிய மாட்டேங்கறது?''

''இல்லை சுந்தரா.''

''உன் சுமையை குறைக்கணும்.''

,'அவ வேடி...எப்படிடா?''

''நானு மாடி நின்னு கட்டினவ வேதவல்லி.''

''கன்னா பின்னான்னு பேச்சு வந்தது.''

''பொம்பளைன்னா எல்லாரும் பேசுவாங்க முதல்ல உனக்கு வேதவல்லி நடத்தைல சந்தேகம் வராதே...''

''ச்சேச்சே.''

''கூட்டிண்டு போ.''

''கூட்டிண்டு போகலாம். தனியா எப்படி?''

''சொல்றத செய்டா.''

அனிதாவோடு கணக்கு மேஜையில் உட்கார்ந்தான். படு சுத்தமாய் இருந்தது வேலை.

''தாம்பரம் பக்கத்துல இருக்கற அனாதை ஆஸ்ரமத்துல ஆல்மோஸ்ட் எல்லா சாமானும் இங்க வாங்கறா ஆனா, ஏராட்டிக்கா இருக்கு பணம் கட்டறது ஒருஏழாந் தேதி கூட காசு கட்டலை...பத்து...பதினாலு...சிலசமயம்



இருவது தேதி ஆறது. கேட்டா டிஸ்டன்ஸ். அதிக வேலை. காசு வரலை. ஏதாவது சொல்றாங்க.'

'அனாதை ஆஸ்ரமம்தானே. முடிஞ்சபோது கட்டட்டும்.'

'இந்த அட்ரஸ் ஆள் ஓடிட்டான். வீடு காலி பண்ணிட்டான். ஐநூறு ரூபா பாக்கி. ஸ்டேட் கவர்மெண்ட் சர்வண்ட் மதுரைக்கு மாத்திட்டாங்களாம்.'

'விலாசம் வாங்கி நோட்டீஸ் அனுப்பு. பத்து நாள்ல பதில் சொல்லலைனா போலீஸ் கம்ப்ளெய்ண்ட்னு சொல்லு. காப்பி டுஅவன் டிபார்ட்மெண்ட் டைரக்டர்னு போடு ஆனா அனுப்பாதே, பார்ப்போம். ஒரு கேள்வி. எல்லா கணக்கும் கம்ப்யூடர்ல போட்டா உனக்கு சரியா வருமா?'

'வரும்'

'நடராஜனை இன்ஸ்டால் பண்ண சொல்லட்டுமா?

'ப்ரோக்ராம் பண்றது...?'

'ஆள் போட்டுப்போம். மொள்ள மொள்ள அவன் கிட்டேர்ந்து ப்ரோக்ராம் கத்துக்கோ. சங்கரா டிரஸ்ட் அவன்கிட்ட தரவேண்டாம், அதை நாமே தனி லெட்ஜர்ல மெயின்டெயின் பண்ணுவோம். அனித...'

'சொல்லுங்க சுந்தராண்ணா...'

'விற்பனை பற்றியும் கத்துக்கணும் நீ.'

'ஸேல்ஸ் போர். தொய் தொய்னு பேச வேண்டியிருக்கு. ஒரு டி. வி வாங்க ஆறு பேர் வராங்க. மாமா, மச்சின்ன. மாப்பிள்ளைன்னு. எனக்குபொறுமை இல்லை. வாங்கினா வாங்கு வாங்கலைன்னா போன்னு சொல்லிடுவேன்.'

'ட்ரை பண்ணு அனிதா''

அனிதா மாட்டேனென்று கும்பிட்டாள். அவள் பிடிவாதம் அறிந்து சுந்தரா விலகிப் போனான்.

கடை ஆட்களின் நடவடிக்கைகள் கவனித்து அவர்களின் திறமைக்கு தகுந்தாற்போல் இடம் மாற்றினான்.

ஏப்ரல், மே, ஜூன் கொஞ்சம் எப்போதுமே டல் பீரியட். பரீட்சை, பள்ளிக்கூட அட்மிஷன், வெய்யில், வெளியூர் என்று காரணங்கள் கிடைக்கும்பத்து சதவிகிதம் வியாபாரம் குறையும்.

வேதவல்லி நாகராஜனுடன் வெளியூர் போவதில் உற்சாகம் காட்டவில்லை. நடராஜனுடன் போனாள் 'குழந்தை நினைவாக இருக்கிறது,' என்று முன்னதாகவே வந்து விட்டாள். நடராஜன், டி. வி.தவிர உலகத்தில் வேறு பொருளே இல்லை என்பதாய் வலம் வந்தான். அனிதா பேசின ரெண்டு வியாபாரமும் கைவிட்டுப் போயிற்று. நாகராஜுக்கு கடையில் உட்காரவே பிடிக்கவில்லை. நாகராஜன் டூர்செலவுநிச்சயமாய்கட்டுப்படுத்த வேண்டும் என்று தோன்றியது.

வியாபாரம் விரிவு செய்ய முடியும். மயிலாப்பூரில் தனியே கடை போட முடியும். புதிய ஷோரூம் திறக்க முடியும். தனியே ஒரு இடம் வாங்கி கட்டிடம் எழுப்பி மாம்பலத்தை விட சிறப்பாய் நடத்த முடியும். இதுவே தொண்டுகிறது. எல்லா இடங்களிலும் ஆளுமை உள்ள ஆள் வேண்டியிருக்கிறது. இது என் வேலை, இவ்வளவு தான் என் வேலை என்கிற நியதி இல்லாறு எல்லா இடத்திலும் புகுந்து புறப்படுகிற ஆள் தேவைப்படுகிறது இதற்கு மேல்விரட்ட,இருக்கிறவேலையும் கெடுமோஎன்று தோன்றியது.

தினம் எல்லா இடத்துக்கும் போய் தானே ஒரு முன் மாதிரியாய் எது செய்தாலும் நறுவிசாய் செய்யும் தன்மையை ஒரு உற்சாகத்தை பரப்ப சுந்தரா முயன்றான். எடுபடவில்லை.

வேதவல்லியை தன் கூட டெல்லிக்கு அழைத்துப் போனான். பர்னிச்சர்கள் பேரம் பேசினான். மடக்கு



கட்டில்களில் நல்ல லாபம் கண்ணுக்கு பட்டது. சிறிய தொகை கொடுத்து விட்டு, விற்க விற்க காசு அனுப்பும் முறை கையெழுத்தாயிற்று. மின்சார கருவிகள் பேசிபேரம் முடிவதற்குள் வேதவல்லி அவசரப்பட்டாள். அவன் சொன்ன விலை சரி என்று தலையசைத்தான்.

ஏன் வேதவல்லி, எதற்கு அவசரம என்று கேட்க, அப்படியா என்றுபுருவம் தூக்கினாள். பம்பாய்க்குஅவனை டாய்ஸ் செக்ஷன், சென்னையில் நிறுவ அனுப்பினான். வெறும் கையோடு வந்தான். ரிஜெக்ஷன் எடுக்க மாட்டானாம். மொத்த காசும் கொடுக்கணுமாம். சொன்னது கேட்டு வந்ததுபோல் தெரிந்தது.

நம் கணக்கு தப்போஎன்றுசுந்தராகவலைப்பட்டான்.

சாதாரண பெண் பிள்ளை கெட்டிக்காரத் தனம்தான் இருக்கிறதே ஒழிய, புகுந்து புறப்படும் சாமர்த்தியம் இல்லையே அனிதாவை அனுப்பலாமா? அனிதா திடமாய் மறுத்து விட்டாள். 'அது உங்க வேலை, என்கிட்ட அவ்வளவு பெரிய பொறுப்பு திணிக்க வேண்டாம்.'

டாய்ஸ் செக்ஷனை டெலிபோனில் பேசி முடித்தான். பம்பாயில் பொம்மைகள் விக்கிறவனை, சகல இடங்களிலும் பொம்மைகள் வாங்கி சென்னைக்கு அனுப்பச் சொன்னான்.

லட்ச ரூபாய்க்கு பொம்மைகள் வாங்கி கடை பரப்ப, சொன்ன விலைக்கு கூட்டம் வாங்கி கொண்டு போயிற்று. கடைக்கு குழந்தைகள் அதிகம் வர பெரியவர்கள் மற்ற பொருட்களுக்குத் தாவினார்கள். விலை கேட்டார்கள். விலை கேட்ட ஆளை கடை இளைஞர்கள் பேசி கவர்ந்தார்கள்.

'எதுக்கு டாய்ஸ் செக்ஷன்!' என்று முணுமுணுத்த வீடு இதை உணர அமைதியாயிற்று.

சுந்தரா கவலையோடு இருந்தான். முதுகு வலிக்க இரண்டு நாட்கள் வீட்டில் படுத்தான். டாக்டரை வரவழைத்துப் பார்த்தான்.

'ஜெனரல் செக்கப் செய்துடேன்,' என்று சொல்ல நகரில் உள்ள பெரிய தனியார் மருத்துவமனைக்கு போனான்.

ஷுகர் இல்லை.ரத்த அழுத்தம் இல்லை. உயரத்துக்குப் எடை சரியாக இருந்தது. கொழுப்பு சற்று அதிகம். உணவு பழக்கத்தை மாற்ற உபதேசிக்கப்பட்டது. ஈ. ஸி. ஜி. எடுத்துப் பார்க்கப்பட்டது. அந்த ரிஸல்ட் பற்றி டாக்டர் சொல்லவில்லை. ஒன்றும் இருக்காது, அதனால் சொல்ல வில்லை என்று தீர்மானித்தான். மறுபடி கடைக்கு நாளையிலிருந்து போகிறேன் என்றான்.

டாக்டர் அன்று மாலை வேறொரு இடத்தில் இன்னொருமுறை ஈ. ஸி. ஜி. எடுக்கலாம் என்று சொல்லகாரணம் கேட்டான்.

சும்மாதான். ஒரு ரீ செக்கப் என்றுபதில் வந்தது.

ஈ. ஸி. ஜி. எடுக்கப்பட்டதும், மிஷின் கிழித்த அலைகளை எடுத்துப் போய், நாலு டாக்டர்கள் பரப்பிவைத்துக் கொண்டு பேசினார்கள்.

சுந்தரா. ஒரு சின்ன ப்ராப்ளம் இருக்கு?'

'என்ன டாக்டர்?'

'உனக்கு ஹார்ட் அட்டாக் வந்துருக்கா?'

'இல்லையே.'

'இல்லை. உனக்குத் தெரியாம ஒரு அட்டாக் மூணு மாசம் முன்னாடி வந்துருக்கு. சைலண்ட் ஹார்ட் அட்டாகனு பேரு இதுக்கு.'

'என்ன பண்ணணும் டாக்டர்...'

'மறுபடி வராம இருக்கணும்.'

'மறுபடி வருமா?'

'வரலாம். வராது போகலாம். மறுபடி வந்தா அது கடுமையாகத்இருக்கும்.'



''தடுக்க மருந்து?''

'தடுக்க மருந்து இல்லை. உஸ்ப்ளட் பிரஷர் நார்மல்ல வைக்க மருந்து இருக்கு. நீ இனிமே உணர்ச்சி வசப்படக் கூடாது. கத்தப்படாது. ரொம்பக் கவலைப்படக் கூடாது. டின வேலை கூடாது. அடடா இது வந்துடுத்தேண்ற கவலையும் வேண்டாம். லைட்டா எடுத்துக்கோ. டென் ஷன் ஆகாம இரு.''

''அதாவது...'

''ரிடையர் ஆன மாதிரி.''

''ரிடையர் ஆகறதா? இதுதான் என் பீக் பீரியட் டாக்டர்.''

''இருக்கலாம். நீ ரிடையர் ஆகணும். கம்பல்சரி ரிடையர்மெண்ட். சும்மா மேல் பார்வைன்னு சுத்திட்டு வீட்டுக்கு வரணும். நன்னா தூங்கணும், சினிமா, ட்ராமா போகணும். சங்கீதம் கேட்கணும். காலைல நடக்கணும். டென வேண்டாம். ப்ளீஸ்.''

''பயமுறுத்தாதீங்களே.''

''இல்லை சுந்தரா. டென்ஷனா இருந்துருக்கு உன் வடிக்கை. அதீத உழைப்பு கொடுத்துருக்கே. உன் ஹார்ட்டுக்கு. இனி கூடாது. நான் வேணா உன் வீட்டுக்கு இதை பக்குவமா சொல்லட்டுமா?''

சுந்தரா யோசித்தான்.

''வேண்டாம் டாக்டர். நான் கடைய கொஞ்சம் சரி செய்யணும். மத்தவங்ககிட்ட முழு பொறுப்பு கொடுக்கணும். அவங்களை அந்த பொறுப்புக்கு பழக்கணும். ங்க சொல்ல வேண்டாம், யார்கிட்டயும் இது பத்தி.''

''சரிப்பா...உன் மனைவிகிட்டயாவது...''

''இல்லை டாக்டர். அவ இதை உடனே எல்லார் கிட்டயும் சொல்லிடுவா. தேவைப்படறபோது நானே சொல்லிடறேன்''

வீட்டில் வந்து மல்லாக்கப்படுத்தான். கண் மூடினான்.

டெலிபோன் அடித்தது. நாகராஜ் பேசினான்.

'செக்கப் முடிஞ்சுதா சுந்தரா? ஒண்ணுமில்லையே. ஒரு முக்கிய விஷயமா போன் பண்ணினேன். ரிமோட் கண்ட்ரோல் டி.விக்கு இருவது பர்ஸெண்ட் டிஸ்கவுண்ட் தராளாம். அந்த கம்பெனில வாங்கிடலாமா? வழக்கமா தரது பத்துதானே.'

''முட்டாள்...நாற்பது சதவீதம் கொடுத்தாலும் ரிமோட் கண்ட்ரோல் போகுமா...விற்பனை ஆகுமா? ஆயிரம் ரூபாய் அதிகம் உள்ள செட்டை ஜனம் வாங்குமா?'' மனசு கூவிற்று.

''நீயே முடிவு பண்ணு நாகராஜா.''

''ஒரு செகண்ட் வாயேன் சுந்தரா.''

'இல்லை. நீ முடிவு பண்ணு' போன் துண்டித்தான்.

''ரிமோட் வாணான்றியா? நாகராஜ் குழம்பறான். பத்து வாங்கி போடுறா. தப்பில்லைன்னேன். கம்பெனிக்காரன் இருவது இன்லிஸ்ட் பண்றான். இருவது வாங்கிடட்டுமா?''

''இருபது செட் ரிமோட் டி.வி. எப்படிடா போகும்?'' கோபம் வந்தது சுந்தராவுக்கு.

''இந்த டி.வி இருவது வாங்கறதா, பத்து வாங்கறதா, வாங்காம இருக்கறதான்னு இத்தனை வருஷம் கழிச்சும் உன்னால தீர்மானம் பண்ண முடியலை இல்லை... அதுக்குத்தான் சொன்னேன். போ...போய் . ஸேல்ஸ் கவனின்னு. விடலைப் பையன் மாதிரி கேட்கறியே. போய் ஸேல்ஸ் பசங்களை கன்சல்ட் பண்ணு சீட்டை விட்டு எழுந்து நாலு பக்கமும் பார்...''

அலுப்புடன் போன் வைத்தான். அங்கே நடராஜ் ஆடிப்போய் உட்கார்ந்தான்.



'என்ன ஆச்சு நடராஜு?' நாகராஜன் நகம் கடித்தபடி கேட்டான்.

''எனக்குத் தெரியாது நீயே பாருங்கறாம்பா.''

''போகலைன்னா திட்டுவானே. ரிமோட் போகாதா, என்ன நினைக்கற நீ?''

''எனக்கு டி.வி. ஸேல்ஸ் பத்தி தெரியாது. வெட் கிரைண்டர் மிக்ஸி கேட்டா டக்குனு சொல்வேன்.'

'அது டெமான்ஸ்ரேஷன் பண்ற பையன்கூட சொல்லிடுவான். டி.வி. ஸேல்ஸ் கத்துக்க நாகராஜ்.'

''நானா மாட்டேங்கறேன்? எங்கடா நேரம் இருக்கு? இரண்டு தடவ எங்கூட டெல்லி, பாம்பேனு வந்து பாரு. எப்படா வீட்டுக்குப் போய் படுப்போம்னு இருக்கும்?''

''நீ அதிகமா ஊர் சுத்தற. வேணுங்கறவன் வரான். நீயா போய் ஏன் நிக்கணும்?''

''போனதாலதான் இத்தினி உசரம் வளர்ந்துருக்கு.''

''போய்க்கிட்டே இருக்கக்கூடாது. வளர்ந்துடும்ங்கறது உனக்குப் புரியலையா?''

''உட்கார்ந்து வியாபாரமா? பார்ப்பம். அதையும் பார்ப்பம். நாளைலேர்ந்து எங்க எவன் கூப்பிட்டாலும், போறதில்லை. ஆமா, நீ ஏசில உட்கார்ந்து டி.வில. நோண்டறதோட சரியா, நீ பார்க்கக்கூடாதா ஸேல்ஸ்?''

''பார்க்கறேனே.''

''சன்னொடி ஜன்னல் வழியாகவா?''

''நாகராஜ் அநாவஸ்யமா கேலி பண்ணாத. என் வேலைய நான் சரியா செய்யறேன்.''

''நான் செய்யலங்கறியா?''

''இல்லைப்பா. நான் சொல்லலை. விட்டுடு. எதுக்கு வாக்குவாதம்?''

''ரிமோட் டி.வி என்ன பதில்? நீதான் முடிவு பண்ணனும். நடராஜ்.''

எனக்கு என்னடா தெரியும். என் கஸ்டமர் ரிப்போர்க்கு வரவன் வாங்கறது பத்தி எனக்கு தெரியலை. வேதவல்லிய கேளு.

''சோழி போட்டு பார்க்கலாம்னு சொல்லுவோ.''

''ஏன் சுந்தரா சொல்ல மாட்டேங்கறான்?''

''ஏதோ உடம்பு கடுப்பு. நம்ம மேல காட்டறான். விடு. நீ முடிவு பண்ணு நடராஜ்.''

''வாங்கிடுறா!''

''எதுக்கும் வேதவல்லிய கேட்பமா? என்னமோ அவளும் கடைல சுத்தி சுத்தி வராளே. வேதவல்லிய, ரிமோட் டி.வி. போகுமா இருவது செட்.''

''போடலாமே''

''போடலாமா. ரிமோட் டி.வின்னா என்ன?''

''ச்சி.என்ன இது தெரியாதா? போகும். போடுங்க''

''எப்படி சொல்ற. கூட ஆயிர ரூபா விலை, நார்மல் டி.வி. விட''

''போகும்பா. நம்ம சொல்லி விக்கறதுதானே பெஸ்ட் செட். வர மாசம் விலையேறிடும். இனிமே இந்த மாதிரி செட் வராது. உள்ள போட்டலா இம்போர்ட்டட் இம்ப்ரஸ் பண்ணி வித்துடலாம். டெக்னிகல் ஸ்தேஷ் வராதே. நடராஜன், அது ஓ.கே கொடுத்தா நான் விக்கறேன்.''



'போடு. இருவது ரிமோ டி. வி' கத்தி கொண்டே நாகராஜன் போனான்.

மறுநாள் வந்து இறங்கிற்று.

'படுக்கைல படுத்துண்டு ஆன் பண்ணலாம். இதுக்கு கூட ஆயிரம் ரூபாயா? ஏழு சேனலா இருக்கு, ஒண்ணே ஒண்ணு. இரண்டாவது சேனல் இப்போதைக்கு வராது. எதுக்கு ரிமோட் கண்ட்ரோல். ஹால்ல டி. வி. இருக்கும். எழுந்து அணைச்சுட்டு உள்ளே போகப் போறோம். அணைச்சுட்டு எழுந்து போனா என்ன, எழுந்து நின்னு அணைச்சுட்டு போனா என்ன. வேஸ்ட். நார்மல் கலர் டி. வி. பாரு.'

முதல் கஸ்டமர் ரியாக்ஷன் அலட்சியமாகவே இருக்க, தொடர்ந்து எல்லாரும் அப்படியே அபிப்ராயப்பட்டார்கள்.

'ஒயர் வச்சுருக்கறதுலயே ப்ராப்ளம் வருது. இதுல ரிமோட் கண்ட்ரோல் இன்னும் சிக்கல், வேண்டாம்.'

கூட நானூறு, இருநூறுன்னா பரவாயில்லை. ஆயிரம் ரூபாகூட. வட்டியும் ஏறும். சரிப்படாது.'

தொடவேயில்லை. வேதவல்லி நடனம் ஆடிப் பார்த்தாள். ஒரு செட் நகரவில்லை.

சோடா மேக்கர்—வீட்டிலேயே சோடா தயாரிக்கும் மெஷின் அசையாமல் கிடந்தது.

'வரவங்களுக்கு காப்பிதான் தரோம். பிராந்தி, விஸ்கி தந்தா அவஸ்யம். நமக்கு எதுக்கு?' கூட்டம் ஒதுங்கிற்று.

கல்பனாவிடம் ஒரு ஆள் வந்து, அப்பா சௌக்கியமா? என்று விசாரித்தான். நெற்றியில் விபூதி கோடும், வெள்ளைக் கதர்சட்டையும். வைர மோதிரமும், தங்க செயினும் போட்டிருந்தான்.

'ரொம்ப வயசாயிருக்குமே. அஞ்சு வருஷம் முன்னாடி பார்த்தது, உங்களோட இருக்காரா?'

'இல்லை பாம்பேல, வயசாயிடுத்து.'

'நான் பாம்பேல இருக்கறபோது ஒன்னா வேலை செய்தோம். உன்னைப் பார்த்துருக்கேன் சின்ன வயசுல.'

'சேட்கிட்டயா?'

'ஆமாம்.'

சகல தகவல்களும் அவன் பேச்சில் கறந்து மிக்ஸியும், வெட்கிரைண்டரும் வாங்கினான்.

'ரிடையராகி நான் மெட்ராஸுக்கு குடித்தனம் வந்துட்டேன். பொண் கல்யாணத்துக்கு வாங்கறேன். எனக்கு நீங்க காரண்டி போடுவேளா. மெட்ராஸ்ல யாரும் தெரியாது. நான் பாம்பேயிட்டு,' நான் சரளமாய் இந்தி பேசினான். தங்கியிருந்த இடம் சொன்னான்.

கல்பனா கையெழுத்திட்டாள். நாகராஜ் கேட்டதற்கு, 'அவரைத் தெரியும் என்றாள். வாசல்ல ஆட்டோ நிற்பதாய்ச் சொல்லி கையெழுத்திட்டு முதல் தவணை காசு கொடுத்து பொருட்களோடு ஏறிப்போனான். மிக்ஸியின் உபகருவிகளை டேபிளில் விட்டு விட்டான். அதை ஆளிடம் கொடுத்தனுப்ப...அந்த விலாசத்தில் ஆளே இல்லையென்று தெரிந்தது.

கல்பனா இடிந்து போனாள். நாகராஜ் தலையில் அடித்துக் கொண்டான். போலீஸில் புகார் எழுதிக் கொடுத்தார்கள். இப்போதைக்கு சுந்தராவிடம் சொல்ல வேண்டாம் என்றார்கள்.

அனிதாவின் கீழ் வேலை செய்யும் பெண், ஸேல்ஸ் பையனைக் காதலித்தாள். அனிதாவிடம் தன் மனத சொன்னாள் அதனால் என்ன என்று அனிதா தோள் குலுக்கினாள். அரைநாள் விடுமுறை கொடுத்தாள். அந்த பையன் அதற்கு நன்றி சொன்னபோது கண் சிமிட்டினான்.

சுந்தரா பத்துநாள் கழித்து மறுபடி கடைக்கு வந்தான்.



இரண்டு நாளில், ரிமோட் டி. வி. அசையாது நிற்பதும், போலீஸ் கேஸும், அசௌண்ட்ஸ் செக்ஷன் காதலும் கண்டுபிடித்து விட்டான்.

'ரிமோட் டி. வி. ஏன் போகலை?' என்று கடைப் பையனைக் கேட்டான்.

'போகாது சார்.'

'ஏன்?'

'பெட்ரூம்ல டி. வி. வச்சுருக்கறது மெட்ராஸ்ல லட்சத்துல ஒருத்தர் அப்படிப்பட்ட ஆளும் இம்போர்ட்டட் போவாரே தவிர, இண்டியன் ரிமோட் டி. வி. எப்படி சார் போவார்...'

'சோடா மேக்கர் ஏன் போகலை?'

'இதை வீட்ல வச்சுருந்தாலே தப்பா பார்ப்பாங்க. ரகசியமாதான் இப்பவும் குடிக்கனும் வீட்ல குடிச்சாலும் இரண்டு ரூபாய்க்கு சோடா வாங்கி குளிர்பெட்டில வைக்கிறதவிட்டு, இதுக்கு மருந்துவிட்டு குலுக்கி, போர்.'

'புஷ் பண்ணலியா கஸ்டமர்கிட்ட...?'

'ட்ரை பண்ணா, கஸ்டமர் எங்களைத் தப்பா பார்க்கறான், ஏண்டா என்னைக் குடிகாரன்னு நினைக்கறியான்னு கேட்கறான்.'

'வேற என்ன ப்ராப்ளம் ஸேல்ஸ்ல...?'

'ஒன்னும் இல்லை சார்.'

'சொல்லு பரவாயில்லை...'

'லவ் பண்றது தப்பில்லை சார். அது வெளில வெச்சுக்கலாம். கோடவுன்ல கிஸ் பண்ணா, எங்களுக்கு கான்ஸன்ட்ரேஷன் தப்பா போறது சார்; கேட்டா எல்லாம் பாஸுக்கு தெரியும்னாங்க...'

'வேற?'

'என்னை மூணு மாசம் டி. வில போடுங்க. மூணு மாசம் பீரோலபோடுங்க. மூணுமாசம் மிக்ஸிலபோடுங்க. மாத்திகிட்டே இருங்க...'

'ஏன்?'

'மிக்ஸி வெட்கிரைண்டர் பாஸ்டா போகும். டி. வி. அப்படி போகாது. அவங்க வந்து, என்னப்பா ஏதாவது வித்தியா, நான் இன்னிக்கு ஆறு வித்தேன். எட்டு வித்தேன்னு சும்மா வந்து கணக்கு சொல்லி வெறுப்பேத்த றான். கல்பனா மேடம் அவனை தட்டிக் கொடுக்க றாங்க. அப்ப நான் முட்டாளா நிக்கறேன். ஆனா இல்லாட்டிகூட வெட்கிரைண்டர் விக்கும் சார்...'

'வேற...'

'இது தவிர பர்சனல் கிரீவன்ஸ்தான் சார்...'

'என்ன பர்சனல்?'

'டி. வி. ரிப்பேர் எல்லோரும் லேடீஸ். எனக்கும் கத்துக்கணும் சார். ஒயர் ரிப்பேரிங் அதுல நல்ல ஸ்கோப் இருக்கு. நடராஜ் உள்ள வராதேனுட்டாரு நான் கத்துக்கிட்டா என்ன சார்?'

'நீ போகலாம்.'

எங்கேயிருந்து இந்த கடையை விரிவுபடுத்துவது' எப்படி மயிலாப்பூரில் இன்னொரு கிளை ஆரம்பிப்பது. நடராஜன் நகரமாட்டேன் என்கிறான். நாகராஜ் தரிக்க மாட்டேன் என்கிறான். பெண்கள் பெரும் போக்காய் இருக்கிறார்கள். கல்பனா ஜீரோ. வேதவல்லிக்கு ஈடுபாடு இல்லை. அனிதா விளையாடுகிறாள். என்ன செய்ய, இது போதும் என்று நிற்கிறார்கள்.

'ரிமோட் கண்ட்ரோல் டி. விக்கு எத்தனை பர்ஸன்ட் டிஸ்கவுண்ட்?'

'இருபது.'



'அந்த இருபது கழிச்சா நார்மல்டி.விய விட எத்தனை விதை கூட. இருநூற்றி நாப்பது வருமா?'

'வரும்.'

'கழிச்சு விலை போடு.'

'நஷ்டமாச்சே.'

'போடு.'

'இல்லை சுந்தரா...'

'வேற ஏதாவது ப்ளான் வச்சுருக்கியா?'

'இல்லை.'

'அப்படியானா நான் சொல்றத செய்.'

'அது வந்து...'

'நாலு மாசம் கழிச்சும், அதே இடத்துல அதே இருபது டி.வி இருந்தா உனக்கும், உன் கடைக்கும் ஏதாவது மரியாதை உண்டா?'

'இடம் மாத்திடலாம். எதிர்ப்பக்கம் வச்சுடலாம்.'

'நீ என்னை முட்டாள்ன்னு நினைக்குறியா கஸ்டமரை முட்டாள்ன்னு நினைக்குறியா?'

'சுந்தரா...'

'நீ முட்டாள். புரியறதா. சொன்னதை செய்.'

'பெரிய...புடுங்கி மாதிரி...' நாகராஜ் 'முணுமுணுத்து எழுந்திருக்க, சுந்தரா அருகே கூப்பிட்டான்.

'என்ன சொன்னே... புடுங்கின்னா... செருப்பு பிஞ்சிடும். போ. சொன்னத செய்.'

'வேதவல்லி. இங்க வா அடையாறுக்குப் போய் ரிமோட் கண்ட்ரோல் டி.வி ஒரு செட் கூட போகலை. நீங்க கொடுத்த டிஸ்கவுண்டை அப்படியே கஸ்டமருக்கு டிரான்ஸ்பர் பண்ணி விலைகுறைச்சுருக்கோம். அப்படியும் செட் போகலைன்னா திருப்பி எடுத்துக்கணும்னு பேசு. மாட்டேன்னா பிஸினஸ் கிடையாதுன்னு சொல்லு.'

'எப்படி, இவ்வளவு வேகமா...?'

'இது நஷ்டம்தானே, கடைக்கு இதைச் சொல்லாத எப்படி முடியும். அவனுக்குத் தெரிய வேண்டாமா?'

'நடராஜ்கிட்ட சொல்லி பேசச் சொன்னா...?'

'அப்ப நீ வீட்டுக்குப் போ. உனக்கு என்ன வேலை இங்க...?'

'சரி போறேன்.'

'எங்க?'

'வீட்டுக்கு.'

'அப்படியா. போறபோது நாகராஜனையும் கூட்டிண்டு போ. நீங்க இரண்டு பேரும் வேற இடத்துல கடை போடுங்க. நல்ல பிஸினஸ் பண்ணுங்க ஒரு மாசத்துல பங்கு பிரிச்சுடறேன். வெட்டிக்கு ஆள் வெச்சுக்க முடியாது கடைல நீ போகலாம்...'

வேதவல்லி முகம் தூக்கிக் கொண்டு அடையாறுக்கு கிளம்பினாள் கிளம்பும் முன் போன் செய்தாள்.

'நடராஜ். கிழ வா.'

'வேலை இருக்கு சுந்தரா. என்ன வேணும்?'

'சீட்டு ஆடலாம் வா.'

'சீட்டா?'

'இடியட். உன்னை எதுக்கு கூப்பிடுவேன். என்ன பதில் இது?'

'ஏன் சுந்தரா கத்தறே?' நட ராஜ் கோபத்துடன் இறங்கி வந்தான்.

'இந்த நிமிஷத்துலேர்ந்து டி.வி ஸேல்ஸ் நீதான் பார்க்கணும். ஒன்னரை வருஷமா உன்கிட்ட ட்ரெயின் ஆன பொண்ணுக்கு தனியா டி.வி ரிப்பேர் பண்ணத் தெரிய லைன்னா அதை வீட்டுக்கு அனுப்பு.'

'அப்ப சம்பளம் ஜாஸ்தி தரணும்.'



''எவ்வளவு?''

''ஐநூறு ரூபா.''

'இரண்டு பேரை அப்பாயிண்ட் பண்ணு.'

''நான் செய்யறா மாதிரி வராது சுந்தரா.''

''என்னிக்கு நீ என் இடத்துல உட்காரப் போற?'

'நீ இருக்கறச்சே நான் ஏன் உன் இடத்துக்கு வரணும்?'

''நான் செத்துட்டா வரேங்கிறியா?'

'சுந்தரா, ஏன் இப்படி கடுமையா பேசற?'

'எத்தனை விதமா சொல்லிப் பார்த்துட்டேன் உன் கிட்ட. இடத்தை விட்டு அசையாத உட்கார்ந்து இருக்கியே. சுத்துக்கணும்னு ஆசையே இல்லையா உனக்கு'

'சுத்துக்காதயா டி.வில இப்படி பேர் வாங்கியிருக்கேன்?'

'போறுமாடா இது. நீ ஒரு முதலாளி. மங்களம் அண்ட் கோ பார்ட்னர். மேஸ்திரி மாதிரி சித்தாளோட மல்லுக்கு நிக்கறியே தவிர...'

'சுந்தரா அனாவஸ்யமா இன்ஸல்ட் பண்றே.'

'இன்ஸல்ட் பண்றேன்னு தெரியறதே தவிர, ஏன்னு தெரியலையே.'

'ஏன்னு சொல்லு?'

'அவஸ்யமில்லை. நான் சொன்னதை செய். போய் இடம் மாறி உட்கார். கல்பனா. உள்ளே வா.'

நடராஜ் வெளியே போக. கல்பனா உள்ளே வந்தாள்

'என்ன செய்யறே இப்போ?'

'சும்மாதான் இருக்கேன்.'

'வீட்டுக்குப் போ.'

'ஏன்?'

'ஸேல்சுக்கு பசங்க இருக்கா. நாகராஜ். நடராஜ் சூப்பர்விஷன். நீ தேவையில்லை. வீட்டுக்குப் போ.'

'சரியா விசாரிக்காம வித்தது தப்புதான். போலீஸ்ல எப்படியும் பிடிச்சுடுவா...'

'அது ஒழியறது. உன் இடம் இனிமே விடு. அம்மாவை கவனிச்சுக்கோ. வீட்டு நிர்வாகம் பாரு.'

'எனக்கு இது பிடிச்சருக்கே.'
'நமக்கு பிடிச்சது வேற. நம்ம கப்பாசிடி வேற.'
"'இப்பவேவா''
'இப்பவே. அனிதாவ அனுப்பு.'
'குழந்தையா நீ?' அனிதா திகைத்து நின்றாள்.

'இல்லை டென்னிஸ் கிளப்பா இது. நீ வொர்க்கரா, பாஸா?'

'வொர்க்கர். யூ ஆர் தி பாஸ்.'

'அப்ப சம்பளம் போட்டுத் தரட்டுமா? லாபத்துல பங்கு இல்லைன்னு சொல்லட்டுமா பார்ட்னர் ஷிப் கான்ஸல் பண்ணிடட்டுமா?'

'ஓகே. செய்யுங்க. ஐயம் நாட் பார் மணி.'
'நான்சென்ஸ். மிதப்புல பேசறியா?'
'ஏன் கத்தறீங்க. நீங்க சொன்னதைச் செய்யறேன்.'

'உன் கூட வேலை செய்யறவனை லவ் பண்ண என்கரேஜ் பண்ணச் சொன்னேனா? அரை நாள் லீவு கொடுத்து, பீச்சுக்கு வழியனுப்பி வைக்கச் சொன்னேனா? உன் வேலையா இது' மத்த ஒர்க்கர் உன்னைப் பத்தி என்ன நினைப்பான்? உன்னுடைய ஸோஷியல் விஷயம் வேற. இங்க உன் இடம் வேற நாளைக்கு அந்த பொண் கர்ப்பமாச்சு. அவன் கை விட்டுட்டான். யாரு பதில் சொல்வா?மேடம் சொல்லித்தான் நான் லவ் பண்ணேன்னு அந்தப் பொண் சொன்னா கடை கதி என்ன?'



'அந்த பையன் நல்லவன்.'
'ஸ்டாப் இட்.'

கண்ணாடி கதவுகள் அதிர்ந்தன. கதவுதாண்டி உள்ள கடைப் பையன்கள் திருப்பிப் பார்த்தார்கள்.

'நான் சொல்றது உனக்குப் புரியலையா, இல்லை புரியாத மாதிரி நடிக்கறியா?'

'யாரோ யாரையோ லவ் பண்றேங்கறாங்க ஒகே. பைன். நான் கூடாதுன்னு ஏன் சொல்லணும்.'

'இந்த காம்பவுண்டுக்கு வெளியே யார் என்ன வேணா செய்யட்டும். உள்ள இதை என்கரேஜ் பண்ணக் கூடாது. மற்ற பசங்களுக்கு இது உறுத்தலைக் கொடுக்கும். கவனம் சிதறிப் போகும். கடைக்கு வர பொண்ணை லவ் அட்டெம்ப் பண்ணுவான் கடை பேர் கெடும்.'

'இப்ப நான் என்ன செய்யணும்?'
'அந்த பொண்ணை கூப்பிட்டு வாரன் பண்ணு. நோ லவ் பிஸினஸ்ன்னு சொல்லு.'

'சாரி...நான் மாட்டேன்.'
'கெட் அவுட்.'

அனிதா தன் பையை எடுத்து வெளியே போனாள். கடை அமைதியாய் இருந்தது.

சுந்தரா முகத்தை கைகளால் தாங்கிக் கொண்டு தீவிர மாய் யோசித்தான்.
ஏதாவது பயன் தருமா? மாறுமா இந்த இடம்?
வேதவல்லி உள்ளே நுழைந்தாள்.
'அனிதா போய்ட்டாளே. யார் அகௌண்ட்ஸ் பார்க்கறது?'

'நீ. எந்த இடத்துல ஆள் இல்லேன்னாலும் நீ போய்ப் பார்க்கணும். உட்காரணும். அடையார் என்ன ஆச்சு?'

'இன்னும் மூனு மாசம் டைம் கேட்டாங்க. செட் போகலைன்னா அவங்களே எடுத்துக்கறாங்களாம். போன்லயே பேசிட்டேன்.'

'குட். இது போய் பேசறபோது தானே தெரியறது?'
'ஆமாம்.'
'உன்னால முடியும்னு புரியறதா?'

'முடியும். எதுவும் முடியும். மறுபடி நான் சூப்பீரியர். ஆனா அவருக்கு தன்னிரக்கம் வரும். என் வாழ்க்கை சரியும்னு பயம் இருக்கு எனக்கு....

'அது பத்தி நான் அவன்கிட்ட பேசறேன் வேதவல்லி. எனக்குப் பிறகு நீதான்.'
'நீபர்னு என் இப்படி? அதான் புரியலை..
'புரியும். ஒருநாள் புரியும்
'ஏதாவது ப்ராப்ளமா உங்களுக்கு?
'இல்லை. டி.வி ஸெட்டுக்கு டிஸ்கவுண்ட்...'

'வேண்டான்னு சொல்லிட்டேன். அதே விலைக்குத் தான் கடைல இருக்கும்.'

'நடராஜன் வேஸ்ல இருக்கானா பார், நாகராஜனை சுத்திண்டு இருக்கச் சொல்.'
'உங்க இடத்துக்கு என்னை தயார் பண்றது எங்க சொந்த வாழ்க்கைக்கு இடைஞ்சல் இல்லையா?'
'உன் சொந்த வாழ்க்கையை விட, என் சொந்த வாழ்க்கையை விட, கடை முக்கியம்.'
'நான் நாசமா போனா பரவாயில்லைங்கறேனா? உங்களால அது எப்படி சொல்ல முடியறது?'
'ஒருநாள் இதுக்கு பதில் சொல்றேன். இப்ப உன் வேலைய கவனி.'
வேதவல்லி எழுந்து அனிதா இடத்துக்குப் போனாள் இண்டர்காமில் நடராஜனோடு பேசினாள். நாகராஜன் எங்கே என்று விசாரித்தாள்.



சொல்லி விடலாமா, எல்லாரிடமும், நான் ஊனம் எனக்கு முடியாது என்று சொல்லி விடலாமா?

இரவு டாக்டரிடம் போனான். ரத்த அழுத்தமும் அதிகமாய் இருந்தது. 'என்ன ரொம்ப கத்தி சண்டை போட்டீங்களா? கூடாது சுந்தரா. அமைதியா இருங்க.'

'ட்ரை பண்றேன் டாக்டர்.'

'எதுக்கு சுந்தரா?'

'எல்லாருமே அமைதியா இருக்கறதுக்கு.'

## 26

இரவு முழுவதும் அந்த வீடு தூக்கமின்றி தவித்தது. ஏதோ மோசமாய் நடக்கப் போகிறது என்று வேதனைப் பட்டது. 'கண் திருஷ்டியா? அல்லது மறுபடி யாராவது கலைக்கிறார்களா? என்று கவலைப்பட்டது.

நடராஜனும், அனிதாவும் விடியலில் இறங்கி தெருவில் நடக்கத் துவங்கினார்கள். இருள் பிரியாது சோடியம் விளக்குகள் உச்ச உஷ்ணத்தில் மஞ்சள்பூசி தெருவை மெழுக, மௌனமாய் நடந்தார்கள். தெரு முனையில் நிறைய சைக்கிள்கள் இருந்தன. மஞ்சள்நிற வேனிலிருந்து கட்டு கட்டாய் பேப்பர்கள் இறங்கின. பிரித்து அடுக்கத் துவங்கினார்கள்.

கடந்து போகும் போது அனிதா கூவினாள். 'போஸ்டர் பாரு...நடராஜ்.'

'என்ன?' திரும்பி, பிரித்து கம்பியில் மாட்டப்பட்ட தமிழ் பேப்பரின் அன்றைய போஸ்டர் பார்த்தான்

மடத்தைவிட்டு வெளியேறினார் சாமியார்.'

ஓடிப்போய் பேப்பர் வாங்கினான். சங்கர மடத்தின் இப்போதைய தலைமை பீடாதிபதி, தண்டம் மூலையில் சாத்திவிட்டு வெளியேறி விட்டார் என்று செய்தி போட்டிருந்தது. காரணங்கள் பல யூகங்களாகப் பிரசுரமாகியிருந்தன.

புருஷனும், மனைவியும் பேப்பரை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு விரைந்தார்கள். சுந்தரா அறைகதவு தட்டினார்கள். கல்பனா கதவு திறந்தாள்.

சுந்தராவை உலுக்கி எழுப்பினான். சுந்தரா படுக்கையில் உட்கார்ந்து பேப்பர் பிரித்தான். படித்தபிறகு, மடித்து நடராஜனிடம் கொடுத்தான். சுருண்டு படுத்துக் கொண்டான்.

'காஞ்சிபுரம் போகணுமா சுந்தரா?'

'வேண்டாம்.'

'வேற என்னன்னவோ காரணம் போட்டிருக்கானே.'

'எதுவும் சரியில்லை. அவர் தானா திரும்பி வருவார்.'

'இப்படி ஊர் சிரிக்க நடந்து போச்சே.'

'சிரிக்கறதுக்கு என்ன இருக்கு. சன்யாசிக்கு துக்கம் இல்லையா. சாதாரண மனிதர்களைவிட சன்யாசிக்கு பொறுப்பு அதிகம். பொறுப்பு இருக்கறபோது துக்கமும் உண்டு. மடம்ங்கறது வீடு மாதிரி. ஆபீஸ் மாதிரி. அங்க அபிப்ராய பேதம் வரலாம்.'

'அதுக்காக வெளிய போறதா?'

'வேற வழியில்லாம போயிருக்கலாம்.'

'குறை கண்ட இடத்துல வாயத் திறந்து சொல்லலாமே. இவர் தானே அங்க எல்லாம்.'

'சொல்ல முடியாத குறையா இருக்கலாம். சொன்னாலும் புரிஞ்சுக்கமாட்டேங்கற ஆளா இருக்கலாம். அப்படிப் பட்டநேரத்தில தடலடியா சிலதுசெய்ய வேண்டியிருக்கு.'



'நீ இப்ப செய்யறா மாதிரி.'

'ஆமாம்.'

'உனக்கு என்ன குறை? யார்கிட்ட குறை?'

'ஒரு நாள் தெரியும்.'

'வாய்விட்டு சொல்லித் தொலையேன்.'

'சொல்ல முடியாது நடராஜா. உனக்கு கொடுத்த வேலையை பார். என்னைத் தூங்க விடு. நான் இன்னிக்கு கடைக்கு வரலை.'

பிற்பகல் வீடு அமைதியாயிற்று. கல்பனா அவனுக்கு சாதம் போட்டு, தானும் சாப்பிட்டு அருகே உட்கார்ந்து கொண்டாள்.

'என்ன கவலை '

'பல கவலைகள்.'

'என்னைப் பத்தியும் உண்டா? நான் ஏதாவது தப்பு பண்ணிட்டேனா?'

'வேதவல்லி உன்னோட எப்படி பழகறா?'

'ரொம்ப ஒட்டுதல். ஏன்?'

'அவதான் இனிமே நம்பர் ஒன்.'

'கடைல மட்டும்தானே?'

'இந்த வீட்டுலையும்.'

'நாம பிரிஞ்சு போகப் போறோமா?'

சுந்தரா மௌனமாய் இருந்தான், 'ஏன், பிரிஞ்சா உன்னால தனியா சமாளிக்க முடியாதா?'

'வீடு பார்த்துக்கறதுதானே. எங்க போனாலும் சமாளிச்சுடுவேன்.'

''இந்த வீட்ல இன்னொரு வேலையும் நீ பண்ணனும்'

'என்ன சொல்லுங்கோ?'

'வேதவல்லி குழந்தைய உன் குழந்தையா, பார்த்துக்கணும். நாளைக்கு அனிதாவுக்கு குழந்தை பிறந்தாலும்...'

'அப்ப நாம பிரிய போறதில்லையா?'

'என்னை கேள்வி கேட்காத கல்பனா. போய் வேதவல்லி குழந்தையை வேலைக்காரிகிட்டேர்ந்து எடுத்துண்டு வா. அதுக்கு நீ பால் சாதம் கொடு. துணி மாத்து. நெஞ்சுல சாச்சு தூங்கப் பண்ணு. கஷ்டமா இது.'

எனக்கென்ன கஷ்டம்! தாராளமா பண்றேன். கடை விஷயத்துல எனக்குப் போறாது குழந்தைகளை நன்னா பார்த்துக்க முடியும்.' கல்பனா போய் வேதவல்லி குழந்தையை எடுத்து வந்தாள்.

'இவன் வாலிபனா வரவரைக்கும் இவனை நீதான் பார்க்கணும். இவன் உன்னைத்தான் அம்மான்னு கொண்டாடணும்.''

'ஏன்?'

'வேதவல்லிக்கு ஆயிரம் வேலை இருக்கு. அதுல இந்த கஷ்டம் அவ படக்கூடாது. அதி தவிர...'

''அது தவிர...'

'ஒண்ணுமில்லை...'

'என்னவோ பெரிய விஷயம் மறைக்கிறேள்...'

'செல்லக்குட்டி அம்மா எங்கே காணமே?'

குழந்தையை தூக்கி கல்பனா தெரியாமல் மறைத்தான் மெல்ல நிமிர்த்தி கல்பனாவைக் காட்டினான். குழந்தை கால் உதைத்துச் சிரித்தது.

'மடத்து சமாச்சாரம் ஏதாவது முன்னால தெரிஞ்சு கலவரமாய்ட்டேளா?'

'எனக்கு மடம் இதுதான்.'

'போகவேயில்லையே...ரொம்ப நாளா...'



'கூப்பிட்டா போகலாம்.'

'காசு அதிகம் சம்பாதிக்கறது கவலை ஆயிடுத்தோ?'

'எத்தனை காசு சம்பாதிச்சா என்ன கல்பனா. உன்னால எவ்வளவு திங்க முடியுமோ, எத்தனை விதிச்சிருக்கோ அவ்வளவுதான் திங்க முடியும்.'

'அனிதா நேத்திக்கு இங்கவந்து ரொம்ப அழுதா, அவ அழுது நான் பார்த்ததேயில்லை. கெட் அவுட்டுன்னேளாமே.'

'வேகமா ஓடணும்னு மாட்டைத் தார்குச்சில குத்தறதில்லையா அது மாதிரிதான். அவுட், இன்னெல்லாம் நானா தீர்மானிக்க முடியும்! அவ்வளவு சக்தி உண்டா எனக்கு?'

'குளித்து துடைச்சு விட்டுட்டு மறுபடி கடைக்கு ஓடிப் போயிடுத்து நேத்தே. அகௌண்ட்ஸ் முடிக்கலையே, முடிக்கலையேன்னு அனத்தல்.'

'நம்பர் ரே. இன்னும் பத்துவருஷம் பொறுத்துப் பாரு. மொத்தக்கடையும் அவ ஒருத்தியே பார்த்துப்பா.'

'ஏன் உங்க தம்பிகளை நீங்க நம்பலையா?'

'அவங்க கடைல சேல்ஸ் பார்க்கணும்னு என் ஆசை.'

'ஏன் பொம்மனாட்டிகளை சேல்ஸ்ல போடலாமே?'

'கடைக்கு வர கஸ்டமர் யாரு அதிகம். லேடீஸா, ஜெண்ட்ஸா?'

'அறுவது பர்சன்ட் லேடீஸ், நாப்பது ஜெண்ட்ஸ்.'

'அந்த நாப்பது பர்சண்ட்ல யார் தீர்மானம் பண்றா? வந்த ஆளா, அவன் கூட வர பொம்பளையா?'

'நம்ம கடை சாமான்கள் வீட்டுக்குத் தேவையானது இல்லையா, அநேகமா லேடீஸ்தான்.'

'அதனாலதான் நான் வேதவல்லியை, அனிதாவ ஸேல்ஸ்ல போடல. லேடீஸே ஸேல்ஸ், லேடீஸ்தான் வாங்கறவான்னா சரியா வராது. சின்ன எதிர்ப்பு உருவாகும். லேடீஸ் கேட்கறபோது நாலு தடவை பொறுமையா பதில் சொல்றது ஜெண்ட்ஸால முடியும். இம்ப்ரஸ் பண்றது ஆட்டோமேடிக்கா வரும. நம்ம கடைல நிர்வாகம் கஷ்டம் இல்லை. விற்பனைதான் கஷ்டம். அது தான் நமக்கு முதல். எந்த இடம் முக்கியமோ, அங்க நடராஜனும், நாகராஜனும் உட்காரவே இல்லை. வேர் எப்படின்னு பார்க்காம கிளைல உட்கார்ந்து ஊஞ்சலாடறாங்க. நான் இறக்கி விட்டேன்.'

'எனக்குப் புரியறது. இதை இப்படியே சொல்லியிருக்கலாமே.'

'ஆர்க்யுமெண்ட் வரும். ஆ...அதெப்படின்னு பேச்சுத் தான் வளரும். ஸேல்ஸ் பொறுத்துத்தான் பர்ச்லேஸ். விக்க விக்கத்தான் வாங்க முடியும். இது விக்கற பொருளுன்னு நாகராஜன் சொன்னா வாங்கிப்போடறது வேதவல்லிக்கு கஷ்டமா? நாலு பர்ச்லேஸ் செய்தா தெரிஞ்சுட்டுப் போறது அத விட்டுட்டு வேதவல்லி ஸேல்ஸ்ல, நாகராஜன் பர்ச்லேன்னு இருக்கறபோது, வேதவல்லியும் மைனஸ் பாயிண்ட் நாகராஜனும் மைனஸ் பாயிண்ட்.'

'டி.வி. ரிப்பேர் நடராஜனை விட்டு எடுத்தது சரியா?'

'அது லேபர். அதுல நடராஜனுக்கு தெளிவு வந்தாச்சு இனி அங்கயே இருக்கக்கூடாது நாலு பேர் வச்சு வேலை வாங்கணும். இல்லை. இதுகஷ்டம், செய்ய முடியாதுன்னு லேபர் சொன்னா, இதோ பாருடா, நான் செய்யறேன் முட்டாள்னு ஒரு அதட்டல் போட்டு செய்து காட்டிட்டு ஒதுங்கிடணும். நம்ம முதலாளிக்கு நம்மைவிட வேலை தெரியும்னு பயம் உள்ள தொழிலாளி, முதலாளிகிட்ட சேலஞ் பண்ணமாட்டான். இது தாண்டி இன்னும்



அக்கறையா வேலை செய்வான். மாவரைக்கற இடத்துலேர்ந்துதான் எல்லா சரக்கு மாஸ்டரும் வராங்க. அதுக்காக கடைசி வரைக்கும் மாவரைப்பேன்னா முடியுமா? அரைக்கறவன் முறைச்சா,போடா நான் அரைக்கறேன்னு மிரட்டணும்.'

'என்னை ஏன் வீட்டுக்கு தொரத்திட்டேன்?'

'ஆரம்பத்திலேர்ந்து வீடு நிர்வாகம் பண்ணவ நீ. இந்த பொண்கள் கடைக்குப் போறதேன்னு ஆசைல நீயும் ப்ளிட் ப்ளிட்டா நீவிண்டு கடைக்கு வந்தே உன் இடமா அது? கொட்டாவி கொட்டாவியா வருது உனக்கு தப்பு சொல்லலை. மத்யானம் தூங்கி பழக்கப்பட்டவ நீ. ராத்திரி பதினோரு மணிக்கு தூங்கி காலைல அஞ்சு மணிக்கு முழிக்கறவ நீ. கடைல பகல் தூக்கம் முடியுமா? அனிதா மாதிரி எட்டு மணிக்கு தூங்கப் போகணும். இல்லை வேதவல்லி மாதிரி காலைல மூணரைக்கு எழுந்துக்கணும். நீயும் கடைக்கு வந்தா இந்த குழந்தைகள், அம்மாவை யார் கவனிப்பா? வேதவல்லியை கடைக்கு போன்னா அவ குழந்தையை யார் பார்த்துப்பா பாகக்கு வச்ச ஆளா? அது சரி வருமா. இப்ப ஆள் வச்சுக்கோ. நீ நடத்து உன் ராஜ்யத்தை இந்த இடத்துல.

'இரண்டு மணிக்கு கடை மூடிட்டு வரவனுக்கு சோறு போடு. அவன் ஏசி சரியா இருக்கா, அவன் குழந்தைக்கு ஜாதம் போட்டமான்னு பார், மறுபடி சொல்றேன். அனிதாவுக்கு குழந்தை பிறந்தா அவ அதுக்கு பயப்படாம வளர்த்துக்கணும். வேதவல்லி குழந்தையே அனாதையாய் வளர்றது. எனக்கு எதுக்கு குழந்தைன்னு அவ நினைக்கப்படாது. இது கேவலமான இடம் இல்லை கல்பனா, இது சரியா இருந்தாத்தான் கடை சரியா இருக்கும். கல்பனா வீட்ல இருக்கான்னு வந்தாதான் அதுகள் நிம்மதியா வேலை செய்யும். வீட்டு வேலை உனக்கு இழிவா இருக்கா கல்பனா?'

'இல்லை. எனக்கு உங்க ப்ளான் புரியறது. இன்னும் ஒரே ஒரு கேள்வி?'

'சொல்லு.'

'நீங்க ஏன் சுருண்டு சுருண்டு படுத்துக்கறேள். என்ன வேதனை மனசா உடம்பா?'

'இரண்டும்.'
'டாக்டர்கிட்ட போலாமா?'
'போயிண்டிருக்கேன்.'
'என்ன சொல்றார்?'
சுந்தரா தயங்கினான்.

'கல்பனா.' என்று அழைத்து அவள் கையை நெஞ்சில் வைத்துக் கொண்டான்.

'எப்ப கல்யாணம் ஆச்சு நமக்கு?'
'பதிமூணு வருஷம் முன்னாடி?'
'உனக்கு ஏதாவது குறையா என்கிட்ட.
'ச்சேச்சே...'
'சந்தோஷமா வச்சுருக்கேனா உன்னை?'

'நிச்சயமா. சில சமயம் நினைச்சுப்பேன். என் வீட்டு யோக்கியதைக்கு இந்த இடம் ஜாஸ்தி. இப்படி சொத்தும் பத்துமா, ஏசியும் காருமா நான் குடித்தனம் பண்ணுவேன்னு நினைக்கவேயில்லை...'

'நாப்பது வயசு ஆயிடலை உனக்கு...'

'நாப்பத்து ஒண்ணு...'

'நிறைய ஆட்டம் போட்டுக்கோம் இல்லை, இந்த படுக்கைல.'

கல்பனா வெட்கப்பட்டாள்.
'சொல்லேன்...'
'நிறைய...'



'கொஞ்ச நாளா நான் உன்னை தேடறதேயில்லை ராத்திரிலே...'

'அதனால என்ன? உங்களுக்கு பிரச்னை ஜாஸ்தி. அது தவிர எனக்கு இது தேவைப்படலை வயசாச்சே. படுத்த உடனே தூங்கிடறேன் அப்பப்ப நினைச்சுப்பேன் புருஷனுக்கு நாம உபயோகமா இல்லையோன்னு நீங்களும் தொந்தரவு பண்ணலையா...சரின்னு. தூங்கிடறதுதான்.'

'கல்பனா பாடேன் ஏதாவது...'

'டாக்டர் என்ன சொன்னார்ன்னு சொல்லலே யில்லையே.'

'சொல்லலாம். ஆனா...'
'உனக்குள்ள வச்சுப்பியோ...?'

'ஏன், ஏதாவது பயப்படும்படியா...'கல்பனா கலவரமானாள்.

'அதுக்கு பயப்படறதா, பயப்படக் கூடாதா தெரியலை. கொஞ்சம் ரிப்பேராயிடுத்து. அதுதான் தெரியும்.'
'எது?'
'இது.' நெஞ்சை தொட்டு காட்டினான்.
'ஐயோ...'

'சைலண்ட் ஹார்ட் அட்டாக் வந்துருக்குன்னார், எப்பன்னு எனக்கே தெரியலை. கத்தாதே கல்பனா நான் சொல்றதக் கேளு. மொன்ன மொன்ன வீக்காயிண்டுருக்கு ஹார்ட்...'

'ஐயோ...'

'இதுக்கு மருந்து மாயம் ஏதுமில்லை. ஐஸோடிரில் கொடுத்துருக்கார்...சாப்படறேன் இனி அமைதியா இருக்கணும் சத்தம் போடக் கூடாது. அதிகமா அலையக் கூடாது ஸ்ட்ரெயின பண்ணக்கூடாது...'
'பெரிய டாக்டர்கிட்ட...'

'புண்யமில்லை. ஊர் விட்டு ஊர் போனாக் கூட இதுக்கு வைத்தியமில்லை. ஹார்ட் தேஞ்சு போச்சு. ஏதோ தர்மத்துக்கு ஓடிண்டிருக்கு. எப்ப வேணா நிற்கும், நிக்கறதுக்கு முன்னாடி சரி பண்ணனும் எல்லாத்திலயும்னுதான் கத்தி கூச்சல் போட்டேனே ஒழிய, இருட்டறதுக்கு முன்னே ஒரு இடத்துக்கு வந்துடணும்னு விரட்டினேனே தவிர எனக்கு யார் மேலேயும் கடுகளவும் கோபமில்லை.'

'என்னன்னா இவ்வளவு பெரிய கல்லை தூக்கி தலைல போடறேளே...'

'கல் எப்பவோ விழுந்துடுத்து. கல்பனா கொஞ்சம் கொஞ்சமா நசுக்கிண்டு இருக்கு.'

'வாங்கோ...காஞ்சிபுரம் இப்பவே போய்...'

வேண்டாம் கல்பனா, அங்க அவாளுக்கு ஆயிரம் பிரச்னை. நம்ப குறைய போய் அழ வேண்டாம்.'

'அத்தனையும் தாண்டி அவர் கண் நம்மை கொண்டு பார்த்தா போறாதா. பயப்படாதே போன்னு சொன்னா போறாதா. போவோமே. இப்பவே போவோமே. பகவானே, எனக்கு மாங்கல்ய பிச்சை கொடுன்னு கதறி கதறி கேட்கறேனே...'

கல்பனாவுக்கு கண்களில் ஜலம் பொங்கிற்று. பேசப் பேச முகம் வெளுத்தது.

''ச்சு, நாளைக்கே நான் போய்டுவேன்னு யார் சொன்னா? இப்படியே நான் நாப்பது வருஷம் இருக்க முடியும். இனிமே பழைய மாதிரி அலைய முடியாது. அதான் பிரச்னை.'

'ரெஸ்ட் எடுத்தா சரியாய்டுமோன்னோ? ஒண்ணும் வராதோன்னோ?'

'ஆமாம்.'

'இனிமே இந்த இடம் விட்டு நகர வேண்டாம். எல்லார்கிட்டயும் சொல்லி இதை...'



'கூடாது கல்பனா. அவங்க கலங்கிப் போய்டுவாங்க. கடைல போய் வேலை செய்யமுடியாது. நான் சொல்றதக் கேளு.

'நீங்க சும்மா கிடங்கோ. என் தலைக்கு கத்தி வந்துருக்கு. என்ன வைத்தியம்னு எல்லாரையும் கலந்து பேசி... விடுவனோ,' கல்பனா எழுந்தாள்.

'கல்பனா நில்லு.'

'முடியாது. பத்து நிமிஷத்துல எல்லாரையும் வரவழைக்கிறேன். இது எங்க வைத்தியமோ, எப்பேர்ப்பட்ட வைத்தியமோ உடனே பார்க்கறேன், மூடி மூடி வைக்கற விஷயமா இது..

டெலிபோன் தூக்கி டயல் செய்த கல்பனாவிடமிருந்து ரிசீவரைப் பறித்தான்.

கல்பனா முரண்டு செய்ய டெலிபோனை தரையில் தள்ளினான்.

'இடியட், நான் சொல்றதக் கேளு. எனக்கு ஒண்ணுமில்லை.'

'ஹார்ட் அட்டாக் ஒண்ணுமில்லையா? இத்தனை நாள் மறைச்சேளே ... இது நியாயமா? வேதவல்லி புள்ளைய நான் கொஞ்சினா வேதவல்லி எனக்கு சோறு போடுவான்னு கணக்கா. அனிதா புள்ளைக்கு நான் பால் கொடுத்தா என் புள்ளைக்கு அனிதா பணம் கட்டுவாளா? எனக்கு வேற எவபுள்ளையும் வேண்டாம். என் புருஷன் வேணும். எனக்கு நாப்பது வயசானா என்ன. இன்னும் எனக்கு புருஷன் வேணும். நான் சாகற வரைக்கும் வேணும்.'

அவள் அலைந்து பேச, சுந்தரா நெஞ்சைப் பிடித்து தரையில் உட்கார்ந்தான். இருதயம் வேகமாய்த் துடிப்பது கைக்குத் தெரிந்தது. குப்பென்று வியர்த்தது. தலையிலி

குந்து வியர்வை பெருகியது. இடது முதுகு நடுவிலிருந்து வலி கிளம்பி தோள் பக்கம் தாக்கிற்று.

'கல்பனா மாத்திரை எடு ஐஸோடிரில் எடு.'

'என்ன...என்ன...எங்க இருக்கு மாத்திரை?'

'கட்டில் பக்கத்து டிராயர்ல...சின்னதா பொடிசு பொடிசா.'

உள்ளே வலி முறுக்கி ஏறிற்று.

## 27

வயிற்றுக்கும், முதுகுக்கும் நடுவிலிருந்து ஒரு கத்தி கிளம்பி 'சதக்'கென்று நெஞ்சைக் குத்தியது. கை வைத்து யாரோ இதயத்தை பிசைவது போல் இருந்தது. அழுத்தம் தாளாமல் இருதயம் புரண்டு தவிப்பது உணர முடிந்தது. காற்று உள்ளே அடைப்பது போல் அவஸ்தை தோன்றியது.

ஐயோ, டெலிபோனை தள்ளி விட்டுட்டு...இது வேலை செய்யலை.மாடிக்குப் போறேன். ஐஸோடிரில் எது...இதுவா...இதுவா...நானு பாட்டிலுக்குப் பிறகு கொண்டு வந்து நீட்ட, மூடி திறந்து கையில் கொட்ட இரண்டு எடுத்து வாயில் சுந்தரா அடக்கிக் கொண்டான். சில்லென்று கரைந்தது.

'வேதவல்லி உடனே வா. எல்லாரையும் கூட்டிண்டு வா. நெஞ்சுவலி, நெஞ்சுவலின்னு கத்தறார். எனக்கு பயமா இருக்குடி. உடனே வா' கூச்சலாய் கல்பனா பேசினது கேட்டது.



வலி சமனப்பட்டது போல் தெரிந்தது, பிசையும் வலி மறைந்து யாரோ விரல் வைத்து அழுத்திக் கொண்டது. போல் இருந்தது.

ஹாலில் மாட்டியிருந்த பெரிய படத்தை சோபாவில் சரிந்து உட்கார்ந்தபடி பார்த்தான். தாமரை கை உயர்த்தி ஆசிசொன்னபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

என்ன இது. என் முடிவா? என் முடிவு வந்தாச்சா? உள்ளே என்னமோ சரியில்லையே. உன்னாலே சரிபண்ண முடியாதா. இன்னும் கொஞ்சநாள் வாழக் கூடாதா. குஞ்சும், குளுவானுமா நான் விட்டுப் போகணுமா. அப்பா இல்லாத குழந்தைகளா அதுகள் அலையணுமா? சொல்லுங்களேன். ஏன் எனக்கு இது. பாவமா. தண்டனையா? கண் சொருகி தூக்கம் வந்தது. மெல்ல சோபாவின் மூலையில் தலையை பின்னுக்கு சாய்த்தான்.

திமிறுகிற காளை மாட்டின் கொம்பில் கயிறு வீசி இறுக்கினார்கள் மாடு திமிறி காலழுத்தி ஊன்றி வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தது. மறுபடியும் இழுத்தார்கள். கால் தரையில் தேய புழுதி கிளம்பிற்று.

'என்ன ஆச்சா?' குரல் கேட்டது.

'மாடு வரமாட்டேங்கறது.'

'இதமா சொல்லி கூட்டிண்டு போறதுதானே.'

'இதோ வரேன்.'

யாரோ புகையாய் எழுந்து வந்தார்கள். கண்ணில் பிசுபிசு என்று நீர் ஒட்ட யாரென்று தெரியாமல் சுந்தரா உற்று உற்றுப் பார்த்தான். புரியவில்லை குரல் மட்டும் கேட்டது.

'என்ன, என்ன கோலம் உனக்கு? தாமரையின் குரலா இது?'

'நான் மடத்தை விட்டுப் போக மாட்டேன். இது என்னோட மடம்.'

மடம் என்று சொன்னானே தவிர அது அவன் வீட்டு வராண்டாவாக இருந்தது.

'இது ஒங்க அப்பாவோடது இல்லையோ?'
'ஆமா.'
'உங்க அப்பாவுக்கு நான் கொடுத்தது இல்லையோ?'
'ஆமாம்.'

'எனக்கு யாரோ கொடுத்ததுதானே, உனக்கு உன் கிட்ட வந்திருக்கு?'

'ஆமாம்.'

'உன்னுடைய மடங்கறயே உன்னுதா இது?'

'நான் ஏன் இப்ப போனும்? இங்கேயே மடத்துலயே இருக்கேனே. மடத்தை நன்னா பார்த்துக்கறேன்,'

'மடம் நன்னா இருக்கும். கவலையே படாதே. உன் இடத்துக்குப் போ.'

'இதுதானே என் இடம்?'
'இல்லை. இது உன் இடம் இல்லை.'
'என்னுது எது?'

'போ. போய்ப் பார். போய் பார்த்தாதானே தெரியும். இது உன் இடமா, அது உன் இடமான்னு நகர மாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சா?'

'எனக்கு பயமா இருக்கே.'

'எதுக்கு பயம்?'



'இடம் விட்டு இடம் போறதுக்கு?'

'இடம் இடமா நகர்ந்துதானே இங்க வந்திருக்கே கல்லிடைக்குறிச்சி விட்டுட்டு, மெட்ராஸுக்கு வந்து. ஒண்டுக்குடித்தனம் விட்டு மாம்பலத்துக்கு வந்து சாரி ரோடு விட்டு உஸ்மான்ரோடுக்கு வந்து.கிரவுண்ட்ப்ளோர் விட்டு, செகண்ட் ப்ளோர் வந்து, பத்து வயசு விட்டு, நாப்பது வயசுக்கு வந்து, இடம் இடமா நகர்ந்துண்டு தானே இருக்கே. இப்ப மட்டும் என்ன பயம்?'

'மாட்டேன். நான் செத்துடுவேன். புது இடம் வேண்டாம்.'

'சாகறதுங்கறதே கிடையாது. பள்ளிக்கூடம் முடிச்சுட்டு காலேஜ்போறமாதிரி.காலேஜ் புது இடம்.போமாட்டேன்னு சொல்வானா? போ நிதானமா பதட்டப்படாதே போ.'

'நீங்க கூட விரட்டறேளே?'

'விரட்டலை சுந்தரா, விரட்டலை. போய்த்தான் ஆகணும்!,

'மடம் யார் பார்த்துப்பா?'

'உன்னைச் சுத்தி இருக்கறவா பார்த்துப்பா. அதான் சுசரத் வாங்கி இருக்கியே எல்லாரையும். அவாளுக்குத் தெரியும் மடம் பார்த்துக்க.'

'பயமில்லையா?'

'துளிக்கூட இல்லை.'

'சத்தியமாவா?'

'இதுதான் சத்தியம். இதுதான் உண்மை. இதுதான் எல்லாம்.'

மாடு முதலடி எடுத்து வைத்தது.

சில்லென்ற காற்று பட்டது.

மறு அடி எடுத்து வைத்தது.

சுந்தரா மெல்லிய குளிர் உணர்ந்தான்.

இன்னொரு அடி எடுத்து வைத்தது.

சுந்தரா உடல் லேசாவது உணர்ந்தான்.

இடது புஜத்தில் சுருக்கென்று வலித்தது. ஊசி போடு கிறார்களா?

'டேக் ஹிம் டு ஹாஸ்பிடல். இம்மீடியட்.'

'என்ன டாக்டர் என்ன ஆச்சு?' யாரோ கத்தினார் கள்.

'அட்டாக் தாம்மா. மாஸிவ்னு நினைக்கறேன். ஆடாத அசையாத எடுத்துண்டு போகணும்.'

குழலூதும் சப்தம் கேட்டது. குழலிசை இறங்க அடித்தது. கேட்டு கொண்டே இருக்க வேண்டும் போல் பட்டது. இசையை கேட்டபடி மெய்மறந்து நின்றான்.

அலைபாயுதே கண்ணா...

என் மனம்

அலைபாயுதே.

உன் ஆனந்த மோகன

வேணுகானமதில்

அலைபாயுதே.

இன்னொரு அடி எடுத்து வைக்கலாமா வேண்டாமா என்று மனசு தவித்தது. இசை ஆரம்பிக்கிற இடத்துக்கு



போகும் ஆசையும் போக வேண்டாம் 'என்கிற பயமும் ஒரு சேர தோன்றின.

நிலைபெயராது சிலை போல நின்ற

நேரமாவதறியாயலே

மிக. விநோதமான முரளீதரா

என் மனம் அலைபாயுதே

கண்ணா.

எதற்கு நேரமாயிற்று? புறப்பட்டு போகவா? போக வேண்டியது தானே. இங்கேயேஇப்படியேகல்லெனகிடக்க முடியாதா. ஏன் என்னால கை கால் அசைக்க முடிய வில்லை. ஏன்இப்படி தக்கைகட்டையாய்போய்விட்டேன். எதற்கு மனசு அலைபாய்கிறது. போவேன் மாட்டேன் என்று இரண்டாய் நிற்கிறது. விடைபெற முடியாமல் தவிக்கிறது. சொல்லி விட்டு போகலாமா. மெல்ல மெல்ல மிதந்து முரளீ தரிடம் போய் விடலாமா?

குழலூதும் இடத்திற்குபோய் விடலாமா. எங்குஇசை முழுவதுமாய் இருக்கிறதோ, எந்த இடத்தில் இசை மட்டுமே, குழல் ஒலி மட்டுமே, இருக்கிறதோ அந்த இடத் துக்கு நகரலாமா?

சுந்தரா மெல்ல கண் திறந்தான்.

'சுந்தரா, சுந்தரா' நடராஜன் முகம் ஏந்திக் கொண் டான். வேதவல்லி பின்னால் தெரிந்தாள். கல்பனாவை தேடினான். 'இங்கே இருக்கேன்,' தலைமாட்டின் பின்னே குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தான்.

''என்ன பண்றது உங்களுக்கு? ஹாஸ்பிடல் போகலாமா?'

'வேண்டாம்.'

'பேச நேரமில்லை.' மேடம். நடராஜா வண்டி எடு.'

'வேண்டாம்,' சுந்தரா மறுத்தான்.

'ஹாஸ்பிடல் போறோம்.'

'இல்லை. நான் வேற இடத்துக்குப் போறேன்.'

'கிளம்புப்பா நடராஜ்.' டாக்டர் அதட்டினார்.

'வேண்டாம் நடராஜா. நான் இங்கிருந்தேபோறேன். என்னை தூக்காதே. ப்ளீஸ் என்னைத் தூக்காதே... கல்பனா...'

'இங்க இருக்கேன்.'

'அலைபாயுதே... அலைபாயுதே.'

'என்ன சொல்றேள். புரியலையே?'

'பாடேன். அலைபாயுதே பாடேன்.'

'ஐயோ பாடற நேரமா இது. பகவானே.'

'பாடு கல்பனா. வேதவல்லி பாடச் சொல்லு இவளை குழந்தைகளை கிட்டகொண்டுவா. அனிதா வந்தாச்சா?'

'இங்கே இருக்கேன்,' கால்மாட்டில் தேய்த்து சூடு பண்ணிக் கொண்டிருந்தவள் எழுந்து நின்றாள். சுந்தரா மெல்ல சிரித்தான்.

'பாடச் சொல்லு கல்பனாவை.'

பக்கத்துக்கு ஒன்றாய் குழந்தைகள் அருகே வந்தன. அவைகளை அணைத்து அவர்களின் கைகளை பிடித்துக் கொண்டான்.

'பாடுங்கோ மன்னி.'

'இப்ப...இப்ப நான் பாடற மாதிரியா இருக்கேன்?'

'ப்ளீஸ் பாடுங்கோ மன்னி.'

அனிதா கேஸட் போட்டு டேப் ரிக்கார்டர் எடுத்து வந்தாள்.



'நம்ம கடை டேப் ரிக்கார்டரா?'

'ஆமா.'

'அலைபாயுதேவா?'

'ஆமாம்.'

சுந்தரா கண்கள் மூடிக் கொண்டான். தபேலா உருண்டது. ஆணும் பெண்ணுமான குரலில் பாட்டு கேட்டது. இருள் சூழ்ந்து கொண்டது. ஒளி வட்டம் தோன்றிற்று,

'தெளிந்த நிலவு
பட்ட பகல் போல்
எரியுதே.'
திக்கை நோக்கி என் இரு புருவம்
நெறியுதே.'

எந்தத் திக்கு, நான் போக வேண்டும். தெற்கா? வடக்கா? இந்த இருட்டில் திசை உண்டா.

'கனிந்த உன் வேணுகானம்
காற்றில் வருகுதே.'

இதுதான் மரணமா. ஒவ்வொரு பூட்டாய் கழன்று ஒவ்வொரு முடிச்சாய் அவிழ்ந்து. தளைகள் அறுபட்டு விநோதமாய் மிக லேசாய், காற்றினும் மெல்லியனாய் கனமே இல்லாமல் இதுதான் மரணமா.

'கதித்த மனத்தில் இருத்தி பதத்தை எனக்கு அளித்து மகிழ்ந்தவா.'

ஐயோ. சாவு சந்தோஷம் தான். திமிரும்கொழுப்பும் நான் என்ற கர்வமும் இப்போது இல்லையே. நெஞ்சு முழுக்க ஸ்வாமிதானே இப்போது.

'ஒரு தனித்த வனத்தில் அணைத்து எனக்கு உணர்ச்சி கொடுத்து முகிழ்த்த வா.'

சாவு சுகம்தான். கல்வி சுகம்தான் இது. இடம் விட்டு இடம் போவது பரமசுகம்... காணாமல் போகிற சுகம். உடம்பெல்லாம் எழுந்து உணர்வு மட்டும் நிற்கிறது.

'யம்மா' என்று ஆண் அணைத்த பெண்ணாய் மனசு துள்ளுகிறது. நானும் குழலூதுபவனும் மட்டுமே தெரிகிறது.

'கனைகடல் அலையெனில் கதிரவன்
ஒளியென இணையிரு கழலெனக் களித்தவா.
கதறி மனமுருகி நான் அழைக்கவோ
இதர மாதருடன் நீ களிக்கவோ
இது தகுமோ, இது முறையோ,
இது தருமம் தானோ...'

உச்சகட்டத்தில் மனசு கதறிற்று. கண்களில் ஜலம் அருவியெனப் பொங்கிற்று. என்னை விடாதே. என்னை கை விடாதே. என்னை தனியே விட்டுப் போகாதே. நீ வேண்டாம் என்று உதறி யாருடனோ களிக்காதே. என்னை ஏற்றுக்கொள். என்னை உன்னுடன் சேர்த்துக் கொள். போதும் இது. மறுக்காதே கிருஷ்ணா. பரம்பொருளே குழலூதுபவனே, ஓங்காரமே, இனி தாங்கேன். நான் வருகிறேன். தானே வருகிறேன்.

குழலூதிடும் பொழுது ஆடிடும்
குழைகள் போலவே மனது வேதனைமிகவொடு...
அலைபாயுதே—கண்ணா என் மனம்
அலைபாயுதே உன் ஆனந்த மோகன
வேணுகானமதில்

அலைபாயுதே.'

கண்ணா. ப்ரியனே, உன் காது குழைகள் குழலூதும் போது ஆடுகிறது போல் மனசு தவிக்கிறது. கிருஷ்ணா என்னை விட்டுப் பிரியாதே. இதோ வந்து விட்டேன் வந்து விட்டேன்.



வெளியேறும் சமயம் அழுந்திக் கிடந்த தலையணையின் இரண்டு பக்கமும் புடைத்து அவன் கண் விளிம்போரம் மிக நெருக்கமாய் தலையணைப் பூக்களை காட்டிற்று இடது கண் இடப்பக்கமும் வலது கண் வலப்பக்கமும் விநோதமாய் ஒரு மாடு போல பார்த்தது

என்ன அது பூக்களா. நிஜப்பூக்களா? இல்லையே தலையணையில் வரைந்த பூக்கள் இவை உண்மையான பூக்கள் இல்லை. பூக்கள் போல தோற்றமளிப்பவை. வெறும் சாயம் பூக்கள் போலத் தோற்றமளிக்கின்றன. உலகம் ஒரு தோற்றம்தான். வெறும் சித்திரம்தான். சலனச் சித்திரம் உண்மையைப்பார்த்து பொய் வரைந்தது போல இன்பம் என்பது பார்த்து உலகம் வரையப்பட்டிருக்கிறது. இவ்வுலகில் இன்பமில்லை. பொய், இன்பம் வேறு. உலகம் சிற்பத்தின் சாயல். இந்த இன்பமென நினைப்பது மாயை தோற்றம் அவனுக்குப் புரிந்து போயிற்று.

சுந்தரா நீண்டதாய் ஒரு பெருமூச்சு விட்டான்.

நெற்றியில் பதித்திருந்த ஒளி ஆணி பளிச்சென பிடுங்கப்பட்டது. இடுப்புக் கயிறு சக்கை பிய்ந்தது மாதிரி இழை இழையாய்ப் பிய்ந்தது. பாதங்களில் உள்ள முடிச்சுக்கள் அவிழ்ந்தன. நெஞ்சுக் கூட்டிலிருந்து மெல்ல உயிர் தானே பிய்த்துக் கொண்டது.

அடுத்த மூச்சுக்கு எல்லாம் காத்திருந்தார்கள். வரவில்லை. டாக்டர் நெஞ்சில் குத்தினார். அழுத்தி அழுத்தி எடுத்தார். இரண்டு கை விரல்களையும் கோர்த்துக் கொண்டு எலும்புக் கூட்டை அசைத்து அசைத்து இருதயம் இயங்க முயற்சி செய்தார். அவர் சோர்ந்து போய் கையெடுக்க தலை சடக்கென்று இடமாய் சரிந்தது.

சுந்தரா வெளியேறினான்.

அவன் உடம்பு அசையாது இருந்தது.

'என்ன டாக்டர்?' கல்பனா கத்தினாள். டாக்டர் பாதி திறந்திருந்த அவன் கண்களை அழுத்தி மூடினார்.

'போய்டுத்தும்மா.'

'போய்டுத்தா...போய்டுத்தா என்னை விட்டுட்டு போய்டுத்தா?' கல்பனா தலையை பிடித்துக் கொண்டு நெஞ்சில் அறைந்து கொண்டாள்.

'என் ராஜாவே' என்று அவன் முகத்தை கட்டிக் கொண்டாள்.

'என்னை விட்டுட்டு போய்ட்டியே. என்னை தனியா விட்டுட்டுப் போய்ட்டியே.' உடம்பு மொத்தமும் தனக்கே சொந்தம் என்பதாய் தழுவினாள்.

தூங்கிக் கொண்டிருந்த அம்மா, சொப்பனம் கலைந்தது போல் மெள்ள ஹாலுக்கு வந்தாள்.

'என்னடி...சுந்தரா போயிட்டானா? ஆறு மாசம் முன்னாடியே எனக்கு சொப்பனம் ஆச்சு. சுந்தரா வேஷ்டி அவுத்துட்டு போற மாதிரி. அப்பா வந்து அவனுக்கு வேற வேஷ்டி போர்த்தறார். ஒண்ணும் இல்லடி. எல்லாம் ஷீரோ பெரிய ஷீரோ...' வலது கை ஆள்காட்டி விரலை சுற்றிக் கொண்டே ஷர்சலுக்குப் போனாள். வராண்டா மூலையில் உட்கார்ந்து கொண்டாள். எங்கே போயிருப்பான் என்பதாய் உடல் வளைத்து வானம் பார்த்தாள்.

'சுந்தரா சுந்தரா என் சுந்தரா...' நடராஜன் முகத்தில் அறைந்து அழுதான். வேதவல்லி சோர்ந்து தரையில் உட்கார்ந்தாள். அனிதா அவன் கால்களில் முகம் பொத்திக் கொண்டாள். குழந்தைகள் கதறின. வேலை ஆட்கள் முகம் பொத்திக் கொண்டார்கள்.

தோட்டக்கதவு திறந்து ஜனம் உள்ளே ஓடி வந்தது. வாசல் பக்கத்தை அடைத்துக் கொண்டது.

நாகராஜன் கார் திருப்பி உள்ளே வந்தான். கூட்டம் விலக்கினான்.

'என்னடா நடராஜு?' பயத்தில் கூவினான்.



'போய்ட்டான்டா. நம்ம எல்லாரையும் வெவ்வேற இடத்தில உட்கார வெச்சுட்டு போய்ட்டான்டா. வேலை செய் வேலை செய்யுன்னு விரட்டிட்டு போய்ட்டான்டா. அலைபாயுதே கேட்டுண்டே அடங்கிட்டான்டா.'

நாகராஜ் அருகே வந்தான். சுந்தராவின் முகம் தூக்கி முத்தமிட்டான்.

ஏம்பா இதுக்குத்தான் கத்தினியா எல்லாரையும்? இது தெரிஞ்சுதான் இடம் மாத்தி போட்டு உன்னை காலி பண்ணிண்டயா ஓகே பிரதர். ஓகே.

'வேதவல்லி' வா எழுந்திரு. கடைக்கு போன் பண்ணி மூடச் சொல்லிடு. அனிதா, உங்கப்பா ஊர்ல இருக்காரா? எழுந்திரும்மா அழாதே. நா அழறனா பார். நா அழ மாட்டேன். நாம இப்ப அழக் கூடாதுன்னுதான் அவன் நாலு மாசமா நம்மை அழ அடிச்சான். போய்டுவேன்னு தெரிஞ்சுதான் விரட்டினான். நா அழறேனா பார். அழ மாட்டேன்,' நாகராஜ் பேசிக் கொண்டே அழுதான். பின் கை கட்டி மேல் கூரை பார்த்தான்.

'கேஷ் சாவி கொடு அனிதா.' முகம் துடைத்து வேதவல்லி எழுந்து நின்றாள்,

'எவ்ளோ இருக்கு கடைல?'

'இருவதாயிரம் இருக்கும்.'

'நீ போய் எடுத்துண்டு வா. கடை க்ளோஸ் பண்ணு எங்கப்பாக்கு நான் போன் பண்றேன். பாம்பே பிளைட் எத்தனை மணிக்கு?' புடவையை சொருகிக் கொண்டாள்.

'நீங்க என்ன பண்றேள்... ஊஞ்சல் பலகை கழட்டி...' புருஷனும் மனைவியும் சேர்ந்து ஊஞ்சல் பலகை கழட்டி கூடத்தில் போட்டார்கள். வேதவல்லி தாமரையின் படம் கழட்டினாள். ஊஞ்சலின் தலை மாட்டில் வைத்தாள். நாகராஜ் பூஜை அறையிலிருந்து விளக்கை எடுத்து வந்தான். திரிதிமிண்டினான். எண்ணை

கொண்டு வந்து வார்த்தான். நெருப்பு பெட்டியைப்பிலிருந்து எடுத்து வேதவல்லியிடம் கொடுத்தான்.

வேதவல்லி விளக்கேற்றினாள்

ஊஞ்சலின் தலைமாட்டில் வைத்தாள்.

சுந்தராவைக் கொண்டு வந்து ஊஞ்சலில் வைத்தார்கள்

'யார் யாருக்குச் சொல்லணும் வேதவல்லி?'

'வாங்கோ பின் பக்கம் போய் பேசுவோம்.'

பவழமல்லி மரத்தின் கீழ் சிமெண்ட் கட்டையில் வேதவல்லி உட்கார்ந்து கொண்டாள். பேப்பரும் பேனாவுமாய் அவளுக்கு அருகே உட்கார்ந்து நாகராஜன் அவள் முகம் பார்த்தான்.

'என்னால முடியுமா இது. என்னால செய்ய முடியுமா இது?' வேதவல்லி நெஞ்சில் அறைந்து கொண்டபடி அழுதாள்.

'முடியும் வேதவல்லி முடியும். நான் உன் கூட இருப்பேன். இனி இங்க நீ தான் நம்பர் ஒன். சொல்லு யார் யாருக்கு என்னென்ன சொல்லணும் சொல்லு.'

மறுபடி வேதவல்லி முகம் துடைத்துக் கொண்டாள்'

'முதல்ல காஞ்சிபுரம் மடத்துக்கு ஒரு டெலிகிராம் தரணும்.'

'அங்க குழப்பமா இருக்கே.'

'எல்லாம் சரியா போய்டும். குழப்பம் வரதே நல்லதுக்குத்தான். நம்மை நாமே சரி பண்ணிக்கறதுக்குத்தான்.'

'சரி அடுத்து...?'

வேதவல்லி சொல்லச் சொல்ல நாகராஜ் எழுதினான். காற்றில் பவழமல்லிகள் அவர்கள் தலையில் உதிர்ந்தன.

□ □ □